
அக்டோபர் 1980 இ

# தமிழரசு

அக்டோபர்

1980

JL
12 NOV 80
N8090



# தமிழரசு

1-10-1980 50 காசு

EGMORE, MADRAS







# தமிழரசு

மலர்:11 இதழ்:7

1-10-1980


அடிமைவாழ் வகன்றிந் நாட்டார்
விடுதலை யார்ந்து செல்வம்

குடிமையி லுயர்வு, கல்வி
ஞானமும் கூடி யோங்கிப்

படிமிசைத் தலைமை யெய்தும்
படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்!

முடிவிலாக் கீர்த்தி பெற்றாய் !
புவிக்குளே முதன்மை யுற்றாய் !

## வாழ்க நீ

—கவியரசர் பாரதியார்


வாழ்கநீ எம்மான், இந்த
வையத்து நாட்டி லெல்லாம்

தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்

பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை

வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா ! நீ வாழ்க! வாழ்க!







# தமிழுக்குப் பெருமை சேர்த்தவர்

**— மாண்புமிகு முதல்வர்**

**செ**ப்டம்பர் மாதம் மிகவும் நல்ல மாதம். நல்லவர்களின் பிறந்த தினங்கள் இந்த மாதத்தில் வருகிறது. பெரியார் பிறந்தது செப்டம்பர் 17ல், அமரர் அண்ணா பிறந்தது செப்டம்பர் 15ல், ராஜா அண்ணாமலைச் செட்டியார் பிறந்தது செப்டம்பர் 30-ல். ஒருவர் அண்ணா. இன்னொருவர் அண்ணாமலை. இடையில் பெரியார். இத்தகைய ஒற்றுமையைக் கண்டு நான் வியக்கிறேன்.

பல்வேறு நாடுகளுக்குச் சென்று அங்குள்ள அரசியல், உழைக்கும் சக்தி, கல்வித்திறன் இவைகளை அறிந்து வந்து தனது ஓயாத உழைப்பு, நியாயமான சேமிப்பு இவைகளால் நல்ல பணிகளைச் செய்து தொண்டாற்றிய பெரியவர் அண்ணாமலைச் செட்டியார் ஆவார்.

பணம் உள்ள அனைவரும் இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்து விடுவார்களா என்றால் இல்லை.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கல்வியை மட்டும் சொல்லித்தரவில்லை. பல தலைவர்களை—குறிப்பாக பல திராவிடரியக்கத் தலைவர்களை உருவாக்கித் தந்திருக்கிறது. நாவலர், அன்பழகன், மதியழகன் போன்ற பலபேர் அங்குதான் உருவாகினார்கள்.

திராவிடரியக்கத்தின் தொடர்ச்சியாக பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்டு அவரது வழியில் நான் இன்று முதலமைச்சராக இருப்பதற்கும் அண்ணாமலைச் செட்டியார் காரணமாகிறார்.

தமிழ் வளர்ச்சிப் பணியில் நகரத்தாருக்கு முக்கிய பங்கு உண்டு. நகரத்தாரின் பிரதிநிதியாக இருந்து இசைத்தமிழ், தமிழ் இசை என்று மாற்றி அதை ஓர் - இயக்கமாகவும் மாற்றி அதற்காகச் சங்கம் கண்டவர் அண்ணாமலைச் செட்டியார்.

தமிழிசையை வளர்க்க அண்ணாமலை அரசர் பாடுபட்டது எனது நினைவுக்கு வருகிறது. சிறுபையனாக இருந்தபோது பத்திரிகைகளில் இதுபற்றி நடந்துவந்த விவாதங்களை எண்ணிப்பார்க்கிறேன். எந்தத் தண்டபாணி தேசிகரை ஒதுக்கி வைத்திருந்தார்களோ அந்த தண்டபாணி தேசிகரை அழைத்துப் பாட வைத்து அவரைப் பெரிய சங்கீத வித்வானாக நாட்டுக்கு அடையாளம் காட்டியவர்.

சிதம்பரம் ஜெயராமன் என்ன தான் பாடும் ஆற்றல் பெற்றிருந்தாலும் அவரைப் பாடச் செய்து விளம்பரம் உள்ளவராக மாற்றியவர் அண்ணாமலைச்செட்டியார்தான். அப்படி தமிழ் பாடுகிறவர்களுக்குப் பெருமை ஏற்படக் காரணமாயிருந்தவர் அவர்.

[மாண்புமிகு முதல்வர் அவர்கள் 30-9-1978-ம் நாளில் ராணி சீதை மன்றத்தைத் திறந்து வைத்து ஆற்றிய சொற்பொழிவிலிருந்து......]

# பால் பெருக்குத் திட்டம்-2

மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர்
**திரு கே. ஏ. கிருஷ்ணசாமி**



**த**மிழ்நாட்டில் 1970- ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல்தேதியன்று துவக்கப்பட்டது, பால் பெருக்குத் திட்டம். ஆரம்பத்தில் அது ஐந்தாண்டுத் திட்டமாகயிருந்தது. பிறகு 1978-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் தேதி வரை நீடிக்கப்பட்டு, தற்சமயம் 1981 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் தேதிவரை அமுலிலுள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டில் செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், பெரியார், கோயம்புத்தூர், தர்மபுரி, நீலகிரி, மதுரை ஆகிய 9 மாவட்டங்களில் அமுலாக்கப்பட்டு நிறைவேறி வருகிறது. தமிழ்நாடு அரசின் சார்பில் இத்திட்டத்தைத் தமிழ்நாடு பால்வள நிறுவனம் நிறைவேற்றி வருகிறது.

பால் பெருக்குத் திட்டம்-1ன் தொடர்ச்சியாக பால் பெருக்குத் திட்டம்-2 திட்டமிடப்பட்டு, கூடிய விரைவில் துவக்கப்படவிருக்கிறது. பால் பெருக்குத் திட்டம்-1 நிறைவேற்றி வரப்படும் அதே 9 மாவட்டங்களிலேயே பால் பெருக்குத் திட்டம்-2ம் அமுலாக்கப்படும. இத்திட்டம் 1980-81 - லிருந்து 1984-85 வரை ஐந்து ஆண்டுகளில் நிறைவேற்றப்படும். இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்கள் வருமாறு :—

**இத்திட்டத்தைச் செயல்படுத்தும் நிறுவனங்களின் அமைப்பு:—**

2—6—1978 நாளிட்ட விவசாய இலாகா ஆணை எண் 1000-இல் உள்ள அரசின் கொள்கை விளக்கப்படி, கிராம அளவில் ''ஆனந்த்'' பாணி ஆரம்ப உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களும், மாவட்ட அளவில் மேற்படி சங்கங்கள் கூட்டுறவு ஒன்றியங்களாக இணைக்கப்பட்டும், மாநில அளவில் மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களின் ''மாநில கூட்டுறவு இணையமாகவும்'' செயலாற்றும். இந்த மாநில கூட்டுறவு இணையமே அரசின் சார்பில் பால் பெருக்குத் திட்டங்களை நிறைவேற்றும் முகமையாக ( Agency ) இருக்கும். இந்த இணையம், இணைய அங்கத்தினர்களான ஒன்றியங்கள் பயன்படுத்தக்கூடிய பொது வசதிகளை நிர்வகிக்கும். இவ்வசதிகளில் கீழ்க்கண்டவையும் அடங்கியுள்ளன.

அ. சென்னையிலுள்ள நகர பால்பண்ணைகளும், பால் விநியோக வசதிகளும்.

ஆ. உறைவிந்து நிலையங்கள்.

இ. பொலி காளை உற்பத்தி செய்ய தாய்ப் பண்ணைகள்.

ஈ. ஒன்றியங்களால் சுலபமாக நடத்த முடியாத பால் பதப்படுத்தும் நிலையங்கள், கால்நடைத் தீவன உற்பத்தி ஆலைகள்.

உ. இணைப்பு விற்பனை வசதிகள்.

பால் பெருக்குத் திட்டம் முடிவுறும் காலத்தில், 9 மாவட்டங்களில் சுமார் 5,000 கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்கள் கிராம அளவில் இயங்கும்.

**பால் கொள்முதல்:**

1978-79-ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு சராசரி, 2.57 இலட்சம் லிட்டர்களாக இருந்த பால் கொள்முதல் 1984-85-ஆம் ஆண்டு முடிவில் நாளொன்றுக்கு சராசரி 10.90 இலட்சம் லிட்டர்களாக உயர்ந்திருக்கும். 8.22 இலட்சம் பசுக்களும், 4.65 இலட்ச எருமைகளும் கொண்ட 12.87 இலட்சம் கால்நடைகளிலிருந்து இப்பால் கொள் முதல் செய்யப்படும்.

**பதப்படுத்தும் வசதிகள்:**

சென்னையில், பால்பெருக்குத் திட்டம்-1ன் உதவியைக்கொண்டு 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் பண்ணை 1976ல் நிறுவப்பட்டது. பால்பொடி ஆலை நிறுவியதன் மூலம் மதுரை பால் பண்ணையின் கொள்ளளவு விரிவாக்கப்பட்டது. சேலம் மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் வெண்ணெய், ஆடைநீக்கிய பால்பொடி ஆலைகள் அடங்கிய பால் பண்ணைகள் நிறுவப்பட்டு வருகின்றன. இவ்விரு பால் பண்ணைகளும் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பாலைப் பதப்படுத்தி, மற்ற பால் பொருள்களாக மாற்றும் சக்தி உள்ளவை. தற்சமயம், சென்னையில் 3.4 இலட்சம் லிட்டர்களும் மற்ற இடங்களில் 2.8 இலட்ச லிட்டர்களுடன் சேர்ந்து சராசரி 6.25 இலட்சம் லிட்டர் பாலைப் பதப்படுத்தும் கொள்ளளவு உள்ள பால் பண்ணைகள் இருக்கின்றன. பால் பெருக்குத் திட்டம் 2-ன் கீழ், சென்னையில் பால் பதப்படுத்தப்படும் சக்தி மேலும் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் அதிகப்படுத்தப்படும்.

**விற்பனை, விநியோக திட்டங்கள்:**

தமிழ்நாடு பால்வள நிறுவனம் சென்னை நகர பால் விற்பனையில் 40 முதல் 45 சதம் பங்கு விற்பனையைப் பிடித்திருக்கிறது. பால்பெருக்குத் திட்டம் - 2ன் கீழ் சென்னை பால் விற்பனையில் 64 சதம் பங்கைப் பெற உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. அம்பத்தூர் பண்ணை கொள்ளளவு அதிகரிக்கப்பட்ட பிறகு தானியங்கும் விற்பனை நிலையங்கள் மூலம் பால் விற்கப்படும்.

தமிழ்நாட்டில் ஒருஇலட்சத்திற்கு மேல் மக்கட்தொகை கொண்ட எல்லா நகரங்களிலும், திட்ட எல்லைக்குள் 50,000க்கு மேல் மக்கட்தொகை கொண்ட எல்லா நகரங்களிலும் இந்த இணையம் மூலமாகப் பால வழங்க திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்நகரங்களிலும் தானியங்கும் பால் விற்பனை நிலையங்கள் மற்றும் 40 லிட்டர் பால் கலங்கள் ( Cans ) மூலம் பால் வழங்கப்படும்.

**தொலைதூர பால் விநியோக வசதிகள் :**

நாளொன்றுக்கு சுமார் 6.6 இலட்சம் லிட்டர் பாலை குளிர் பதன நிலையங்களிலிருந்து, உற்பத்தி சமப்படுத்தும் பால் பண்ணைகளுக்கு பால்சேகரிக்கும் ஊர்திகள் ( Tankers ) மூலம் எடுத்துச் செல்ல வேண்டியிருக்கும். இதற்காக 30 ஊர்திகள் வாங்கப்படும், பாலை நெடுந்தூரம் எடுத்துச் செல்ல ''இந்திய பால் நிறுவனத்தா''ருக்குச் சொந்தமான ரயில் பால் தொட்டிகள் (Rail Tankers) இணையத்திற்கு வாடகைக்குவிடப்பட்டு உபயோகிக்கப்படவிருக்கின்றன.


**பால் உற்பத்தியைப் பெருக்க தொழில் நுட்பவசதி திட்டங்கள் :**

மேற்படி திட்டங்கள் மாநில இணையம், மாவட்ட ஒன்றியங்கள் கிராம பால் உற்பத்திச் சங்கங்கள் ஆகிய மூன்றடுக்குகளின் அடிப்படையில் செயல்படுத்தப்படும். இணையம் திரவ நைட்ரஜன் ( Liquid Nitrogen ) ஆலைகளை நடத்துவதுடன், திரவ நைட்ரஜன் உறைவிந்து, தீவன விதைகள், கால்நடை தீவனங்கள் ஆகியவற்றின் விநியோகத்தையும் மேற்கொள்ளும்.

கால்நடைப் பராமரிப்புக்காக அம்மை குததுதல், மற்ற மருத்துவ வசதிகள், சோதனைக் கூடங்கள் மற்றும் பாதுகாப்புநடவடிக்கைகளை ஏற்படுத்துவதுடனில்லாமல் நடமாடும் மருத்துவ சோதனை ஊர்திகளைப் பயன்படுத்தி கால்நடைகளில் உடல் நலத்தைப் பாதுகாப்பதன் மூலம் மாநிலத்தில் பரவலாக இருக்கும் திட்டத்தில் பங்கு கொள்ளும் ஒன்றியங்கள் கிராம பால் உற்பத்திச் சங்கங்கள் மூலம், கால்நடைகளுக்குத் தேவையான முதலுதவி, உறைவிந்து திரவ விந்து மூலம் செயற்கைக் கருத்தரிப்பு ஆகியவற்றிற்கு உதவும். மேலும் பால் வளர்ச்சித் திட்டங்கள் விவசாயிகளைப் பெருமளவில் பாலுற்பத்தியில் ஈடுபடுத்தும் திட்டங்கள், தீவன விதை விநியோகம் ஆகியவற்றிலும் உதவும் கிராமங்களில் இந்த வசதிகள் ஏற்படுத்தப்படுவதுடன், மாதிரிப் பால் பண்ணைகள், தீவனப் பண்ணைகளும் நிறுவப்படும்.

**திட்ட நிதி வசதி :**

இத்திட்டத்தைச் செயலாற்ற சுமார் 31.96 கோடி ரூபாய் தேவைப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பால் பண்ணை, கால்நடை, தீவன ஆலை, தொழில்நுட்ப, பால் விநியோக வசதி திட்டங்கள் மூலம் வருவாய் இனங்களைப் பெருக்குவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்கு 28 கோடி ரூபாய் செலவாகும். இதை 70 சதம் கடனாகவும் 30 சதம் மானியமாகவும் வழங்க பால் பெருக்குத் திட்டம்-2ல் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது தவிர பணியாளர்களைத் தேர்ந்தெடுத்து, பயிற்சி அளிக்கவும், கிராம பால் சங்கங்களுக்குத் தனி உதவி அளிக்கவும், இந்திய பால் நிறுவனம், தேசீய பால் வள வாரியம் நேரடியாக 3.9 கோடி ரூபாய் தந்து உதவும். கடன் தொகையை 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தவேண்டும். ஆனால் முதல் ஐந்து ஆண்டுகளுக்கு வட்டி செலுத்தாமல முதலுடன் சேர்க்கப்படும். இந்திய அரசின் நிதி அமைச்சகத்தின் வங்கிகள் இலாகா பிரசுரிக்கும் வட்டி விகிதாச்சாரப் பட்டியல் படி, இந்தக் கடனுக்கு வட்டி விதிக்கப்படும். தற்சமயம் இந்த விகிதம் 8½ சதம் கூட்டு வட்டி ஆகும். ஆறு மாதத்திற்கு ஒரு முறை வட்டி அசலில் சேர்த்துக் கொள்ளப்படும்.



**திட்டத்தினால் ஏற்படும் நன்மைகள் :**

திட்டத்தை அமுல்படுத்துவதால் சுமார் 10 இலட்சம் கிராம மக்கள், குறிப்பாக 85 சதம் சிறிய விவசாயிகள், நில மற்ற கூலியாட்கள் ஆகியவர்களின் வருமானம் அதிகரித்து அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்ட முடிவில் நாளொன்றுக்கு ரூ. 16 இலட்சம் கொள் முதல் விலையாக பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும். இந்தத் திட்ட காலத்தில் பால் உற்பத்தியாளர்களின் மொத்த வருவாய் உயர்வு சுமார் 343 கோடி ரூபாயாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. திட்ட முடிவிற்குப் பிறகு பால் உற்பத்தியாளர்களிடம் உள்ள கால்நடைகளின் மொத்த மதிப்பு மேலும் ஒரு கோடி ரூபாயாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வருவாய் அதிகரிப்பதால், விவசாயப் பெருமக்களுக்கு அதிக விதை, உரம், பாசன நீர் ஆகியவை பெறமுடியும். மேலும் மாடுகளின் சாண உரம் மூலம் அதிக உணவு உற்பத்தி செய்ய முடியும். நாளொன்றுக்கு நபருக்கு சராசரி 6 லிட்டர் உற்பத்தியானால் மேலும் 2 இலட்சம் விவசாயிகளுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும். இந்த வேலைவாய்ப்பை உண்டாக்க நபர் ஒன்றுக்கு ரூ. 1,600 இத்திட்டம் மூலம் செலவாகும். தவிர இந்தத் திட்டத்தினால் சுமார் 3,000 நபர்களுக்குப் பால் நுட்பத் துறை, கால்நடை மருத்துவத் துறை, பால் உற்பத்தித் துறை, பால் ரசாயனத் துறை, விற்பனை நிதி, கால்நடைத் தீவனம், தொழில்நுட்பப் பணிகளுக்கும், மற்றும் இதர தொழில் துறைகளில் நிரந்தர வேலை கிடைக்கும். தவிர பால் பெருக்கத்தாலும், வருவாய் அதிகரிப்பினாலும் மக்களுக்குச் சத்து உணவு கிடைப்பதுடன், கிராம ஆக்சப் பணிகளுக்கு அதிக அளவு நிதி வசதிகளும் இத்திட்டத்தினால் கிடைக்கும் வெகுமதிகள்.

**வளரும் தமிழகம்**



# தமிழகத்தில் நில உடைமை மேம்பாட்டுத் திட்டம்

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்
**எஸ்.டி.சோமசுந்தரம்**

நிலம் வைத்திருக்கின்ற விவசாய பெருங்குடி மக்கள் நிலத்தின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதிலும் அதன் பேரில் உள்ள நன்மைகளை முறைப்படி பெறுவதிலும் பலவித இன்னல்களை அனுபவித்து வருகிறார்கள்.

இந்த இன்னல்களை நீக்கி விவசாயிகள் நன்மைபெற வேண்டும் என்பதற்காகத் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர் அவர்கள் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

அந்தத் திட்டம் தான் ''நில உடைமை பதிவு மேம்பாட்டுத் திட்டம்''

கிராம செட்டில்மெண்டு பதிவேடுகள், சிட்டா போன்று நிலப் பதிவேடுகள் அவற்றின் பராமரிப்பு, விவசாயிகளுக்கு அந்த நிலத்தில் உள்ள சட்ட பூர்வமான உரிமை இவைகளைப் பாதுகாத்துக் கொடுப்பது அரசின் கடமையாகும்.

கிராமக் கணக்குகள், சிட்டா சர்வே எண், பட்டா மாற்றங்கள் இவைகள் எல்லாம் 50 ஆண்டுகளுக்கு முன்னர் செய்யப் பட்டவை. ஆனால் அதற்குப் பிறகு ஏற்பட்டுள்ள பாகப்பிரிவினை, கிரயம் வாரிசு மாற்றம், இவை போன்ற நடைமுறை மாற்றங்கள் முறைப்படி பதிவு செய்யப்படவில்லை. நில உடைமையாளர்களும் தாங்களாகவே முன்னுக்கு வந்து ஏற்பட்டுள்ள

மாறுதலகளை உடனுக்கு உடன் சரி செய்து கொள்ள முடிய வில்லை.

இதனால் விவசாயிகள் பல தொல்லைகளை அனுபவித்து வருகிறார்கள்.

*(1)* ஒரு விவசாயி, அரசாங்கத் திடமோ அல்லது கூட்டுறவு வங் கியிடமோ கடன் பெற விரும்பி னால், அவர் தனக்குச் சொந்த மான நிலத்தின் சிட்டா, பட்டா புத்தகம், ஏ ரிஜிஸ்டரின் நகல், அடங்கல் போன்ற பதிவேடு களின் நகலைத் தயாரித்துக் கொடுக்க வேண்டும். அப்பதி வேடுகளில் கடன் பெற விழை பவரின் பெயர் இருந்தால் தான், உடனடியாகக் கடன் பெற இயலும்.

*2.* அவ்வாறு இல்லாமல், கடன் பெற விழைபவரின் தகப்பனார் பெயரிலோ, அல்லது மற்றவர் களின் கூட்டுப் பெயரிலோ, பதி வேடுகள் இருப்பின், அப்பெயரில் உள்ளவர்களின் மற்றும் அவர் களது எல்லா வாரிசுதாரர்களி டம் இருந்தும் ஒப்புதல் பெற் றால் அல்லாமல் கடன் எளிதில் பெற இயலாது. கடன் பெற விழைபவர் தனிப்பட்டா வைத் துக் கொண்டிருந்தால், எளிதில் கடன் பெற இயலும்.

*3.* கூட்டுப்பட்டாவாக நிலங் கள் இருப்பின், மனு செய்பவ ரின் உரிமை நிலத்தின் மேல் எந்த அளவு உள்ளது என்பதை அறிவதும் கடினம்.

*4.* மேலும், ஒரு விவசாயி தன் னுடைய நிலத்தில் உள்ள கிணற் றுக்கு மின் இணைப்புப் பெற விரும்பினால் அவர் மின் இலாகா வினருக்கு மனுச் செய்யவேண்டும். அவ்வாறு செய்யும்போது, அந்த நிலம் தனிப்பட்டாவாக உள்ளதா அல்லது கூட்டுப்பட்டாவாக உள்ளதா என்று மின்துறையினர் கவனிக்கிறார்கள். தனிப்பட்டா வாக உள்ள நிலங்களுக்கு மின் இணைப்பு எளிதில் கிடைக்கிறது. கூட்டுப் பட்டாவாக இருந்தால், எல்லா கூட்டுப்பட்டாத்தாரர் களின் ஒப்புதல் பெற்றால் அல் லாமல் மின் இணைப்புப் பெற முடியாது.

*5.* ஒரு நிலம் பலருடைய கூட் டுப்பட்டாவாக இருப்பதால், ஒவ்வொருவரும் செலுத்த வேண் டிய நிலவரி பாக்கி எவ்வளவு என்று சரிவர அவர் தெரிந்து கொள்ள முடியாத நிலை ஏற் பட்டுள்ளது. சில பட்டாக்களில் அடையாளம் கண்டுகொள்ள முடி யாத நபர்களின் பெயர்களும் இடம் பெற்றுள்ள நிலையும் உள்ளது. பல ஆண்டுகளாகக் கூட் டுப்பட்டாக்கள் தனிப்பட்டாக் களாக மாற்றப்படாமல் இருப் பதே இதற்கு காரணமாகும்.

**நில உடைமைப் பதிவு திட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு:-**

1. விவசாயிகள் தங்கள் நில உரிமையினை அறிய முடி யும்.
2. கூட்டுப்பட்டாக்கள் தனிப் பட்டாக்களாக மாற்றப் படும்.
3. ''சிட்டா'' போன்ற கிராமக் கணக்குகளில் நில உரிமை யாளர்களின் பெயர்கள் குறிக்கப்படும்.

**இத்திட்டத்தின் வாயிலாக ஏற்படும் நன்மைகள் :**

*1.* பூமியில் உட்பிரிவுகள் செயல் படுத்தப்படும். *(2)* கூட்டுப்பட் டாக்களைத் தனிப்பட்டாக்களாக பிரித்துத் தரப்படும். *(3)* விவசாயி கள் தங்குதடையின்றி வங்கி களில் கடன் உதவி பெற வாய்ப்பு பெருகும். *(4)* அவர்கள் தங்கள் உரிமையினை எளிதில் அறிய முடியும். *(5)* அரசுக்குச் சொந்த மான நிலங்களின் எல்லைகள் நிர் ணயிக்கப்பட்டு, அவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும் இத்திட்டம் வழிவகை செய்யும். *(6)* மேலும் கூட்டுப்பட்டா நிலங் களின் ஈட்டின் பேரில் வாங்கப் பட்ட கடன் பணத்தை உரியவர் களிடத்தில் வசூலிக்க இத்திட் டம் வகை செய்யும்.

*(7)* இத்திட்டத்தின்கீழ் பட்டா புத்தகங்கள் புதுப்பிக்கப்படுவ தால், விவசாயிகளுக்கு அவர்கள் நிலத்தின் எல்லா விவரங்களையும் அந்நிலத்தில் அவர்களுக்கு உள்ள உரிமைகளையும் அறிய வாய்ப்பு ஏற்படுகிறது. *(8)* இது வரையி லும் பட்டா மாற்றங்கள் செய்ய வேண்டுமானால் விவசாயிகள் அதற்குரிய கட்டணத்தைக் கட்ட வேண்டும். அலுவலர்களை நாடிச் செல்ல வேண்டும். இதனால் பண விரயமும், கால தாமதமும் நேர்ந் தது. இந்நிலை இந்த திட்டத்தின் மூலமாகத் தவிர்க்கப்படும். *(9)* புதிய திட்டப்படி, மனுக்கள் இல்லாமல் பட்டா மாற்றம் உட னுக்குடன் செய்யப்படும். *(10)* பினாமி நிலங்கள் இத்திட்டத் தின் கீழ் கண்டுபிடிக்கப்படும். *(11)* அரசு சிறு விவசாயிகளுக்குப் பல வரிச் சலுகைகளை அளித்து வருகிறது. சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்படி பல மானியங்களை அரசு அளிக் கிறது. சிறு விவசாயிகளின் நிலம் கூட்டுப் பட்டாவாக இருப்பதால் சிறு விவசாயிகள் யார் எனக்கண்டு பிடிப்பது கஷ்டமாக உள்ளது. அதனால் அரசு அளிக்கிற நன் மைகளைச் சிறு விவசாயிகள் பெற முடியாத நிலை ஏற்படு கிறது. இத்திட்டத்தினால் இக் குறை நீக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தை 5 ஆண்டுகளில் முடிக்க வேண்டுமென்று தமிழக அரசு திட்டங்கள் தீட்டி 1979ம் ஆண்டு ஜுன் மாதம் முதல் அமுல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் 30,000 சதுர மைல்கள் அளந்து, வரை படம் போட்டு நில உடைமை யாளருக்குத் தரப்பட இருக்கிறது. திட்டத்தை எடுத்துக் கொள்ளும் பொழுது பொது மக்களின் கவ னத்திற்குக் கொண்டு வரப்படு கிறது.

எடுத்துக்கொள்ளுகிற கிராமத தில் தண்டோராமூலம் அந்தக்கிரா மத்தில் உள்ள மக்களை ஓா இடத்திற்குக் கூட்டப்படுகிறது. திட்டத்தின் நன்மைகளை விளக் கிச்சொல்லப்படுகிறது. திட்டம் வெற்றி பெற அவர்களின் ஒத் துழைப்புக் கேட்கப்படுகிறது.

இத்திட்டம் இன்றைக்கு 28 வருவாய் வட்டங்களில் செயல் பட்டு வருகிறது. திட்டம் எடுத் துக்கொள்ளப்பட்ட கிராமங்கள்: 3,426. திட்டம் முடிவுற்ற கிரா மங்கள் 835. திட்டங்கள் நடை பெற்றுக்கொண்டுள்ள கிராமங் கள்-2,591. இந்தத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்குப் பட்டா கொடுக்கப்பட்ட கிராமங்கள்- 115. இதுவரையில் கொடுக்கப் பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை 1 லட்சத்து 15 ஆயிரம். இதைத் தொடர்ந்து மற்ற வருவாய் வட் டங்களிலும் வேலைகள் நடைபெற இருக்கிறது.

நில அளவை நடந்து கொண் டுள்ள கிராமங்களில் குறைபாடு இருப்பின் அவைகளை நீக்க அரசு என்றும் தயாராக இருக்கிறது. பொது வாழ்க்கையில் ஈடுபட்ட வர்கள் மக்களுக்கு ஏற்படுகிற நன்மை துரிதமாகவும், விரைவாக கவும், முழுமை பெற்றதாகவும், இருக்க வேண்டும் என்பதில் தங் களுடைய கவனத்தைச் செலுத்தி இந்தத் திட்டத்தை இன்னும் சிறப்பாக அமைக்க அவர்களு டைய ஆலோசனையைப் பெற எப்போதும் இந்த அரசு தயா ராக இருக்கிறது என்பதனைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். திட்டம் வெற்றி பெற மக்களு டைய ஒத்துழைப்பை வேண்டு கிறேன். வளர்க திட்டத்தின் நன் மைகள், வணக்கம்.

(சென்னை வானொலியில் 7-9-80-ல் ஒலிபரப்பப்பட்டது.)



வளரும் தமிழகம்



# மரம் வளர்ப்போம்! வளம் குவிப்போம்!

மாண்புமிகு செய்தி- அறநிலையத் துறை அமைச்சர்

## இராம. வீரப்பன்

தமிழ்ப் பெரு மக்களே, வணக்கம்!

'வளரும் தமிழகம்' என்ற தொடரில் தமிழக அரசின் வளர்ச்சித் திட்டங்களை விளக்கும் இந்த வானொலி உரை வரிசையில், இன்று எனக்குத் தரப்பட்டுள்ள தலைப்பு ''வீட்டுக்கு ஒரு மரம்'' என்பதாகும்.

ஆனால், நான் இன்று தலைப்பை மாற்றிக் கொள்ளவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப் பட்டிருக்கிறேன். 'வளரும் தமிழகம்' என்ற தொடரில் 'அழியும் கானகம்' என்ற பொருள் பற்றிப் பேச வேண்டி உள்ளது.

ஆம், வளர்க்கப்படவேண்டிய - கானகங் கள் - பாதுகாக்கப்பட வேண்டிய காடுகள் - நம்மை வாழவைக்கும் மரங்களை நாம் இப்பொழுது வேகமாக அழித்துக் கொண் டிருக்கிறோம், அதனால் ஏற்படவிருக்கும் அபாயங்களை எடுத்துச் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் நான் இருக்கிறேன்.

பழங்காலத்தில் கானகங்களே உலகெங் கும் முதலில் தோன்றிப் பரவியிருந்தன. உயிர்களின் பரிணாம வளர்ச்சிப்படி மனிதன் பல்லாயிரம் ஆண்டுகளுக்குப்பின் கானகங்களின் துணையினால்தான் தோன்றினான். ஆனால், உலகில் தோன்றிய உயிரினங்கள் எல்லாம் காடுகளையே நம்பி, காடுகளின் சூழலிலேயே வாழ்ந்து வருகின்றன. ஆனால், மனிதன் மட்டும் தன் அறிவு வளர வளர, தன் வாழ்க்கை வசதிகளுக்காகக் காடுகளை அழித்து நாடு நகரங்களாக்கினான். இவ்வாறு காடு திருத்தி நாடாக்கும் பணி தொடர்ந்து நடந்ததால் நாடுகள் பெருகின. காடுகள் அருகின. நாகரிகங்கள் வளர்ந்தன. வனச் செல்வங்கள் குறைந்தன. செயற்கை வளங் கள் மிகுந்தன. இயற்கை வளங்கள் சிதைந்தன.

ஒரு நாட்டிற்கு நீர்வளமும் நிலவளமும் நிலைக்கவேண்டுமானால் வனவளம் அவசியம் என்பதை அறிவியல் அறிஞர்கள் இப்பொழுது தான் உணர்ந்து, வன வளத்தைப் பாதுகாக்க வேண்டுமெனப் பெரிதும் வலியுறுத்துகின்றனர். ஒரு நாட்டின் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதி வனப் பகுதியாக இருக்க வேண்டு மென்பது இன்றியமையாத தேவையாகும். ஆனால், நமது தமிழ்நாட்டில் 16 சதவீதப் பகுதி தான், வனப்பகுதியாக அமைந்துள்ளது.

வன வளம் மனித வாழ்வுக்கு எவ்வளவு அடிப்படையாக அமைந்துள்ளது என்பதை

உணர்ந்தால்தான், காடுகளை, மரங்களை பாதுகாக்கவேண்டிய அவசியத்தையும் நம்மால் உணர முடியும்.

கிராமப் பகுதிகளே அதிகம் நிறைந்த நமது நாட்டில், பழங்காலத்தில், மக்கள் தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய அவசியமான பொருட்கள் பலவற்றையும், காடுகளிலிருந்தே பெற்று வாழ்ந்தனர்.

குறிப்பாக, குடி இருப்பதற்கும், உழுவதற்கும், உணவு சமைப்பதற்கும் பயணம் செய்வதற்கும் படிப்பைப் பெறுவதற்கும் இது போன்ற அடிப்படைத் தேவைகள் அனைத்திற்கும் காடுகளையும், காட்டிலுள்ள மரங்களையும் பயன் படுத்தித்தான் வாழ்ந்தனர்.

மேலும், நாம் உணவிற்காகவும், மருந்திற்காகவும், பயன் படுத்துகிற பெரும்பாலான பொருட்கள் காடுகளில் இருந்துதான் கிடைக்கின்றன.

ஆனால், அந்தக் காலத்தில் காடுகள், அதிகமாகவும் மனிதர்கள் குறைவாகவும் இருந்ததால், மனிதன் தன் மனம் போனபடி, வனங்களையும் வனச் செல்வங்களையும் அழித்துப் பயன்படுத்தினான். பிறகு மனிதன் பெருகினான் - மனிதனின் தேவைகளும் பெருகின. காடுகளை அழித்துப் பயன்படுத்திக் கொண்டே வந்தான். அதன் விளைவாகக் காடுகள் குறைந்தன.

மரம் செடி கொடிகளின் வளர்ச்சியில் தான் மனிதனின் வாழ்வும் அடங்கி உள்ளது என்பதை மனிதன் அறவே மறந்துவிட்டான். அதன் விளைவுதான் பெற்ற அன்னையை வெட்டிச் சாய்ப்பது போல் உயிர் கொடுக்கும் மரங்களையே மனிதன் வெட்டிச் சாய்க்கிறான்.

மனிதனுக்கு வேண்டிய சாதனங்களை உருவாக்க மட்டும் மரம் பயன்படவில்லை. மனிதன் உயிர் வாழ்வதற்கு வேண்டிய 'பிராணவாயு' என்றழைக்கப்படும் உயிர்க் காற்றையே மரங்கள்தான் தருகின்றன. 'கரியமிலவாயு' என்னும் நச்சுக் காற்றை தான் உட்கொண்டு 'பிராணவாயு' என்னும் உயிர்க்காற்றையே மனித இனத்திற்குத் தந்து கொண்டிருக்கின்றன.

இதனை உணராமல், மரங்களை அழிப்பதன் மூலம் மனிதர்கள் தங்களையே தற்கொலைக்குத் தயாராக்கிக் கொள்கிறார்கள் என்பது தான் பொருள்.

மரங்களை வெட்டி காடுகளை அழித்ததால், மனித சமுதாயம் எவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதற்குச் சில சான்றுகளைத் தருவது பயன் அளிக்கும் என்று நம்புகிறேன்.

பிரேசில் நாட்டில் உலகிலேயே அடர்ந்த காடுகள் இருந்தன. அங்கு ஒரு பகுதியில் மக்களைக் குடியமர்த்துவதற்காகவும், வேளாண்மைக்காகவும் அக் காடுகள் அழிக்கப்பட்டன. அப்படிக் காடுகள் அழிக்சப்பட்டதால், அந்நிலம் விவசாயத்திற்கும் பயன் படாமல் வெப்ப மிகுதியால் மனிதர்களின் தோலில் புற்று நோய் தோன்ற ஆரம்பித்ததால் இறுதியாக மக்கள் அவ்விடத்தை விட்டே வெளியேற நேர்ந்ததாம்.



நமது நாட்டில்கூட இராஜஸ்தான் மாநிலத்தில் கங்கையைப் போன்ற ஒரு நதியாக - கக்கர் நதி பெருகி ஓடியதாகவும், அதனைச் சுற்றி வளமான காடும் வண்டல் மண்ணும் இருந்தன என்றும் கூறுகிறார்கள். ஆனால் நகரங்களை அமைக்க அந்த வண்டல் மண்ணைக் கல்லாக்கி, மரத்தை வெட்டி எரித்து, செங்கற்கள் செய்ததன் பலனாக காடு அழிந்து பாலை நிலமாக இன்று மாறியதாக அறிகிறோம்.

மாபெரும் அணைக்கட்டுகளுக்காகவும், மின் உற்பத்தி நிலையத்திற்காகவும் காடுகள் அழிக்கப்படும்போது, நேர் எதிர் மாறான விளைவுகள் ஏற்பட்டுள்ளன. நவ இந்தியாவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பக்ராநங்கல், ஹிராகுட், நைஜாம் சாகர் போன்ற மாபெரும் நீர்த்தேக்கங்கள் அவை சுற்றியுள்ள காடுகள் அழிக்கப்பட்டதால் மண் அரிப்பு ஏற்பட்டு மழை நீரோடு வரும் மண் சேர்ந்து நீர் கொள்ளளவு குறைந்து வருகிறது. 90 கோடி கனமீட்டர் நீர் தேக்கி திட்டமிடப்பட்ட நைஜாம் சாகரில் 34 கோடி கன மீட்டர் நீரைக்கூட தேக்க இயலவில்லை எனவும், இதைப்போலவே பிலிப்பைன்ஸ் நாட்டில் 'லுசான்' என்னுமிடத்தில் உள்ள நீர்த் தேக்கம் 60 ஆண்டுகளுக்குப் பயன்படும் என்று கருதப்பட்டது. அது 32 வருடங்களில் முழுவதும் தூர்ந்துவிடும் என்று அஞ்சப்படும் செய்தியையும் அறிகிறோம்.

காடுகள் முழுவதும் வெட்டப்பட்டதால் இமயமலைப்பகுதியில் அல்மோரா மாவட்டத்தில் 'குமாவோன்' குன்றுகள் இன்று வெறும் பரம்பாக நின்று அதில் சப்பாத்திக் கள்ளியைத் தவிர வேறு எதுவும் முளைக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது.

போதிய மரங்கள் இல்லாததன் காரணமாக இந்த நாட்டில் ஆண்டு-தோறும் வெள்ளத்தால் அரித்துச் செல்லப்படும் மண்ணின் அளவு 600 கோடி டன் என்றும் அதன் மூலம் இழக்கும் உரச்சத்து 60 இலட்சம் டன் என்றும் அறிஞர்கள் கணக்கிட்டுள்ளனர்.

மரங்கள் மருந்தாகப் பயன்படுகிறது. மேலும் நோய்கள் வராமல் தடுப்பதும் மரங்கள்தான். உதாரணமாக தென் அமெரிக்காவில் மரங்கள் வெட்டப் பட்ட பகுதிகளில், மலேரியா நோயும் மஞ்சள் காய்ச்சலும் பெருமளவில் பலி கொண்டன என்றும் கூறப்பட்டுள்ளது. அமெரிக்காவில் 40% மருந்துகள் நேரடியாக தாவரங்களிலிருந்து தயாரிக்கப்படுகின்றன என்றும் அதன் மதிப்பு ஆண்டிற்கு ரூ. 3000 கோடி என்றும் கூறப்படுகிறது.

மரங்களை வளர்ப்பதால் பயிர்களின் உற்பத்தி, தானாகவே பெருகுகிறது என்பது விஞ்ஞானம் கண்ட உண்மை. இயற்கையான மகரந்தச் சேர்க்கையினால் மட்டும் 150 முதல் 600 சதவிகிதம் வரை அதிக உணவுப்பொருள் உற்பத்தியாகிறது என்று கணக்கிட்டுள்ளனர்.

மரங்கள் குறைநத காரணத்தால் உணவு இருந்தும் சமைக்க விறகு இல்லை என்ற நிலை சில நாடுகளில் நிலவுகிறது என்றும் தெரிகிறது. விறகுப் பஞ்சத்தால் பாதி சமைத்த அதாவது அரை வேக்காட்டு உணவையே நேபாள நாட்டு மக்கள் உண்ணவேண்டிய கட்டாய நிலை உள்ளது என்றும் அறிகிறோம்.

(44-ம் பக்கம் பார்க்க)




நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற திருமதி இந்திரா காந்தி அவர்கள், தமிழக அமைச்சரவையைக் கலைத்ததும், 'இத்தோடு திரு எம்.ஜி.ஆர். அவர்களின் அரசியல் வாழ்வு முடிந்துவிட்டது; இனிமேல் அவரால், மீண்டும் தலைதூக்க முடியாது' என்றுதான் அரசியலில் ஆருடம் கணித்துச் சொன்னார்கள். ஆனால் முன்பிருந்ததைவிட பன்மடங்கு பலத்துடன், மறுபடியும் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் திரும்பவும் வெற்றி பெற்றுவிட்டார். அறுதிப் பெரும்பான்மைப் பலத்துடன் மறுபடியும் அரசோச்சக் கூடிய வாய்ப்பினை அவருக்குத் தமிழக மக்கள் அளித்து, அந்தத் தலைவன் பேரில் தங்களுக்குள்ள அசைக்கமுடியாத நம்பிக்கையை உறுதிப் படுத்தியுள்ளனர். பதவி பறிமுதல் செய்யப் பட்ட ஒன்பது முதலமைச்சர்களில் பிரதமர் இந்திராவின் அதிகார பலத்திற்கிடையேயும்-மகத்தான வெற்றி பெற்ற ஒரே முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள்தான்!

—" ASIA WEEK "— 1-8-80

('ஹாங்காங்'கிலிருந்து வெளிவரும் வார இதழ்)




## வறுமை சிரிக்கிறது!

(ஆசிரியர் : மன்னர்மன்னன் வெளியீடு: பூங்கொடி பதிப்பகம், 22, வி. எஸ். வி. கோயில் தெரு, சென்னை-4. விலை ரூ.7-50)

பாவேந்தர் பாரதிதாசனாரின் திருமகன் மன்னர் மன்னன். அவரது கைவண்ணமே இந்த நாடக நூல். இதில் ஐந்து நாடகங்கள் அடங்கியுள்ளன. பாண்டிச்சேரி வானொலியில் ஒலி பரப்பான இவை, படிக்கவும் சுவையாக உள்ளது.

ஒவ்வொரு நாடகத்திலும் வருவோர் போவோர் எல்லாம் நம் கண்முன் நிற்கிறார்கள். சமுதாயம் என்னும் வயல் வளங் கொழிக்கத் தூண்டுகோலாகத் திகழ்கிறது இந் நூல். 'என் எழுத்துக்களில் என் சமுதாயக் கடமைகள் படியும்; அந்தக் கடமையின் வடிவங்கள் இந்த வரி வடிவங்கள்' என்று நாடகாசிரியர் குறிப்பிடுவதைக் கவனிக்க வேண்டும்.

## மழலைச் செல்வம்

(ஆசிரியர் : கவிஞர் மு. கோவிந்தராசன், வெளியீடு : திருமலைக் குமரன் பதிப்பகம், கூத்தங்குடி, கீழப்படுகை அஞ்சல், விசயபுரம் வழி, தஞ்சை மாவட்டம், விலை: ரூ. 3-50)

ஐந்திலேயே வளைந்திட வேண்டும் என்ற எண்ணத்தில், சின்னஞ்சிறு அரும்புகளுக்கு அறிவுரை வழங்குவர் பெரியோர். அந்த வகையில் 'மழலைச் செல்வம்' பல அறிவு மலர்களை உதிர்க்கின்றது; மலர்களெல்லாம் மணம் வீசித் திகழ்கின்றது.

பத்தொன்பது பாடல்களை உள்ளடக்கிய இந்நூல், ஆசிரியரின் கைவண்ணத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறது.

'என் தமிழே எழுந்திடுக!' 'தம்பி வாழ்ந்திடு!' 'தூய மருந்து' மற்றும் 'குழந்தை' என்னும் நீண்ட பாடல்கள் நெஞ்சில் நிற்கின்றன. மழலைச் செல்வத்தின் மாண்பினை வரிக்கு வரி உணர்த்துகிறார் கவிஞர்.

## சிந்தைக்கினிய சீறா


(தொகுப்பாசிரியர்: மணவை முஸ்தபா ; வெளியீடு : மீரா: பௌண்டேஷன், AE 103, அண்ணா நகர், சென்னை-40. விலை ரூ.15)

உமறுப் புலவர் வழங்கிய ஓர் உன்னதமான தமிழ்க் காவியம் 'சீறாப்புராணம்', கடிகைமுத்துப் புலவரிடம் தமிழ் கற்று, எட்டையபுரத்து அரசவைக் கவிஞராக ஏற்றம் பெற்றவர் உமறு. அவர் படைத்த பைந் தமிழ்க் காவியம்தான் சீறா. சீறாவின் அருமை பெருமைகளை விளக்கிடும் வகையிலே 1976ஆம் ஆண்டில் நடந்தது 'சீறாப் புராணக் கருத்தரங்கு! அதிலே பங்கு பெற்று சீறாவின் இலக்கிய நயங்களை—அழகினை—ஆழத்தினை அழகு தமிழிலே எடுத்தியம்பினார்கள் அறிஞர் பெருமக்கள்.

அவர்கள் சிந்திய முத்துக்கள் தான், 'சிந்தைக்கினிய சீறா' வாக உருவெடுத்தது. 318 பக்கங்கள் உள்ள இத்தொகுப்பு நூலில், சீறாவின் சிறப்புகளை அள்ளித் தெளிக்கிறார்கள் தமிழறிஞர்கள் பதின்மர்.

நூலைப் படிக்கு முன் நுழைவாயில் - முகப்பு - திறப்பு தனி முத்திரையாய் விளங்குகிறது. அன்னைத் தமிழுக்கு அணியாரம் சூட்டிடும் வகையில் அருமையாகத் தொகுத்திருக்கிறார் மணவை முஸ்தபா.

—பி. வி. ஜி.



# வீட்டுவசதி வாரியத் தலைவர் சிறப்புப் பேட்டி

**இ. எஸ். வெங்கடேசன்**
**தலைவர்: தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்**

**தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் நோக்கமென்ன?**

உணவு, உடைக்குப் பிறகு, வீட்டு வசதி மக்களின் முக்கிய அடிப்படைத் தேவையாக உள்ளது. இக்கருத்தினை மேற்கொண்டு, வீடற்ற பலதரப்பட்ட வகுப்பினருக்குக் குறைந்த விலையில் அடிப்படை வசதிகளுடன் கூடிய குடியிருப்புகளைக் கட்டிக் கொடுப்பதே தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் முக்கிய நோக்கமாகும்.

**துவக்க காலம் முதல் இதுவரை (1) எத்தனைச் சிறிய வீடுகள் (2) எத்தனைப் பெரிய வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன?**

இதுவரை 27,153 சிறிய வீடுகளும், 31,869 பெரிய வீடுகளும் கட்டித் தரப்பட்டுள்ளன.

**இதன் மூலம் எத்தனைக் குடும்பங்கள் பயன் பெற்றிருக்கின்றன?**

இதன் மூலம் 85,397 குடும்பங்கள் பயன் அடைந்துள்ளன. மேலும் சென்னை, கோவை, வேலூர், மதுரை, திருச்சி, புதுக்கோட்டை, ஈரோடு, சேலம், பாளையங்கோட்டை மற்றும் பல இடங்களில் புறநகர்ப் பகுதிகள் உருவாக்கப்பட்டு அவற்றில் மேம்படுத்தப்பட்ட மனைகள் பொது மக்களுக்குத் தங்கள் விருப்பப்படி வீடுகள் கட்டிக்கொள்ளும் நோக்கத்துடன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகளும் கட்டித் தரப்படுகின்றன.

**அரசு அலுவலர்க்கான குடியிருப்புகள் எத்தனை உள்ளன?**

அரசு அலுவலர்களுக்கான வாடகைக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை 10,731 குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ளன. அவை :

| | மாவட்டம் | | கட்டப்பட்டுள்ள குடியிருப்புகள் |
|---|---|---|---|
| 1. | சென்னை | ... | 2,419 |
| 2. | செங்கல்பட்டு | ... | 339 |
| 3. | வட ஆர்க்காடு | ... | 404 |
| 4. | தென் ஆர்க்காடு | ... | 455 |
| 5. | திருச்சிராப்பள்ளி | ... | 1,426 |
| 6. | சேலம் | ... | 625 |
| 7. | தர்மபுரி | ... | 503 |
| 8. | கோயம்புத்தூர் | ... | 1,717 |
| 9. | நீலகிரி | ... | 165 |
| 10. | தஞ்சாவூர் | ... | 916 |
| 11. | புதுக்கோட்டை | ... | 213 |
| 12. | மதுரை | ... | 740 |
| 13. | இராமனாதபுரம் | ... | 118 |
| 14. | திருநெல்வேலி | ... | 482 |
| 15. | கன்னியாகுமரி | ... | 100 |
| 16. | பெரியார் | ... | 109 |
| | ஆக மொத்தம் | ... | 10,731 |



**குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு எத்தனை வீடுகள் தரப்பட்டுள்ளன?**

குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான குடியிருப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை 9,046 குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ளன. அவை :

| | மாவட்டம் | | கட்டப்பட்டுள்ள குடியிருப்புகள் |
|---|---|---|---|
| 1. | சென்னை | ... | 4,359 |
| 2. | செங்கல்பட்டு | ... | 508 |
| 3. | வட ஆர்க்காடு | ... | 270 |
| 4. | தென் ஆர்க்காடு | ... | 146 |
| 5. | திருச்சிராப்பள்ளி | ... | 202 |
| 6. | சேலம் | ... | 506 |
| 7. | தர்மபுரி | ... | 180 |
| 8. | கோயம்புத்தூர் | ... | 394 |
| 9. | தஞ்சாவூர் | ... | 904 |
| 10. | மதுரை | ... | 1,158 |
| 11. | திருநெல்வேலி | ... | 355 |
| 12. | கன்னியாகுமரி | ... | 64 |
| | ஆக மொத்தம் | ... | 9,046 |

**வீட்டு வசதி வாரியம் கட்டித்தரும் வீடுகள் அவ்வளவு உறுதியாக இல்லை என்று கூறப்படுகிறதே! அது உண்மையா?**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டித்தரப்படும் வீடுகள் உறுதியாக இல்லை என்று கூறப்படுவது உண்மைக்குப் புறம்பானது. ஏனெனில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், அதன் கைதேர்ந்த பொறியாளர்களைக் கொண்டும், தரமான கட்டடப் பொருட்களை உபயோகித்தும், மண்தரத்திற்கேற்ப அடிக்கல் அமைத்தும் நல்ல முறையில் மேற்பார்வை செய்யப்பட்டு தரமான வீடுகள் கட்டப்பட்டு வருகிறது. தக்கைக் கல் என்ற புதிய கட்டுமானப் பொருளை உபயோகிப்பதால் இந்த எண்ணம் தோன்றலாம். ஆனால், இது செங்கல்லைப் போன்றே உறுதியானது.

**அவ்வாறு கட்டப்பட்ட வீட்டில் குடி வந்தவர்கள்—வீட்டில் பழுதுகள் ஏற்பட்டால் சம்பந்தப்**



**பட்ட செயற் பொறியாளர் உடனே நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்றும் கூறப்படுகிறது. அது பற்றித் தங்கள் கருத்து என்ன?**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படும் வீடுகளில் பெரும்பாலும் பழுதுகள் ஏற்படுவதில்லை. அவ்வப்போது குடியிருப்புதாரர்களிடமிருந்து வரும் முறையீடுகளின் பேரில், நிர்வாகப் பொறியாளர், உதவிப் பொறியாளர்களைக் கொண்டு குடியிருப்புகளில் ஏற்படும் பழுதுகள் நிவர்த்திக்கப்படுகின்றன. அவ்வாறு செய்யும்போது சில நேரங்களில் காலத்தாமதமாகலாம். மற்றபடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், செயற் பொறியாளர்கள் மாதாமாதம் குடியிருப்போர் சங்கங்களுடன் ஆலோசனை நடத்தி குறைகளைத் தீர்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

பல்வேறு வாரியத் தலைவர்களை நேரில் சந்தித்து, அவர்களது தலைமையில் இயங்கி வரும் வாரியங்களின் பணிகள் குறித்து, விளக்கிடும் பேட்டிக் கட்டுரைத் தொடர் ஒன்று "வளர்ச்சிப்பாதையில் தமிழ்நாடு" என்ற தலைப்பில் இவ்விதழிலிருந்து ஆரம்பமாகிறது.

முதல் கட்டுரையாக வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு இ. எஸ். வெங்கடேசன் அவர்களின் பேட்டி இவ்விதழில் இடம் பெறுகிறது.

—ஆசிரியர்.

**சில குடியிருப்புப் பகுதிகளில் குடிநீர், சாலை வசதி, தெரு விளக்கு போன்றவை செய்யப்படவில்லை என்று கூறப்படுகிறது! அதற்கு ஆவன செய்யப்படுமா?**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மேம்படுத்தப்பட்ட புற நகர்ப் பகுதிகளில் சாலை வசதி மற்றும் குடிநீர் வசதிகள் போன்றவை அமைத்துக் கொடுத்தபின்பே ஒதுக்கீடுதாரர்களுக்கு மனைகள் மற்றும் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தெரு விளக்கு வசதிக்கான திட்ட மதிப்பீட்டை சென்னை நகரில் மாநகராட்சியிடமும், மற்ற இடங்களில் மின் வாரியத்தினிடமும் முன் பணமாகச் செலுத்தி இவ் வசதியினை ஏற்படுத்தித் தருகிறது. சென்னை நகரிலேயே குடிநீர்ப் பற்றாக் குறை இருப்பதால், சில மாதங்களில் சிறிது தட்டுப்பாடு ஏற்படுவது உண்மையே.

**குடியிருப்புப் பகுதிகளில் என்னென்ன வசதிகள் உள்ளன?**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மேம்படுத்தப்பட்ட புறநகர்ப் பகுதிகளில் சாலை வசதி, தெரு விளக்கு வசதிகள், குடிநீர் மற்றும் வடிகால் வசதிகள், கழிவு நீர்வசதிகள் போன்ற அடிப்படைவசதிகள் செய்வது மட்டும் அல்லாமல் சாலை இரு ஓரங்களிலும் மரங்கள் நடுதல், குப்பைத் தொட்டிகள் ஆங்காங்கே அமைத்தல் போன்ற வசதிகளும் செய்து கொடுக்கப் படுகிறது. மேலும் புறநகர்ப்பகுதியில் சமூக நலக் கூடம், விளையாட்டுத் திடல், பூங்கா வசதிகள், கடைகள் மற்றும் அங் காடிகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தித் தரப்படுகின்றன. இதைத் தவிர பெட் ரோல் பங்கு, திரையரங்கம், தீ அணைப்பு நிலையம், தபால் நிலையம், பள்ளிக் கூடம் போன்றவற்றிற்கு மனைகள் ஒதுக் கீடு செய்யப்படுகின்றன.

**அடுக்குமாடி வீடுகள், விண்ணப்பதாரருக்கு எந்த அடிப்படையில் தரப்படுகின்றன?**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படும் பல தரப்பட்ட அடுக்கு வீடுகளுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டு, குலுக்கல் முறை மூலம், தவணை முறையில் ஆண்டு வருமானம் அடிப்படை ஒதுக்கீடு செய்யப்படுகிறது அதாவது:


| | | |
|---|---|---|
| பொருளாதாரத்தில் பின் தங்கியோர்க்கு | ... | 4,200-க்கு மேற்படாமல் |
| குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு | ... | 4,200முதல் 7,200 வரையில் |
| நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு | ... | 7,200முதல் 18,000 வரையிலும் |
| உயர்ந்த வருமானம் உள்ளவர்களுக்கு | ... | 18,000-க்கு மேல் |

மேலும், வாரியத்தால் கட்டப்படும் வீடுகள் கீழ்க்கண்ட சதவிகிதத்தில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

| | | ரூபாய் சதவீதம் |
|---|---|---|
| 1. தாழ்த்தப்பட்ட மற்றும் மலை சாதியினருக்கு | ... | 10 |
| 2. மாநில அரசு ஊழியர்களுக்கு | ... | 18.5 |
| 3. மத்திய அரசு ஊழியர்களுக்கு | .. | 11 |
| 4. இராணுவ சிப்பந்திகளுக்கு | ... | 7.5 |
| 5. சலவையாளர்களுக்கு | ... | 5 |
| 6. பொதுமக்களுக்கு | ... | 48 |
| | | 100 |



**இதைத் தவிர வீட்டு வசதி வாரியத்தால் அரசு அலுவலர்களுக்குக் கட்டப் படும் வீடுகள் வாடகைத் திட்டத்தின் கீழ் அலுவலர்களின் வருமான அடிப்படையில் தங்கள் மாத அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவிகிதமும் வீட்டு வாடகைப்படியும் சேர்த்து வாடகையாக நிர்ணயிக்கப்பட்டு விண்ணப்ப வரிசைப்படி அரசால் ஒதுக்கிடு செய்யப்படுகிறது.**



**தக்கைக்கல் (CELCRETE) வீடுகள் உறுதியாக இருக்குமா?**

தக்கைக்கல்லால் கட்டப்படும் வீடுகள் உறுதியாக இருக்கும். செங்கற்களால் கட்டப்படும் வீடுகள் எவ்வளவு உறுதியாக இருக்குமோ அதே அளவிற்குத் தக்கைக் கல்லால் கட்டப்படும் வீடுகளும் உறுதியாக இருக்கும். தக்கைக்கற்களை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தனது கட்டட வேலைகளுக்குப் பெருவாரியாக உபயோகித்து வருகிறது. இதன் மூலம் செங்கலின் விலை அளவுக்கு மேல் மீறாமல் கட்டுப்படுத்தப்படுகிறது.

**இந்த கற்களைத தனியார் வாங்குகின்றனரா?**

தக்கைக்கற்களைத் தனியாரும்வாங்குகின்றனர். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் தயாரிக்கப்படும் தக்கைக் கற்கள் வாரியத்தில் கட்டட வேலைகளுக்குப் பெருவாரியாக உபயோகிக்கப்படுவது மட்டும் அல்லாமல், தனியாரும் இத் தக்கைக் கற்களை வாங்கி உபயோகிக்கின்றனர். மேலும் தமிழ்நாட்டில் மட்டும் அல்லாமல், கர்நாடகம் மற்றும் ஆந்திர மாநிலங்களிலும் இத்தக்கைக் கற்களைத் தனியார் வாங்கி உபயோகிக்கின்றனர். இது பல மாடிக்கட்டடங்கள் கட்டுவதற்கு மிகவும் பயன்படுகிறது.

**வாரியம் மேற்கொள்ளவிருக்கும் புதிய திட்டங்கள் ஏதேனும் உள்ளனவா?**

உலக வங்கி உதவிபெறும் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தில் இரண்டாவது கட்டமாக 1980-81-ஆம் ஆண்டு மொகப்பர் மற்றும் நெற்குன்றம் ஆகிய இடங்களில் ஆயத்தப்பணிகள் துவங்கப் படுகின்றன. இத்திட்டம் பல்வேறு மக்களுககு ரூ. 23.80 கோடி மதிப்பீட்டில் 14,900 மனைகள்-வீடுகள் வழங்குவதைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

மேலும் வாரியம், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்காக 979 குடியிருப்புகளும், குடிசைவாழ் மக்களுக்காக 1,008 குடியிருப்புகளும், தொழிற்சாலை தொழிலாளர்களுக்காக 488 குடியிருப்புகளும், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்காக 3,020 குடியிருப்புகளும், நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்காக 3,086 குடியிருப்புகளும், உயர் வருமானம் உள்ளவர்களுக்காக 2,498 குடியிருப்புகளும், அரசு அலுவலர்களுக்காக 2,284 குடியிருப்புகளும் மற்றும் காவல் துறையினருக்காக 852 குடியிருப்புகளும் கட்ட புதிய திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

**புதிய நகர்கள் ஏதேனும் உருவாகத் திட்டம் உள்ளதா?**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சென்னையில் அடுத்த 10ஆண்டுக் காலத்தில் நான்கு இலட்சம் குடியிருப்புகள் கட்டும் ஒரு மகத்தான திட்டம் ஏற்பாட்டை எடுத்துள்ளது. இத்திட்டத்திற்கென ரூ. 1,200 கோடியை தமிழ்நாடு அரசிடமிருந்தும் மற்றும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தினிடமிருந்தும் பெறப்படும்.

இத்திட்டத்திற்கான வாரியம் சுமார் 7,000 ஏக்கர் நிலப்பரப்பை சென்னையில் பல பகுதிகளிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கையகம் செய்ய ஆரம்பித்துள்ளது. சென்னையிலுள்ள அம்பத்தூர் பகுதியில் சுமார் 2,40,000 குடும்பங்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்தித் தர சுமார் 4,000 ஏக்கர் நிலத்தை வாரியம் தன் வசப்படுத்தி வருகிறது.

வாரியம் சென்னையிலுள்ள கலைஞர் கருணாநிதி நகர் விரிவாக்கத்தில் 60,000 குடியிருப்புகளும், மதுரைவாயிலில் 42,000 குடியிருப்புகளும் ராமாபுரம் விரிவாக்கத்தில் 4,800 குடியிருப்புகளும், அம்பத்தூரில் 2,40,000 குடியிருப்புகளும், பெசண்ட் நகர் விரிவாக்கத்திலும் 4,800 குடியிருப்புகளும் மற்றும் திருவான்மியூரில் 9,000 குடியிருப்புகளும் கட்டித் தரும்.

வாரியத்தால் மேம்படுத்தப்பட்ட பகுதியில் 30 சதவிகிதத்தை 40 சதுர மீட்டரிலிருந்து 300 சதுர மீட்டர் அளவு கொண்ட தனி மனைகளாகப் பிரித்து பொதுமக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மிகுதியில் பலதரப்பட்ட வகுப்பினருக்கு (உயர்ந்த வருமானம், நடு வருமானம், குறைந்த வருமானம், பொருளாதாரத்தில் பின்தங்கியோர்) குடியிருப்புகள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஒரு நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கான குடியிருப்பின் சராசரி விலை சுமார் ரூ. 40,000 ஆகும்.

இத்திட்டத்தினைப் பூர்த்தி செய்ய ஒரு இலட்சம் கன மீட்டர் மரம் ரூபாய் 12.0 கோடி மதிப்பிலும் ஒரு இலட்சம் டன் சிமெண்ட் ரூ. 5.00 கோடி மதிப்பிலும் மற்றும் 2.4 இலட்சம் டன் இரும்புக் கம்பிகள் ரூ. 120.00 கோடி மதிப்பிலும் தேவைப்படும்.

**குடியிருப்பவருக்கே வீடு சொந்தமாக்கும் திட்டம் உள்ளதா?**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால், கட்டப்பட்டு தவணை முறைத் திட்டத்தின் கீழ் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டவர்கள் மாதத் தவணையை ஒதுக்கீடு செய்யும்பொழுது நிர்ணயிக்கப்பட்ட காலம் வரை குறைபாடு இல்லாமல் செலுத்தி முடித்த பின்பே அக் குடியிருப்புகள் ஒதுக்கீடுதாரர்களுக்குச் சொந்தமாக்கப்படும்.

தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட வாடகைக் குடியிருப்புகளில் வாழும் ஒதுக்கீடுதாரர்களுக்கு, அக்குடியிருப்புகள் சொந்தமாக்கும் திட்டம் இல்லை.

—பேட்டி: **ஜி. ஆனந்தன்**




**அரசின் பல்வேறு துறைகளில் பணியாற்றுகின்ற அரசு அலுவலர்களாகிய நீங்கள், உங்கள் அலுவல்களின் காரணமாகப் பல்வேறு சூழ்நிலைகளில் பலதரப்பட்ட ம்க்களைச் சந்தித்திருக்கக்கூடும்; பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கு பெற்றிருக்கக்கூடும். இவற்றிலிருந்து பல சுவையான சம்பவங்களையும், செய்திகளையும் உங்கள் அனுபவத்தில் கண்டும் கேட்டுமிருப்பீர்கள். இவற்றைத் தொகுத்து '*தமிழரசு*' இதழில் வெளியிடக் கருதுகிறோம்.**

**அவ்வாறு நீங்கள் கண்ட—கேட்ட**

**1. நகைச்சுவை சம்பவங்கள்**
**2. கருத்தாழமிக்க உரையாடல்கள்**
**3. சுவையான செய்திகள்**

**முதலானவற்றைச் சுருக்கமாக எழுதியனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

**வெளியிடத் தகுதியானவை தமிழரசில் இடம் பெறும்.**

**வெளியிடுவதற்கு அனுப்பப்படுகின்ற செய்திகள் அனைத்தும், உண்மையானவையாக இருத்தல் வேண்டும்; கற்பனை கூடாது. வேறு எந்த ஏடுகளிலோ, இதழ்களிலோ வெளிவராதவையாக இருக்க வேண்டும்.**

**அனுப்புபவர், தன்னுடைய முழு முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.**

**எழுத்தோவியங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:**

**'ஆசிரியர்,
'தமிழரசு'
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.**



# ரோகினியும் விக்ரம் சாராபாய் தொழிற்கூடமும்!

அண்மையில் விண்வெளியில் செலுத்தப்பட்ட 'ரோகினி' செயற்கைக் கோளுக்கும், சென்னை தரமணியிலுள்ள விக்ரம் சாராபாய் மின்னணுத் தொழிற்பேட்டைக்கும் என்ன சம்பந்தம்?

'ரோகினி' செயற்கைக் கோளுக்குத் தேவைப்பட்ட உதிரிப்பொருள்கள் இங்குள்ள தொழிற்கூடத்திலிருந்துதான் தயாரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன!'' இந்தத் தகவலை மாண்புமிகு ஊரக - தொழில் அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பெருமையுடன் தெரிவித்தார்.

20.8.80 அன்று சென்னை விக்ரம் சாராபாய் மின்னணுத் தொழிற்பேட்டைக்குச் சென்று அங்குள்ள தொழிற்கூடங்களை அவர் பார்வையிட்டார்.

மின்னணுத் தொழிற்பேட்டையிலுள்ள மின்னணுத்தொழில் நிலையங்கள் தயாரித்த மிக நுட்பம் வாய்ந்த மின்னணுப்பொருட்களைக் கொண்டுள்ள பொருட்காட்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

சிறப்பு வகை நுண்கருவிகள், வேகத்தைக் கட்டுப்படுத்தும் மின்னணுச் சாதனங்கள், விசை மின்னணுக் கருவிகள், அச்சிட்ட வரைபட அட்டைகள், தொலைக் காட்சிப் பெட்டிகள், கார் ரேடியோக்கள், இரத்த அழுத்த மின்னணுச் சாதனங்கள் மற்றும் காது கேட்க உதவும் கருவிகள் ஆகியவை பொருட்காட்சியில் இடம் பெற்றிருந்தன.

பொருட்காட்சியில் வைக்கப் பட்டிருந்த பொருள்களைப் பார்வையிட்டதோடல்லாமல், தொழிலதிபர்களது பிரச்சினைகளைக் குறித்து, குறிப்பாக பொருள் விற்பனை சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் தொழிலதிபர்களோடு கலந்துரையாடியதோடு, எல்லா உதவிகளையும் அளிப்பதாக உறுதியளித்தார்.

மின்னணுச் சோதனை வளர்ச்சி நிலையத்தையும், மின்னணுத் தொழில் தகவல் களஞ்சியத்தையும் அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். மின்னணுத் தொழில்களின் வளர்ச்சிக்கு இந் நிலையங்கள் அளித்து வரும் பல்வேறு வசதிகளைக் கண்டு மகிழ்ச்சியுற்ற அவர், தகுதி வாய்ந்த தொழில் முனைவர்களால் தயாரிக்கப்படும் மிகவும் நுட்பம் வாய்ந்த பொருள்களுக்கு அரசு அளித்து வரும் வசதிகளையும் பார்வையிட்டார். இந்த நிலையத்தினால் வழங்கப்படும் சான்றிதழ்கள், பொருள்களை விற்பனை செய்வதற்கு உபயோகப்படுகின்றன.

தொழிற்பேட்டையிலுள்ள 78 தொழில் நிலையங்களில தயாரிக்கப்பட்ட பொருள்களின் உற்பத்தி படிப்படியாக அதிகரித்து வந்திருக்கிறது என்றும், குறிப்பாக கடந்த மூன்றாண்டுக்காலத்தில் ஆண்டொன்றுக்கு ரூ. 7.50 கோடி பெறுமானமுள்ள பொருள்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார். மாநில அரசு அளித்து வரும் நல்லுதவிக்கு இது ஒரு சிறந்த பாராட்டாகும். இங்கு 1900 பேர் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர். இதில் 900 பேர் மகளிர். மாநிலத்தின் சிறு தொழில் துறையிலுள்ள மின்



னணுத் தொழில்களின் ஆண்டு மொத்த உற்பத்தியானது கடந்த மூன்றாண்டுகளில் ரூ. 10.00 கோடியிலிருந்து ரூ.17.50 கோடிவரை எட்டியுள்ளதாகவும் இது மேலும் உயரும் என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இத்தொழிற்பேட்டையிலுள்ள மின்னணு சிறு தொழில் நிலையங்கள் எஸ்.எல்.வி. 3 துணை விண்கோளுக்காகத் தயாரித்தளித்த கருவிகள் பின் வருமாறு:

1. சிறப்பு ''கி போர்டுகள்''
2. ''விடியோ டிஸ்பிளே ஸிஸ்டம்ஸ்''
3. ''ஆப்டிக்கல் சாப்ட் பொசிசன் என்கோடர்ஸ்''
4. அல்பா நிமெரிக்கல் டிஸ்பிளே டெர்ரிமினல்ஸ்.

இந்தத் தொழிற்பேட்டையானது தூசு மற்றும் ஒலி அதிர்வுகள் தாக்காத வகையில் முழுவதும் பசுமையாக உள்ள 32 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இதன் விரிவாக்கப் பணி 100 ஏக்கர் நிலப்பரப்பில் நடைபெற்று வருகிறது. இங்கு செப்பனிட்ட மனைகள், தொழில் முனைவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. நாடு முழுவதிலும், இத்தொழிற்பேட்டையில் தயாரிக்கப்படும் பொருள்களுக்கு நல்ல சந்தை வாய்ப்ப உள்ளது.

வானொலிப் பெட்டிகளிலும், தொலைக் காட்சிப் பெட்டிகளிலும், நுண் கருவிகளிலும், மற்றும் சிமிட்டித் தொழிலிலும், உரத் தொழிற்சாலைகளிலும், எஃகுத் தொழிற்சாலைகளிலும், இரசாயனத் தொழிற்சாலைகளிலும், இரயில்வே துறையிலும், மின் உற்பத்தி நிலையங்களிலும் அவை பயன்படுத்தப்படுகின்றன. சில பொருள்கள் ஏற்றுமதியும் செய்யப்படுகின்றன.

உற்பத்தியைப் பெருக்குவதிலும், தரம் தாய்ந்த பொருள்களைத் தயாரிப்பதிலும் அத்தொழிலதிபர்கள் பெற்றுள்ள சீரான வளர்ச்சியைப் பாராட்டிப் பேசும்பொழுது, மின்னணுத் தொழிலின் வளர்ச்சியை ஆய்வு செய்ய மாநில அரசு 1977-ஆம் ஆண்டில் நிலவிய சிறப்புக் குழு பரிந்துரைத்த 12 பரிந்துரைகளில், 9 பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்றும், எஞ்சியுள்ள பரிந்துரைகளைச் செயலாக்குவதில் முனைப்பான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். மாநிலத்தில், மின்னணுத் தொழில்கள் மேலும் மேலும் வளர்ச்சி அடைவதில் மாநிலமின்னணுத்தொழில் நிறுவனம் (எல்காட்) ஒரு முக்கிய பங்கு பெறுமென்றும் குறிப்பிட்ட அவர், பொருள் விற்பனை வரி மற்றும் மின்சாரம் கிடைப்பது போன்ற செயல்களில் எழும் பல்வேறு பிரச்சினைகளைக் குறித்து அந்தந்ததுறைகளில் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் உறுதியளித்தார்.

பிறகு, கிண்டித் தொழிற்பேட்டையிலுள்ள தொழில் நுட்பத் தகவலகத்தில் நடந்த உற்பத்தியாளர்கள் கூட்டத்திலும் அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு, தொழிற்பேட்டைக்குத் தேவையான மூலப்பொருள்கள் மற்றும் குடிநீர், சாலை, போக்குவரத்து, மின் வசதிகள் செய்து தர ஆவன செய்யப்படும் என்று உறுதி கூறினார்.

–பி. வி. ஜி.

## முதன் முதலாக....

* தமிழ்நாட்டில் முதன்முதல் காந்தி ஆசிரமத்தைத் தொடங்கியவர் – ப. ஜீவானந்தம்.

* அந்நியர்க்குக் கப்பம் கட்ட மறுத்த முதல் குறுநில மன்னர், சிவகங்கைச் சீமையை ஆண்ட முத்து வடுகநாதர்.

* இந்திய விடுதலைப் போரில் முதன்முதல் சிறை சென்ற பெண்மணி சரோஜினி தேவியார்.

* இந்தியாவிலே மருத்துவக் கல்லூரியில் படித்து டாக்டர் பட்டம் பெற்ற முதல் பெண்மணி, டாக்டா முத்துலட்சுமி ரெட்டி.



ஒருவர்: இருதலைக் கொள்ளி எறும்பின் நிலைன்னா என்னன்னு இப்பத்தாங்க எனக்குப் புரியுது.

மற்றவர்: எப்படி ?

ஒருவர்: ஆபிஸ்லே தூங்க மேனேஜர் விடமாட்டேங்கறார். வீட்டிலே தூங்க மனைவி விடமாட்டேங்கறா.

—சொ. சின்னசாமி, சிவகிரி.

## உடற்பயிற்சி ஆசிரியைகளுக்கு சிறப்பு ஊதியம்

இது வரையிலும ஹையர் செகண்டரி பள்ளிகளில் பணிபுரியும் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு ரூ. 25/- சிறப்பு ஊதியமாக அரசினரால் கொடுக்கப்பட்டு வருகிறது. இப்போது பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் மாணவ மாணவியர் சேர்ந்து பயிலும் (Co-education) மேல் நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பெண் உடற்பயிற்சி ஆசிரியைகளுக்கும் சிறப்பு ஊதியமாக ரூ. 25/- வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.





# காந்தி இல்லம்

கன்னித் தமிழ் பற்றிக் காந்தியடிகளின் கருத்தென்ன ?

காந்தியடிகள் உபயோகித்த பேனா எங்கிருக்கிறது ?

காந்தியடிகளின் தமிழ்க் கையெழுத்தை–அவர் கைப்பட எழுதிய கடிதத்தை எங்கே பார்க்கலாம் ?

சென்னை, அண்ணா சாலை அரசினர் தோட்டத்திலுள்ள காந்தி இல்லத்தில், இவற்றை மட்டுமா காணலாம் ? இன்னும் என்னென்னசுவையானசெய்திகள் அங்கே புதைந்து கிடக்கின்றன.

1969-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் நாள் 'காந்தி இல்லம்' துவக்கப் பெற்றது.

இல்லத்தின் முகப்பில், காந்தியடிகள் எழுதுவது போன்ற சிற்பம் நம்மைக் கவர்கிறது.

உள்ளே நுழைகிறோம். மாடியைக் கடக்கிறோம். அம்மாடி! எத்தனைப் புகைப்படங்கள்......

அன்னை நாடு அடிமைப்பட்டுக் கிடந்த அந்த நாளில்-ஆயுதப் படையோடு ஆங்கிலேயர் ஆட்டம் போட்ட அந்தக் காலத்தில்-கத்தியின்றி இரத்தமின்றி விடுதலை வாங்கித் தந்த உலகம் போற்றும் உத்தமரின் உன்னதமான வாழ்க்கை வரலாற்றுச் சித்திரங்கள்-பேசும் சித்திரங்களாய்க் காட்சியளிக்கின்றன!

### மோனியா யார்?

பொக்கை வாய்க் காந்தித் தாத்தாவைப் பார்த்துப் பழக்கப் பட்டுப் போன நமக்கு, வாலிப காந்தியைப் பார்க்கின்ற வாய்ப்பு இங்கே கிட்டுகிறது.

காந்தியடிகளின் இளமைப் பருவம் - பள்ளி மாணவன்காந்தி -அப்போது காந்தியின் செல்லப் பெயர் என்ன தெரியுமா? 'மோனியா'.

'கீர்த்தி மந்திர்' இதுதான் காந்தியடிகள் பிறந்த இல்லம். அந்த வீட்டின் புகைப்படமும், மாடலும் இங்கே இருக்கின்றது.

### கவிக்குயிலும் காந்தியடிகளும்:

படங்களைப் பார்த்துக் கொண்டே செல்கிறோம்.

தென்னாப்பிரிக்காவில், அவர் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்ட நிகழ்ச்சித் தொகுப்பைப் பார்க்கும்போது மெய் சிலிர்க்கிறது.

1921-ல் அவர் உண்ணா விரதம் இருக்கிறார். அவர் அருகே கவுன் அணிந்து கொண்டு உட்கார்ந்திருக்கும் அந்தச் சிறுமி யார் ? இன்றையப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள்.

ஒரு பக்கம் அன்னை கஸ்தூரிபாயுடன் காந்தியடிகளைப் பார்க்கிறோம். இன்னொரு பக்கம் உப்புச் சத்தியாக்கிரகத்திற்குத் தண்டி யாத்திரை செல்லும் காட்சி. அவருடன் கவிக் குயில் சரோஜினி நாயுடுவையும் பார்க்கிறோம்.

மாமூலன்

### அரை நிர்வாணப் பக்கிரி:

1931ல் உப்புச் சத்தியாக்கிரகத்தை யொட்டி நாடெங்கிலும் மக்கள் சிறை சென்றார்கள் நெருக்கடி நிலையினைத் தீர்க்க காங்கிரஸ் பிரதிநிதியாக, காந்தியடிகள் இங்கிலாந்திலுள்ள செயிண்ட் ஜேம்ஸ் அரண்மனை நடந்த வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொள்கிறார். அவ்வமயம் அவர் 'அரை நிர்வாணப் பக்கிரியாகப் பலநாடுகள்சென்று இந்தியாவின் நிலைமையை விளக்கி வந்தார் - இதனைச் சித்தரிக்கிறது புகைப்படங்கள்.

அதோ ! அங்கே அந்தப் படங்களைப் பார்க்கலாமா ?

1933-ல் 21 நாள், உள்ளத் தூய்மைக்காக உண்ணா விரதம்.

காந்தியடிகள் அதிக நாட்கள் இருந்த எரவாடா சிறைச்சாலை.

கையில் திருவோடு ஏந்தி அரிசன முன்னேற்றத்துக்காக நிதி வசூலிக்கும் அண்ணல்.

—நம் நெஞ்சை நெகிழவைக்கும் நிகழ்ச்சிகளன்றோ அவை !

வரலாற்றுச் சித்திரங்களான புகைப்படத் தொகுப்புகளைப் பார்த்துக் கொண்டே போகிறோம்.

சேவாக்கிராமத்தில் காந்தியடிகளைச் சந்திக்கிறோம். (1938) எல்லை காந்தி, ஜின்னா ஆகியோருடன் இருப்பதையும்(1939) பார்க்கிறோம்.

சாந்தி நிகேதனில் அண்ணலும்

அன்னையும், தாகூரும் உள்ளனர்.

அன்னை கஸ்தூரிபா, அண்ணலுக்குத் தொண்டு புரியும் காட்சி நம் மனத்தைக் கவர்கிறது.

நவகாளி யாத்திரையில்(1946) காந்தியடிகளைப் பார்க்கிறோம்.

**ஹரே ராம்!**

இன்னொரு முக்கியமான புகைப்படத்தை நாம் பார்க்கப் போகிறோம்.

காந்தியடிகள் சேவாக் கிராமத்தில் இருந்தபோது, பயன்படுத்திய கைத்தடி, மூக்குக் கண்ணாடி, துளசிமாலை, கடிகாரம், பாதணிகள், கோப்பை இவற்றுடன் மூன்று குரங்குகள்பொம்மை ஆகியவை அடங்கிய பெரிய புகைப்படம் ஒன்று நம் கண்ணையும் கருத்தையும் கவர்கிறது. அதற்குக் கீழே இந்தியில் 'ஹரே ராம்!' என்ற எழுத்து பொறிக்கப் பட்ட கல்ஒன்று காணப்படுகிறது. காந்தியடிகள் கொடியவன் ஒருவனால் குண்டடிபட்டபோது, கடைசியாக அவர் சொன்ன வார்த்தை இந்த 'ஹரே ராம்'! மேற்கண்ட பொருள்களையெல்லாம், தில்லியிலுள்ள பிர்லா மாளிகையில் இன்று கூடப் பார்க்லாம்.

**சித்திரகாந்தி:**

அடுத்த கட்டம்—காந்தியடிகளுடன்பழகியசான்றோர்களைப் பார்க்கிறோம்.

டால்ஸ்டாய்,ரஸ்கின்,கோகலே, மதன்மோகன் மாளவியா, ராஜாஜி, ராஜேந்திர பிரசாத், சுபாஷ் சந்திரபோஸ், வல்லபாய் படேல்,ஜின்னா,அன்னிபெசன்ட், எல்லைக் காந்தி கபார்கான்; மவுண்ட்பேட்டன், நேரு ஆகியோருடன் அந்த உத்தமர் உரையாடுகின்ற அரிய காட்சிகளைக் கண்டு களிக்கிறோம்.

கூடத்துக்கு வருகிறோம். அங்கே சித்திரக் காந்தியைப் பார்க்கிறோம் - பல வர்ணங்களில், பல கோணங்களில்.

**தமிழ்நாட்டில்...**

நம்மை வெகுவாகக் கவர்வது, காந்தியடிகளும் தமிழகமும் என்ற பகுதி....

தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் நடத்திய போராட்டங்களுக்குப் பெரும் உதவியாக இருந்த தமிழர்கள் - திரு நாகப்பன், திரு நாராயணசாமி திருமதி வள்ளியம்மை ஆகியோரின் திருஉருவப்படங்கள் நம்மை மகிழ்விக்கின்றன. இவர்கள் அன்று காட்டிய தீரம் நம் நினைவுக்கு வருகின்றது.

தேசத் தந்தை 1931-ல்அமரர் சத்திய மூர்த்திக்கு எழுதிய கடிதத்தையும், 1941-ல் அவரது அருமை மகள் திருமதி லட்சுமி கிருஷ்ண மூர்த்திக்கு எழுதிய கடிதத்தையும் இங்கே கண்டு மகிழலாம். அத்துடன் 1933-ல் எரவாடா மத்திய சிறையிலிருந்து அவர் எழுதிய கடிதங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

காந்தியடிகள் வாரம் ஒருமுறை மௌன விரதம் இருப்பாராம். அப்போதெல்லாம், அவர், சிறு சிறு துண்டுக் காகிதத்தில் குறிப்புகள் எழுதிக் காட்டுவாராம். அவர் கைப்பட எழுதிய அந்தக் குறிப்புகள் நம் மனத்தைத் தொடுகின்றன.



''தமிழர்களைப் போல வேறு எந்தச் சமூகத்ினரும் தென்னாப்பிரிக்கச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடவில்லை. எனவே, வேறு எக்காரணத்திற்காகஇல்லாவிடினும், இதற்காகவே நான் தமிழ் நூல்களை முனைந்து படிக்க வேண்டுமெனக் கருதினேன். என் நன்றியுணர்வைக் காட்ட இது ஒரு வழியென உணர்ந்தேன். ஆதலால் நான் அங்கிருந்த கடைசி மாதத்தில் அவர்களுடைய மொழியைக் கவனத்துடன் படிக்கத் தொடங்கினேன். படிக்கப் படிக்க அம்மொழியின் சிறப்புகளை நான் உணரலானேன். அஃதொரு சுவைமிக்க, இனிமையானமொழி.

''தமிழ் மக்களிடையே, நுண்ணறிவும், ஆற்றலும் மிக்க அறிஞர் பலர் இருந்தனர் என்றும் இன்றும் உள்ளனர் என்றும் நான் படித்தவற்றிலிருந்து அறிந்தேன். மேலும் இந்தியா ஒரே நாடாகத் திகழ வேண்டுமாயின், சென்னை மாநிலத்திற்கு வெளியே வாழுகின்ற இந்தியர்களும், தமிழ் மொழி பயிலுதல் இன்றியமையாதது என் கருத்து '' என்று உணர்ந்து, உற்சாகமாக, உறுதியுடன் முழங்குவது யார் தெரியுமா? உத்தமர் காந்தியடிகள் தான்!

**மூங்கில் பேனா**

அதோ, அந்தக் கண்ணாடிப் பேழையிலிருக்கும் வரவேற்பிதழை யார்கொடுத்தது?1934ல் சோழவந்தானூர் கிராமத்து விவசாயிகள் அளித்ததுதான் அது!


காந்தியடிகள் எழுதிய பேனா- அதுவும் மூங்கிலால் ஆன பேனா அதனைப் பார்த்துப் பிரமிக்கிறோம்.

இன்று சிலையாகி விட்ட அண்ணல், அன்று சென்னைக் கடற்கரையில் வீரமுழக்கமிட்ட அந்த அற்புதக் காட்சிகளை நினைவுக்குக் கொண்டு வருகிறோம்- இங்கே அந்தப் படங்களைப் பார்ப்பதன் மூலம்.

காந்தியடிகள் தேவகோட்டைக்கு வந்தபோது, கதரில் முதன் முதலில் தயாரிக்கப்பட்ட மிக சன்னமான துணி ஒன்றை அவருக்கு வழங்கினார்கள். அதை அவர் அரிசன நல நிதிக்கு ஏலம் விட்டதில் ரூ.1001 கிடைத்தது. அந்தத் துணியை இங்கே நாம் பார்க்கலாம்..

தீயவை பேசாதே - தீயவை பார்க்காதே - தீயவை கேளாதே என்பதை உணர்த்திடும் மூன்று குரங்குகள் - மாக்கல்லால் செய்யப்பட்டவை - கண்ணாடிப் பேழைக்குள் பார்க்கிறோம்.





மேனா' (பல்லக்கு)

**வ.உ.சி. எழுதிய கடிதம்:**

காந்தியடிகள் எந்த விஷயத்திலும் கடமையுணர்ச்சியோடு இருந்தார் என்பதற்கு ஒரு சிறு உதாரணம்:

வடார்க்காடு மாவட்டத்திலிருந்து ஒருவர், அரிசன நல நிதிக்காக நான்கு ரூபாய், பதின்மூன்று அணாவைக் காந்தியடிகளுக்கு அனுப்பியிருக்கிறார். அதைப் பெற்றுக் கொண்ட காந்தியடிகள், தம் கைப்பட அவருக்கு நன்றிக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். ஆங்கிலத்தில் எழுதிய அந்தக் கடிதத்துக்குக் கீழே 'மோ. க. காந்தி' என்று தமிழில் கையெழுத்திட்டிருக்கிறார். பொதுவாக, 'காந்தியடிகள் தமிழர்களுக்குக் கடிதம் எழுதும்போது தமிழில்தான் கையெழுத்திட்டு அனுப்புவாராம்

காந்தியடிகள் நடத்திய 'அரிசன்' இதழ் (1940) ஒன்றும் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

அதோ, அங்கே இரயில் நிலையத்தில், காந்தியடிகளை வரவேற்பது யார் ?

1946-ல் கடைசி முறையாகக் காந்தியடிகள் தமிழகம் வந்தபோது அவரை அம்பத்தூர் ரயில் நிலையத்தில் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் வரவேற்கின்ற காட்சியைத்தான் நாம் பார்க்கிறோம்.

ஒரு சமயம் காந்தியடிகள் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார்க்குக் கடிதம் எழுதினார். அதற்கு வ. உ. சி. அவர்கள் தம் கைப்பட பதில் கடிதம் ஒன்றை அனுப்பினார். 1915-ல் எழுதப் பெற்ற அந்தக் கடிதத்தைக் கண்டு மகிழ்கிறோம். அப்போது வ. உ. சி. அவர்கள் மயிலாப்பூரிலுள்ள 40, பரிபூரண விநாயகர் கோயில் தெருவில் குடியிருந்தார்.

**தமிழில் கையெழுத்து:**

கோவை இராமகிருஷ்ண வித்தியாலயாவுக்காகஅடிக்கல் நாட்டுதல் (1934) திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் ராஜாஜியுடன் அளவளாவுதல், மதுரை மீனாட்சி அம்மன் கோயிலைச் சுற்றிப் பார்த்தல் (1946) ஆகிய படங்களைப்பார்த்துக்கொண்டே செல்கிறோம். அங்கே 'பளிச்' சென்று தமிழில் வாசகம் ஒன்று காணப்படுகிறதே அதை யார் எழுதியது ?

எட்டயபுரத்தில் பாரதி மணிமண்டபம் எழுப்ப கல்கி,ராஜாஜி ஆகியோர் முனைந்து செயல்பட்டு அதற்கான கால்கோள் விழாவைக் கொண்டாடியபோது காந்தியடிகள் அதற்கு வாழ்த்துச் செய்தி ஒன்றைத் தமிழில் தம் கைப்பட எழுதி அனுப்பினார். அதுதான் இது.

'பாரதி ஞாபகார்த்த
பிரயத்தனங்களுக்கு என்
ஆசீர்வாதம்.
—மோ. க. காந்தி.'

இன்னொரு தமிழ்க் கடிதம்—

தென்னாப்பிரிக்காவில், காந்தியடிகளுக்கு உதவியாக இருந்த திரு நாகலிங்கம் என்பவருக்குத் தம் கைப்பட எழுதிய ஆறுதல் கடிதத்தில்—

'நீரில் எழுத் தொக்கும்
யாக்கை
—மோ. க. காந்தி.'

**பழனி மலையில்...**

1915-ல், இந்தியாவில் ஏற்படுத்திய முதல் ஆசிரமம்—சபர்மதி ஆசிரமம். யமுனை நதிக் கரையில் அமைந்துள்ள அதில் சேர்ந்தவர்களில் குறிப்பிடத் தக்கவர் வினோபாஜி. இந்த ஆசிரமத்தின் மாடல் இங்கே இருக்கிறது.

சுவரில் ஒரு படம் மாட்டப் பட்டிருக்கிறது. அதை உற்றுப் பார்க்கிறோம் 'ராம் ராம்' என்று எழுதப் பெற்ற எழுத்துக்களாலேயே உருவான (வி) சித்திரம் தான் அது !

**காந்தி இல்லத்தில் பல்லக்கு எப்படி வந்தது?**

1946ல் மதுரை, பழனி ஆலயங்களுக்குக் காந்தியடிகள் வருகை தந்தார். பழனி மலைக்கு அவரை ஏற்றிச் செல்ல உதவியாக இருந்தது, ஒரு 'மேனா', அதாவது பல்லக்கு. அந்தப் பல்லக்கை இங்கே பார்க்கிறோம்.

கவின்மிகு காந்தி இல்லத்தில் சிறு நூலகம் ஒன்றும் இருக்கிறது. 1000-க்கும் மேற்பட்ட தமிழ் ஆங்கில நூல்கள் இங்கே உள்ளன. இவற்றுள் காந்தி எழுதிய நூல்களும், காந்தியடிகளைப் பற்றிய நூல்களும் அடங்கும்.


ஆண்டுதோறும் காந்தியடிகள் பிறந்த நாளன்று இங்கே காலை முதல் மாலை வரை இடைவிடாத நூற்பும், பிரார்த்தனையும் நடக்கும்.

காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும் இந்த இல்லத்தை செய்தி-மக்கள் தொடர்புத்துறை அரும்பாடு பட்டு உருவாக்கியிருக்கிறது.


நம்மோடு வாழ்ந்து மறைந்த ஒரு உத்தமரின் உண்மையான வாழ்க்கைச் சித்திரத்தை-சித்தாந்தத்தை விளக்கிடும் வண்ணம் நமக்கு,குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு இதயம்போல் விளங்கிடும் இல்லம்தான் காந்தி இல்லம் என்றால், அது மிகையல்ல !




*தந்தை பெரியார் பிறந்த நாள் விழாக் காட்சிகள்*








# பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் திறப்பு விழா!

**பி.எல்.ராஜேந்திரன்**

செப்டம்பர் 16ஆம் நாள், காஞ்சிபுரத்தைப் பொறுத்தமட்டில் வரலாற்றுச் சிறப்பு மிக்க நாளாகும்!

'நகர் என்றால் காஞ்சி, நதியென்றால் கங்கை, பெண் என்றால் அரம்பையே!' என்ற முதுமொழி வகையில் காஞ்சிமாநகர் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒன்றே எனினும், நாம் மேலே குறிப்பிட்ட நாளானது அந்த வரலாற்றில் ஒரு பொன்னேடாகத் திகழக்கூடியதாகும்.

அன்று தான் — பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்து வளர்ந்த காஞ்சிபுரம் இல்லம், தமிழக அரசால் நினைவு இல்லம் ஆக்கப்பட்டு மேதகு இந்தியக்குடியரசுத் தலைவர் அவர்களால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையை மேதகு தமிழக ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் திறந்துவைத்தார்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் பங்கேற்றுச் சிறப்பித்த 'பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத் திறப்பு விழா' நாள் காஞ்சிபுரம் நகரையே கவர்ச்சி கொள்ளச் செய்த விழா நாளாக விளங்கியது.

### விழாக்கோலம்

பல்லவர் ஆட்சிக் காலத்தில் மன்னர் பவனி காண மகிழ்ந்து கூடிய மக்கள் போல், நகரின் முக்கிய வீதிகளின் இருமருங்கும் சாரி சாரியாக நின்றிருந்தனர் ஆண்களும், பெண்களும், அரும்புச்சிறுவர் சிறுமியரும். இந்தியக் குடியரசுத் தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர், அமைச்சர் பெருமக்களையெல்லாம் காணும் ஆர்வம் அவர்களின் பார்வையெல்லாம் பரிணமித்தது.

வீதிகள் தோறும் இரண்டு அடுக்கு மூன்று அடுக்கு வரவேற்பு வளைவுகள். வண்ணப் பதாகைகள்!

வீதிக்கு வீதி, பேரறிஞர் அண்ணா அவர்களின் 72வது பிறந்த நாளைக் கொண்டாடும் கோலாகலம். கொடிகள். தோரணம். இசை முழக்கம். இனிப்பு வழங்கல்.

சின்ன காஞ்சிபுரத்தில், வரகு வாசல் தெரு என்ற பெயரை உதறியெறிந்துவிட்டு - சி.என். அண்ணாத்துரை வீதிஎனப் புதுப்பெயர் ஏற்றிருந்த அந்த வீதி புதுப்பொலிவோடு நீண்டு கிடந்தது. வீதியின் இருமருங்கும் சிவப்பு, நீலம், வெள்ளை, பச்சை, மஞ்சள் போன்ற பல நிறத் தனிக் கொடிகளின் பட்டொளி வீச்சு! எங்கெங்கும் விழாப் பெருமைகுறித்த பேச்சு!

பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் வெளிர்பச்சைப் பூச்சோடு புதுபெருகு கொண்டு திகழ்ந்தது. புலிபிறந்த குகைபோல... சிங்கம் நடைபோட்ட தளம்போல் அடடா, அந்த வீட்டுக்குத்தான் எத்தனைக்கம்பீரம்! மேலே நீண்ட பெயர்ப்பலகையிலும், வாசலிலும் சந்தன வண்ணப் பட்டுத்துணி, திறப்பு விழாவுக்காகக் காத்திருந்தது. அதற்கு இடதுபுறம் மற்றொர் பெயர்ப்பலகை - தமிழகஅரசு செய்தித்துறை, அந்த வீட்டினுள்ளே ரூ. 50 ஆயிரம் செலவில் அலங்காரம் செய்திருந்த புகைப்பட, பொருள் வளக் கண்காட்சி பற்றியபெயர்ப் பலகை திறக்கப்படவிருந்தது.


அந்த நீண்ட வீதியில் தரை தெரியாத அளவுக்குத் தலைகளே தெரிந்தன.

ஒலிபெருக்கிகள் நாதசுர இசை முழக்கின.

அண்ணா இல்லத்துக்கு [illegible] அலங்காரமேடை அமைக்கப்பட்டிருந்தது. 30 அடி உயரமிருக்கலாம். கிழக்குப் பார்த்த அந்த அழகு மேடையின் தலையில் அரசுச் சின்னமான கோபுரம். ''தமிழ்நாடு அரசு'' 'வாய்மையே வெல்லும்' அதன் கீழ் பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் திறப்புவிழா! மேடைக்கு உட்புற மறைப்பில் பேரறிஞர் அண்ணா அவர்கள் நடந்து வருவதுபோன்ற படம். முன்னால், திறப்புவிழாவுக்கு வைக்கப்பட்டிருந்த அமரர் அண்ணாவின் ஓவியப்படம்.

மேடையின் மேலும் கீழும் பக்கவாட்டிலும், படிச்சாரத்திலும் ரோஜா, செவ்வந்தி,முல்லை மலர் மாலைகள் தோரணங்களாகத் தொங்கவிடப் பட்டிருந்தன. மேடையின் மேல் விதானத்தில் மல்லிகை, கனகாம்பரச் சரங்கள் வளைத்து வளைத்து வசீகரமாகக் கட்டப்பட்டிருந்தன. மேடையின் கீழே வீதியில் வரிசையுறப் பூந்தொட்டிகள் குரோட்டன்ஸ்கள்.

எதிரே நீண்டிருந்த சாலையில் இருமருங்கும் வரிசையுற 'டியூப் லைட்' டுகள். மேலே... பந்தல்



போட்டாற்போல வண்ணச்சிறு விளக்குச் சரங்கள் அழகு காட்டின. மேடை-வலப்புறத்தில் ஆண்கள், இடப்புறத்தில் பெண்கள். தனித்தனியே சட்டமன்ற-நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அந்தக் குறுகலான தெருவிலும் லட்சோப லட்சத்தை அமைதியோடு அடைத்துக் காட்டினர்.

சரியாக 5.30 மணி!

குடியரசுத் தலைவர், முதல்வர் ஆகியோர் விழா மேடையில் வந்தமர்ந்தனர்.

5.32 - நாட்டுவாழ்த்து இசைக்கப்பட்டது.

5.35 - மாண்புமிகு செய்தி-அறநிலைத்துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

ஒரு மிகப்பெரிய இயக்கத்தை உருவாக்கி வளர்த்து, ஆட்சியை நிர்வகிக்கும் திறத்தை நமக்கெல்லாம் அளித்த பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த இல்லத்தை நினைவு இல்லம் ஆக்கும் இந்த விழாவுக்கு வருகை தந்தோரனைவரையும் வரவேற்பதிலே நான் பெருமை கொள்கிறேன்.

பைந்தமிழ்த் தேர்ப்பாகன், செந்தமிழ்த் தேனீ, படரும் சாதிப் படைக்கு மருந்து, மண்டும் மதங்கள் அண்டா நெருப்பு, திறம் பாட வந்த மறவன், புதிய அறம்பாட வந்த அறிஞன், தமிழகத்தின் விடிவெள்ளி பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்து தவழ்ந்து வளர்ந்து வாழ்ந்த இந்த இல்லத்தை, நாட்டு மக்கள் வணங்கத்தக்க வகையிலே நாட்டுடைமை ஆக்கப்போவதாக, நமது தளநாயகராம் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கடந்த ஆண்டிலே அறிவித்தார்கள்.

அந்த வகையில் நடைபெறும் இவ்விழாவிலே பங்கேற்க வருகை தந்திருக்கிறார் இந்திய நாட்டின் முதல் குடிமகனாம் குடியரசுத் தலைவர் அவர்கள். அவர்களையும்...

ஒரு விரலை உயர்த்திக்காட்டி நான் என் இதயத்திலே வைத்திருக்கும்ஒரே தம்பி என்று புரட்சித் தலைவரைக் குறிப்பிட்டாரே அந்த அண்ணாவின் தம்பியை இதயக்கனியை-சாதி சமயமற்ற முறையில்தந்தை பெரியாரும்பேரறிஞர் அண்ணாவும் தந்த கொள்கைகளை நிலை நிறுத்தும் எந்த லட்சியத்திற்காகப்பொறுப்பில் அமர்த்தியிருக்கிறார்களோ அதை நிறைவேற்றப் பாடுபட்டு வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், நல்லிதயத்தோடு இங்கே வருகை தந்திருக்கும் அனைத்துக் கட்சித்தலைவர்களையும், விழா சிறக்க வருகை தந்திருக்கும் பெரியோர்களையும் தாய்மார்களையும் வருக வருகவென வரவேற்கிறேன்!

—இவ்வாறு மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

### அண்ணா சிலை

பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்தில், நடுக் கூடத்தில் வைக்கப்பட்டிருந்த அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையைத் தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் திறந்துவைத்தார்.

... . . நிர்மாணிக்கபட்டதான அந்தச் சிலை, பேரறிஞர் அண்ணா அவர்கள் சம்மணம் கோலி உட்கார்ந்து படிக்கிற தோற்றத்தில் காணப்பட்டது. வேட்டியும், துண்டுமாக அமர்ந்து வலது துடைமேல் புத்தகத்தை விரித்துப் பிடித்துப் படித்துக் கொண்டிருந்த அந்தச் சிலை முகத்திலும் நகை அரும்பியது. கீழ்ப் பீடத்தில்—

பேரறிஞர் சி.என்.அண்ணாதுரை
தோற்றம்: 15.9.1909
மறைவு: 3.2.1969

**Peraringnar**
**C. N. ANNADURAI**
Born : 15.9.1909
Died: 3.2.1969

வீதியில் அடைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தலிலிருந்து வீட்டுக்குள்ளிருந்த அந்தச் சிலையைத் திறந்துவைத்து மக்களைக் கண்டு மகிழச்செய்வது இயலாத தாகையால், மேடையிலிருந்த அதே அமைப்புடைய பேரறிஞர் அண்ணா திருவுருவ ஓவியத்தை மேதகு ஆளுநர் அவர்கள் திறந்து வைத்திட ஏற்பாடு.

அந்த வண்ண ஓவியத்தை திருவள்ளுவர் தோற்றத்தை நயக்களித்த பிரபல ஓவியர் வேணுகோபால் சர்மா சித்திரித்திருந்தார்.

### ஆளுநர் உரை

பேரறிஞர் அண்ணா திருவுருவைத்திறந்து வைத்து மேதகு ஆளுநர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது.

''வலிமையும், நாட்டுமக்களை அணி திரளச் செய்யும் பெரும் சக்தியும் கொண்டு தென்னிந்தியாவிலேயே குறிப்பிட்டுச் சொல்லத்தக்க தலைவராகத் திகழ்ந்தவர் பேரறிஞர் அண்ணா.



உண்மைவழியில் நடப்பதிலும், அகிம்சைவாதியாகத் திகழ்வதிலும் அவர் காந்திய வழி முறைகளைக் கடைப் பிடித்தார்.

''தலைமுதல் கால்வரை அவர் பொது நல வாதியாகவும்,பெருந்தன்மையாளராகவும் விளங்கினார். தமிழ் எழுத்திலும் பேச்சிலும் இப்போது காணப்படுகின்ற எளிய - புதிய நடைமுறையானது பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்டது தான். இப்படிப்பட்ட சிறப்பினாலேதான் இளைஞர்களை தம் அணிக்குக் கீழ் இணைத்தார்.

''எழுத்திலாகட்டும், பேச்சிலாகட்டும், நடவடிக்கைகளிலாகட்டும் சிறிதும் முரட்டுத்தனத்தை, தூண்டுவிடும் தன்மையை அவர் கையாண்டதே இல்லை.

''கடமை, கண்ணியம், கட்டுப்பாடு-என்று அவர் கூறிய அந்தத் தாரக மந்திரம் எல்லா நேரத்துக்கும்பொருந்திவரும்; எல்லாத் தரப்பு மக்களுக்கும் பொருந்திவரும்.

''இப்படிப்பட்ட இணையற்ற தலைவரின், மாபெருந் தலைவரின் நினைவு இல்லத் திறப்பு விழாவிலே பங்கேற்று, அவரது திருவுருவைத் திறந்து வைப்பதிலே நான் உள்ளபடியே பெருமையும் பெருமகிழ்ச்சியும் கொள்கிறேன்.

''இந்த மாநிலத்தின் அந்தஸ்தை மற்ற மாநிலங்களிலும் உயரச் செய்த பெருமையுடைய அண்ணா அவர்கள், இளைஞர்களுக்கெல்லாம் வருங்கால வழிகாட்டிபோல வாழ்ந்து காட்டினார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர், நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் 'பேரறிஞர் அண்ணா பொருட்காட்சியைத் திறந்துவைத்தார்.

பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்தைத் திறந்து வைத்த மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு சஞ்சீவ ரெட்டி அவர்கள் 6.05க்குத் தன்னுடைய பேச்சை ஆரம்பித்த விதமே சுவையாக இருந்தது.

### குடியரசுத் தலைவர் உரை

''எல்லோருக்கும் வணக்கம்'' என்று தமிழில் ஆரம்பித்த அவர்- ''முப்பது வருஷத்துக்கு முன்னால் தமிழில் பேசிகிட்டிருந்தேன். இப்ப முடியாது.அங்கே தமிழில்ல பேசிகிட்டிருக்க எனக்கு யார் இருக்கா? காமராசர் இருந்தார்; 'அவரும் இறந்து போனார்....' என்கிற முத்தாய்ப்போடு தமிழை நிறுத்தி ஆங்கிலத்தில் உரையாற்றத் தொடங்கினார்.

'' காஞ்சிபுரத்தில், இந்தச் சிறிய வீட்டில் வாழ்ந்த ஒரு சாதாரண மனிதர் இந்நாட்டின் முதலமைச்சராக உயர்கிறார் என்றால், ஜனநாயகம் தழைத்தோங்குவதையே அது காட்டும். நான் எந்தக் கட்சியையும் சார்ந்தவனில்லை என்றாலும், நல்லவர்களைப் பற்றி-இந்த நாட்டுக்கு உழைத்த வல்லவர்களைப்பற்றி நான் பாராட்டத் தவறியதில்லை.

''அண்ணாவாவது பட்டதாரி. பள்ளிக்கே செல்லாத காமராசர் இந்த நாட்டின் முதலமைச்சரானார். அந்த இருவருக்கும்இடைநிலையில் உள்ள சாதாரண விவசாயக்குடும்பத்தைச் சேர்ந்த நான், இந்நாட்டின் குடியரசுத் தலைவராக உயர முடிந்திருக்கிறது என்றால்-இதற்கெல்லாம் காரணமான ஜனநாயக மரபு பாராட்டப்படக் கூடிய தாகும்.''

—என்று தன் சொற்பொழிவைச் சுவைபட நடத்தி வந்த குடியரசுத் தலைவர் அவர்கள் ''ஜனநாயகம் தழைக்கும் வரை இந்த நாட்டில் பற்பல அண்ணாக்களும் பற்பல காமராசர்களும் தோன்றிக்கொண்டே இருப்பார்கள்'' என்றார்.

'இந்த நாட்டை முடி மன்னர்களும், முதுபெரும் புள்ளிகளும், செல்வச் சீமான்களும் ஆண்ட காலம் போய்-உழைப்பால் உயர்ந்த அண்ணாவுக்குப் பின்னால், சாமான்யர்களும் ஆட்சிப் பொறுப்புக்கு வரும் நல்வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அதற்கு உதாரணம் எனக்கு அருகில் அமர்ந்திருக்கும் முதல்வர் எம்.ஜி. ஆர். அவர்கள் ஆவார்! அண்ணாவைப் பற்றிப் பேச என்னைவிட எம்.ஜி.ஆருக்குத்தான் உரிமை அதிகம் ''

—இவ்வாறு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் தனது உரையை நிகழ்த்தினார். அவரது ஆங்கில உரையை, அரசு இரண்டாவது செயலாளர் திரு கா. திரவியம் மொழிபெயர்த்தார்.

பின்னர், பேரறிஞர் அண்ணா அவர்களின் துணைவியார் இராணி அம்மையாருக்கு,மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சார்பில் குடியரசுத் தலைவர் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், புகழ்பெற்ற பழம்பெரும் எழுத்தாளர் திரு நாரணதுரைக்கண்ணன் (ஜீவா) அவர்களின் தலைசிறந்த இலக்கியப் பணியைச் சிறப்பிக்கும் வகையில் பத்தாயிரம் ரூபாய் ரொக்கமும், தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருதும் வழங்கிப் பாராட்டினார்.

### முதல்வர் உரை

விழாத் தலைமையேற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டதாவது:

''பேரறிஞர் அண்ணா அவர்களைப் போற்றிப் புகழ்ந்து இங்கே பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும், குடியரசுத் தலைவர் அவர்களும், மேதகு ஆளுநர் அவர்களும் பேசினார்கள் என்றால் அமரர் அண்ணா அவர்களை இந்தியத் துணைக் கண்டமே பாராட்டியதாகத் தான் பொருள்.

''எந்த ஒரு பணியானாலும் அதைச் சொல்லுகிறவனின் மனத்தைப் புரிந்து கொண்டால் தான் அவர்கள் எதிர்பார்க்கிறபடி சிறப்பாகச் செய்து முடிக்க முடியும் . அந்த வகையில்,எனது எண்ணத்தின் பிரதிபலிப்பைச் செயல் முறையில் இவ்விழாவில் மிகச் சிறப்பாகச் செய்து காட்டியுள்ள எனது அன்பு உடன் பிறப்பு, செய்தி அறநிலையத் துறை அமைச்சர் இராம. வீரப்பன் அவர்களையும், அவருக்குத் துணைநின்ற அதிகாரிகளையும் நான் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.


இவ்வாறு தன்னுடைய இன்னுரையை நடாத்திய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ''அண்ணா அவர்களை நான் என் அண்ணனாக - ஆசானாக - தந்தையாக தாயாக... ஏன், இன்று தெய்வமாகவே ஏற்றுக் கொள்கிறேன்'' என்று உணர்ச்சி இழையோட உரைத்தார்.

''மனிதனுக்கு நன்றி வேண்டும். அந்த நன்றி இருந்தால்தான் ஒருவர் மனிதப் பண்போடு வாழ முடியும் என்ற அண்ணாவின் கொள்கை, எல்லோரும் ஏற்றுக் கொண்ட கொள்கையாகும். ஏழை எளியவர் கேள்விகளுக்குப் பதில் சொல்லியே ஆகவேண்டும் என்கிற உயரிய பண்பைக் கற்றுத் தந்தவர் அண்ணா .அவர் வழி நடக்கும் எங்களுக்கு, உங்கள் குறைகளைத் தீர்ப்பதுதான் முக்கியமே தவிர, மாலை மரியாதை எங்களுக்குப் பெரிதல்ல!

''அண்ணாவைப் போன்ற கண்ணியம் நிறைந்த ஒரு தலைவரை நாம் கண்டதில்லை; உலகம் கண்டிருக்காது!''

—மாண்புமிகு முதல்வர் அவர்கள் இவ்வாறு ஆற்றிய உரை கூடியிருந்தபல்லாயிரக்கணக்கான மக்களின் நெஞ்சைநெருடுவதாக சிந்திக்கத்தூண்டுவதாக அமைந்திருந்தது!













# பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் திறப்பு விழா





## காஞ்சிபுரம் 16-9-'80








# அண்ணனே! எங்கள் மன்னனே!

தொகுப்பு: பி.எஸ்.ஆர்

பேரறிஞர் அண்ணா அவர்களின் எழுபத்திரண்டாவது பிறந்தநாள் (15.9.80).

காஞ்சி மாநகரில், பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்து வளர்ந்த இல்லம் தமிழக அரசால் வாங்கப்பட்டு, இந்தியக்குடியரசுத் தலைவர் அவர்களால் (16-9-80) நினைவு இல்லமாகத் திறந்து வைக்கப்பட்டது.

அமைச்சர் பெருமக்களும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் விழாவில் பங்கேற்று உரை நிகழ்த்தினார்கள்.





### செய்குத் தம்பி

தமிழ் நாடு முஸ்லீம் லீக் தலைவர் திரு. செய்குத் தம்பி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

பல்லவர்கள் ஆண்டதால் அல்ல; பேரறிஞர் அண்ணா பிறந்ததால் பெருமை பெற்றது இந்தக் காஞ்சிமாநகர். இங்கே திறந்து வைக்கப்பட்டிருப்பது நினைவு இல்லம் மட்டுமல்ல; அண்ணாவைப் பற்றி எதிர்காலத்தில் எல்லோரையும் உணரச் செய்யும் அறிவு இல்லமும் ஆகும்.

அண்ணா அவர்கள் என்னென்னவோ பட்டம் பெற்றிருந்தாலும் கூட, தந்தை பெரியாரின் பல்கலைக் கழகத்திலே அவர் பெற்ற பகுத்தறிவுப் பட்டமே மகத்தானது! சுயமரியாதை இயக்கத்துக்கும் தமிழக முஸ்லீம்களுக்கும் நிறையத் தொடர்பு உண்டு என்பதை உணர்த்தவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களையெல்லாம் இவ்விழாவில் பங்குகொள்ளச் செய்திருக்றார். அவர்களுக்கு எங்கள் நன்றி.

### ஜி. மூர்த்தி

குடியரசுக் கட்சியின் சார்பில் திரு ஜி. மூர்த்தி எம்.எல்.ஏ. அவர்கள் பேசியபோது-''வேலூர் கோட்டை வெளி திடலில், பல ஆண்டுகளுக்கு முன்னால் அண்ணா அவர்கள் உரையாற்றியதை நான் கேட்டேன். வடபுலத்தவர் தலையில் கல்லை ஏற்றிய சேரனும் செங்குட்டுவனும் தமிழை அவர்கள் தலையில் ஏற்ற மறந்து விட்டார்கள்என்று அண்ணா குறிப்பிட்டார். எவ்வளவு அர்த்த புஷ்டியுள்ள வார்த்தைகள் அவை! அப்படிப்பட்ட பேரறிவாளரின் இல்லத்தை நினைவு இல்லம் ஆக்கிய இந்த அரசை நெஞ்சார வாழ்த்துகிறேன்'' என்றார்.

### ஏ. ஆர். பெருமாள்

இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் தலைவர் திரு. ஏ.ஆர்.பெருமாள் அவர்கள் ஆற்றிய உரையில் குறிப்பிட்டதாவது:

எங்கள் தேவர் பெருமானை மதித்துப் போற்றிய பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்கள். மெட்ராஸ் ஸ்டேட் என்றிருந்த பெயரைத் தமிழ்நாடு என்று மாற்றிய பெருமையாளர் அவர்.

சரித்திரம் படித்த தலைவர்கள் இருப்பார்கள். சரித்திரம்



படைத்த தலைவர்கள் இருப்பார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களோ, சரித்திரம் படித்த தலைவர் மட்டுமல்ல; சரித்திரம் படைத்த தலைவரும் ஆவார்.

1972ல் புரட்சித் தலைவர் அவர்கள் தனியொரு அரசியல் வழியைக் கண்டிரா விட்டால், அண்ணா பெயர் இப்போது இல்லாமலே கூடப் போயிருக்கும். இதற்காக அவரை வாழ்த்துகிறேன்.

### திருவாரூர் தங்கராசு

திராவிடர் கழகத் தலைவர் திரு திருவாரூர் கே. தங்கராசு அவர்கள் தமது உரையில்

'பல்லவ மன்னர்களெல்லாம் ஆண்டபோது இந்தக் காஞ்சி மாநகருக்கு இவ்வளவு சிறப்பு இருந்திருக்குமோ இல்லையோ, அதற்கு 1300 ஆண்டுகளுக்குப்



பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த பின்னாலே இந்த நகருக்கு உண்டான மதிப்பும் மரியாதையும் அலாதியானதாகும்.

கத்தியைத் தீட்டிப் புகழ் பெற்றார்கள் பல்லவர்கள் என்றால், கத்தியைத் தீட்டாதேபுத்தியைத் தீட்டு என்று கூறிப் புகழ்பெற்றவர் அண்ணா. அப்படிச்சொன்னதோடு மட்டுமல்லாமல் செயல்படவும் செய்த சீர்மையாளர் அவர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்ற பேரறிவாளர் இல்லங்களை நினைவு இல்லங்களாக்கிடும் தமிழக அரசை நான் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று கூறினார்.

### அனந்தநாயகி அம்மையார்

அர்ஸ் காங்கிரஸ் கட்சிசார்பில் திருமதி டி.என். அனந்தநாயகி அவர்கள் உரையாற்றுகையில்—''தமிழனுக்குச் சிறப்புச் செய்கிற





விழா இது. வரலாறு படைத்தோர் இல்லங்களை நினைவு இல்லமாக்கினால் இது வருங்காலச் சந்ததிக்கே வழிகாட்டுவதாக இருக்கும் என்ற நல்ல நோக்கத்தோடு செயல்படும் இந்த அரசுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்று கூறினார்.

### மேலவைத் தலைவர்

மாண்புமிகு மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:



காஞ்சியைத் தலை நகராகக் கொண்டு பல்லவர்கள் ஆண்டதாக வரலாறு இருக்கிறது. அவர்களது அரண்மனை இங்கே இல்லை. ஆனால் இங்கே மேடையில் வீற்றிருக்கிற இராணியம்மையார் அவர்களின் ராஜாவுக்கு பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு இங்கே வீடு உண்டு. இதை நினைவு இல்லமாக்கிப் பெருமை கொண்டிருக்கிறது அரசு.

இன்றைய அரசின் இந்தச் சிறப்பான பணிகண்டு ஒவ்வொரு தமிழனும் பெருமிதம் கொள்ள வேண்டும்; பெருமை கொள்ள வேண்டும்.

### கே. எஸ். பார்த்தசாரதி

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திரு, கே.எஸ். பார்த்தசாரதி அவர்கள் பேசுகையில் ''நானும் அண்ணாவும்பால்ய சினேகிதர்கள். மற்றவர்களிடம் எப்படிப் பேசவேண்டும், பழக வேண்டும் என்பதை அண்ணாவிடம்தான் தெரிந்து கொள்ள வேண்டும். நிறையப் படித்துவிட்டோம் என்பதற்காகத் திரு.வி.க போல் எழுதமாட்டார் அவர். என்போன்ற சாதாரண மக்களுக்கும் புரியும்படி எழுதுவார். இந்த இல்லத்தைப் பார்த்தாலே மனிதனுக்குப் பகுத்தறிவு தோன்றும்



படி, இதை நினைவு இல்லம் ஆக்கிய தமிழ்நாடு அரசை எவ்வளவு பாராட்டினாலும் தகும்'' என்று குறிப்பிட்டார்.

### ப. நெடுமாறன்

தமிழ்நாடு காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி சார்பில் பேசிய திரு. நெடுமாறன் அவர்கள் தன்னுடைய உரையில் குறிப்பிட்டதாவது:

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஹானர்ஸ் வகுப்பு மாணவனாக இருந்தபோது இதே இல்லத்தில் தான் முதன் முதல் நான் அண்ணா அவர்களைச் சந்தித்தேன். அதன்பிறகு நானும் இப்போது அமைச்சர்களாக இருக்கிற திரு, எஸ்.டி.எஸ்.அவர்களும், திரு, எஸ். இராமச்சந்திரன் அவர்களும் பலமுறை இங்கே வந்ததுண்டு.



வள்ளுவர் விழாவிலே பேச இங்கே வந்துதான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு நாங்கள் அவர்களை அழைத்துப் போனோம். காமராசர் அவர்களும், அண்ணா அவர்களும் சாதாரண மக்கள் தலைவராக விளங்கி உயர்ந்தவர்களாவார்கள்.

அவர்கள் இல்லங்களை நினைவில்லங்களாக்கிய அரசைப் பாராட்டுகிறேன்.

### குமரி அனந்தன்

காந்தி காமராஜ் தேசியகாங்கிரஸ் தலைவர் திரு குமரி அனந்தன் அவர்கள் பேசியதாவது:

இங்கே வைக்கப்பட்டுள்ள சிலை, படிக்கிற தோற்றத்திலே வைக்கப்பட்டுள்ளது. படித்துப் படித்துத்தான் முன்னேற வேண்டும் என்கிற காரணத்தாலேதான், அதை இன்றைய இளைஞர்கள் உணர வேண்டும் என்பதற்காகத்தான் இப்படி வைக்கப்பட்டுள்ளது என்பதை இன்றைய இளைஞர்கள் உணரவேண்டும்.

தமிழை வைத்துக் கொண்டே அரியாசனம் ஏறியவர் பேரறிஞர்




அண்ணா. நடிப்புலகில் ஈடுபட்டவர்கள் நாடாளவும் முடியும் என்று அவர் சொன்னதற்கு உதாரணம்தான் இன்றைய முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள்.

அண்ணா ஓர் வண்ணான் என்று திரு.வி.க. பாடினாரென்றால், சமுதாய அழுக்கெடுப்பில் அவர் சளைக்காமல் ஈடுபட்ட காரணத்தாலேதான்.

### ப. மாணிக்கம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திரு ப. மாணிக்கம் எம்.எல்.சி. அவர்கள் பேசுகையில் ''ஏழை எளிய மக்களுக்கு வீட்டிலும் நாட்டிலும் இடமுண்டு என்பதை நிரூபித்துக் காட்டியவர்



தமிழக வரலாற்றில் பல்வேறு சாதனைகளை உருவாக்கிக் காட்டியவர். பேரறிஞர் அண்ணா. அவரது இல்லத்தை நினைவு இல்லமாக்கியது பெரிதும்பாராட்டத்தக்கதாகும்'' என்றார்.

**எம்.பி. சுப்பிரமணியம்**

இந்திராகாங்கிரஸ் தலைவர் திரு எம்.பி. சுப்பிரமணியம் அவர்கள் தமது உரையில் தெரிவித்ததாவது:

படித்த பள்ளிக்கூடத்தை விட்டுப்போய், 20 வருஷம் கழித்து அதே பள்ளியில் நடக்கிற விழாவுக்கு வந்து கலந்துகொள்ளும் மகிழ்ச்சிஎனக்கிருக்கிறது. ஆனால் அப்போதிருந்த தலைமையாசிரியர் இல்லையே!



பேரறிஞர் அண்ணா அவர்களிடம் படித்த பல்லாயிரக்கணக்கான மாணவர்களிலே நானும் ஒருவனாக இருந்தவன். அவரிடம நான் கண்ட சிறப்பான இயல்பு-தான் தலைவனாக இருந்தாலும் தன்னைச் சுற்றியிருப்பவர்களும் தன்னளவுக்கு உயர வேண்டும் என்று எண்ணக்கூடிய பெரிய மனம் உடையவர் பேரறிஞர் அண்ணா. அப்படிப் பட்ட மாமேதை வாழ்ந்த இந்த இல்லத்தை அரசுடைமையாக்கி, பொது மக்கள் சொத்தாக்கியிருப்பது மிகவும் போற்றத்தக்கதாகும்.

**முத்தமிழ்க் காவலர்**

முத்தமிழ்க் காவலர் டாக்டர் கி.ஆ.பெ. விசுவநாதம் பேசியதாவது:



பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவம் சிறியது. ஆனால், பெரிய உள்ளம் அவருக்கு. அவர் வாழ்ந்த இல்லத்தை நினைவு இல்லமாக்கியிருப்பது முதல்வருக்குப் பெருமை சேர்க்கும் ஒன்றாகும்.

1931ல் திருச்சியில் நீதிக்கட்சி மாநாடு நடத்தினோம். நான் பொதுச் செயலாளர். ஏ. இராமசாமி முதலியார் வந்திருந்தார். அவரது ஆங்கிலப் பேச்சைத் தமிழில் மொழி பெயர்க்கும்படி, அங்கு வந்திருந்த எங்கள் கட்சி உறுப்பினர்களான இருபது முப்பது வக்கீல்களையும் கேட்டேன். பயத்தால் மறுத்துவிட்டார்கள். பிறகு ஒரு சிறுவன் முன்வந்து நான் மொழிபெயர்க்கிறேன் என்றான். பயந்து கொண்டே நான் சம்மதித்தேன். 45 நிமிஷம் அவர் பேசியபேச்சை மிகத் திறமையாக மொழி பெயர்த்தான் அந்தச் சிறுவன்.

உனக்கு நல்ல எதிர்காலம் இருக்கும் என்று அவனை அங்கே நான் பாராட்டினேன். அந்தச் சிறுவன் தான் பேரறிஞர் அண்ணா.

சென்னையில் அண்ணாசிலை வைக்கப்பட்டு, யார் திறப்பது என்ற பேச்சு வந்தபோது, ஏ. இராமசாமி முதலியார் திறக்கட்டும் என்று அண்ணாவே சொன்னதாக அறிந்தேன். அந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் இப்போது நினைத்துப் பார்க்கிறேன். என் இதயம் தத்தளிக்கிறது.

**ப. உ. சண்முகம்**



அனைத்திந்திய அண்ணா.தி மு.க. பொதுச் செயலாளர் திரு, ப.உ.சண்முகம் அவர்கள் பேச்சு விவரம் வருமாறு:

இந்த வீட்டிற்குவந்து நானும், நாவலரும், மறைந்த ஏ.கோவிந்தசாமி, அவர்களும் எம்.பி.சுப்பிரமணியமும் பேரறிஞர் அண்ணா அவர்களோடு கலந்து பேசிய நாட்கள் எனக்கு நினைவு வருகிறது.

1964ல், இங்கே ஒரு கூட்டத்திற்கு வந்திருந்தேன். கூட்டம் முடிந்த பின் அண்ணா அவர்களைச் சந்திக்கவந்தேன். இல்லை என்றார்கள். ஊருக்குப் போய் விட்டேன். என்னுடைய துர்ரதிர்ஷ்டம், அண்ணா இங்கேதான் இருந்திருக்கிறார்!

இது நடந்து ஒரு மாதத்தின் பின் திருவண்ணாமலைக்கு வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், என் வீட்டுக்கு வராமல் நேரேபோய் விருந்தினர் மாளிகையில் தங்கி விட்டார் என்று கேள்விப்பட்டுப் பதறிப்போனேன் நான். நேரில் போய், 'என்னண்ணா இங்கே வந்து தங்கி விட்டீர்களே, வீட்டுக்கு வரக்கூடாதா?' என்று கண் கலங்கிப்போய் கேட்டேன். 'காஞ்சிபுரம் வந்த நீ என் வீட்டுக்கு வரவில்லையே?' என்று உரிமையோடு கேட்டார் அண்ணா.

அப்படி, பாசப் பிணைப்போடு எங்களை வளர்த்தவர் தான் பேரறிஞர் அண்ணா.

**மாண்புமிகு நிதியமைச்சர்**

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் தமது பேச்சில் குறிப்பிட்டதாவது:



நாலரைக்கோடி தமிழர்களின் தலைவராக இருந்தவர் பேரறிஞர் அண்ணா. எனவே, அவர் பிறந்து வளர்ந்த இல்லத்தை நாலரைக்கோடி தமிழர்களுக்கும் உரியதாக்கியிருக்கிறார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

தமிழ் நாட்டுக்கும், தமிழ் மொழிக்கும் சேவை செய்த-தொண்டு செய்த தலைவர்களுக்கெல்லாம் நன்றி செலுத்தும் வகையிலே நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் இவ்வாறான நற்பணிகளை ஆற்றி வருவது போற்றிப் புகழத்தக்கதாகும்.

மனிதப் பண்புக்கு மதிப்பளிப்பவர்கள்தான் அப்படி மற்றவர்களின் இதயத்திலே இடம் பெற முடியும். புத்தர், காந்தி, இயேசு, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் அந்த வகையிலேதான் அனைவர் நெஞ்சிலும் இடம் பெற்றார்கள்.

—இவ்வாறு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உரையாற்றினார்.





# அறிவாலயம் நினைவாலயம் புகழாலயம்...

ஏற்றத் தாழ்வற்ற சமதர்மச் சமுதாயம் படைத்திட எந்தக் கரம் எழுதியதோ—

ஏழை எளியோர் வாழ்வில் இன்பங் கண்டிட எந்தக் குரல் முழங்கியதோ —

சாதி பேதம் நீங்க, சமரசம் ஓங்க எந்தக் கால்கள் பட்டி, தொட்டிகளிலெல்லாம் நடந்ததோ—

வறியவன் வயிறுகுளிர்ந்ததைக் கண்டு எந்தக் கண்கள் அன்புக் கண்ணீர் சொரிந்ததோ—

அதன் மொத்தஉருவம்-பேரறிஞர் அண்ணா-எழுதி, பேசி, நடந்து, பார்த்து, உண்டு, உறங்கி, வாழ்ந்த-அந்த எளிய இல்லத்தின் உள்ளே நாம் நுழைகின்றோம்!

நம் கால்கள் உள்ளே ஒரு அடி எடுத்து வைத்ததுமே, அண்ணாவின் புனிதப் பாதம் பட்ட இடமாயிற்றே, எப்படி அடியெடுத்து வைப்பது என்ற ஒரு அச்சம்-அண்ணாவின் மேல் உள்ள பற்றின்பால் ஏற்பட்ட பய உணர்வு நம் கால்களை அடிமேல் அடி வைக்க வொட்டாமல் தடுக்கின்றனவே! ஆனால்.... ஆனால்... அடுத்த வினாடியே ..''அண்ணாவின் அடிச்சுவடுகள் படிந்த இடமல்லவா இது? மேலே மேலே செல்! அண்ணாவின் அடிச்சுவடையல்லவா நீ பின்பற்றிச் செல்கிறாய்!'' என்கிறது மனம். நாம் மகிழ்ச்சியுடன் நடைபோடுகிறோம்.

காஞ்சிபுரம், எண் 54 சி.என். அண்ணாதுரை சாலையிலுள்ள அந்த இல்லம் .... நம் எண்ணம் பழைய நினைவுகளைச் சுமந்தபடி உள்ளே அலைபாய்கிறது....

வாயிலினுள் நுழைந்து, வராண்டாவில் பார்க்கிறோம். சி.என். அண்ணாதுரை — என்று 'IN'னும், 'OUT'டும் இரண்டும் தெரிகிறது. ஆம். அண்ணா 'உள்ளே'யும் இருக்கிறார்; 'வெளியே'யும் இருக்கிறார் அல்லவா?

கள்ளமில்லாக் குழந்தைமனம் படைத்த அண்ணா, குழந்தை பேரனுடன் கொஞ்சுகின்ற காட்சியைச் சித்திரிக்கும புகைப் படம்—அதுதான் முதல் படம் கண்களுக்கு விருந்தாய் அமைகிறது. அடுத்து நாம் பார்ப்பது அண்ணாவின் வாழ்க்கைக் குறிப்புகளை—அண்ணா சிறைவாழ்க்கைக் குறிப்புகளை! அடுத்த படம் தான் தலைவரும்-தளபதியும்... தந்தை பெரியாரும்-பேரறிஞர் அண்ணாவும்.

மேலும் உள்ளே செல்கிறோம்-

அன்புடன் வளர்த்த அன்னை பங்காரு அம்மாள், தொத்தா (சிற்றன்னை) இராசாமணி காட்சி தருகிறார்கள். பிறகு தொடர்கிறது, அண்ணாவின் பள்ளி வாழ்க்கைச் சித்திரங்கள். அதோ! அங்கே தலைப்பாகையுடன் உம்மென்று உட்கார்ந்திருக்கும் அந்தச் சிறுவன் யார்? ஆம்; நம் அண்ணாதான்—பச்சையப்பன் ஆரம்பப்பள்ளியில் படிக்கும் போது!

இந்த வரிசையில், அண்ணா படித்த பள்ளிகள் மற்றும் அவர் கல்லூரி நண்பர்களுடன் உள்ள படங்கள் எல்லாம் நம்மை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்துகின்றன.

ஆமாம், அங்கே இருப்பது யாருடைய திருமண அழைப்பு இதழ்? அவசர அவசரமாகப் படிக்கிறோம். அருமை அண்ணாவின் திருமண அழைப்பிதழ் தான் அது! 'விவாஹ சுப முகூர்த்தப் பத்திரிகை'. நம் கண்கள் ஆவ

பி.வி. கிரி

# நஞ்சை, புஞ்சை இரு நில விவசாயத்திற்கும் ஏற்றது.



## டிஸக் கலப்பை

**உங்கள் உழவுத் தொழிலை நீங்கள் உட்கார்ந்தபடியே செய்ய உதவும். 30 அங்குல அகலமும் 8 அங்குல ஆழமும் உழக்கூடியது.**

புவனு



**மினிடில்லர்**

நான்கு டிஸ்க்குகள் இணைக்கப்பட்டது

விவரங்களுக்கு:

**புவனு அக்ரோ சர்வீஸ் கார்ப்பரேஷன்**

72, ஆலந்தூர் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை - 600015.

SRAA.


லோடு அடுத்த காட்சியைப் பார்க்கின்றது. அண்ணாவும்—அண்ணியும்!

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் அண்ணா அணிந்து மகிழ்ந்த பட்டமளிப்பு விழா ஆடையும் ஒரு பக்கம் காட்சி தருகிறது. அதற்குப் பக்கத்தில், கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு என்ற வாசகத்தைச் சுற்றி பல கோணங்களில் எடுக்கப்பட்ட அண்ணாவின் திருஉருவப் படங்கள், நம்மை எங்கேயோ, எப்போதோ அவரைப் பார்த்த நினைவுக்கு இழுத்துச் செல்லுகின்றன....

அதோ! அங்கே நிற்பது யார்? அண்ணா தான்.... வெள்ளைக் கைத்தறிச் சட்டை, வேட்டி, துண்டுடன், பையில் பேனாகூட இருக்கிறது.... உற்றுப் பார்க்கிறோம்—கண்ணாடிப் பேழைக்குள்-அவரது ஆடையை வைத்தே அவர் நடந்து வருவதுபோன்று அமைக்கப்பட்ட கைவண்ணம் தான் அது! வேட்டி முனையில் 'CNA' குறியீடு!

அண்ணாவின் இல்லத்தினுள்ளே தான் இருக்கின்றோம். ஆனால், நம் எண்ணத்திரையிலோ, அந்தப் பழைய இனிய நினைவுகள் எல்லாம் பளிச்சிடுகின்றனவே.....!

அண்ணா முதலமைச்சர் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ளுதல் - ஆட்சிப் பொறுப்பில் அண்ணா - பத்திரிகையாளருடன் அண்ணா, (15.4.68)-அண்ணாவின் அமைச்சரவைக் காட்சிகளெல்லாம் கண்கொள்ளாக் காட்சியாகும்.

அறிஞர் அண்ணா தலைசிறந்த நாடகாசிரியர் மட்டுமல்ல, நடிகரும் கூட! ஆம். அவர் நடித்த 'சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்', சந்திரோதயம்' ஆகிய நாடகங்களில் அவர் நடித்த காட்சிகள் அற்புதமாய் இருக்கின்றன. மற்றும் 'ஆக்கி விளையாட்டு வீரர்களுடன் (1967)'-நம்மைக் கவர்கிறது.

படங்களைப் பார்த்துக் கொண்டே வருகிறோம். ஓரிடத்தில், நம்மையறியாமலே சட்டென நிற்கிறோம். ஆம்; அண்ணாதான் அங்கே பேசுகிறார்—அவர் குரல் அங்கே ஒலிக்கிறது—எங்கேயோ, எப்போதோ கூட்டத்தில், விழாவில் கேட்டமாதிரி இருக்கிறதே! 'விடுதலை நாள் சொற்பொழிவு' - 1967ல் பேசியது!

அறிஞர் அண்ணாவின் வாழ்க்கைத் தொகுப்புச் சித்திரங்கள்—புகைப்படப் படலம் அத்துடன் முடிந்து விடுமா? தொடர்கிறது-தொடர்கிறோம்....

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் அண்ணாவின் திருவுருவம் - தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவுகின்ற காட்சி கண்டு பெருமிதம் அடைகின்ற திருமுகம்- அன்று மவுண்ட்ரோடில் கண்ட அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க காட்சி தெரிகிறது. அண்ணா, ஆளுநர் உஜ்ஜல்சிங், அவரது துணைவியார்......

வடநாட்டுச் சுற்றுப்பயணம், வெளிநாட்டுத் தலைவர்களுடன் அளவளாவுதல், அண்ணாவுக்குத் தந்தை பெரியார் பொன்னாடை போர்த்துகின்ற அரிய காட்சி, பாவேந்தர் பாரதிதாசனார்க்குப் பொற்கிழி வழங்குதல், ராஜாஜி, காமராஜர், ஜாகிர் உசேன், ஜகஜீவன்ராம், இந்திராகாந்தி, டாக்டர் ராதாகிருஷ்ணன், ஜி.டி. நாயுடு, மொரார்ஜிதேசாய் ஆகியோருடன் அண்ணா இருக்கின்ற தனித்தனிப் படங்கள் எல்லாம் கண்ணுக்கு விருந்தாய் அமைகின்றன.

ஒவ்வொரு அறையாகச் சுற்றிப்பார்த்து விட்டு, கூடத்துக்கு வருகிறோம்.

அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய நூல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. சந்திரமோகன், நீதிதேவன் மயக்கம், செவ்வாழை, ஓர் இரவு, வேலைக்காரி, காதல்ஜோதி, மாஜி கடவுள்கள், ஆரியமாயை போன்ற பல நூல்கள்! 'திராவிடநாடு' 'காஞ்சி' 'கலைவழி இதழ்களும்'(1943-48) இருக்கின்றன.

**அங்கே இருந்த கண்ணாடிப் பேழையில்—**

**அறிஞர் அண்ணா உபயோகித்த மூக்குக் கண்ணாடி, பொடி டப்பா, பெல்ட், பேனா, தட்டு, தம்ளர், பாத்திரங்கள் வைக்கப் பட்டுள்ளன. அருகே ஒரு பெட்டியும் உள்ளது.**

**இன்னொரு கண்ணாடிப் பேழையில்—**

**அறிஞர் அண்ணா அவ்வப்போது எழுதிய குறிப்புகள்—வெளிநாட்டிலிருந்து எழுதிய கடிதங்கள் - நாட்குறிப்புகள்... அதுமட்டுமா? அண்ணா வரைந்த ஓவியங்களும் இங்கே வைக்கப் பட்டிருக்கின்றன.**

**இரண்டு கண்ணாடிப்பேழைகளுக்கும் இடையே, அறிஞர் அண்ணாவின் திருவுருவச்சிலை, உட்கார்ந்த நிலையில், புத்தகம் படிப்பது போன்ற தோற்றத்தில் காட்சியளிக்கிறது.**

**அறிஞர் அண்ணா துயில் கொண்ட அந்தப் படுக்கை அறையைப் பார்க்கின்றோம்.**

**சாய்வு நாற்காலி, இரண்டு பெஞ்சுகளை இணைத்துப் போட்டு அதன்மேல் மெத்தை, 2 பெட்டி, ஒரு சிறிய சிம்னி விளக்கு காட்சி தருகின்றன. சுவரில் சட்டை, வேட்டி துண்டு, பனியன் மாட்டப்பட்டிருக்கிறது. எல்லாம் இருக்கிறது. ஆனால் அண்ணா? அண்ணா மட்டும் அங்கேஇல்லை. அண்ணா வெளியில் போயிருப்பது போன்ற ஒரு பிரமை!**

**அறிஞர் அண்ணா அரசின் முப்பெரும் சாதனைகள் என்ன?**

1. **தமிழ்நாடு பெயர் மாற்றம் (14.4.1967)**
2. **இருமொழிக் கொள்கை**
3. **சீர்திருத்தத் திருமணம்**

**இதனை விளக்குகின்ற படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டு, நம் கருத்தைக் கவர்கின்றன.**

**ஒரு அறையில், அறிஞர் அண்ணா அவர்கள் படித்த நூல்கள் காட்சியளிக்கின்றன. தமிழ் இலக்கியங்கள், ஆங்கிலக்கலைக் களஞ்சியங்கள் அங்கே உள்ளன.**

**படியேறி மாடிக்குச் செல்கிறோம்.**

**ஒவ்வொரு படியும், அண்ணாவின் வாழ்க்கையைப் 'படி படி!' என்று சொல்வது போலவும், படிப்படியாய் அண்ணா உயர்ந்ததை உணர்த்துவது போலவும் சில எண்ண அலைகள்....**

**கோட்டையில், தலைமைச் செயலக ஊழியர்களிடையே அறிஞர் அண்ணா பேருரை ஆற்றிய படம்தான் அது என்றாலும் அன்று அவர் ஆற்றிய அந்த உரை நமக்கெல்லாம் பாடம் அல்லவா?**


**கண்ணாடி பீரோ ஒன்று. அதில் யார் யாரை அண்ணா பின்பற்றி வாழ்ந்தாரோ, அவர்களின் திருவுருவப் பொம்மைகளை விரும்பி வாங்கிச் சேர்த்து வைத்திருக்கிறார் போலும்! திருவள்ளுவர், காந்தியடிகள், புத்தர், விவேகானந்தர் மற்றும் மூன்று குரங்குகள், உலக உருண்டை, வீணை, அழகிய கூஜா, இயேசு ஆகியவை அதில் காட்சி தருகின்றன.**

**மாடியில் மேலும் நாம் கண்ணோட்டம் விடுகிறோம்.**

**சென்னையில் அறிஞர் அண்ணா திருவுருவச் சிலை திறப்புவிழா. அதில் கலந்துகொண்ட தலைவர்கள். அமெரிக்காவில் அண்ணா சிகிச்சை பெறும் காட்சி-மருத்துவமனையில் அண்ணியார், திரு. க. இராசாராம், திருமதி இந்திரா காந்தி ஆகியோர் இருக்கின்ற காட்சிகள்.....**

**நியூயார்க்கிலிருந்து தந்தை பெரியாருக்கு அண்ணா எழுதிய கடிதம் (10.10.1968), கலைவாணர் சிலை திறப்பு விழாவில் அண்ணா-கலைவாணர் என்.எஸ்.கே. கலந்துகொண்ட கடைசி நிகழ்ச்சியில், அண்ணா படத்தைக் கலைவாணர் திறந்துவைக்கும் படம். வடநாட்டுச் சுற்றுப்**

# இந்திய அரசிதழில் இனிய தமிழ்!



பார்வையாளர் புத்தகத்தில் தமது கருத்தினை எழுதுகிறார் குடியரசுத் தலைவர்.

பயணத்தின்போது ஒட்டகச் சவாரி, தாஜ்மகால், எல்லோரா வில் அண்ணா இவ்வையெல்லாம் வெறும் படங்களா — இல்லை பேசும் படங்கள்!

இன்னும் பார்த்துக்கொண்டே போகிறோம்.....

அறிஞர் அண்ணா எழுதிய முதல் சிறுகதை 'கொக்கரக்கோ'. ஆனந்தவிகடனில் வெளிவந்தது. அதன் புகைப்படப் பிரதியை இங்கே பார்க்கிறோம்.

அண்ணா பெயரில் உள்ள அறிஞர் அண்ணா தொழிற் நுட்பக் கழகம், அறிஞர் அண்ணா புற்று நோய் மருத்துவமனை, அண்ணா மேம்பாலம், மற்றும் அண்ணா அஞ்சல்தலை இவற்றையெல்லாலாம் பார்த்துவிட்டு, மாடியின் முன் அறைக்கு வருகிறோம். அங்கே தானே, அண்ணா தன் அருமை நண்பர்களுடன் அளவளாவிக் கொண்டிருந்தார்! அங்கே—

அறிஞர் அண்ணாவின் இறுதி யாத்திரைப் படங்கள்... நம்கண்களைக் குளமாக்குகின்றன. ''கண்ணீரைத்துடை... காரிய மாற்று!'' என்று அண்ணா சொல்வது போன்ற பிரமை. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அங்கே பார்க்கிறோம்.



*Dear brother,*
*Go to the people*
*Live among them*
*Learn from them*
*Love them*
*Serve them*
*Plan with them*
*Start with what they know*
*Build on what they have*

*To those who want to engage themselves in Public Service.*

**—C. N. Annadurai.**

—என்று அறிஞர் அண்ணா அவர்கள் கைப்பட எழுதிக் கோடிட்டுக் காட்டிய அந்தக் கடி, தம்-தம்பிக்கு எழுதிய அந்தக் கடிதம் நம் நெஞ்சைத் தொடுகிறது—நெஞ்சில் பதிகிறது.

சுமார் 200க்கு மேற்பட்ட புகைப்படங்களுடனும், அறிஞர் அண்ணா பயன்படுத்தியபொருள்களுடனும் ஒரு நிரந்தரப்பொருட்காட்சியாக - அருங்காட்சியாகத் திகழ்கிறது இந்தப் பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம்.

காஞ்சி என்றதுமே புகழ்பெற்ற திருக்கோயில்களும் , பட்டுப்புடைவைகளும் நினைவுக்கு வரும். அந்தப் பட்டியலில் இன்று பேரறிஞர் அண்ணா நினைவு இல்லமும் முதலாவதாகத் திகழும்- சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவரும்.

அறிஞர் அண்ணாவே ஓர் அறிவாலயம், அவர் வாழ்ந்த இல்லமோ இன்று நினைவாலயம் ! அதற்கு வழிகோலிய தமிழக அரசுக்கு மக்கள் புகழாலயம் எழுப்புகின்றனர் என்றால் அது உண்மை ! உண்மை !



'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற நிலை இன்று பரவலாக இருந்திடப் பார்க்கின்றோம்.

தமிழ் வளர்ச்சிக்கென பல நல்ல திட்டங்கள் தீட்டப்பட்டு செயலாற்றப்பட்டு வருகின்றன. இந்த வகையில் ஆக்கப் பூர்வமான அரும்பணியை ஆற்றி வருகிறது ஓர் ஆணையம்!

'நீதிமன்றங்களில் , தமிழ்' என்ற சீரிய இலட்சியம் முழு வெற்றி பெற மக்களுக்குப் புரியும் வகையில் - தமிழில் சட்டங்கள் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவரவேண்டியது மிக மிக அவசியமாகும்.

அந்தத் தமிழ்ப் பணியில் தன்னை ஈடுபடுத்திச் செயலாற்றி வருகின்றது தமிழ்நாடு மாநில (சட்டத்துறை) ஆட்சிமொழி ஆணையம் [State Official Language (Legislative) Commission].

1976ஆம் ஆண்டு மாற்றியமைக்கப்பட்ட இந்த ஆணையம் மாற்றியமைக்கப்பட்ட நான்கு மாதங்களுக்குள், குற்ற வழக்கு நீதிமன்றங்கள் தமிழில் தீர்ப்புகளை எழுவதற்கு ஆதாரமாக உள்ள மூன்று அடிப்படைச் சட்டங்களை மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறது. அவை:

1. குற்ற விசாரணை முறைச் சட்டம் (Criminal Procedure Code)
2. இந்தியச் சாட்சியச் சட்டம் (Indian Evidence Act)
3. இந்தியத் தண்டனைச் சட்டம் (Indian Penal Code)

ஆதாரச் சுருதி!

இதுவரையில், 125 மத்திய, மாநிலச் சட்டங்களை இவ்வாணையம் மொழிபெயர்த்திருக்கிறது. நமது ஜனநாயகத்தின் ஆதாரச் சுருதியாக இருக்கும் இந்திய அரசமைப்பையும் (Constitution of India) இது மொழிபெயர்த்து முடித்திருக்கிறது.

மொத்தத்தில் சுமார் 5,000 அச்சுப் பக்கங்கள் கொண்ட ஆங்கிலச் சட்டங்கள் இவ்வாணையத்தால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதை இங்கே குறிப்பிட வேண்டும். அதுமட்டுமா? 4,620 சொற்களும், சொற்றொடர்களும் கொண்ட சட்டச் சொல் அகராதி (Law Lexicon) ஒன்றையும் இது வெளியிட்டிருக்கிறது.

**சாமானியர்களும் புரிந்து கொள்ள....**

தமிழாக்கப்பட்ட இந்தச் சட்டங்கள் எல்லாம், இயன்றவரையில் எளிமையான பழகு தமிழில், சாமானியர்களுக்கும் விளங்கக் கூடிய வகையில் அமைந்திருக்கின்றன.

இந்த அரிய மொழிபெயர்ப்புப் பணிகள், த்னித்தனி நபர்களால் செய்யப்படுபவையல்ல. சட்ட வல்லுநர்களும், தமிழ் வல்லுநர்களும், இருமொழி வல்லுநர்களும், படைப்பாற்றல் பெற்ற தமிழ், எழுத்தாளர்களும் உள்ள த்னித்தனிக் குழுக்களாக, எட்டு குழுக்கள் (Cells) இங்கே செயற்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு குழுவும் ஒரு சட்டத்தைக் கூட்டு முயற்சியாக மொழிபெயர்க்கிறது. அவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டவற்றை ஆணையத்தின் தலைவரும், உறுப்பினர்களும் கொண்ட ஓர் உயர் மட்டக்குழு, சொல்லுக்குச் சொல் நுணுகி, ஆராய்ந்து இறுதியான தமிழாக்கத்தைச் செய்து முடிக்கிறது.

தமிழ்ப் பணியில் நற்றொண்டாற்றிடும் இந்த ஆணையம், மேலும் ஒரு அரிய செயலையும் செய்திருக்கின்றது.


ஆணையத் தலைவர் டாக்டர் ஜஸ்டிஸ் எஸ். மகராசன் அவர்கள் இது சம்பந்தமாக 21.8.80 அன்று செய்தியாளர்களிடம் விளக்கிக் கூறுகையில் குறிப்பிட்டார்:

தமிழ்நாடு மாநில (சட்டத் துறை) ஆட்சிமொழி ஆணையத்தால், செய்யப்பெற்றுள்ள ஐந்து மத்தியச் சட்டங்களின் தமிழ் மொழிபெயர்ப்புகள் இந்திய அரசு அரசிதழில் (Gazette of India) வெளியிடப்படும். இதற்கு 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16-ந் தேதி அன்று இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் அதிகாரம் அளித்துள்ளார்.

மத்தியச் சட்டங்களின் தமிழாக்கம் ஒவ்வொன்றும், இந்தியக் குடியரசுத் தலைவரால் ஒப்

பேட்டி:
**பி. வி. கிரி**

## வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
## உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
## அத்தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
## டான்சியின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்!
உயர்ந்த தரம்! நியாயமான விலை!
இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—
தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம் டான்சி!
டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரு 18 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI




ஆட்சிமொழி ஆணையத்தின் தலைவரும் உறுப்பினர்களும் விவாதிக்கிறார்கள்

புக்கொள்ளப்பட்டு, அதனை இந்திய அரசிதழில் வெளியிட அவர் உத்தரவிட வேண்டும். அவ்வாறு இந்திய அரசிதழில் வெளியிடப்பட்டபின் சம்பந்தப்பட்ட மத்தியச் சட்டத்தின் அதிகாரப்பூர்வமான தமிழாக்கமாக அது கொள்ளப்படும். இந்த நடைமுறையை, 1973 ஆம் ஆண்டு மத்தியச் சட்டங்களின் அதிகாரப்பூர்வமான மொழிபெயர்ப்புகள் சட்டம் வகுத்துள்ளது.

இந்தச் சட்டம் 1973ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட போதிலும், 1979 ஏப்ரலில்தான் அமலுக்கு வந்தது. அச்சட்டத்தின்படி இந்தி தவிர மற்ற இந்திய தேசிய மொழிகளில் செய்யப்படும் மத்தியச் சட்ட மொழிபெயர்ப்பு ஒவ்வொன்றும், குடியரசுத் தலைவரின் ஏற்புக்குப் பின் இந்திய அரசிதழில் வெளியிடப்பட வேண்டும். அதன்பின் அது அந்த மொழியில் அந்த மத்தியச் சட்டத்தின் அதிகாரப்பூர்வமான மொழிபெயர்ப்பாகக் கொள்ளப்படுதல் வேண்டும். அச்சட்டம் 1979 ஏப்ரலில் அமலுக்கு வந்த போதிலும், அதைக் குடியரசுத் தலைவர் முதல் முதலில் பிரயோகித்தது தமிழ் மொழிபெயர்ப்பு சம்பந்தமாகத்தான்!

மேற்சொன்ன ஆணையம் செய்த ஐந்து மத்தியச் சட்டங்களின் மொழிபெயர்ப்புகளை, குடியரசுத் தலைவர் ஏற்று, அவற்றை இந்திய அரசிதழில் வெளியிடும்படி உத்தரவிட்டுள்ளார்.

'இந்திய அரசிதழில்' அதன் நூறு ஆண்டுக்கு மேலான வரலாற்றில், தமிழில் வெளிடப்படுவது இதுவே முதல் ஆகும். இந்தி தவிர மற்ற தேசிய மொழிகளில் தமிழில் தான் முதன்முதல் 'இந்திய அரசிதழ் வெளியிடப்படுகிறது.

''இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 8வது இணைப்புப் பட்டியலில் உள்ள எல்லா மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்ட சட்டங்கள், மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட வேண்டும், அப்போது அந்த மொழிபெயர்ப்புகள் அதிகாரப்பூர்வமான மொழிபெயர்ப்புகளாகக் கருதப்படும்.

இந்தியைப் பொறுத்தவரை இதற்கு 1963ஆம் ஆண்டு ஆட்சிமொழிச் சட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ளது. மற்ற மொழிகளைப் பொறுத்தவரை 1973 ஆம் ஆண்டு மத்தியச் சட்டங்களின் மொழிபெயர்ப்புகள் சட்டம் வகை செய்துள்ளது.

உரிமை வழக்கு விசாரணை முறைச் சட்டம், இந்திய ஒப்பந்தச் சட்டம் ஆகியவற்றையும் இந்த ஆணையம் மொழிபெயர்த்துள்ளது. இவையும் உரிய காலத்தில் இந்திய அரசிதழில் வெளியிடப்படும்.

### தீந்தமிழே தீர்ப்புமொழி!

உயர்நீதி மன்றத்துக்குக் கீழமைந்துள்ள உரிமை வழக்கு நீதி மன்றங்களில், தீர்ப்பு மொழியாகத் தமிழைப் பயன்படுத்தும் மாநில அரசின் கொள்கையைப் பற்றி ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார். அதற்கிணங்க, உரிமை வழக்கு நீதிமன்றங்களால் பயன்படுத்தப்படுவதற்கும், அவசியமாகிற பல்வேறு பிற உரிமை வழக்குச் சட்டங்களின் மொழிபெயர்ப்புகளை இந்த ஆணையம் தயாரித்து வருகிறது.

குற்ற வழக்கு நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில், தீர்ப்புமொழியாகத் தமிழ் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு நீதிபதிகளால் பயிலப்பட்டு வருகிறது.

### ஆங்கிலத்தைவிட....

தமிழில் எழுதப்பட்டு வருகிற தீர்ப்புகள் அண்மையில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு வந்த தீர்ப்புகளைக் காட்டிலும் தரத்தால் உயர்ந்தவையாகவும், நுணுக்கம் உடையனவாகவும், தெளிவுடையனவாகவும், சாமானிய மக்களும் புரிந்து அனுபவிக்கக் கூடியவையாகவும் இருக்கின்றன என்று சம்பந்தப்பட்டவர்கள் எல்லாரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

குற்றவியல் நிர்வாகத்திற்கு அவசியமான சட்டங்கள் பலவற்றை, மொழிபெயர்த்து உதவியது போலவே, உரிமையியல் சட்டங்களையும் விரைவில் தமிழாக்கம் செய்து இந்த ஆணையம் வெளியிடும் என்று நம்புகிறோம்.

இவ்வாறு அரியணையில் அழகு தமிழ் வீற்றிருக்கவும், அதன் மூலம் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற இலட்சிய தீபம் ஒளிவிடவும், அந்த வகையில் தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்வதற்குத் தூண்டுகோலாகவும் - பாசறையாகவும் இருந்து பைந்தமிழ் வளர்த்திடவும் பணிபுரிந்து வருகின்றது ஆட்சிமொழி ஆணையம் என்றால், அது உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை!

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

## விஜய் காம்ப்ளெக்ஸ் & யூரியா உரங்களை தயாரிப்பவர்கள்




ஆண்டு தோறும் 5,50,000 டன் விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்களையும் 1,25,000 டன் விஜய் யூரியாவையும் தயாரிக்கின்றோம். தரமான உரங்களை தயாரித்தளிப்பதோடல்லாமல் இந்திய விவசாயம் சிறக்க பல விவசாய மேம்பாட்டுத் திட்டங்களை செயல் படுத்திவருகின்றோம். அவற்றுள் சில:

- **நீண்டகால விவசாய மேம்பாட்டுத் திட்டம்:**
  இந்த 22 திட்டங்களினால் 1,90,000 ஹெக்டர் நிலத்தைக் கொண்ட 76,000 குடும்பங்கள் பலனடைந்து வருகின்றன.
- **கிராம ஏற்புத் திட்டம்:**
  விவசாய உற்பத்தியைப் பெருக்குவதை குறிக்கோளாகக் கொண்ட இத்திட்டத்தினால் 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன் பெற்றுள்ளன.
- **துரித மண் பரிசோதனைத் திட்டம்:**
  விவசாயிகள் மண் மாதிரிகள் அனுப்பிய 4 வாரங்களுக்குள் முடிவுகளும் சிபாரிசுகளும் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன.
- **நவீன விவசாய நுணுக்கங்களை தெரிவிக்கும் திட்டம்:**
  நடமாடும் திரைப்பட ஊர்திகள், வானொலி, சினிமா, செய்தித் தாள்கள் மற்றும் சாகுபடி குறிப்புப் புத்தகங்கள் முதலிய பல்வேறு சாதனங்கள் மூலமாக விவசாயிகள் புரிந்து செயலாற்றும் வகையில் நவீன விவசாய நுணுக்கங்கள் தெரிவிக்கப் படுகின்றன.

மேலும், விவசாய கருத்தரங்குகள், விவசாயிகள் பயிற்சி திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்தி விவசாயிகளுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளும் தரப்படுகின்றன.

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் — இந்திய விவசாய வளர்ச்சியில் முழுமையான ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனமாகும்.**

MFL 2111

மேலும் விவரங்களுக்கு, மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், 10, வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001


# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

(21—8—80 முதல் 5—9—80 முடிய)

## 21—8—80

* தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட மத்திய அரசின் ஐந்துச் சட்டங்கள் விரைவில், இந்திய அரசிதழில் வெளியிடப்படும் என்று ஆட்சிமொழி ஆணையத் தலைவர் ஜஸ்டிஸ் எஸ். மகராஜன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## 22—8—80

* பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்க, வேளாண்மைத் துறை பல திட்டங்களை மேற்கொண்டுள்ளது. செங்கல்பட்டு மாவட்டத்தில் 1,75,000 ஏக்கர் பரப்பில் நிலக்கடலை, எள் போன்ற எண்ணெய் வித்துக்களைப் பயிரிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 23—8—80

* ரூ. 240 இலட்சம் செலவில் தமிழகத்தில் 82 புயல் பாதுகாப்புக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றது. இதில் 62 கட்டடங்கள் வேலை முடியும் நிலையில் இருப்பதாக மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் கூறியுள்ளார்.

## 24—8—80

* தமிழ்நாட்டில் நடப்பாண்டில் புதிதாக 250 தொழிற்பேட்டைகளைத் தொடங்கவும், 1,000 சிறு தொழில்களை ஆரம்பிக்கவும் தமிழக அரசு முடிவு செய்துள்ளதாக மாண்புமிகு ஊரக-தொழில் அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தெரிவித்துள்ளார்.

* உடுமலைப்பேட்டையில், 1014 பேருக்கு நிலப்பட்டாக்கள் வழங்கப்பட்டன. இவர்களில் 738 பேர் அரிசன மக்கள். நிலப் பட்டாக்களை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு பி. குழந்தைவேலு அவர்கள் வழங்கினார்.

## 25—8—80

* சென்னை மாநகராட்சி சார்பில் 100 கட்டணக் கழிப்பிடங்கள் கட்டுவதற்கு ஒரு கோடி ரூபாய் செலவிடப்படும். இந்தக் கழிப்பிடங்கள், வரும் 1981ஆம் ஆண்டு மார்ச் 31ந் தேதிக்குள் கட்டி முடிக்கப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. பி. குழந்தைவேலு அவர்கள் தெரிவித்துள்ளார்.

## 26—8—80

* இப்போது தமிழ்நாட்டில் 21 சர்க்கரை ஆலைகள் இருந்து வருகின்றன. மேலும் ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மாயவரத்தில் விரைவில் ஆரம்பிக்க அரசு தீவிர ஏற்பாடுகளைச் செய்து வருகிறது என்று மாண்புமிகு தொழிலமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

* விளையாட்டில் சிறந்து விளங்கும் ஊழியர்கள், மாலையில் விளையாட்டுப் பயிற்சியினை மேற்கொள்ள வசதியாக அவர்கள் அரசு அலுவலகங்களிலிருந்து மாலை 4 மணிக்குச் செல்ல அனுமதிக்கப் படுவார்கள். மாவட்ட விளையாட்டுக் கவுன்சிலிடம் இந்தச் சலுகை பெற விரும்பும் அரசு ஊழியர்கள் அத்தாட்சி பெற வேண்டும்.

* அரசு ஊழியர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது மரணம் அடைந்தால் அவர்களுடைய குழந்தைகளுக்கு இலவச கல்வி வசதி அரசு செய்து தரும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. மேலும் அக் குழந்தைகள், மேல் நிலைப்பள்ளிகளில் இங்கிலீஷ் மீடியத்தில் படித்து வந்தால், அவர்கள் சம்பளம் கட்டத் தேவையில்லை என்றும் அரசு அறிவித்துள்ளது.

## 27—8—80

* அரசுடைமையாக்கப்பட்ட ஒன்பது பேருந்து போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த 55 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அலுவலாளர்கள், தொழிலாளர்கள். ஆகியோருக்கு ரூ. 55-லிருந்து ரூ. 115 வரை ஊதிய உயர்வு கிடைக்கச் செய்வதற்கான உடன்பாடு ஒன்று ஏற்பட்டுள்ளதாக மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## 28—8—80

* இறக்குமதி செய்யப்பட்ட பாமாலிவ் எண்ணெய்யைத் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகக் கடைகளிலும், கூட்டுறவுக்கடைகளிலும் விற்பனை செய்ய அரசு ஏற்பாடு செய்துள்ளது. குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 5 கிலோ வீதம் தரப்படும் என்றும், ஒரு கிலோ ரூ. 8.25 என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 29—8—80

* சென்னை நகரில் கொள்ளை, கொலை, விடு புகுந்து திருடுதல் ஆகியவற்றைத் தடுக்கும் வகையில் பலத்த போலீஸ் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், இரவு நேரங்களில் போலீஸ் ரோந்து தீவிரப்படுத்தப்படுவதாகவும் காவல்துறை ஆணையாளர் திரு ஸ்ரீபால் அவர்கள் தெரிவித்துள்ளார்.

* சென்னை மாநகரில் 20 ஆண்டுகட்குப பிறகு மீண்டும் முதன் முறையாக, பேருந்துகளில் பெண் நடத்துநர்கள் நியமிக்கப்படுகிறார்கள். பரீட்சார்த்தமாக முதல் கட்டமாக 14 பெண் நடத்துநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

## 30—8—80

* தமிழகக் கல்வித்துறையில், ஹையர் கிரேட் ஆசிரியர்களாக உள்ளவர்கள். செகண்டரி கிரேட் ஆசிரியர்களாகப் பதவி உயர்வு பெற அரசு வழி செய்துள்ளது. முதல் கட்டமாக இத்திட்டத்தின் மூலம், 2,500 ஹையர் கிரேட் ஆசிரியர்கள், செகண்டரி கிரேட் ஆசிரியர்களாகப் பதவி உயர்வு பெறுவார்கள். இத்திட்டத்தின்படி 8-வது வகுப்புவரை படித்துள்ள ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கு அஞ்சல் மூலம் பயிற்சி அளிக்கப்படும்.

* மாஸ்கோவில் நடந்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில், ஆக்கி விளையாட்டில், இந்தியாவுக்கு வெறறியைத் தேடித் தந்த இந்திய ஆக்கி அணித் தலைவர் திரு பாஸ்கரன் அவர்களுக்குத் தமிழக அரசு ரூ.15 ஆயிரம் பரிசு அளித்துள்ளது. இந்திய ஆக்கி அணியில் இடம் பெற்றிருந்த 16 வீரர்களுக்கும் தலா ரூ. 1,000 வழங்கப்படுகிறது.

* நிலமற்ற விவசாயிகளுக்கு உதவ 245 இலட்சம் ரூபாயில் இரண்டு திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.காகாளிமுத்து அவர்கள் கூறியுள்ளார்.

## 31—8—80

* 198C—81 ஆம் ஆண்டில் ரூ.50 கோடிச் செலவில் மேலும் 2 ஆயிரம் பேருந்துகள் விடப்படும். எல்லாக் கிராமங்களுக்கும் பேருந்துகள் விட வேண்டும் என்ற நோக்கத்தில் அரசு திட்டமிட்டுச் செயல்படுகிறது. இத்திட்டங்களின் மூலம் 12 ஆயிரம் முதல் 15 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

* திண்டிவனம் வட்டத்திற்கு உட்பட்ட ஆதரவற்ற வயது முதிர்ந்த ஏழை எளியவர்கள், ஊனமுற்ற ஏழைகள், ஏழை விதவைகள் ஆகிய 794 பேருக்கு இலவசமாக வேட்டி, சேலைகள் வழங்கப்பட்டன.

## 1—9—80

* தமிழ்நாட்டின் கலாச்சாரப் பாரம்பரியத்துக்கு ஏற்ப, தங்கள் குழந்தைகள் வளர வேண்டும் என்று தமிழ்நாட்டை விட்டு வெளியே வசிக்கும் தமிழர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். அவர்களின் கோரிக்கையை ஏற்று உதவி செய்யத் தமிழக அரசு தயாராக இருக்கிறது. என்று மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் தில்லித் தமிழ்ச் சங்கத்தில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

* இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழ்நாட்டில் பெண் கைதிகளை— கைது செய்வது உட்பட அவர்கள் சம்பந்தப்பட்ட வழக்கினை பெண் போலீசாரே விசாரிப்பார்கள்.

* தமிழ்நாட்டில் இந்த ஆண்டு புதிதாக 600 தீப்பெட்டித் தொழிற்சாலைகள் திறக்கப்படும் என்றும், இதன் மூலமும் மற்றும் குடிசைத் தொழில்கள் துவக்கப்படுவதாலும் 20 ஆயிரம் பெண்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்றும் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## 2—9—80

* ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு வரும் 1981-ஜனவரியில் சிறப்பான முறையில் நடைபெறும். இதற்கான ஆராய்ச்சிக் கருத்தரங்குக் கூட்டம், மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் ஜனவரி 4-ந் தேதி துவங்கும் என்று மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் தெரிவித்தார்.

## 3—9—80

* வேலை இல்லாத பட்டதாரிகளுக்காகக் குறுகிய காலப் பயிற்சி வகுப்புகளை, சென்னைப் பல்கலைக் கழகம், மாணவர் ஆலோசனைப் பிரிவு நடத்தவிருக்கிறது. இங்கு இவ்வாறு பயிற்சி வகுப்புகளை நடத்தவிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

## 4—9—80

* கல்ராயன் மலைப் பகுதியிலுள்ள வெள்ளிமலையில் 5 கிராமங்களுக்கு முதன் முதலாக மின்சாரம் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் துவக்கி வைத்தார். ரூ. 32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பெற்று அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன என்ற தகவலையும் அமைச்சர் அவர்கள் கூறினார்.

## 5—9—80

* வருகிற சனவரி மாதத்தில் மதுரை மாநகரில் நடைபெறும் 5-வது உலகத் தமிழ் மாநாட்டுக்கு ரூ. 5 கோடி செலவாகுமென்றும், இந்தச் செலவு முழுவதையும் அரசே ஏற்று நடத்துகிறது. என்றும், இந்த மாநாட்டின் பணிகளைச் சிறப்பாகக் கவனிக்க 14 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் மாண்புமிகு ஊரக-தொழிலமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

**தொகுப்பு : பி. வி. கிரி**



**மாவட்ட வளர்ச்சிப் பணிகள் :**

**கொங்கு நாட்டில்**

# பட்டு வளர்ச்சி




**கோ**வையில், பட்டுநூல் உற்பத்தியாளர்கள் விற்பனை சேவா சங்கம் மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களால் ஆகஸ்டு 23-ஆம் தேதி திறந்து வைக்கப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பட்டு வளர்ச்சித்துறையின் அரசு செய்துள்ள பலன்களை விளக்கினார். இப்புதிய துறை ஆரம்பித்த ஒன்றரை ஆண்டுகளுக்குள் 32,000 ஏக்கர் முசுக்கொட்டை சாகுபடி செய்து, 60,000 விவசாயிகளைப் பட்டு வளர்ப்பில் ஈடுபடுத்தி சாதனை ஏற்படுத்தியுள்ளது எனக் குறிப்பிட்டார். ஆரம்பக் காலத்தில் குறைந்த அளவில் சாகுபடி செய்யப்பட்ட முசுக்கொட்டைச் செடி இப்பொழுது மிக விரைவாக அதிக அளவு பெருகும் வாய்ப்பு உள்ளது எனவும், இவ்வாண்டு மேலும் 10,000 ஏக்கர்கள் செய்யப்படும் என்றும் தெரிவித்தார். கோவை மாவட்டத்தில் மட்டும் 1,000 ஏக்கர் அதிகமாக விரிவாக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

### கிராம வேலை வாய்ப்பு

பட்டு வளர்ப்பு சிறிய விவசாயிகள் மற்றும் மிகச் சிறிய விவசாயிகளாலே சொந்த கண்காணிப்பில் செயல்பட்டு வருவதால் இத்தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு அரசு இவ்வாண்டும் ரூபாய் 8 இலட்சம் மானியமாகக் கொடுக்கும் என்று கூறினார். இத்திட்டத்தினால் தற்பொழுது 1.41 இலட்சம் பேர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளதாகவும், தற்பொழுது மேலும் இவ்வாண்டு 50,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் கணிசமாகத் தீர வழி செய்யும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

மானியத் தொகை பெரிய ஆலை அதிபர்களுக்கோ அல்லது நிலச்சுவான்தாரருக்கோ செல்லாமல் இத்திட்டம் பாமர மக்களுக்கும் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்களுக்குக் கொடுக்கப்பட்டுசணிசமான அளவு பயன் பெற்று வருவதாகவும் தெரிவித்தார். இதுபோன்ற சிறியதொழில் பல சேர்த்து தமிழக அரசு பல இலட்சம் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளித்திருப்பதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்.

### பட்டுநூற்பு ஆலைகள் அதிகரிப்பு

தமிழ்நாட்டிற்குத் தேவைப்படும் கச்சாப்பட்டு 10 இலட்சம் கிலோ எனவும் தற்போழுது 1.5 இலட்சம் கிலோ மட்டுமே இங்கு தயாராகிறது என்று குறிப்பிட்டார். விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக் கூடுகளிலிருந்து 3.5 இலட்சம் கிலோ வரை கச்சாப் பட்டு உற்பத்தி செய்ய முடியும் என்றும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதாகவும் தெரிவித்தார். பட்டு உற்பத்தியில் தற்பொழுது 1,010 ஏனங்கள் மட்டுமே இயங்கி வருகின்றன. இவ்வாண்டு மேலும் 700 ஏனங்கள் அதிகப்படுத்தப்படும் எனவும், ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஆண்டு ஒன்றுக்கு 1,000 ஏனங்கள் வீதம் விரிவாக்கப்படும் என்றும் அதற்கான மானியம் தொழில் நடத்தவிருக்கும் சிறு தொழிலதிபருக்கு ஒரு ஏனத்திற்கு ரூ. 1100 வீதம் கொடுக்கப்படும் என்றும் இதனால் ஒவ்வொரு ஆண்டும் 5,000 பேர்களுக்கு அதிக வேலை வாய்ப்பு கிட்டும் என்றும் சொன்னார். நடை மூலதனம் அதிகம் தேவைப்படுவதால் தேசிய வங்கிகள் தாராளமாக உதவ வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். பட்டு நூற்பு உற்பத்தி செய்த பட்டு நூலை விற்பனை செய்ய பேரறிஞர் அண்ணா பிறந்த மண்ணான காஞ்சியில் ஒரு பட்டு நூற்பாளர்கள் இணையம் செயல்பட்டு சென்ற ஆண்டு ரூபாய் 1.8 கோடி அளவுக்கு விற்பனை செய்த தகவலையும் தெரிவித்தார்.

### முட்டை தயாரிப்பு நிலையம்

விவசாயிகளுக்கு நோயற்ற பட்டுபூச்சி முட்டைகள் கொடுக்கும் பொருட்டு கோவையிலேயே நவீன வசதி கொண்ட முட்டை வித்து அறை இயங்கி வருவதாகவும் அதன் திறனை 14 இலட்சம் முட்டைத்தொகுதிகளிலிருந்து 20 இலட்சம் முட்டைத் தொகுதிகளாக அதிகரிக்கப்படும் என்றும் தெரிவித்தார். தமிழ்நாட்டில் நடப்பு ஆண்டு 1.5 கோடி முட்டைத்தொகுதிகளைத் தயாரித்து விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சியாளர் திரு டி. எஸ். சிவப்பிரகாசம் ஐ.ஏ.எஸ் அவர்கள் பேச்கையில், இம்மாவட்டத்தில் முன்னோடி வங்கித் திட்டத்தின் கீழ், பட்டு வளர்ச்சிக்குச் சிறிய விவசாயிகளுக்குத் தாராளமாகக் கடன் வழங்கப்படும் என

வும் கூடிய விரைவில் நகர மையத்தில், பட்டு வளர்ச்சித் துறை மையம் ஏற்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார். தன்னிறைவுத் திட்டத்தில் அவினாசி ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் 5 ஏக்கரில்



இளம் புழு வளர்ப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார். ஆனைக்கட்டிப் பகுதியில் விதைப்பண்ணை ஒன்றும் நிறுவப்படும் என்று தெரிவித்தார்.

துணை இயக்குநர் பட்டு வளர்ச்சித் துறை திரு கே. என். வெங்கடேசன் அவர்கள், பட்டுக் கூடுகளை நவீன உலர்த்திகள் மூலம் பதன்படுத்துவதையும், முட்டைத் தயாரிப்பதையும் விவசாயிகளுக்கும், நூற்பாளர்களுக்கும் விளக்கினார்.

இத்திட்டத்தின் பயன்கள், மானியங்கள் யாவும் கிராமப் புறத்திலே வறுமைக் கோட்டிற்கும் கீழே உள்ளவர்களைச் சேரும் வண்ணம் அமைந்திருப்பதால் கிராமப்புறத்தில் இலட்சக் கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து சமூக, பொருளாதாரப் புரட்சியைத தமிழக அரசு செய்து வருவதாகவும், இப்பணி தொடரும் என்றும் குறிப்பிட்டார்.



## தமிழகக் கல்விப்பணியின் வெற்றிச் சாதனைகள்

| பள்ளிகள் | எண்ணிக்கை | மாணவ மாணவியர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. தொடக்க மற்றும் உயர் தொடக்கப் பள்ளிகள் | 33,347 | 68.35 இலட்சம் |
| 2. உயர்நிலைப் பள்ளிகள் | 2,088 | 7.75 இலட்சம் |
| 3. மேல் நிலைப் பள்ளிகள் | 1,242 | 12.69 இலட்சம் |
| மொத்தம் | 36,677 | 88.79 இலட்சம் |
| 4. மொத்த மாணவ மாணவியர் சேர்க்கை | | 88.79 இலட்சம் |
| 5. மாணவியர் எண்ணிக்கை மட்டும் | | 37.66 இலட்சம் |
| 6. சதவிகிதம் | | 43 சதவிகிதம் (அகில இந்திய சாதனை) |
| 7. மொத்த ஆசிரியர் எண்ணிக்கை | | 2.58 இலட்சம் |
| 8. ஆசிரியைகள் எண்ணிக்கை | | 1.03 இலட்சம் |
| 9. சதவிகிதம் | | 39.58 சதவிகிதம் (அகில இந்திய சாதனை) |



### மேல்நிலைக் கல்வி

| | | |
|---|---|---|
| 1. | மேல் நிலைக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் | 2.50 இலட்சம் |
| 2. | மேல் நிலைக் கல்வி பயிலும் மாணவியர் மட்டும் | 89 ஆயிரம் |
| 3. | சதவிகிதம் | 36 சதவிகிதம் |
| 4. | தொழிலோடு கூடிய கல்வியில் பயிலும் மாணவ மாணவியர் | 52 ஆயிரம் |
| 5. | தொழிலோடு கூடிய கல்வியில் பயிலும் மாணவியர் | 15 ஆயிரம் |
| | 1969-70 ஆம் ஆண்டு கல்விக்கான அரசின் நிதி ஒதுக்கீடு | ரூ. 66 கோடி |
| | இன்றைய நிலையில் கல்விக்கான நிதி ஒதுக்கீடு (1980-81) | 224 கோடி |
| | மதிய உணவுத் திட்டத்தால் பயன் அடையும் மாணவ மாணவியர் | 20.25 இலட்சம் (நாள் ஒன்றிற்கு) |

மேல் நிலைக் கல்வியான பன்னிரண்டாம் வகுப்பு வரை இலவசக் கல்வி அரசால் வழங்கப்படுகிறது.



# கலைத் தாயின் தலைமகள் !

[ திருமதி கே. பி. சுந்தராம்பாள் அவர்களின் மறைவுக்கு, **மாண்புமிகு முதலவர்** விடுத்த இரங்கல் செய்தி ]

திருமதி கே.பி. சுந்தராம்பாள் அம்மையார் அவர்களின் மறைவு தமிழகத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாக அமைந்துவிட்டது. சமீப காலமாக உடல் நலமின்றி இருக்கிறார்கள் என்ற செய்தி கிடைத்தாலும், விரைவில் நலமடைந்து மீண்டும் தமிழகத்திற்கு அந்த வெண்கலக் குரலால் அந்த ஆற்றல் மிக்க இசையை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை நமக்கு இருந்தது.

கடந்த மாதத்தில்தான் தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றத்தின் வெள்ளிவிழாவையொட்டி 'தனிப்பெரும் கலைஞர்' என்ற விருதினை வழங்கிப் பாராட்டப்பட்டார்கள்.

திருமதி கே.பி. சுந்தராம்பாள் அம்மையார் தமிழகக் கலைத்துறை வரலாற்றில் ஒரு நிரந்தரமான சிறப்புக்குரிய அத்தியாயத்தை சொந்தமாக்கிக் கொண்டார்கள். நாடக மேடைகளிலும் திரைப்படங்களிலும் இசை அரங்குகளிலும் தன்னிகரற்ற புகழோடு விளங்கியவர்கள்; நாடகமேடையில் இசைக் கலையை நாட்டு விடுதலை இயக்கத்திற்குப் பயன்படுத்திய வீரம் மிகுந்த கலைஞர்.

காலஞ்சென்ற புகழ்மிக்க கலைஞர் எஸ். ஜி. கிட்டப்பா அவர்களை வாழ்க்கைத் துணைவராகக் கொண்டு அவரது மறைவிற்குப் பிறகு துறவு வாழ்க்கை மேற்கொண்டு தூய தொண்டுள்ளத்தோடு பணியாற்றிய கலைஞர்.

தமிழ்மொழியும் தமிழ் இசையும் கே.பி. எஸ். அவர்களின் பேராற்றலினால் மேலும் சிறப்படைந்தது. வாழ்நாளில் பெரும்பகுதியை ஆன்மீக உணர்வுடன் அர்ப்பணித்துக் கொண்டவர்.

'கொடுமுடி கோகிலம்' என்றும் 'அவ்வை' என்றும் தமிழ்நாட்டு பாமர மக்கள் முதல் படித்தவர்கள் வரை குக்கிராமங்களிலிருந்து பெருநகரங்கள் வரை பாராட்டப்பட்டவர்கள் கே.பி.எஸ்.

ஆற்றலமிக்க ஒரு மாபெரும் கலைஞர் மறைந்துவிட்டார். நாடெங்கும் கணீரென்று ஒலித்துக்கொண்டிருந்த நாதம் அடங்கிவிட்டது. தமிழ்ச் சமுதாயம் தன் கலைத் தாயின் தலைமகளை இழந்து தவிக்கிறது. ஆற்ற முடியாத துயரம். பெறமுடியாத பேரிழப்பு - என்ன செய்வது? இயற்கையின் இந்தக் கொடுமையான சோதனையை நாம் தாங்கிக் கொண்டு நமது கண்ணீரைக் காணிக்கையாக்குவதைத் தவிர, நமக்கு வேறு வழியில்லை.

# படமும் செய்தியும்



ஐ. என். எஸ். நீலகிரி போர்க் கப்பல் தளபதி, வைஸ் அட்மிரல் எம். கே. ராய்க்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விருந்து அளித்து கலை நுணுக்கம் வாய்ந்த அன்பளிப்பினை வழங்கினார்.

(14.9.80)



தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளன்று (17.9.'80) அண்ணா மேம்பாலத்திற்கு அருகே உள்ள தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மாலை அணிவித்தார்.




தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறையும் 'அமுத சுரபி' யும் இணைந்து நடத்திய சிறுகதைப் போட்டிப் பரிசளிப்பு விழாவுக்குச், சிறுசேமிப்பு ஆலோசனைக் குழுத் துணைத் தலைவர் **திரு எஸ். எஸ். இராஜேந்திரன் அவர்கள்** தலைமை தாங்கிப் பரிசுகள் வழங்கினார்.

(27.8.80)



சமுகநலத்துறை சார்பில் இராசாசி மண்டபத்தில் (31.8.'80) நடைபெற்ற விழாவில் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் கலந்துகொண்டு உடல் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டிகள், உதவிக் கருவிகள் வழங்கினார்.




மின் கருவிகள் பராமரிப்புக் கருத்தரங்கில் (30.8.'80) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தார்.



மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய உள்துறை அமைச்சர் மாண்புமிகு ஜைல்சிங் அவர்களை டெல்லியில் 19.9.'80 அன்று சந்தித்தார். மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ்.ராமச்சந்திரன், தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி பாவலர் மா. முத்துசாமி உடன் உள்ளார்கள்.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

விஞ்ஞானத்தில் மிகவும் முன்னேறியுள்ள அமெரிக்க நாட்டினர் மரங்களின் பயனை உணர்ந்து 370 வருடங்களுக்கு முன்னர் இருந்த காட்டு வளத்தை முக்கால் பாகத்திற்கு மேல் இன்றும் அழிக்காமல் பாதுகாத்து வருகிறோம் என்று பெருமையுடன் கூறுகிறார்கள்.

தமிழ் மககள் அந்தக் காலத்தொட்டே மரங்களை வளர்ப்பதிலும் பேணிக்காப்பதிலும் பேரார்வம் காட்டியவர்கள். தான் பெற்ற செல்வத்தை பிள்ளை என்று அழைப்பதைப் போலவே, தென்னங்கன்றுகளையும் 'தென்னம் பிள்ளை' என்றுதான் அழைப்பார்கள்.

நம் தமிழ்நாட்டு மக்கள் தாங்கள் குடியிருக்கும் இல்லத்தைச் சுற்றி வேம்பு, தென்னை, வாழை, முருங்கை போன்ற மரங்களையும், துளசி, முல்லை போன்ற செடி கொடிகளையும் வளர்த்து சோலை நடுவே அமைந்த சொத்தாக இல்லங்களைப் பாதுகாத்து வந்தனர்.

வெள்ளைக்காரர்கள் கூட, கானகங்களுக்கும் மரங்களுக்கும் இடையேதான் மாளிகைகளை அமைத்து வாழ்ந்தனர். அதனால் தான் வனத்துறையின் தலைமை அதிகாரியை (Chief Conservator of Forests) தலைமை வனப் பாதுகாவலர் என்று பெயரிட்டு அழைக்கிறார்கள்.

ஆனால், இன்றையத் தமிழகத்தில் எப்படியெல்லாம் மரங்களை வெட்டி விலையாக்கலாம், பணத்தைக் கொள்ளையடிப்பது போல் மிக விரைவிலேயே சேர்க்கலாம் என்று செயல்படுகிறார்கள்.

இவர்கள் மரங்களை வெட்டி, காட்டை மட்டும் அழிக்க வில்லை. தங்களையும் தங்களைச் சுற்றியுள்ள மனித சமூகத்தையும் அழிக்கிறார்கள். இப்படிப்பட்ட அழிவு வேலைக்காரர்களைத் தடுக்கும் முயற்சியில் இந்தியாவில் இமயமலையின் அடிவாரத்தில் பெண்களால் நடத்தப்படும் ஒரு இயக்கமே இயங்குகிறது என்ற செய்தி மகிழ்ச்சியைத் தருகிறது. 1973-ஆம் ஆண்டு 'சிப்கோ' என்ற பெயரில் ஓர் இயக்கத்தை பெண்கள் ஆரம்பித்தனர். அலாகாபாத்திலிருந்து இமயமலை அடிவாரத்திலிருந்த மரங்களை வெட்ட வந்தவர்களைத் தடுத்து, இந்தப் பெண்கள் அந்த மரத்தினைக் கட்டிப்பிடித்து, சுற்றி நின்றுகொண்டு வெட்டவிடாமல் தடுத்துள்ளார்கள். இந்த இயக்கத்திற்காக நாட்டுப் பாடல்களைப் பெண்மணிகளே இயற்றிப் பாடி பிரச்சாரம் செய்கின்றனர்.

இந்த இயக்கத்தின் காரணமாகப் பல்லாயிரக்கணக்கான மரங்கள் வெட்டப்படுவது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. 'மரங்கள் சமுதாயத்தின் குழந்தைகள்' என்ற தத்துவத்தை இவர்கள் பரப்புகின்றனர்.

ஒரு மரம் நட்டு, 50 ஆண்டுகள் வளர்த்தால், அந்த ஒரு மரத்தினால், மனித சமுதாயத்திற்கு 18 லட்சம் ரூபாய்க்குச் சமமான பலன் கிடைக்கிறது என்கிறார் கல்கத்தாவைச் சேர்ந்த அறிஞர் டாக்டர் டி. எம். தாஸ்.

இன்றய வளர்ந்து வரும் மனித சமுதாயத்தில் மரத்தின் தேவைகள் பெருகி வருகின்றன. வாழ்வின் எல்லாத் துறைகட்கும் வனப் பொருட்கள் தேவைப்படுகின்றன. ஆனால் 'அந்த அளவிற்கு, காடுகளை நாம் பெருக்கவில்லை - மாறாக கடந்த முப்பது ஆண்டுகளில் நமது காட்டு வளத்தில் சரி பாதியை அழித்து இருக்கிறோம்.

எனவேதான் வீட்டுக்கு ஒரு மரம் என்பதை மாற்றி, இப்பொழுது குழந்தைக்கு ஒரு மரம் வளர்க்க வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம். தமிழக வனத்துறையின் மூலமும் பொதுமக்கள்; பொது நிறுவனங்கள் மூலமும் கடந்த ஆண்டில் சுமார் 2 கோடி நாற்றுகள் வழங்கப்பட்டு நடப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 2½ கோடி நாற்றுக்கள் நட்டு வளர்ப்பது என்று திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் விறகுத் தேவைக்காக சமுதாயக் காடுகள், விரிவாக்கக் காடுகள் வளர்க்கவும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், இனிமேல் புதிதாக வீடு கட்ட அனுமதி வழங்கும்பொழுது வீட்டைச் சுற்றி குறிப்பிட்ட எண்ணிக்கையில் மரங்களும் நட்டு வளர்க்க வேண்டும் என்ற விதியும் சேர்க்க வேண்டும் என்ற கருத்து ஒன்றும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

ஆகவே, தமிழ்ப் பெருமக்களே, முடிந்த அளவு மரங்களை நட்டு வளர்க்கப் பாடுபடுங்கள். முடியவில்லையானால் இருக்கிற மரங்களைப் பாதுகாக்கப் பாடுபடுங்கள். மரங்கள் நமது குழந்தைகள். அவைகளைக் காப்போம். வளர்ப்போம். மரத்தை வளர்த்து நமது வாழ்வைக் காப்போம்.

(வானொலி உரை— 21-9-80)





# அண்ணலின் அமுத மொழி

தொகுப்பு: மருது

உரிமைகளைமட்டும் எண்ணிய எந்தச் சமுதாயமும் மேன்மை அடைந்ததில்லை. கடமைகளைக் கருதியவர்களே மேன்மை அடைந்திருக்கிறார்கள். கடமையைச் செய்தால் உரிமைகள் தாமாகவே வந்து அடையும்!

ஒழுக்கம் என்பது நமது இதயங்களின் தூய்மையில்தான் வேரூன்றியுள்ளது.

ஒவ்வொருவர் வீட்டிலும் நூல் நூற்கப்பட்டு வந்தால் நம் நாட்டிற்கு மில்களே தேவைப்படாது; நமது வீடுகள் ஒவ்வொன்றும் சிறு மில்களாகி விடும்.

மனப்பூர்வமான காதலால் இணைக்கப்படும் கலப்பு மணத்தையே புனிதமான மணம் என்று அங்கீகரிப்பேன்!

தொண்டு செய்ய விரும்புகிறவன் கிராமங்களை நாடிச் சென்று, அங்கே தோட்டியாகவும், நூல் நூற்பவனாகவும், காவற்காரனாகவும், உபாத்தியாயராகவும் ஏக காலத்தில் தன்னை உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

ஒரு கொள்கையைப் பரப்புவதென்றால் அதற்கு நான் ஒரு வழியையே கடைப்பிடிப்பது வழக்கம். என்னுடைய சொந்த நடத்தையில் அக்கொள்கையைக் கடைப்பிடித்துக்காட்டுவதன் மூலமாகவும் அறிவு வளர்ச்சியில் பற்றுள்ளவர்களுடன் விவாதிப்பதின் மூலமாகவுமே எந்தக் கொள்கையையும் நான் பரப்பி வருவேன்.

உண்மையான சமரசம் உண்டாக வேண்டுமானால் பரஸ்பரம் நம்பிக்கை உண்டாக வேண்டும்.

நீண்டகாலமாக உடம்போடு உடம்பாக ஊறி வந்திருக்கும் சமுதாயக் கேடுகளை ஒரேயடியில் ஒழித்துவிட முடியாது. அதற்கு நிதானமும் தளரா முயற்சியும்தான் தேவை!

என்னை அளவில்லாமல் புகழ்ந்து பாராட்டிய இடம் எதுவென்று கேட்டால் சென்னைதான் என்று நான் தயங்காமல் சொல்லிவிடுவேன்.

முதலாவது முக்கியத்துவம் தாய் மொழிகளுக்குத்தான் கொடுக்கப்பட வேண்டுமென்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

நெஞ்சிலே கொந்தளிப்பு இருந்தாலும், வெளியே புன்னகை செய்ய என் மனத்தைப் பழக்கியிருக்கிறேன்!

அகிம்சையை இந்தியாவின் ஆயுதமாக உபயோகிக்க எண்ணுகிறேன். ஆனால் இந்த அகிம்சையானது பலவீனர்களின் ஆயுதமன்று; பலவான்களின் ஆயுதமே ஆகும்!

அன்பு என்பதற்கு மதம்-சாதி-இனம் என்கிற வேறுபாடுகள் எதுவும் கிடையாது.

நான் தாராள மனப்பான்மையுள்ளவனாய் இருக்கிறேனென்று மமதை கொள்வதுமில்லை; மற்றவர் குறுகிய நோக்குடையவரென ஏளனம் செய்வதுமில்லை.

நான் தமிழ் மொழியைக் கற்கத் தொடங்கியதற்குக் காரணம், திருக்குறள் மூலத்தையே நேராகப் படிக்க வேண்டுமென்று என் உள்ளத்தில் எழுந்த ஆசையாகும்.

பிறருடைய துன்பத்தைத் தன்னுடையதாக ஏற்றுக் கொள்வதில் எவன் இன்பமடைகிறானோ அவனே உண்மையான தொண்டன்.

குருட்டுத்தனமான உணர்ச்சியைக் கட்டுப்படுத்த வல்ல பகுத்தறிவின் ஆட்சியைப் புறக்கணிப்பதென்றால், மனிதத்தன்மையைப் புறக்கணிப்பதாகும்.

தங்களைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதை உணராமலே, தங்களுக்கும் அதற்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளாமலே தனிப்பட்டவர்களைப் போல நூற்றுக்கு எண்பத்தைந்து பேர் இந்த நாட்டில் வாழ்ந்து வருகிறார்கள்.

குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தின் மக்கள் விரும்பினால் அங்கே பஞ்சாயத்து ராஜ்யம் ஏற்படுவதை யாராலும் தடுத்துவிட முடியாது.

பொதுமக்களுக்குப் புரியாத ஒரு பாஷைக்கு ஆயுட்காலம் அதிசொற்பமே ஆகும்.

**மாநிலத் தலைமைக் கணக்காயர் – I**

தமிழ்நாடு : : சென்னை-600 018

அரசு ஊழியர் வருங்கால வைப்பு நிதி

**1979 – 80**

மாநிலத் தலைமைக் கணக்காயர் – I தமிழ்நாடு அரசு ஊழியர்களின் பொது வருங்கால வைப்பு நிதி (ஜி.பி.எப்.) சம்பந்தமாகக் கீழ்க்கண்ட பிரிவுத் தலைப்புகள் கொண்ட 1979-80—ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கைகளை (அக்கவுண்ட் சிலிப்) அனுப்பிவிட்டார்.

"G.A., POL., JUDL., C.T., REGN., MISC., S.&P., A.I.S., CPF(M), L. R. & JAILS."

மேற்கண்ட அறிக்கைகள், அரசு ஊழியர்கள் 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எந்த அலுவலகத்தில் பணி புரிந்தார்களோ, அந்த அலுவலக நிர்வாக அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலே கூறப்பட்ட பிரிவுத் தலைப்புகளில் கணக்கு எண்களைக் கொண்டுள்ளவர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடுதொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்தக் கணக்கு அறிக்கைகள் சம்பந்தமாக ஏதாவது குறைகள் காணப்படுமேயானால் முழு விவரங்களுடன் (சம்பளப் பட்டியல் விவரங்களுடன்) கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதும்படி கோரப்படுகிறார்கள்.

திரு. K. விசுவநாதன்,
கணக்கு அலுவலர் (F. M. பிரிவு)
மாநிலத் தலைமைக் கணக்காயர் அலுவலகம்-1,
261, அண்ணா சாலை,
சென்னை—600 018

**மாநிலத் தலைமைக் கணக்காயர் – II**

தமிழ்நாடு : : சென்னை-600 018

அரசு ஊழியர் வருங்கால வைப்பு நிதி

**1979 – 80**

மாநிலத் தலைமைக் கணக்காயர் – II தமிழ்நாடு அரசு ஊழியர்களின் பொது வருங்கால வைப்பு நிதி (ஜி.பி.எப்.) சம்பந்தமாகக் கீழ்க்கண்ட பிரிவுத் தலைப்புகள் கொண்ட 1979-80—ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கைகளை (அக்கவுண்ட் சிலிப்) அனுப்பிவிட்டார்.

RDN, MEDL, F.H; AGRI, VETY, CVD, CO-OP, IND, PW, FOR, EL SC, PORT & W.C.

மேற்கண்ட அறிக்கைகள், அரசு ஊழியர்கள் 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எந்த அலுவலகத்தில் பணி புரிந்தார்களோ, அந்த அலுவலக நிர்வாக அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலே கூறப்பட்ட பிரிவுத் தலைப்புகளில் கணக்கு எண்களைக் கொண்டுள்ளவர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடுதொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.


# அண்ணலும் அண்ணாவும்



## புலவர் தமிழ்ப்பித்தன்

அண்ணல் காந்தியடிகளுக்கும் அறிஞர் அண்ணா அவர்களுக்கும் ஏராளமான ஒற்றுமைகள் காணப் படுகின்றன. அரசியல் தொண்டு, அறப்போர், தாய்மொழிக் கல்வி, பெண்கள் முன்னேற்றம், தீண் டாமை ஒழிப்பு இன்னும் இது போன்ற எத்தனையோ துறை களில் அண்ணலின் கொள்கையும் அண்ணாவின் கொள்கையும் ஒன் றாகக் காணப்படுவது மட்டு மல்ல-இருவரின் வாழ்க்கை வர லாற்றிலும் பலப்பல நிகழ்ச்சிகள் ஒன்றாகவே தென்படுகின்றன.

ஆங்கிலக் கல்வி கற்று வழக் கறிஞர் ஆன காந்தியடிகள் தமக்கு அந்தத் தொழில் தகுந்த தல்ல என்றுணர்ந்து, அதனைத் துறந்துவிட்டு, அரசியல் கடலிலே குதித்தார்.

ஆசார்ய ராம்தேவ், ஆசார்ய வித்யார்த்தி ஆகியோரின் நீண்ட நாள் அழைப்பை ஏற்றுக்கொண்டு கன்யாகுருகுலத்திற்குக் காந்தி யடிகள் சென்றிருந்தார்.

அந்தக் குருகுலத்தைச்சேர்ந்த பெண்கள் வடமொழியிலிருந்து சில பாடல்களின் அடிகளைப் பாடி காந்தியடிகளை வரவேற்ற னர். அவர்களின் பாடல்களை அவர் கூர்ந்து கவனித்துக் கொண் டிருந்தார். வாழ்த்துப் பாடலுக் குப் பின், கூட்டத்தின் வழக்க மான நடைமுறைகள் நடைபெற் றன. அதன்பின்னர், அண்ணல் பேச வேண்டிய சூழ்நிலை வந் தது. அவர் தமது பேச்சைத் தொடங்கினார்.

"இங்கே கடவுள் வாழ்த்துப் பாடப்பட்டது. ராகம் என்பது செய்யுளையும் மொழியையும் விடச் சற்று உயர்வானது. நீங் கள் பீம்ப்ளாஸ் சுவரங்களை தனஸ்ரீ சுவரங்களோடு கலந்து பாடிவிட்டீர்கள், இப்படிச் செய் தது ராகத்தையே கெடுத்துவிட் டது. வேண்டிய மாத்திரைகளை குறைப்பதிலோ நீட்டுவதிலோ தான் மென்மையிருக்கிறதே யொழிய, சுவரங்களை மாற்று வதில் அல்ல. சுருதிதான் ராகங் கள். சுருதிகளை மாற்றக்கூடாது" என்று ராகங்களைப் பற்றிய ஆராய்ச்சி உரையுடன் தமது சொற்பொழிவைத் தொடங்கி னார் அண்ணல்.



அல்லும், பகலும் அரசியலுக் கும் நாட்டுக்கும் தன்னைத் தியா கம் செய்து கொண்ட காந்தியடி கள் இன்னிசைக்கும் தமது இத யத்தில் இடம் கொடுத்திருக்கி றார் என்பது மட்டுமல்ல -அந்த இசையைத் தவறான முறை யிலே இசைப்பவர்களைத் திருத் துகின்ற அளவுக்கு இசைஞானம் பெற்றிருந்தார் என்பதையும் இந்த நிகழ்ச்சி எடுத்துரைக்கிறது.

அறிஞர் அண்ணாவும், அண் ணலைப் போன்றே ஆங்கிலக் கல்வி கற்றவர். வகுப்பில் முன் னணியில் திகழ்ந்தவர். கல்வியை முடித்த பின், பள்ளி ஆசிரியரா கப் பணிபுரிந்தவர். தமக்கு அந் தத் தொழில் தகுந்ததில்லை என்று முடிவு செய்து, தொழி லாளர் இயக்கத்தில் பங்கு கொண்டு, அரசியல் உலகத்திற்கு வந்தார். கல்லூரி வாழ்க்கை யின் போதும் சரி, சமுதாய வாழ்க்கையின்போதும் சரி, ஓய்வே இல்லாது பணிபுரிந்தவர். சமுதாய மாற்றத்துக்குக் கலை ஒரு பயனுள்ள கருவி என்பதை அறிந்து, நாடகங்களை உரு வாக்கி அவற்றின் வாயிலாகப் பிரச்சாரம் புரிந்து சமுதாயப் புரட்சியை உருவாக்கியவர் என் றாலும், அவர் கர்நாடக சங்கீ தத்தைப் பற்றி நிறையத்தெரிந்து வைத்திருந்தார். பாடுவோரைத் திருத்தும் அளவுக்கு இசைப் புலமை கொண்டிருந்த காந்தி யடிகளைப் போலவே, அண்ணா வும் இசைப் புலவர்களும் வியக் கும் அளவுக்கு இசைப் புலமை பெற்றிருந்தார் என்பது வியப்பிற் குரிய செய்திதான்!

பல வருடங்களுக்கு முன்னர்..!

கோவைக்குச் சுற்றுப் பயணம் சென்றிருந்த அண்ணா அவர்கள், காஞ்சியிலுள்ள தமது, 'திராவிட நாடு' வார ஏட்டுக்குக் கட்டுரை ஒன்றினை எழுதி அனுப்பினார். 'மோகன முகாரி' என்பது கட்டு ரையின் தலைப்பு. தலைப்புக் கொடுத்துவிட்டாரே தவிர, மோகன முகாரி எப்படி இருக் கும் என்ற சந்தேகம் அவருக்கே ஏற்பட்டுவிட்டது. மறுநாள், தற் செயலாக அங்கு வந்திருந்த பாட கர்—இசைச் சித்தர் சி.எஸ். ஜெயராமன் அவர்களிடம் தனது சந்தேகத்தைத் தெரிவித்தார்.

"மோகன முகாரி" என்று தலைப்புக் கொடுத்துவிட்டேன். அந்த ராகம் உள்ளதா? அதன் ஆரோகணம், அவரோகணம் என்ன?"-அண்ணா கேட்டார்.

திடீரென்று அண்ணா இவ் வாறு கேட்டதும் சி.எஸ்.ஜெய ராமன் அவர்களினால் பதில் சொல்ல இயலவில்லை. சில வினாடிகள் சிந்தித்துக் கொண்டி ருந்தார்.

உடனே, அண்ணா,

"உனக்குத் தெரியாவிட்டால் நானே வழி சொல்கிறேன்; அப்படிச் செயல்படுத்த முடியுமா பார்! ஆரோகணத்திற்கு மோகனத்தின் சுரங்களையும் அவரோகணத்திற்கு முகாரியின் சுரங்களையும் செயலாற்றிக் காட்டு என்றார்.

அண்ணாவின் கட்டளைப் படியே சி. எஸ். ஜெ. பாடிக் காட்டினார். அந்த ராகம், மோகன முகாரியாகவே முகிழ்த்தது. மறுவினாடி, ஜெயராமன் அவர்களே வியப்படைந்து விட்டார்.

அந்த நிகழ்ச்சி பற்றியும், அண்ணாவின் இசைப்புலமை பற்றியும் ஜெயராமனே வியந்து பாராட்டி எழுதியிருக்கிறார்.

"அண்ணா அவர்கள் இசைத் துறைக்குச் செயலாற்ற வந்திருந்தால் அங்கே அநேக இசை அமைப்பாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பார்கள்,"

என்று கூறியுள்ள சி.எஸ்.ஜெ.யின் கருத்து இங்கே குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அரசியலிலும், தமிழ் இலக்கியங்களிலும், சமுதாயப் பணியிலும், பத்திரிகை அரங்கிலும் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட அண்ணா எந்தக் கர்நாடக இசைக் கல்லூரியில், 'ராகம், தானம், பல்லவி' கற்றார், ஆரோகணம், அவரோகணம் செய்தார் என்பதும் வியப்பாகவே இருந்தது.

கவிஞர்களிடம் மாறாதஅன்பு கொண்டவர் காந்தியடிகள். கவிஞர்களும் காந்தியடிகளிடம் ஆழ்ந்த பற்று வைத்திருந்தார்கள். விடுதலைப் போராட்டத்தில், எண்ணற்ற கவிஞர்கள் காந்தியடிகளின் தலைமையில் தொண்டாற்றியிருக்கிறார்கள். அவரது அணியில் தாங்கள் அங்கம் பெற்றதை எண்ணி இதயம் பூரித்திருக்கிறார்கள்.

சுப்ரமணிய பாரதியார், சுத்தானந்த பாரதியார், நாமக்கல்லார் போன்ற கவிஞர்கள், அண்ணலை அன்னைத் தமிழால் அகங்குளிரப் பாடிப் பாராட்டியிருக்கிறார்கள். தமிழ்க் கவிஞர்கள் மட்டுமல்ல – இந்தியாவின் அனைத்து மொழிக் கவிஞர்களும் காந்தியடிகளைப் பாராட்டித் தீஞ்சுவைப் பனுவல்களை உருவாக்கியிருக்கிறார்கள்.

வங்கக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர், அண்ணலைப் பாராட்டியது மட்டுமல்ல அவருக்கு மகாத்மா என்ற சிறப்புப் பட்டத்தை சூட்டிச் சித்தம் மகிழ்ந்திருக்கிறார். அரசியலிலும், சமுதாயத் தொண்டிலும் வன்முறையை ஒழித்து, அறப்போர் நாயகனாக விளங்கியதனால், அவரை 'மகாத்மா' என்று மனங்குளிர அழைத்திருக்கிறார் வங்கக் கவிஞர்.

அறிஞர் அண்ணா அவர்களும், அண்ணலைப் போலவே கவிஞர்களிடம் மாறாத பற்றுக்கொண்டவர் என்பதை உலகறியும். நூற்றுக்கணக்கான தமிழ்க் கவிஞர்கள் அண்ணாவின் அணியிலே அங்கம் பெற்றிருந்ததை வரலாறு தொகுத்துக் கூறுகிறது. அன்னைத் தமிழுக்குத் தொண்டு செய்யும் அண்ணனின் தலைமையில் பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி எண்ணிப் பெருமைப் பட்டு வந்தது, தமிழ்க் கவிஞர் பெருங்கூட்டம். 'அண்ணாவின் புகழ் பாடாத நாவென்ன நாவே' என்று எண்ணி வந்த அருந்தமிழ்க் கவிஞர்கள், அண்ணாவைப் பலவகைப் பாக்களாலும் பாடிப் பரவசமடைந்தார்கள். அவர்களில் எல்லாம் தலைமைப் பொறுப்பேற்றிருந்தவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தான்!



பல வருடங்களுக்கு முன்பு, சென்னையில் நடைபெற்ற சிந்தனையாளர் கூட்டத்தில் சொற்பொழிவாற்ற அண்ணா சென்றபோது, சிந்தனையாளர் கழகத்தார் அண்ணாவுக்கு வரவேற்பு மடல் வாசித்தளிக்க நினைத்தார்கள். அண்ணாவுக்கு வரவேற்பு மடல் தருவதென்றால், அதனைப் பாவேந்தர்தான் எழுத வேண்டும் என்று அவர்களே முடிவெடுத்துப் பாவேந்தரை அணுகி வாழ்த்துப் பா பெற்றனர். அந்த வாழ்த்துப் பாவிலே தான் அண்ணாவை அறிஞர் எனக் குறிப்பிட்டுள்ளார் பாரதிதாசன்.

பிற்காலத்தில், பாவேந்தர், அண்ணாவிடம் மனத்தாங்கல் கொண்டு அண்ணாவைப் பற்றிக் குறை கூறிப்பேசத்தொடங்கியபோது - அண்ணா அவர்கள் பாவேந்தர்தான் தமக்கு அறிஞர் என்ற சிறப்புப் பட்டத்தைச் சூட்டினார் என்ற உண்மையைப் பொதுக் கூட்டத்தின் வாயிலாக எடுத்துக் கூறிவந்தார்.

எனவே, அண்ணலுக்கு மகாத்மா என்ற பட்டத்தை ஒரு கவிஞர்தான் கொடுத்திருக்கிறார். அண்ணாவுக்கு அறிஞர் என்ற பட்டத்தையும் ஒரு கவிஞர்தான் கொடுத்திருக்கிறார்.

இதிலே மற்றொரு பொருத்தமும் இருக்கிறது. பல்லாண்டுகளுக்கு முன்பு (27.1.1915ல்) காந்தியடிகளுக்கு கொண்டல் சமஸ்தானத்தில் நடைபெற்ற வரவேற்பின் போது ஜீவராம் காளிதாஸ் சாஸ்திரி என்ற சமஸ்கிருத அறிஞர் காந்தியடிகள் மீது தாம் பாடிய கவிதைகளில் அவரை 'மகாத்மா' என்றுமுதன் முதலில் குறிப்பிட்டாராம். பின்னர் மகாத்மா என்ற அடைமொழி அவருக்கு நிலைத்துவிட்டது என்ற ஒரு தவறான கருத்து நாட்டில் நிலவி வந்தது. அது குறித்து காந்தி நூல் வெளியீட்டுக் கழகத் தினரிடம் சிலர் வினவியபோது, காந்தியடிகளை மகாத்மா என்று முதன் முதலில் பாராட்டியவர் தாகூர்தான் என்று ஆணித்தரமாக எடுத்துக் கூறியதுடன் காந்திநூல் வரிசையின் 14ஆம் தொகுதியில் உள்ள சான்றினை ஆதாரமாகக் காட்டினர். தாகூர் மகாத்மா என்று அழைத்த பின்னர், ஜீவராம் காளிதாஸ் அதனை வலியுறுத்தி சொல்லியிருக்கக்கூடும்.

காந்தியடிகளின் 'மகாத்மா' பட்டம் போலவே அறிஞர் அண்ணாவுக்கு 'அண்ணா' என்னும் பட்டத்தைத் தந்தது யார் என்பதில் தவறான கருத்து நிலவி வந்தது. சிறந்த நாவலாசிரியர் கல்கி அவர்கள்தான் அண்ணாவுக்கு அறிஞர் என்னும் சிறப்பு பெயரை வழங்கினார் என்பது தான் அந்தத் தவறான கருத்து. அண்ணாவை அறிஞர் என்று முதன் முதலில் கூறியவர் பாவேந்தர் பாரதிதாசன் தான், கல்கி அவர்கள் அல்லர். அண்ணாவின் நாடகத்துக்கு ஒருமுறை தலைமை வகித்த கல்கி, நாடகத்தின் அமைப்பைப் பாராட்டும்போது 'நாடகம் சிறப்பாக உள்ளது; மிகச் சிறப்பாக உள்ளது. தெரியாமலா இவரை அறிஞர் என்று கூறுகிறார்கள்!' – எனக் குறிப்பிட்டார். பாவேந்தர் பாரதிதாசன் முன்மொழிந்த கருத்தை கல்கி வழிமொழிந்தார் என்பதுதான் உண்மை!


இவ்வாறு எத்தனையோ நிகழ்ச்சிகள் அண்ணலின் வாழ்விலும் அண்ணாவின் வாழ்விலும் ஒன்றுபட்டுக் காணப்படுகின்றன.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.




தமிழரசு Licence No. TN/MS(C)/PP-25 பதிவு எண். M. 8676







# தமிழரசு

மலர்: 11 16-10-1980 இதழ்: 8

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| வறுமையில் வாடும் பட்டதாரிக்கு வாழ்வளிக்கும் திட்டம் | 2 |
| ஐந்தாவது உலகத் தமிழ்மாநாடு | 4 |
| வீரச்செயலுக்கு விருதுகள் | 9 |
| வனவிலங்குகளைக் காப்போம் | 15 |
| அண்ணலின் பிறந்தநாள் விழா | 17 |
| குடிசைமாற்று வாரியத் தலைவரின் சிறப்புப் பேட்டி | 19 |
| இதோ ஒரு தெய்வத்தாய் | 25 |
| இங்கே ஒரு விந்தை உலகம் | 29 |
| நித்தம் நித்தம் வளரும் நமது சுற்றுலாத்துறை | 41 |
| காவலர்க்கு களிப்பூட்டும் சலுகை | 47 |


முதல் அட்டை :

5-வது உலகத் தமிழ் மாநாடு நடைபெறவிருக்கும் மதுரை மாநகரின் எழில் தோற்றம்.

4-வது அட்டை :

"சிறு குடும்பமே சீரான வாழ்வு"





# வறுமையில் வாடும் பட்டதாரிக்கு வாழ்வு தரும் திட்டம்!

மாண்புமிகு அரிசனநலத்துறை அமைச்சர்
**எம். விஜயசாரதி**

பேட்டி: ஆனந்தன்

ஏழை எளிய மக்கள்-வறுமைக் கோட்டிற்குக் கீழே உழலும் பாமர மக்கள்-படித்துப் பட்டம் பெற்றும் வேலையில்லாமல் அவதியுறும் இளைஞர் ஆகியோரின் நல்வாழ்வில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது.

சமுதாயத்தின் முதுகெலும்பாகத் திகழும் இப்பகுதியினர், வாழ்வில் முன்னேற்றம் காணப் பல்வேறு புரட்சிகரமான திட்டத்தைத் தமிழக அரசுத் தீட்டிச் செயலாக்கி வருகிறது.

கிராமப்புறங்கள் மேம்பாடு அடைய தன்னிறைவுத் திட்டம் அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்போது படித்துப் பட்டம் பெற்ற - வேலையில்லாத இளைஞர்களுக்கு மாதம் ரூ. 50 வழங்கும் ஒரு சீரிய திட்டத்தைத் தமிழக அரசு அறிவித்துள்ளது.

இத்திட்டத்தின் சிறப்பு இயல்புகள் குறித்து மாண்புமிகு அரிசனநல வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் திரு எம். விஜயசாரதி அவர்கள் 'தமிழரசு' இதழுக்கு அளித்த சிறப்புப்பேட்டியில் கூறியிருப்பதாவது:

**கேள்வி: தமிழ்நாட்டில் உள்ள வேலைத் தேடித் தரும் அலுவலங்களில் பதிவு செய்து கொண்டுள்ள பட்டதாரிகள் எத்தனைப் பேர்?**

பதில்: வேலை தேடித்தரும் அலுவலகத்தில் பதிவு செய்த பட்டதாரிகள் தமிழ்நாட்டில் 40 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். உதவித் தொகை கொடுக்கும் திட்டத்தைத் தமிழக அரசு அறிவித்த பிறகு வேலை தேடித்தரும் அலுவலகங்களில் பதிவு செய்து கொள்ளும் பட்டதாரிகளின் எண்ணிக்கை திடீரென்று அதிகரித்து வருகிறது.

**கேள்வி: வேலை இல்லாத பட்டதாரிகளுக்கு உதவித் தொகை வழங்க இருப்பதாக தமிழக அரசு அறிவித்திருக்கிறதே, அந்தத் திட்டம் எப்போது அமலுக்கு வரும்?**

பதில்: தமிழகத்தில் படித்துப் பட்டம் பெற்று வேலையில்லாமல் அவதியுறுபவர்களுக்கு மாதம் ரூ. 50 உதவித் தொகை அளிக்கும் திட்டத்தை 1.7.80 முதல் அமலுக்குக் கொண்டுவருவதெனத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

**கேள்வி: இந்த அறிவிப்பிற்குப் பிறகு தமிழ்நாட்டில் வேலை தேடித்தரும் அலுவலகங்களில் பதிவு செய்து கொண்டுள்ள பட்டதாரிகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதா?**

பதில்: வேலை தேடித்தரும் அலுவலகத்தில் பதிவு செய்த பட்டதாரிகள் 40 ஆயிரம் பேர். உதவித்தொகை கொடுக்கும் திட்டத்தைத் தமிழக அரசு அறிவித்த பிறகு, வேலை தேடித்தரும் அலுவலகங்களில் பதிவு செய்து கொள்ளும் பட்டதாரிகளின் எண்ணிக்கை திடீரென்று அதிகரித்து வருகிறது என்பது உண்மைதான்.

**கேள்வி: இத்தனைப் பட்டதாரிகளுக்கு உதவித் தொகை அளிப்பது என்றால் எவ்வளவு செலவு ஆகும்?**

பதில்: பதிவு செய்து கொண்ட எல்லாப் பட்டதாரிகளுக்கும் உதவித்தொகை அளிப்பதென்றால் அரசுக்கு ஆண்டுதோறும் ரூ 9. கோடி செலவாகலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. உதவித்தொகை பெறத் தகுதியானவர்களிடம் இருந்து எழுத்து மூலம் உறுதிமொழி வாங்கிய பிறகே, அவர்களுக்கு உதவித் தொகை அளிக்கப்படும்.

**கேள்வி: தமிழ்நாட்டில் வேலையில்லாமல் இருக்கும் அனைத்துப் பட்டதாரிகளுக்கும் மாதம் ரூ. 50 உதவித் தொகை தரப்படுமா?**

பதில்: அப்படி இல்லை. இதில் சில விதிமுறைகளை அரசு நிர்ணயம் செய்துள்ளது. பட்டதாரிகள், பட்ட மேற்படிப்புப் பட்டதாரிகள்-தகுதி பெற்ற இடைநிலை இளநிலை உயர்நிலை ஆசிரியர்கள், உடற்பயிற்சிக் கல்லூரி, உயர்நிலை-கீழ்நிலை ஆசிரியர்கள் அனைவருக்கும் உதவித்தொகை அளிக்கப்படும். மேலும், தமிழ் ஆசிரியர்கள் பிறமொழிப் புலவர்கள், தகுதி பெற்ற கைவினைஞர்கள் மற்றும் பொறியியல் டிப்ளமோ படித்தவர்கள் இத்திட்டத்தின்கீழ் உதவித்தொகையைப் பெறத் தகுதியுடையவர்களாவார்கள்.

**கேள்வி: இவர்களுக்கு வேண்டிய தகுதிகள் யாவை?**

பதில்: தமிழ்நாட்டிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் ( Employment Exchange ) 31.3.1980ஆம் வரை தொடர்ச்சியாக-இடைவெளியில்லாமல் 5 ஆண்டுகளுக்குக் குறையாமல் பதிவேட்டில் பெயர் இடம்பெற்றிருக்க வேண்டும். அவர்களின் குடும்பத்தின் மொத்த வருமானம் மாதம் ஒன்றுக்கு ரூ.500 அல்லது ஆண்டு ஒன்றுக்கு 6 ஆயிரம் (ரூ.6000) ரூபாய்க்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.

**கேள்வி: குடும்பம் என்றால் யாரைக் கணக்கில் எடுப்பது?**

பதில்: குடும்பம் என்பதில் பெற்றோர், மனைவி, கணவன், மகன்கள்-திருமணமாகாத மகள்கள், சகோதரர்கள்-சகோதரிகள் ஆகியோர் இதில் அடங்குவர்.

**கேள்வி: உதவித் தொகைப் பெறுவதற்கு வயது வரம்பு உண்டா?**

பதில்: நிச்சயமாக உண்டு. விண்ணப்பதாரருக்கு ஒவ்வொரு காலாண்டின் கடைசித்தேதி அன்று 35 வயது நிரம்பியிருக்கக்கூடாது. அரிசனமக்கள்-பழங்குடி வகுப்பினராக இருந்தால் 40 வயது நிரம்பியிருக்கக்கூடாது. மேலும் அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள பள்ளி-கல்லூரிகளில் கல்வி கற்றிருக்க வேண்டும். அல்லது அவர்களின் தாய்-தந்தை, பாதுகாவலர்களில் யாராவது ஒருவர் 15 ஆண்டுகளுக்குக் குறையாமல் தமிழகத்தில் வசித்திருக்க வேண்டும்.

உதவித் தொகை கேட்டு விண்ணப்பம் செய்கிறவர்கள் 'பணியாளர்கள்' என்றமுறையில் மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய்க்கு அதிகமாக வருமானம் பெறுபவராகவும் இருக்கக் கூடாது.

விண்ணப்பதாரர் எந்த வழியிலும் தனியாரிடமிருந்தோ, அரசிடமிருந்தோ ஆண்டொன்றுக்கு 600 ரூபாய்க்கு மேற்பட்டு உதவித்தொகை எதையும் பெறுபவராக இருக்கக் கூடாது.

எந்த ஒரு கல்வி நிலையத்திலும் முழுநேர மாணவர்களாக உள்ளவர்கள், இந்த உதவித் தொகையைப் பெறத் தகுதியுடையவர்களாக மாட்டார்கள் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கேள்வி: எவ்வளவு காலத்திற்கு இந்த உதவித்தொகை அளிக்கப்படும்? எவ்வாறு வழங்கப்படும்? வேலை கிடைத்தால் நிறுத்தப் படுமா ?**

பதில்: மூன்று ஆண்டுக்கால அளவிற்குத் தொடர்ந்து வழங்கப்படும். மாதம் ரூ. 50 வீதம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வங்கி அல்லது கருவூலம் மூலமாக வழங்கப்படும். இக்கால அளவில் வேலைவாய்ப்பைப் பெற்று விட்டால் இந்த உதவித்தொகை நிறுத்தப்பட்டுவிடும்.

**கேள்வி: உதவித் தொகை பெறும் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை உண்டா?**

பதில்: அது முறைப்படி நடக்கும்:

## ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குதல்— அரசு உயர்மட்டக்குழு அமைப்பு

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை, அரசு ஊழியர்களாக ஆக்குவதென்று அரசு முடிவினை அமல்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து அரசுக்கு அறிவிக்க தமிழ்நாடு அரசு ஓர் உயர்மட்டக்குழுவை அமைத்துள்ளது.


தமிழ்நாடு அரசு கல்விச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட இக்குழுவில் நிதிச்செயலாளர், ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறைச் செயலாளர், கிராம வளர்ச்சித்துறை இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பர். இக்குழுவின் உறுப்பினர்–செயலாளராக, பள்ளிக்கல்வி இயக்குநர் இருப்பார்.

இக்குழு ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளின் கருத்துக்களையும், மற்றையோரின் கருத்துக்களையும் அறிந்து செய்யவேண்டிய நிர்வாக மாற்றங்களுக்கான பரிந்துரைகளை மூன்று மாதங்களுக்குள் அரசுக்கு அளிக்கும்.

## திருப்பத்தூரில் சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை

வடார்க்காடு மாவட்டம் திருப்பத்தூர் அருகே சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைக்க, தமிழ்நாடு சிறு தொழில் கழக நிர்வாக இயக்குநர் அளித்த திட்டத்தை தமிழ்நாடு அரசு ஏற்று இதற்கென ரூ. 22.85 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

# மதுரை மாநகரில்



# 5வது உலகத்தமிழ் மாநாடு

'தமிழ் நிலைபெற்ற தாங்கரு
மரபின் மதுரை'
(சிறுபாணாற்றுப்படை)

'தென்தமிழ் நன்நாட்டுத்
தீதுதீர் மதுரை'
(சிலப்பதிகாரம்)

'தென்தமிழ் மதுரை'
(மணிமேகலை)

'உயர்மதில் கூடலில் ஆய்ந்த
ஒண் தீந்தமிழ்'.
(மாணிக்கவாசகர்)

'தமிழ்கெழு கூடல் தண்கோல்
வேந்தே'
(புறநானூறு—58)

'தமிழ் வையைத் தண்ணம் புனல்'
(பரிபாடல்-6)

'மகாபாரதம் தமிழ்ப்படுத்தும்
மதுராபுரிச் சங்கம் வைத்தும்'
(சின்னமனூர்ச் செப்பேடு
10-ஆம் நூற்றாண்டு).

—இவ்வாறான பண்டைத் தமிழிலக்கிய எடுத்துக் காட்டுகள் பலவற்றைக் கொண்டே தமிழுக்கும் தமிழ்ச் சங்கங்களுக்கும் மதுரை மாநகருக்கும் இருந்த தொடர்பினை நாம் அறியலாம். 'கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமோடமர்ந்து பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந்தமிழ்' இளமை மாறாமலும், இனிமை குன்றாமலும் திகழ்ந்தது; திகழ்கிறது; திகழப்போகிறது.

'என்றுமுள தென்றமிழை இயம்பிஇசை கொண்ட 'அகத்திய முனிவரிலிருந்து எண்ணற்றோர் தமிழ் வளர்த்திடத் தக்க பதியெனக் கொண்டு வாழ்ந்தது மதுரை மாநகர்தான்!

பண்டைக் காலத்திலிருந்து, தமிழகத்தில் பரம்பரை பரம்பரையாகப் பயின்று வரும் பழங் கதைகளும் பைந்தமிழ் இலக்கியச் சான்றுகளும், உரையாசிரியர் கூற்றுக்களும் சின்னமனூர்ச் செப்பேடும், மதுரையிலே மூன்று தமிழ்ச் சங்கங்கலிருந்திட்ட உண்மையை உறுதிப்படுத்துவனவாகவே உள்ளன.

சங்க காலத்தில் (கி. மு. 300-கி. பி. 100) மதுரை மாநகருக்கிருந்த அந்த அளப்பரிய புகழும் பெருமையும் மீண்டும் மணம் பரப்பவிருக்கிறது வருகிற 1981 சனவரி 4-ஆம் நாளிலிருந்து 10-ஆம் நாள் வரை!

ஆம்; இடைப்பட்ட அந்த ஆறு நாட்களில்தான் அங்கே மூந்தமிழ் சிறந்திட-ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டினை நடாத்திட முடிவு செய்திருக்கிறது தமிழக அரசு!

நடக்கவிருக்கிற அந்த மாநாடு பற்றிக் கூறிடுமுன், நடந்து முடிந்த நான்கு உலகத் தமிழ் மாநாடுகளையும் நினைவுகூர்வது தமிழ்ப் பெருங்குடி மக்களாகிய நமது கடமையல்லவா!

இல. இராசேந்திரன்

## முதலாவது மாநாடு

கீழ்த்திசை மொழி வல்லுநர் கழகத்தின் 26வது கூட்டம் 1964 ஆம் ஆண்டில் புதுடில்லியிலே நடைபெற்றது. அதன் தொடர்பாகத் தமிழாராய்ச்சியிலே ஆர்வமுள்ள அறிஞர் பெருமக்கள்சிலர் 'பன்னாட்டறிஞர் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்'தை நிறுவினார்கள்.

பிரெஞ்சு நாட்டினைச் சேர்ந்த பேராசிரியர் பில்லியோசா, அமெரிக்க நாட்டவரான பேராசிரியர் ஏமநா, இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவரான, பேராசிரியர் பரோ, ஹாலந்து நாட்டினரான பேராசிரியர் கூப்பர், செக்சோசுலோவேகியா நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் கமில் சுவலபில் ஆகியோர் அந்தப் 'பன்னாட்டறிஞர் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்'திலே முக்கிய உறுப்பினராவர்.

அக் கழகத்தின் சார்பிலே தான் முதலாவது உலகத்தமிழ் மாநாடு நடத்துவது பற்றிக் கலந்தெண்ணி முடிவு செய்யப்பட்டது. அதன்படி-1966ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் கோலாம்பூரிலே கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது முதலாவது உலகத் தமிழ் மாநாடு.

அதனை மாநாடு என்பதைவிடக் கருத்தரங்கு எனக் குறிப்பிடுவதே பொருத்தமாக இருக்கும். ஏனெனில், பெருந்திடலிலோ தனிப்பட நிர்மாணிக்கப்பட்ட மிகப் பெரும் அரங்கிலோ, எல்லா மக்களும் உள்ளம் உவந்து பங்கு பெற்றிடும் வகையிலோ அம் மாநாடு நடைபெறவில்லை. தமிழறிஞர் பலரும் பங்கேற்றார்கள்; சிறப்புற நடைபெற்றது; அவ்வளவே!

## இரண்டாவது மாநாடு

கனியிடை ஏறிய சுளையும், முற்றல் கழையிடை ஏறியசாறும். நனி பசும் பாலும் தேனும் தோற்கிற அளவுக்குச் சுவையுடையதான—ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழ விளங்கி, ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றிய நமதருந் தமிழுக்கு மேலும் சிறப்பளித்திடும் விதத்திலே 1968-ஆம் ஆண்டில் நடைபெற்றது இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு.

இன்பத் தமிழ்மொழி எமது எமக் கின்பந்தரும்படி வாய்த்த நல்லமுது என்ற கொள்கையே உயிர் மூச்சாய்க் கொண்டு-தமிழுக்கோர் இடரென்றால், தமிழர்க்கோர் துயரென்றால் அவை தமக்குற்றதெனக் கருதித் துடித்துப் போன தமிழ்த்தாயின் தவப் புதல்வனாம் பேரறிஞர் அமரர் அண்ணா அவர்கள் இதனை முன்னின்று நடத்தினார்.

தமிழகத்தின் முதலமைச்சர் பொறுப்பிலே இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த இரண்டாவது மாநாட்டிலே ஒரு புரட்சியினைச் செய்தார். அரண்மனையிலே இருந்த தமிழை அரச மரத்தடிக்குக் கொண்டு வரும் விதத்தில், பண்டிதர்கள் மத்தியிலே இருந்த தமிழைப் பாமரர்கள் நடுவிலும் கொணரும் வகையில் தனியொரு மண்டபத்திலே நடைபெறும் கருத்தரங்கோடு மட்டுமில்லாமல், சென்னை தீவுத் திடலில் தனிப்பட ஓர் அரங்கினை அதற்கென்றே சிறப்புற நிர்மாணித்து 'பூம்புகார் நகர்' என அதற்கோர் பெயரும் இட்டு அங்கே அகிலமே வியக்க அம்மாநாட்டை நடாத்திப் பெருமை கொண்டார்.

தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகரில் 1968-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 3ஆம் நாளிலிருந்து', 11 ஆம் 'நாள் வரை அங்கம் அங்கமாக நடைபெற்றது, 2-வது உலகத் தமிழ் மாநாடு.

ஒவ்வோர் நாளும் கருத்தரங்கம், கவியரங்கம், செந்தமிழ் விழா எனத் தொடர்ந்தது மாநாடு. ஆன்றவிந்தடங்கிய கொள்கைத் தமிழ்ச் சான்றோரனைவரும் பங்கேற்றார்கள். ஒவ்வோர் நாள் நிகழ்ச்சியிலும் இயல், இசை, நாடகம் என முத்தமிழும் மணந்தது. மகிழ்வித்தது.

மாநாட்டு நினைவாக மலர் வெளியிடப்பட்டது! 'புகாரில் ஒருநாள்' கவிதைப் போட்டியிலே வென்றார்க்குப் பரிசுகள், பள்ளிகளில்-கல்லூரிகளில் மாநாடு தொடர்பாக நடத்தப் பெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றார்க்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

## மூன்றாவது மாநாடு

மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரீசில் 1970-ஆம் ஆண்டு ஜூலை 15 முதல் 18-ஆம் தேதி வரை நடைபெற்றது.

பேராசிரியர் பில்லியோசா தலைமையில் நடைபெற்ற அம் மாநாட்டில் 39 நாடுகளைச் சேர்ந்த சுமார் 200 பிரதிநிதிகள் பங்கேற்றுச் சிறப்பித்தனர். தமிழகத்திலிருந்து 18 பேர்கொண்ட குழு ஒன்று அம் மாநாட்டிலே கலந்து கொள்ளச் சென்றது.

தமிழ்மொழி இயல் ஆராய்ச்சிப் பணிகளை ஊக்குவிப்பதற்காகத் தோன்றியதும், யுனஸ்கோ உதவி பெற்றதுமான பன்னாட்டுத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் ஓர் உயர் பணியாகவே இந்த மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு நடத்தப் பெற்றது. ஓர் இந்திய மொழி ஆராய்ச்சித் தொடர்பாக, மேற்கு நாடு ஒன்றிலே உலகத் தமிழ் மாநாடு கூடியது இதுவே முதன் முறையாகும்!

## நான்காவது மாநாடு


நான்காவது உலகத் தமிழ் மாநாடு 1973-ஆம் ஆண்டு சனவரித் திங்களில், இலங்கையிலே நடைபெற்றது.

தமிழறிஞர் பலரும் இதில் பங்கேற்றார்கள். தமிழினத்தின் தன்மானக் குரல் ஒலித்தது இந்த மாநாட்டில்.

## ஐந்தாவது மாநாடு

வானார்ந்த பொதியின் மிசை வளர்கின்ற மதி, மன்னிய மூவேந்


உலகத் தமிழ் மாநாடு




சென்னை-1968

அழைப்பிதழ்

தர்கள் தம் மடிவளர்ந்த மகள், தேனார்ந்த தீஞ்சுனை சால் திருமாலின் குன்றம், தென்குமரி ஆயிடை நற் செங்கோல் கொள் செல்வி, கானார்ந்த தேன், கற்கண்டு, நற்கனி, கண், கண்ணின் மணி, அக்கட் புலஞ்சேர் ம்தவி, ஆனாத நூற்கடலை அளித்தருளும் அமிழ்து என்றெல்லாம் புலவர் பெருமக்களாலே பெருமை பாராட்டப்பட்ட தமிழுக்கு மேலும் புகழ் கூட்டிடும் விதத்திலே வருகிற சனவரித் திங்களில் கூட்டப்படவிருக்கிறது ஐந்தாவது உலகத் தமிழ்மாநாடு.



கடந்த நான்கு உலகத் தமிழ் மாநாடுகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால், ஒரு மாற்றும் குறையாததாக இந்த மாநாடு திகழ வேண்டும் என்பதிலே பெரிதும் கவனம் செலுத்தி வருகிறார் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள்.

'தமிழென்னில் எம்முயிர்ப் பொருளாம் இன்பத் தமிழ்குன்று மேல் தமிழ் நாடெங்கும் இருளாம்' என்ற உயர் கொள்கையே உயிர் மூச்சாய்க் கொண்ட தமிழ்ப் பெருங்குடி மக்கள், தாயாம் தமிழுக்கு எடுக்கும் விழா இது என்பதாலே, மாநாட்டைச் செம்மைப்படுத்திடப் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

**குழுக்கள் விவரம் :**

43 கற்றறிவாளர்களைக் கொண்ட பொதுநிர்வாகக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் இதன் தலைவராகவும் மாண்புமிகு நடுவண் அரசு துணை வேளாண்மை அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் துணைத் தலைவராகவும் பொறுப்பு வகிக்கின்றனர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 36 தமிழார்வலர்களைக் கொண்ட வரவேற்புக் குழுவின் தலைவராகவும் செயல்படுகிறார். இதன் துணைத் தலைவராக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு.இராம. வீரப்பன் அவர்கள் தலைமையில் உலகத் தமிழ் மாநாட்டுக் கண்காட்சிக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. 17 தமிழறிஞர்களைக் கொண்ட இக்குழுவின் துணைத் தலைவர் மதுரை மாநகரத் தந்தை ஆவார்.

மாநாட்டு மலர் வெளியீட்டுக் குழு 22 தமிழ்ப் பெரியார்களைக் கொண்டு இயங்கும். இதன் தலைவர் மாண்புமிகு நிதியமைச்சர் திரு நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள். துணைத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டில்லிப் பிரதிநிதி திரு. மா. முத்துசாமி அவர்கள்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்களைத் தலைவராகவும், திரு. பி. நாகிரெட்டியார் அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்டு மாநாட்டு ஊர்வலக்குழு செயல்படும்.

நல்லிதயம் கொண்டார் 42 பேர்களைக் கொண்ட விருந்தோம்பல் குழுவுக்கு மாண்புமிகு, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு. கே. இராசாமுகமது அவர்கள் தலைமை வகிக்கிறார்.

மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்களைத் தலைவராகவும், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்டு ஆற்றல்மிக்கார் இருபதின்மரைக் கொண்ட போக்குவரத்துக்குழு பணியாற்றுகிறது.

செய்தி-மக்கள் தொடர்புக் குழு மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர், திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையிலும், மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் திரு. எம். விஜயசாரதி அவர்கள் துணைத் தலைமையிலும் பறந்து பணியாற்றும் 31 பேர்களைக் கொண்டு சிறந்தபடி செயலாற்றும்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு தலைவராகவும் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள்துணைத் தலைவராகவும் இருந்து பண்பட்ட 21 பேர்களைக் கொண்ட பண்பாட்டுச் சுற்றுலாக் குழுவை நிர்வகிப்பர்.

பொதுக்கூட்ட அமைப்புக் குழு, இனிய தமிழ் வல்லார் 23 பேர்களைக் கொண்டுமாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கா. காளிமுத்து அவர்கள் தலைமை, மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன் அவர்கள் துணைத் தலைமையின் கீழ் பணியாற்றிடும்.

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம்அவர்கள் தலைவராகவும் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் துணைத் தலைவராகவும் இருந்து நற்கலை வல்லவரான 46 பேர் கொண்ட கலை நிகழ்ச்சிக் குழுவின் நடவடிக்கைகளைக் கவனிப்பர்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையிலும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம் துணைத் தலைமையின் கீழும் வாட்டமின்றிப் பணி புரிய 12 பேர்களைக் கொண்ட நகர் மேம்பாட்டுப் பணிக்குழு செயல்படும்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு எச். வி. ஹண்டே அவர்கள், நலம்பேணும் நல்லார் 9 பேர்களைக் கொண்ட பொது மருத்துவக் குழுவுக்குத் தலைவராவார். மதுரை மாநகராட்சித் துணை மேயர் இக்குழுவின் முக்கிய உறுப்பினர்.

**நான்மாடக் கூடலில்....**

வருகிற சனவரி 4 முதல் 10 வரை நடைபெறவிருக்கும் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு, தமிழ் நாட்டுச் சரித்திரத்தில் ஒரு பொன்னேடாக விளங்குமென்பது திண்ணம்.

**பகைவன்**

சிற்றின்பம், கோபம், பற்று, மது அருந்துதல், கர்வம், துக்கம் இவை ஆறும் மனிதனின் உண்மைப் பகைவர்கள் !

—காந்தி அடிகள்.





# குழந்தை மருத்துவத்தில் புதியவரலாறு

**தமிழ்ப்பித்தன்**

சின்னஞ்சிறு கிளியே-கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே
என்னைக் கலிதீர்த்தே- உலகில்
ஏற்றம் புரியவந்தாய்!

—என்று சின்னஞ்சிறு குழந்தையைப் புகழ்ந்து பாடியிருக்கிறார் புதுயுகக் கவிஞர் பாரதியார்.

இன்று குழந்தைகளாக இருப்பவர்கள் எதிர் காலத்தில் தலைவர்களாக - அறிஞர்களாக- கவிஞர்களாக - பொறியாளர்களாக மலர முடியும் என்பது கண்கண்ட உண்மை. எனவே, பிஞ்சுக் குழந்தைகளின் நலத்தைப் பேணிக் காப்பது பெற்றோரின் முக்கிய கடமையாகிறது.

பிஞ்சுக் குழந்தைகள் நோய் வாய்ப்பட்டால் அதற்குரிய சிகிச்சையை நாடாமல், அறியாமை காரணமாக சாமியார்களின் மந்திர உச்சாடனங்களைத் தேடிச் செல்லும் பெற்றோர்களும் நமது நாட்டில் இருக்கிறார்கள். போதிய கல்வி அறிவு இல்லாத பெற்றோர்கள் இந்தப் பட்டியலில் அதிகமாகக் காணப் பெறுகிறார்கள் என்றாலும் சிற்சில வேளைகளில் படித்த பெற்றோர்களும் இந்த நிலைக்கு ஆளாகிறார்கள். இயல்பாகவே தோன்றுகின்ற அறியாமையும் குழந்தைகளின் மீது அவர்களுக்குள்ள பேரன்பின் காரணமாக ஏற்படும் பதைபதைப்பும்தான் இந்த நிலைக்குக் காரணம். ஆதலால் குழந்தைகள் நோய்வாய்ப்பட்டால் அவர்களுக்கு எத்தகைய சிகிச்சையை அளிக்கவேண்டும் என்பதைப் பெற்றோர்கள் முதன் முதலில் தெரிந்துவைத்துக்கொள்ள வேண்டும்.

நமது நாட்டில் சிறு குழந்தைகளை அதிகமாகத் தாக்குகின்ற நோய்களில் சீதபேதி என்று சொல்லப்படும் வயிற்றுப்போக்கும் ஒன்று. சில நேரங்களில் வயிற்றுப் போக்கு, வாந்திபேதியாகவும் மாறி விடுகிறது. நமது நாட்டு மக்கள் தொகையான 63 கோடியில், 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஏறக்குறைய 40 சதவிகிதத்தினராவர். அவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் 5 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர். அந்தத் தொகையில் ஏறக்குறைய 30 சதவிகிதத்தினர் சீதபேதியாலும், வாந்தி பேதியாலும் இறந்து விடுகின்றனர்.

இதற்குக் காரணம் என்ன என்பதை முதலில் ஆய்ந்து பார்க்க வேண்டும். சுற்றுப்புறச் சூழ்நிலைகளில் தூய்மை இல்லாததாலும், ஈ மொய்த்த உணவுப் பொருட்களை உண்ணுவதாலும் இந்நோய் எளிதில் பரவுகிறது. அது உடலில் நீர்க்குறைவை ஏற்படுத்துகிறது. இதன் காரணமாக நோய் முற்றி மரணம் ஏற்படுகிறது.

வளர்ச்சி அடைந்துவரும் நாடுகள், சீதபேதி, வாந்திபேதி ஆகிய நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காகப் பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. உலக நல்வாழ்வு நிறுவனத்தின் (WHO) பதினைந்து உறுப்பினர்கள் இது குறித்து ஒருங்கு கூடிக் கலந்துரையாடினார்கள். 1983ஆம் ஆண்டுக்குள் குறைந்த பட்சம் 25 சதவிகிதம் குழந்தைகளையாவது - சாவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்று தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

பொதுவாக, சீதபேதிக்கு ஆளாகும் குழந்தையின் உடலில் தண்ணீரின் அளவு குறைந்துவிடுவதாலேயே அது இறக்க நேருகிறது. அந்த ஆபத்தை நீக்குவதற்கு நரம்புகளில் ஊசியை ஏற்றி, உடலின் உள்ளே குளுகோஸ் கலந்த நீரைச் செலுத்தி சிகிச்சையளிக்கிறார்கள். இது தக்கதொரு சிகிச்சைதான் என்றாலும் சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு மிகவும் துன்பம் தரக் கூடிய சிகிச்சையாகும். எனவே, அவர்களைத்

துன்பப்படுத்தாமல் - அவர்களுக்குத் தொல்லை தராமல் - எளிய சிகிச்சை முறை ஒன்று அண்மைக் காலத்தில் அறிமுகப்படுத்தப் பெற்றுள்ளது. வாய் வழியாகச் செலுத்தப் பெறும் உப்பு சர்க்கரைக் கலவை ஒன்றை மருத்துவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். சீதபேதியால் பாதிக்கப்பட்ட குழந்தையின் உடலில் நீரையும் உப்புச்சத்தையும் இந்த மருந்து எளிதில் ஏற்படுத்துகிறது. இதன் விலை மிகவும் மலிவு. ஏறக்குறைய 60 காசுகள் விலையில் இந்த மருந்தைத் தயாரித்து விடலாம். வியப்பாக இருக்கிறதல்லவா? சோடியம் குளோரைடு என்று சொல்லப் பெறும் சாதாரண உப்புடன் சர்க்கரையைக் கலந்து இந்த மருந்து உருவாக்கப்படுகிறது.

பல நாடுகளில், இந்த மருந்து குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பெற்றதில் அது நல்ல பயனை அளித்திருக்கிறது. குழந்தைகள் மிக விரைவில் உடல் எடை மிகுந்து நலன் பெற்றார்கள் என்பது மெய்ப்பிக்கப்பெற்றுள்ளது.

நோய் எவ்வளவு அதிகமாக இருந்தாலும் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தாங்களே இம்மருந்தைக் கொடுக்கலாம். காய்ச்சி ஆறவைத்த ஒரு தம்ளர் அளவுத் தண்ணீருடன் இரண்டு தேக்கரண்டி அளவுள்ள சர்க்கரை அல்லது குளுகோஸுடன் கால் தேக்கரண்டி அளவு உப்புச் சேர்த்து 10 அல்லது 15 நிமிடங்களுக்கு ஒருமுறை சுமார் அரை லிட்டர் வரை ஒரு நாளில் கொடுக்கலாம்.

உலகத்தில் ஏறக்குறைய அறுபது நாடுகள் இந்த மருந்தைப் பயன்படுத்தி சீதபேதி நோயைக் கட்டுக்குள் கொண்டு வரும் முயற்சியில் முனைந்துள்ளன. இந்தியா, பர்மா, பாகிஸ்தான், எகிப்து, தாய்லாந்து போன்ற நாடுகள் இந்த மருந்தைத் தயாரிக்கின்றன.

தண்ணீர் அதிகம் கொடுத்தால் பேதி அதிகமாகும் என்று பெரும்பான்மையான தாய்மார்கள் கருதுகிறார்கள். இத்தகையவர்கள் கிராமப்புறங்களில் அதிகம் காணப்படுகிறார்கள். ஆதலால் இந்த மருந்தின் அவசியம் குறித்து கிராமப் புறங்களில் தக்க வகையில் பிரச்சாரம் செய்ய வேண்டும். மலிவாகக் கிடைக்கும் எந்தப் பொருளும் உயர்வான-ஒன்று என்ற எண்ணம் நமது நாட்டில் பலரிடம் காணப்படுகிறது. அதிகமான செலவில் செய்யப்படும் சிகிச்சைதான் பலன்தரும் என்றும் கருதுகிறார்கள். குழந்தைகளை மருத்துவமனையில் சேர்த்து - அவர்களின் கால்களில் அல்லது கைகளில் உள்ள நரம்புகளின் மூலம் குளுகோஸ் ஏற்றுவதுதான் சிகிச்சை என்றும், மிகக் குறைந்த செலவில் வாய்வழியே செலுத்தப்பெறும் உப்பு - சர்க்கரைக் கரைசல் மருந்தாகாது என்றும் அவர்கள் கருதக்கூடும்.

எனவே, 'மூர்த்தி சிறியதென்றாலும் கீர்த்தி பெரிது' என்று சொல்வது போல 'உருவு கண்டு எள்ளாமை வேண்டும்' என்ற திருக்குறள் மொழிக்கு இணங்க இந்த மலிவு விலை மருந்து - மிகுந்த பயன்தரவல்லது என்பதைத் தாய்மார்களுக்கு - தக்க வகையில் உணர்த்த வேண்டியுள்ளது.

ஒரு லிட்டர் கொதித்து ஆறிய நீரில் 3.5 கிராம் சோடியம் குளோரைடு உப்பு, 2.5 கிராம் சோடியம் பை கார்பனேட்டு உப்பு, 1.5 கிராம் பொட்டாசியம் குளோரைடு உப்பு, 20 கிராம் குளுகோஸ் என்னும் விகிதத்தில் கலக்கக் கூடிய சிறிய உப்பு - சர்க்கரைப் பொட்டலங்கள் அரசு மருந்துக் கிடங்குகளில் தயாரிக்கப் பெறுகின்றன. இவை ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பாலிதீன் பைகளில் கிடைக்கின்றன. தேவைப்படும் தாய்மார்களுக்கு மருத்துவப் பணியாளர்களின் மூலம் இம்மருந்துப்பொட்டலம் விநியோகிக்கப்பெறுகிறது.

இந்த மருந்தின் திறன் குறித்து உலக நலக் கழகம், இந்திய மருத்துவ ஆய்வுக் கழகம், இந்திய நல்வாழ்வுப் பணிகள் மேலாண்மை இயக்குநர் துறை ஆகிய மூன்றும் இணைந்து, சென்னை சிறுவர் மருத்துவமனையில் கருத்தரங்கு ஒன்றினை ஜூலைத் திங்கள் 28, 29 ஆகிய நாட்களில் நடத்தின. கருத்தரங்கைத் துவக்கிவைத்த மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச்.வி. ஹண்டே அவர்கள், இம் மருந்தின் பயனை வலியுறுத்திக்கூறியதுடன் கிராமப்புறங்களில் மருத்துவ நிபுணர்களின் மேற்பார்வையில் இத் திட்டம் செயல்படுத்தப் பெற வேண்டும் என்று குறிப்பிட்டார். பல்வேறு மருத்துவ நிபுணர்களும் கருத்தரங்கில் பங்கு பெற்று - இம் மருந்தின் அவசியத்தையும் ஆற்றலையும் விளக்கிக் கூறினார்கள்.



குழந்தைகளுக்கு ஏற்படும் சீதபேதி, வாந்திபேதி ஆகியவற்றைக் கட்டுப்படுத்தி, பிஞ்சுகளின் உயிரைக் காக்கும் தொண்டில் முனைப்புடன் ஈடுபட்டு வருகிறது அரசு. பெற்றோர்களாகிய பொதுமக்களும் அரசுடன் ஒத்துழைக்க வேண்டும். அவர்களின் ஒத்துழைப்பில்தான் சிகிச்சையின் வெற்றியே அடங்கியிருக்கிறது.

வாய் வழி உப்புச் சர்க்கரை நீர் - குழந்தைகளின் வயிற்றுப் போக்கைக் களைய உதவிடும் ஆதார வேர் என்று சொன்னால் அது மிகையாகாது!

# வீரச் செயலுக்கு விருதுகள்!



சென்னை எழும்பூரிலுள்ள ராஜரத்தினம் ஸ்டேடியம்!

செப்டம்பர் 15ஆம் நாள், தீர வீரச் செயல்களுக்காக, காவல் துறைப் படையினருக்குத் தமிழக முதல்வரின் விருதுகள் வழங்கும் விழா நடந்தது.

விழாவில், இன்ஸ்பெக்டர் பழனிச்சாமியின் மனைவி திருமதி பிலோமினா அவர்களிடம் பதக்கத்தையும், ரூ. 3 ஆயிரத்தையும் மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் வழங்கினார். அப்போது விழிகளில் வழிந்தோடும் கண்ணீரைத் துடைத்த வண்ணம் திருமதி பிலோமினா அவர்கள் விருதினைப் பெற்றுக் கொண்ட அந்தக் காட்சி நெஞ்சை உருக்குவதாக இருந்தது.

இன்ஸ்பெக்டர் பழனிச்சாமி புரிந்த சாதனை என்ன?

தேடப்பட்டு வந்த நக்சலைட்டுகளில் சிலர் ஏலகிரி கிராமத்தில் பதுங்கி இருக்கின்றனர் என்ற தகவலறிந்தவுடன், இவர் தமிழ் நாடு சிறப்புக் காவற்படைக் காவலர்கள் நால்வருடன், 1980-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 6-ஆம் நாளன்று அதிகாலை காரில் அங்கு விரைந்தார்.

சாதுர்யமான திட்டத்தைக் கையாண்டு, சிவலிங்கம், இராஜப்பா, சின்னத்தம்பி ஆகிய மூன்று நக்சலைட்டுகளைக் கொண்ட குழுவை வியப்பில் ஆழ்த்தும் வண்ணம் வளைத்துப் பிடித்தார். அவர்களைத் தமிழ் நாடு சிறப்புக் காவற்படைக் காவலர்கள் இருவர் பொறுப்பில் விட்டு விட்டு, அங்கிருந்து இரு காவலர்களுடன் சென்று, தனது உயிரையும் பொருட்படுத்தாது பெருமாள், செல்வம் என்ற நக்சலைட்டுகளை மடக்கிப் பிடித்துக் கைது செய்தார்.

கைது செய்யப்பட்டவர்களைத் திருப்பத்தூருக்குக் கொண்டு செல்லும் வழியில், நக்சலைட்டு சிவலிங்கம், தான் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தார். அதனால் காரில் இருந்த அனைவரும் பலத்த காயமுற்றனர். இன்ஸ்பெக்டர் உடலெங்கும் காயமுற்று வேதனையுற்ற நிலையிலும், நக்சலைட்டுகளைக் கைது செய்த விவரத்தை மருத்துவமனையில் அதிகாரிகளிடம் தெரிவித்துவிட்டு தன் இறுதி மூச்சு வரை தன் கடமையைச் செய்துவிட்டு வீர மரணம் எய்தினார்.

நக்சலைட்டுகளுக்கு அனுதாபம் காட்டக்கூடிய பகுதியில் கும்மிருட்டில், வீரத்துடனும், விவேகத்துடனும், தக்க முறையில் காவலர்களை வழிநடத்திச் சென்று நக்சலைட்டுகளை மடக்கிப் பிடித்தது போற்றத்தக்க சேவையாகும்.

இவ்வாறு தீரச்செயல் புரிந்ததற்காக 10 பேர்களுக்கும், சிறப்புப் பணிக்காக 35 பேர்களுக்கும் ஆக மொத்தம் 45 பேர்களுக்குப் பதக்கத்தையும், பணத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில் கலந்துகொள்ள மாண்புமிகு முதல்வர் அவர்கள் வந்தபோது, கன்னிமாரா ஓட்டல் வாயிலிலிருந்து வெள்ளை நிற ஜீப்பில் ஊர்வலமாகஅழைத்து வரப்பட்டார்.

காவல்துறைக் குதிரைப்படையைச் சேர்ந்த 18 குதிரைகள் மீது, வண்ண உடை அணிந்த காவலர்கள் முன்னும் பின்னும் அணிவகுத்து வந்த காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

ராஜரத்தினம் ஸ்டேடியத்தில் காவலர்களின் அணிவகுப்பு மரியாதையை முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொண்டார். அவ்வமயம் காவல்துறை பாண்டு இசை முழங்கியது. போலீஸ் டைரக்டர்

ஜெனரல் திரு. அப்துல்லா அவர்கள் முதல்வர் அவர்களை வரவேற்றார்.

மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

''முதலில் இங்கே பதக்கங்களைப் பெற வந்த தாய்மார்கள் கண்ணீர் மல்க உணர்ச்சியை அடக்கியவாறு, கடலில் கொந்தளிக்கும் அலைபோல் குமுறும் துன்பத்தால் வேதனைக் கண்ணீரைத் துடைத்தபடி வந்தனர். அந்தத் தாய்மார்களை நம் இதயக்கோயிலில் வைத்துக் கும்பிடுவதைத் தவிர வேறு வழிஇல்லை. உடன் பிறப்புகள் வேதனைப் படும்போது ஆறுதல் கூறி ஆறுதல் பெறுகிறோம். அவர்கள் செய்த தியாகம் தமிழக வரலாற்றின் எதிர்காலத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும்.

பெற்றிருக்கிறது. அப்படி முன் வந்தவர்கள் ஒருவராக இருக்கலாம். 10 பேராக இருக்கலாம். இவர்கள் இலட்சக்கணக்கானவர்களுக்கு வழிகாட்ட முடியும். இப்படி, பதக்கம் வழங்குவது மற்றவர்களுக்கும் ஒரு உத்வேகத்தை உருவாக்குவதற்காகத் தான்.

''நல்ல மாணவர்களை உருவாக்குவது, நல்ல ஆசிரியர்களின் பொறுப்பு. அதுபோல நாட்டில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இருப்பதற்குச் சமுதாயத்தில் உரைகல்லாகக் காவலர் இருக்க வேண்டும். காவல்துறையினர் நியாயமாக, நேர்மையாக, கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன், அன்பு, பாசம், பரிவுக்குச் சொந்தக்காரர்களாக இருக்க வேண்டும்.

> **வேதம் நிறைந்த தமிழ்நாடு — உயர் வீரம் செறிந்த தமிழ்நாடு**
> — பாரதி

விழாவினை ஒட்டிப் பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்தன. அவை பார்ப்போரின் கண்களையும், கருத்தையும் கவர்ந்தன!

காவல்துறை பாண்டு இசைக் குழுவினர், இசைக்கேற்ப பெரிய 'ட்ரம்'மில் ஆடிக்கொண்டே தாளம் தவறாமல் வாசித்தது அனைவரையும் கவர்ந்தது.

காவல்துறைப் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த காவலர்களின்



''இளைஞர் சமுதாயம் வளர வேண்டும், வாழவேண்டும். அவர்கள் கற்று தாங்களும் வளர்ந்து நாட்டுக்குத் தொண்டாற்ற வேண்டும்.

''ஏதோ வழி தெரியாமல் வேறு பாதைக்குச் சென்றுவிடாமல் உண்மை தெரிந்து திருந்தி வாழவேண்டும். இந்த வகையில் தான் சில நாட்களுக்கு முன்பு பத்திரிகை நண்பர்கள் மூலம் என்னுடைய வேண்டுகோளை வெளியிட்டேன். நான் விடுத்த அந்த வேண்டுகோள் பலன்

.''இந்தியத் துணைக்கண்டத்திலேயே தமிழகப் போலீசார் புதிய வரலாற்றைப் படைத்து வருகிறார்கள். காவல்துறைக்கு விஞ்ஞான வசதிகளைச் செய்து தர தமிழக அரசு எண்ணி இருக்கிறது. அதற்காகத் திட்டங்கள் தீட்டப்பட்டு உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

''அக்டோபர் மாதம் முதல், காவல் துறையினருக்குக் குறைந்த விலையில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வழங்கப்பட இருக்கிறது''

சாகச விளையாட்டுகளும், துப்பறியும் நாய்களின் சாகசங்களும், சீர்திருத்தப் பள்ளிச் சிறுவர்களின் அணிவகுப்பும் அருமையாக இருந்தன.

அன்றைய விழா, தமிழகக் காவல்துறை வீரர்களின் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும், மக்களைக் காக்கத் தன்னுயிரையும் பொருட்படுத்தாது போராடிய தியாக உணர்வையும் உணர்த்துவதாக இருந்தது.

**— பீ.வி. கிரி**



# மாவட்ட வளர்ச்சிப் பணிகள் தென்னார்க்காடு மாவட்டம்



**எம். நடராசன்;**
**மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர், (செய்தி-மக்கள் தொடர்பு), தென்னார்க்காடு மாவட்டம்.**

தென்னார்க்காடு மாவட்டத்தில் தன்னிறைவுத்திட்டத்தின்கீழ் கண்டமங்கலம், உளுந்தூர் பேட்டை, திருநாவலூர், மயிலம், மங்களூர் ஆகிய 5 வட்டாரங்கள் முதற் கட்டமாக 1979-80-ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டு திட்டம் தற்போது செயல்பட்டு வருகிறது. இணைப்புச் சாலைகள், கிராமப் புறச் சாலைகள், சிறுபாசனம், பள்ளிக் கட்டிடங்கள், மகப்பேறு நிலையங்கள் துணை கால்நடை நிலையங்கள், கிராம மருந்தகங்கள் ஆகியவைகளுக்காக 1979 80-ம் ஆண்டில் ரூ. 14.25லட்சம் அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது, சீரும் சிறப்புமாக.

மேலும், அந்த ஐந்து வட்டாரங்களுக்கும் நடப்பு ஆண்டில் (1980 81-க்கு) இணைப்புச் சாலைகள், சிறு பாலங்கள் அமைத்தல், அரிசனக் காலனி', மயானசாலை அமைத்தல், சிறுபாசனம், கிரமப்புற மருந்தகம், மகப்பேறு நிலையங்கள் ஆகியவை அமைப்பதற்காக மொத்தம் ரூ. 54. 97லட்சம் அனுமதிக்கப்பட்டுத் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் 1980-81-ம் ஆண்டில் ஆதாரப் பள்ளிக் கட்டிடம் 15 மற்றும் 1 உயர் ஆதாரப்பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கும் ரூ. 4.25 லட்சம் அனுமதுக்கப்பட்டு கட்டிடங்கள் கட்டுவதற்கு தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. இப்பணிகள் அனைத்தும் 31-3-81 — க்குள் செய்து முடிக்கப்பட்டு இந்த ஐந்து வட்டாரங்களையும் தன்னிறைவு பெற்றவையாகச் செய்திட தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### உழைப்புக்கு உணவுத் திட்டம்

இம்மாவட்டத்தில் உழைப்புக்கு உணவுத் திட்டம் மற்றும் கிராம வேலைவாய்ப்புத்திட்டத்தின்கீழ் 1-4-80 முதல் 31-8-80 முடிய 449 வேலைகள் ரூ. 37,79,700 மதிப்பீட்டில் எடுத்துச் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய பணிகளில் 131 வேலைகள் ரூ. 1,85,199 மதிப்பில் முன்னேற்றத்தில் உள்ளது. கிராம மக்களுக்கு நீண்ட காலப் பயனை அளிக்கத் தக்க வேலைகளை வட்டார அளவில் உள்ள உழைப்புக்கு உணவுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட குழுவில் அனுமதி பெற்று வட்டார வளர்ச்சி அலுவலர்களே அவற்றை விரைவில் செய்து முடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். வேலைகள் செய்து முடிக்க முதல் கட்டமாக 948 மெட்ரிக் டன் அரிசி ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்திலுள்ள கல்ராயன் மலைப் பகுதியின் முன்னேற்றத்திற்காக 1979-80 ஆம் ஆண்டில் மொத்தம் ரூபாய் 11, 42,831 செலவிடப்பட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் 1,81,05,990 முன்னேற்றத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

1980-81-ம் ஆண்டுக்கான மலைவாழ் மக்கள் நலத்திட்டம் பணிகளுக்கான திட்ட ஒதுக்கீடு அரசின் ஒப்புதலில் உள்ளது. எனினும் சம்பந்தப்பட்ட துறையின் அலுவலர்கள் பணி மழைக் காலம் தொடங்கு முன் முடித்து வைக்கப்படும்.

### ஒன்றியங்களின் முன்னேற்றம்

இம்மாவட்டத்தில் 1980 - 81 நிதியாண்டில் ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு முன்னேற்ற திட்டங்களுக்காக ரூ 53,02,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு 31-7-80 வரை ரூ 9,75,179 செலவிடப் பட்டுள்ளது.

### சிறு சேமிப்புத் திட்டம்

1979-80-ம் ஆண்டிற்குத் தென்னார்க்காடுமாவட்டத்திற்குச் சிறு சேமிப்பு வசூல் திட்டத்தின் கீழ் நிகரமாக ரூ 200 லட்சம் வசூல் செய்யவும் ஊதிய சேமிப்புத் திட்டத்தின் கீழ் 25,000 புதிய சி.டி.டி. / ஆர். டி. கணக்குகள் அஞ்சலகங்களில் திறக்கவும் தமிழக அரசால் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டது. இந்தக் குறியீடு இம்மாவட்டத்திற்கு முந்தைய ஆண்டுகளின் குறியீட்டை விட ஏறத்தாழ 3 மடங்கு அதிகமானது ஆகும்.

இருப்பினும் மாவட்ட அலுவலர்கள் கோட்ட அலுவலர்கள் தனியார் துறை நிறுவனங்களின் அலுவலர்கள் -ஆகியோரின் ஒத்துழைப்பினால் இம்மாவட்டம் அரசு அளித்த குறியீட்டினை எய்தி மிஞ்சியும் விட்டது.

1. சிறுசேமிப்பு வசூல் திட்ட இலக்கு 200 லட்சம் எனில் அதைவிட அதிகம் 0.70 சாதனை.

2. ஊதிய சேமிப்புத் திட்ட இலக்கு 20,000 எனில் 22,913 அதிகம். ரூ.2913 அதிகம் சாதனையாகும்.

1980-81-ம் நடப்பு ஆண்டிற்கு அரசு சிறுசேமிப்பு வசூல் திட்டத்தின் கீழ் ரூ. 250 லட்சம் நிகர வசூல் செய்யவும் 20000 ஆர். டி. / சி. டி. டி. புதிய கணக்குகள் ஆரம்பிக்கவும் குறியீடு. நிர்ணயம் செய்துள்ளது.

31-7-80 தேதி முடிய மாவட்டத்தில் ரூ. 312.97 லட்சம் மொத்த வசூலாகவும் 75.57 லட்சம் நிகர வசூலாகவும்செய்யப்பட்டுள்ளது. இதுவரை 4488 புதிய சி.டி.டி./

ஆர். டி. கணக்குகள் அஞ்சலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. அனைத்து மாவட்ட—மற்றும் கோட்ட அலுவலர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பால்மார்ச்சு 81-க்குள் இம்மாவட்டத்திற்கான குறியீட்டினை எய்தி மிஞ்சவும் முடியும் என்ற நம்பிக்கையுள்ளது.

**கண் சிகிச்சை முகாம்**

தமிழ்நாடு அரசு இலவச கண் சிகிச்சை முகாம் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்திற்கு 1980-81-ம் ஆண்டில் 2000 கண் அறுவை சிகிச்சை செய்யத் தமிழ்நாடு அரசு குறியீடு நிர்ணயம் செய்துள்ளது. 31-7-80 முடிய திண்டிவனம் கோட்டத்தில் மயிலம் ஊராட்சி ஒன்றியத்திலும் விருத்தாசலம் கோட்டத்தில் திட்டக்குடி ஊராட்சி ஒன்றியத்திலும் இலவச கண் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டு 600 நபர்களுக்கு அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளது. இம்மாதத்தில், திருக்கோவிலூர் கோட்டத்தில் 23-9-80 தேதி முதல் 3-10-80 முடிய உளுந்தூர் பேட்டையில் அரசு இலவசக் கண்சிகிச்சை முகாம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே பண்ருட்டி உளுந்தூர் பேட்டை வட்டப் பொதுமக்கள் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி இலவசமாகக் கண் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளலாம்.

**கூட்டுறவு வீட்டு வசதித் திட்டம்**

1978-79 முதல் 1982-83முடிய ஐந்து ஆண்டுக் காலத்திற்குள் கிராமக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலமாக ஒரு இலட்சம் வீடுகள் கிராமங்களில் கட்டுவது என்ற தமிழக அரசின் சீரிய திட்டத்தின் கீழ் தென்னார்க்காடு மாவட்டத்திற்கு 1979-80 ஆம ஆண்டிற்கு 2,625 வீடுகள் கட்ட வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த இலக்கினை நிறைவு செய்யும் முகத்தான் 30-6-80-க்குள் 2,640 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் இந்தத் திட்டம் தொடங்கிய 1978-79-ஆம் ஆண்டிலிருந்து 30-6 80 முடிய 2,939 வீடுகள் கிராமப் புறங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1979-80 ஆண்டிற்கு ரூ. 120.64 இலட்சங்கள் உறுப்பினர்கட்கு வீடு கட்டக் கடன் வழங்கப்பட்டுள்ளது. 30-6-80-ல் அது வரை கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வரும் வீடுகளின் எண்ணிக்கை 1,599 ஆகும். இவை தவிர கடன் கோரி வந்துள்ள மனுக்கள் பரிசீலனையில் உள்ளன.

1980-81-ம் ஆண்டிற்கு இந்த மாவட்டத்திற்கு 3,500 வீடுகள் கட்டப்பட வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தக் குறியீட்டை அடைவதற்காக 3,210 புதிய கடன் மனுக்கள் பெற குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் சங்கத்தில் நிலுவை உள்ள 2,271 கடன் மனுக்களைப் பரிசீலித்து அனுமதிக்கவும், கட்டுமானப்பணிகள் 3,210 புதிய கடன் மனுக்கள் நடைபெற்று வரும் 1,599 வீடு இலக்கின்படி கடன் மனுக்கள் பெற்றும், இந்த ஆண்டின் குறியீடான 3500 வீடுகள் உரிய காலத்திற்குள் — அதாவது 30-6-81க்குள் கட்டி முடிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

1-7-80-க்குப் பின் 31-8-80 முடிய 2,631 புதிய கடன் மனுக்கள் பெறப்பட்டுள்ளன. 152 கடன் மனுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 544 உறுப்பினர்கட்கு 13.34 இலட்சம் தொகை வழங்கப்பட்டுள்ளது. 116 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. திட்டம் துவங்கிய காலம் முதல் 31-8-80 முடிய இம்மாவட்டத்தில் 3,050 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் அரிசனங்கள் மட்டும் கட்டியுள்ள வீடுகள் 2,096 ஆகும். மேலும் 1,676 வீடுகளில் கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அவற்றில் 1,160 வீடுகள் அரிஜன உறுப்பினர்கள் கட்டி வருவதாகும்.

தன்னிறைவுத திட்டத்தினைச் செயல்படுத்தும் வட்டாரங்களில் அதிக அளவில் புதிய கடன் மனுக்கள் பெற்று வீடுகள் கட்ட ஏற்பாடுகள் இம்மாவட்டத்தில் செயயப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## புதுக்கோட்டை மாவட்டத்திற்கென தனியே உயர்கல்வி அலுவலர் அலுவலகம்

புதுக்கோட்டை வருவாய் மாவட்டத்திற்கெனத் தனியானதொரு உயர்கல்வி அலுவலர் அலுவலகம் ஒன்றும், அறந்தாங்கியில் மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகம் ஒன்றும் உருவாக்க தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.


ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் தனித்தனியாக உயர்கல்வி அலுவலர் இருக்க வேண்டும் என்ற ஒரே சீரான அமைப்பை உருவாக்கவும், கல்வி தொடர்பான மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றவும் வேண்டி இந்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டில் மூன்று மகளிர் பள்ளி ஆய்வாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்

தமிழ்நாட்டில் பெண்களுக்காகப் பள்ளிக்கூடங்கள் அதிகமாகத் திறக்கப்படுவதாலும், அதிகமான அளவில் பெண்கள் பள்ளிகளில் சேருவதற்கு முன்வருவதாலும், மகளிர் பள்ளிகளின் ஆய்வினைச் சீர்படுத்த வேண்டியுள்ளது. இதற்காக மகளிர் பள்ளிகளின் மூன்று ஆய்வாளர்களை (இன்ஸ்பெக்டரஸ் ஆப் ஸ்கூல்ஸ்) நியமிக்க அரசு அனுமதியளித்துள்ளது. இந்த அலுவலகங்கள் வடஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் திறக்கப்படும். இந்த அலுவலகங்களில் பணிபுரிவதற்கான ஊழியர்களையும் நியமிக்க அரசு அனுமதியளித்துள்ளது.







# தஞ்சை மாவட்டம்

தமிழ்நாட்டில் 15 அக்ரோ 'சர்விஸ்' செண்டர்கள் ரூ. 4 கோடி மூலதனத்துடன் இயங்கி வருகின்றன. சிறு விவசாயிகளுக்குத் தேவையான விவசாயக் கருவிகளை விற்பனை செய்தும், வாடகைக்குக் கொடுத்தும் வருகின்றன. தற்பொழுது தமிழக அரசு இத்தொழில் நிறுவனத்தின் மூலம் தொழில்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு தஞ்சை மாவட்டத்தில் புனக்குளத்தில் ரூ. 60 இலட்சம் செலவில் எண்ணெய் பிழியும் தொழிற்சாலை நிறுவி வருகிறது.

தஞ்சை மாவட்டத்தில் நெல்லில் இருந்து எடுக்கும் தவிட்டையும் கடலைப் பிண்ணாக்கையும் கொண்டு எண்ணெய் எடுத்து சோப்பு தயாரிக்கப் பயன்படுத்தப்படும்.

எண்ணெய் எடுக்கும்தொழிற்சாலைக்கான கட்டிடம் ரூ. 15 லட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது. கட்டிடத்தின் பெரும்பாலான பகுதிகள் முடிவடைந்து விட்டன. தொழிற்சாலைக்குத் தேவையான இயந்திரங்கள் பொருத்தும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. பாய்லர்களும் விரைவில் பொருத்தப்பட்டு மற்ற வேலைகள் விரைவில் முடிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு இத்தொழிற்சாலை உற்பத்தியைத் துவங்கும் என அக்ரோ தொழில் வாரியத் தலைவர் திரு கே. வியாகத் அலிகான் அவர்கள் கூறினார்கள்.

ஒரு நாளைக்குப் பிண்ணாக்கு தவிடு 100 டன் வரை அறைத்த எண்ணெய் எடுக்க முடியும். தஞ்சை மாவட்டத்தில் 12 லட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படுவதால் தவிடு பற்றாக்குறைக்கு வழி இல்லை. தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களில் கடலை அதிக அளவில் இருப்பதால், இத்தொழிற்சாலையைப் பொருத்தமட்டில் உற்பத்தி பாதிக்க வாய்ப்பில்லை.

இத்தொழிற்சாலையில் சுமார் 450 பேர்களுக்கு வேலை வாய்ப்பு உள்ளது. இத்திட்டத்தினால் கிராமப்புற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வசதிகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, ஆரம்பப் பள்ளிகளில் திறமையாகப் பணியாற்றிய 8 ஆசிரியர்கட்கு தமிழக அரசின் வெள்ளிப் பதக்கங்கள் கிடைத்திருக்கின்றன. திருவிடைமருதூரில் உள்ள அரிசன நலத்துறைப் பள்ளி ஆசிரியருக்கும் இப்பதக்கம் கிடைத்துள்ளது.

அரசு மேல் நிலைப் பள்ளிகளில் இரசாயனக் கூடம் அமைத்துக் கொள்ள ஒரு மேல்நிலைப் பள்ளிக்கு ரூ. 1.65 லட்சம் வீதம் 27 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ. 44.55 லட்சம் அரசு அனுமதித்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் 34 ஊராட்சி ஒன்றியங்களில் ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் 4 மாணவர்கள் வீதம் 136 மாணவர்கள் தேர்வு மூலம் தகுதி அடிப்படையில் (சாதி அடிப்படை இல்லாமல்) தேர்ந்தெடுத்து வெற்றி பெற்ற மாணவருக்கு மாணவர் விடுதியில் தங்கிப் படிப்பவரானால் ஆண்டிற்கு ரூ. 1000-மும் விடுதியில் தங்கிப் படிப்பவரல்லாதவராக இருந்தால் ரூ. 500-ம் அரசு தேர்வு செய்யாத பள்ளியிலிருந்து தேர்வு எழுதிய மாணவராக இருந்தால் ரூ. 150ம் அரசு உதவி அளிக்கிறது.

**வள்ளுவன் தன்னை உலகினுக்கே -தந்து**
**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு**

இம்மாவட்டத்தில் 102 மேல் நிலைப் பள்ளிகளும் 157 உயர் நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. இவ்வாண்டு கீவளூர், தேலூர், இராஜாமடம், திருமக்கோட்டை, பள்ளத்தூர், இலுப்பைத் தோப்பு, ஒரத்தநாடு (பெண்கள்) குடவாசல் (பெண்கள்), ஆகிய இடங்களிலுள்ள உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக மாற்ற அரசாணை பிறப்பித்துள்ளது. அரசு உதவி பெறும் தனியார் துறையைச் சேர்ந்த திருத்துறைப்பூண்டி செயின்ட் தெரசா கும்பகோணம் சரஸ்வதி, முத்துப்பேட்டை பெரியநாயக பெண்கள் பள்ளி, அம்மாபேட்டை ரெஜினா பள்ளி, தஞ்சை சத்திரம் இலாகா இராஜாபள்ளி, வழுத்தூர் செவகத்தள இஸ்லாம் பள்ளி, ஆவ்ணியாபுரம் கிரசண்ட் பள்ளி, மஞ்சக்குடி சுவாமி தயானந்தர் பள்ளி ஆகியவைகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்ற அரசு அனுமதித்துள்ளது.

சேங்காலிபுரம், திருவாடுதுறை தஞ்சை மேம்பாலம், புலிவலம், வெங்கரைக் கோட்டை, திருமங்கலக் கோட்டை, மேலக் காலனி, ஏனாதிக் கரம்பை, தாரகம் ஆகிய ஒன்பது இடங்களில் அரசு உயர்நிலைப் பள்ளிகள் துவங்கப்படும்.

# கிராம மின்சாரக் கூட்டுறவுச் சங்கம்

கிராம மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள் என்பது புதுடெல்லியிலுள்ள கிராம மின்சார கார்ப்பரேஷனின் (Rural Electrification Corporation) உதவியுடன் ஏற்படுத்தப்பட்டதாகும். இந்தச் சங்கங்களின் முக்கிய நோக்கம், பொதுமக்களுக்கும் உறுப்பினர்களுக்கும் மின்சாரம் நல்லமுறையிலும் சிக்கன முறையிலும் கிடைக்கச் செய்வதாகும். மேலும் கிராமத் தொழிலுக்கும் விவசாயத்தை மேம்படுத்தும் திட்டத்திற்கும் மின்சாரம் வழங்குவதும் முக்கிய நோக்கமாகும். இந்தப்பணிகள் தற்போது மின்சார வாரியத்தால் கவனிக்கப்பட்டு வருகிறது. மின்சார வாரியத்துக்கு இந்த மாநிலம் முழுவதற்குமாகக் காரியங்களைக் கவனிக்க வேண்டியிருப்பதால், மின்சாரத்தை உற்பத்திச் செய்வதிலும் பங்கீடு செய்து அனுப்புவதிலும் கிராமப்புறத்திலும்தொழில் நிறைந்த நகர்ப் புறத்திலும் உள்ள மக்களின் தேவையை முன்னுரிமை கொடுத்து முழுமையான நிறைவு அளிக்கும் வகையில் பணியாற்றிட இயலாத நிலை. இந்நிலையில் கைகொடுக்கும் தோழனாகப் பணியில் பங்கேற்றிடும் பங்காளியாக பணியாற்ற முன்வந்துள்ளன கிராம மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள்! கிராமப் புறத்திற்கு முழுமையாக மின்சாரம் அளிக்கும் நோக்கத்துடன் வரையறுக்கப்பட்ட எல்லைகளுக்குள் கிராமப்புறங்களில் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்படுகின்றது. அந்தக் கிராமக் கூட்டுறவுச் சங்கம் மக்களின் தேவையை நிறைவேற்ற முழுக் கவனத்தையும் செலுத்தும். இந்தத் திட்டத்தின் கீழ் தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்தில் கிராம மின்சார கூட்டுறவுச்சங்கம் துவக்கப்பட்டுள்ளது.

குடந்தை நகரம் நீங்கலாகவுள்ள குடந்தை மற்றும் திருவிடைமருதூர் வட்டங்களுக்குப் பணியாற்றிடும் வகையில் அமையப் பெற்றுள்ள குடந்தை கிராம மின்சாரக் கூட்டுறவுச் சங்கம் இவ்வகையில் தமிழ்நாட்டிலேயே முதன் முதலாக அமைக்கப்பட்டுள்ள சங்கமாகும். தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து விரைவில் மின்சாரத்தைப் பகிர்ந்துளிக்கும் வேலையை இச்சங்கம் ஏற்றுக்கொள்ள இருக்கிறது. இது கூட்டுறவு நிறுவனமாதலால் வாடிக்கையாளர்களும், மற்றவர்களும் இவற்றில் அங்கத்தினராகலாம். அதனால் கிடைக்கக்கூடிய சலுகைகளையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

1. 35 இலட்சம் மாநில அரசு முதலீடு (தமிழ்நாடு அரசு தற்போது 10 இலட்ச ரூபாயைத் தன் பங்காகக் கொடுத்துள்ளது.)

2. மின்சார வாரியத்தின் பங்கு மூலதனம் ரூ. 30.71 இலட்சம்.

3. மின்சார இணைப்புள்ளவர்கள் உபயோகிப்பாளர்களின் பங்கு மூலதனம் ரூ. 1 இலட்சம்.

4. புதுடெல்லி கிராம மின்சார கார்ப்பரேஷனிலிருந்து கடன் ரூ: 147.12 இலட்சம். ஆகக் கூடுதல் ரூ. 222.83 இலட்சம்.

இச்சங்கத்தின் ஆளுகை எல்லைக்குள் மின்சாரம் உபயோகிப்பவர்கள் விவரம்.

| | |
|---|---|
| 1. வீட்டு உபயோக வாடிக்கையாளர்கள். | 15,000 |
| 2. வணிக உபயோகிப்பாளர்கள் | 3,800 |
| 3. தொழிற் சாலைகள் | 500 |
| 4. விவசாயம் | 1,200 |
| 5. உயர்ந்த அளவு மின்சாரம் பயன்படுத்துவோர் | 1 |
| 6. தெருவிளக்கு | 12,000 |

கும்பகோணத்தில் காமராஜ் வீதி, பிஷப் வீடு விஸ்தரிப்பில் முதல் மாடியில் இச்சங்கத்தின் தலைமை அகம் உள்ளது. மேலும் கிளை அலுவலகங்கள் குடந்தை, சுவாமிமலை, ஆடுதுறை, திருநாகேஸ்வரம், நாச்சியார்கோவில் ஆகிய இடங்களில் வைக்கப்படும். நரசிங்கம்பேட்டை, கதிராமங்கலம், பந்தநல்லூர், ஆகிய ஊர்களில் வசூல், மேலும் பழுது பார்க்கும் நிலையங்கள் திறக்கப்படும். வாடிக்கையாளர்கள் அவர்கள் ஊரிலுள்ள உதவி மையங்களிலும், வசூல் மையங்களிலும் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தலாம். புது இணைப்புக்கள் முதலியவைகளைப் பெறலாம்.

எனவே பொதுமக்கள் அனைவரும் சங்கத்தின் உறுப்பினர்களாகவும், சங்கத்தின் வேலைத் திட்டங்களில் பங்கு கொள்ளவும் கோரப்படுகிறார்கள். நுழைவுக் கட்டணம், பங்குக் கட்டணம், உறுப்பினர் கட்டணம் ஆகியவை சம்பந்தமாகத் துணை மையங்களில் தொடர்பு கொள்ளலாம். ஒரு பங்கு ரூ. 10-ஆகவும் அங்கத்தினர் நுழைவுக்கட்டணம் ரூ. 2 ஆகவும் நிர்ணயிக்கப்படுகிறது.

சங்கத்தின் உறுப்பினர்கள், மேலும் வாடிக்கையாளர்களின் நன்மைக் காக விவசாயக் கருவிகள், இயந்திரங்கள், மின்சாரக் கருவி இயந்திரங்கள் பழுது பார்க்கும் தொழிற்கூடம் நிறுவப்படும்.

**இச்சங்கத்தின் முக்கிய நோக்கங்கள்:**

* வாடிக்கையாளர்களுக்குப் பத்திரமாகவும் சிக்கனமாகவும் மின்சாரம் உபயோகிப்பதற்குக் கற்றுக் கொடுப்பது.
* பலதரப்பட்ட மின்சாரம் உபயோகிக்கும் வகைகளின் முன்னேற்றத்தையும், உறுப்பினர்களுக்குள் தன்னம்பிக்கை, கூட்டுறவு, சுய உதவி, நூதன மின்சார உபயோகத்தை ஊக்கப்படுத்துதல்.
* மின்சாரத்தை முன்னேற்றமான காரியங்களுக்குத் தீவிரமாக உபயோகிக்கப்படுத்துதல்.

கும்பகோணம் கிராமிய மின்சாரக் கூட்டுறவுச் சங்கம் மின்விநியோகம் பொறுப்பினை தமிழ்நாடு மின் வாரியத்திலிருந்து ஏற்றுக்கொண்டு 1.7.80 முதல் செயல்பட்டு வருகிறது. இச்சங்கம் ஜூலைத் திங்களில் (1980) கீழ்க்கண்டவாறு புதிதாக மின் இணைப்பு வழங்கியுள்ளது.

| | |
|---|---|
| 1. விவசாய உபயோகத்திற்கு | 7 |
| 2. தொழில் நிறுவனங்களுக்கு | 3 |
| 3. வணிகம் மற்றும் வீட்டு உபயோகத்திற்கு | 83 |

இச்சங்கத்தின் விவகார எல்லையிலுள்ள பேரூராட்சி ஊராட்சிகளின் பராமரிப்புப் பணியின் தொடர்பாக ஊராட்சிகளிலிருந்து வெவ்வேறு இனங்களின் கீழ் சுமார் 12,000 தெரு விளக்குகளைப் பெற்று பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவை மின்னொளி. அவ்வொளியினை மக்கள் மேலும் சீரான முறையில் பெற்றிட கிராம மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள் பல்கிப் பெருகிட வேண்டும்!





# வனவிலங்குகளைக் காப்போம்!

**வி. பா. துரைராஜ்,** இ.வ.ப.
**கானுயிர்க் காவலர், சென்னை.**

'வனவுயிர்' அல்லது ''Wildlife'' என்பதற்கு 'மனிதனால் பழக்கப்படாத விலங்கினம், புள்ளினம் மற்றும் அவனால் வளர்க்கப்படாத தாவர இனம் இவை யாவும் சார்ந்துள்ள இயற்கைச் சூழல்'' என்று விளக்கம் கூறலாம். இந்த இயற்கைச் சூழலின் இன்றியமையாத தொடர்புகள் நில, நீர் வளமாகும். இவை யாவும் ஒன்றையொன்று நாம் நினைப்பதைவிட இணைந்து சார்ந்தவை. இதையே தற்போது, Biosphere என்கிறோம். இத்தொடர்பு பல கிளைகளாகப் பிரிந்து ஒன்று சேர்ந்து, ஒன்றோடொன்று பிணைந்து எளிதில் புரிந்து கொள்ள முடியாத ஒன்றாக இருப்பினும் மிக எளிமையான முறையில் அதை விளக்கிக் கூறலாம்.



இத்தொடர்பு இயற்கையாக தானாக இயங்கி வருவதில் ஆங்காங்கே மனிதனின் குறுக்கீட்டில் தடை ஏற்பட்டு அதன் விளைவாக குறிப்பிட்ட இடங்களில் பஞ்சமும் வெள்ளமும் அநேகமாக ஆண்டுதோறும் தவறாத ஆனால் அழையா விருந்தினர்களாக வருகின்றன. இந்தச் சூழலின் முக்கியத்துவம் தற்போது உணரப்பட்டு இதற்கென விரைவில் தனித்துறையே இந்திய அரசினால் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

நம் நாட்டு நிலவளத்தை சீர் நோக்குங்கால் மொத்த நிலப் பரப்பான 304 மில்லியன் எக்டேரில் ஏறக்குறைய பாதிநிலம் நீரினாலும், காற்றினாலும் அரிப்புக்குள்ளாகியுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அரிக்கப்படும் மண், நீர் நிலைகளில் சேர்ந்து பாசன வசதியையும் குறைக்கக் காரணமாகிறது. வளமிக்க மேல் மண் 2 செ.மீ. கனத்திற்கு உண்டாக்கப்பட 500 ஆண்டுக் காலமாகும். இத்தகைய மண் ஒருசில மணித் துளிகளில் அரிக்கப்பட்டு மண் வளத்தையும் இழக்கிறது. இதற்கான முக்கியக் காரணம் தாவரங்கள் அளவுக்கு மீறி அழிக்கப்படுவதே.

நம் நாட்டின் வனவளம் 75 மில்லியன் எக்டேர் நிலப்பரப்பில் பரந்திருந்தாலும் உண்மையில் அதிலும் பாதிக்குக் குறைவான பரப்பில்தான் காடுகள் உள்ளன. மற்றவை பெயரளவில் தான் காடுகளாகும்.

நமது நீர் நிலைகளும், ஆறுகளும், கடலும் கூட மனிதனின் குறுக்கீட்டிற்குத் தப்ப முடியவில்லை. மனித சமுதாயத்தின் கழிவும், தொழிற்சாலைகளின் கழிவும் இவற்றில் நச்சுப்பொருட்களாகக் கலக்கின்றன.

காற்று மண்டலத்திலும் கலப்படம் செய்யக் கலங்கவில்லை மனிதன். தொழிற்சாலைகளின் வாயுக் கழிவும், பெருகிவரும் ஊர்திகளின் வாயுக் கழிவும் மற்றவையும் பெரு நகரங்களில் காற்று மண்டலத்தில் அனுமதிக்கக் கூடிய அளவிற்கு மேல் கலந்து உயிரினத்தையே கலங்க வைக்கின்றன.

வனவுயிரின் வளத்தில் நம்நாடு எந்நாட்டிற்கும் குறைந்ததல்ல. சென்ற சில நூற்றாண்டுகளுக்குள் நம் நாட்டில் ஐந்து விலங்கினங்களே (புள்ளினங்கள் உட்பட) மறைந்து போயின. 103 வகைகள் எண்ணிக்கையில் மிகக் குறைந்து அபாய நிலையில் இருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளன. உலகில் மொத்தம் அவ்விதம் அறிவிக்கப்பட்டுள்ளவற்றின் எண்ணிக்கை ஆயிரத்திற்கும் மேலாக உள்ளது. நம் தமிழ்நாட்டில் கோவை, சேலம், திருநெல்வேலி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு கூட கணிசமான எண்ணிக்கையிலிருந்த புலிகளைத் தற்போது காண்பது மிக அரிதாகிவிட்டது. Leopard என்னும் சிறுத்தை முன்பு தஞ்சை, சென்னை தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் காணப்பட்டவை இன்று எங்கோ, எப்போதோ சேலம், தருமபுரி, நீலகிரி, மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் காணப்படுகிறது.

'' Cheetah '' என்னும் வேட்டைச் சிறுத்தையினம் நம் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவிலிருந்தே அழிக்கப்பட்டு விட்டது. கரடி, சாம்பர் என்னும் கடமான், புள்ளிமான், காட்

டெருமை, ''நீலகிரி டார்'' எனப்படும் வரையாடு, யானைகள், நீலகிரி லங்கூர் என்னும் குரங்கு வகை முதலியவை எண்ணிக்கையில் மிக மிகக் குறைந்து வந்தன. வெளிமான் ( Black buck ) சிங்கவால் குரங்கு ( Lion tailed macaque ) சதுப்புமுதலை ( Marsh Crocodile ) முதலானவை அழியக் கூடிய நிலையிலிருப்பதால் தனி பாதுகாப்பளிக்கப்பட்டுள்ளன.

இவற்றிற்குப் பாதுகாப்பளிக்க கிண்டி தேசிய பூங்கா, முதுமலை, ஆனைமலை, கோடிக்கரை, களக்காடு, முண்டந்துறை சரணாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பறவைகளுக்காக வேடந்தாங்கல், மற்றும் வேட்டங்குடி சரணாலயங்களும் உள்ளன. இவை தவிர குளிர்காலங்களில் மட்டும் பிற நாடுகளிலிருந்தும் இடங்களிலிருந்தும் வரும் பறவைகளையும் இங்குள்ள பறவைகளையும் பாதுகாக்க மாநிலமெங்கணும் பல புகலிடங்கள் உள்ளன. மறைந்து வரும் சதுப்பு முதலையினத்தையும் பாதுகாக்கத் தனி முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இவைகள் சிறிய குட்டிகளாக இருக்கையில் வல்லூறு முதலிய பறவைகளாலும், பிற காரணங்களாலும் இறந்து விடுகின்றன. எனவே முதலைகளின் முட்டைகளைச் சேகரித்து, பொரிக்க வைத்து, குட்டிகளை வளர்க்க, சாத்தனூர் அணை, ஒகேனக்கல் மறறும் அமராவதியில் தனியிடங்கள் உள்ளன. குட்டிகள் சுமார் 1மீ. நீளமாக வளர்ந்தவுடன் தம்மைத் தாமே பாதுகாக்கும் திறனைப் பெறுகின்றன. இதற்கு சுமார் 2 அல்லது 2½ ஆண்டுகளாகின்றன. அவற்றை முட்டைகள் சேகரித்த பகுதிகளிலும் நீர்த்தேக்கங்களிலும் விட்டுவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. அத்திட்டத்தின்படி 1979 மார்ச் மாதத்தில் 130 முதலைக் குட்டிகள் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தில் விடப்பட்டுள்ளன.

காடுகளுக்கு வெளியே சமீப காலம் வரை விலங்கினங்களுக்குப் (புள்ளினம் உட்பட) பாதுகாப்பு சரிவர அளிக்கப்பட இயலாமல் இருந்த குறையை 1972 வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம் போக்கியது. இதன்படி காடுகளுக்கு வெளியே கூட வேட்டையாட தனி உரிமம் ( Licence ) கானுயிர்க் காவலரிடம் பெற வேண்டும். அழியக் கூடிய நிலையிலுள்ள இனங்களையோ, அவற்றினாலான பொருட்களையோ வைத்திருப்பவர் முதலிலேயே அறிவித்துப் பதிப்பித்தல் வேண்டும். அவற்றை வாங்கவா விற்கவோ முன்னதாகவே அனுமதி பெறுதல் வேண்டும். வனவிலங்குப் பொருட்களின் வணிகர்கள் தனி உரிமம் பெற்று மாதாந்தர அறிக்கை அனுப்புவதவசியம். இவற்றாலும் பல வனவிலங்குப் பொருட்களின் ஏற்றுமதி தடைசெய்யப் பட்டிருப்பதாலும் வனவிலங்குகளுக்குக் காடுகளுக்கு வெளியே கூடப் பாதுகாப்புக் கிடைக்கிறது.

வனவிலங்குகள் மட்டுமின்றி சில தாவரவகைகள் கூட முற்றிலும் அழியக்கூடிய நிலையிலுள்ளனவாக இருக்கலாம் என்று கருத இடமுள்ளது. வனவிலங்குகளைப் பற்றி ஆராய்ந்த அளவில் இத் தாவர வகைகளைப் பற்றி ஆராயப் படவில்லை. தற்போது 'பிரேசில்' நாட்டில் ஒருவகை மரத்திலிருந்து ''டீசல்'' எண்ணெய்க்கான மூல திரவம் கண்டு பிடிக்கப்பட்டது போல் ஏன் ஆச்சரியப்படக்கூடிய பல புதிய கண்டுபிடிப்புகள் மேலும் இருக்க முடியாது? உலகில் வேறெந்தப் பகுதியிலும் காணக்கிடைக்காத சுமார் 5000 தாவர வகைகள் நம் நாட்டில் மட்டுமே உள்ளன என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். கல்கத்தா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் டி.எம் தாஸ் தனது ஆராய்ச்சியின் விளைவாக ஒரு மரத்தின் சேவையைக் கணித்துள்ளார். 50 ஆண்டுகள் வரை வாழும் ஒரு சாதாரண அளவுள்ள மரம் தனது ஆயுட்காலத்தில் ரூ. 18 லட்சம் பெறுமான சேவையைச் செய்வதாக அவர் கணித்துள்ளார். ஒவ்வொரு ஆண்டும் அம்மரம் ரூ. 5000- பெறுமான பிராண வாயுவை (Oxygen) தயாரித்து வெளிவிடுகிறது என்றும், புரதப் பொருளாக மாற்றும் சேவை ரூ. 20,000- பெறுமெனவும் காற்றைச் சுத்திகரிக்கும் பணி, நாம் செய்ய முற்பட்டால் ரூ. 5 லட்சம் செலவாகுமெனவும், மரம் வெட்டப்படுமாயின் அங்கு அதே அளவு மண் வளத்தைப் பாதுகாக்க 50 ஆண்டுகளில் ரூ. 3 லட்சம் செலவாகும் என்றும், மரத்தின் நிழலிலும் பாதுகாப்பிலும் தங்கும் பறவைகள், விலங்குகள் முதலியவற்றிற்கு மரத்திற்குப் பதிலாக அவற்றை அளிக்க ரூ. 3 லட்சம் செலவாகும் எனவும் அவர் கணித்துள்ளார். இத்தகைய மகத்தான சேவை புரியும் மரத்தினை ''மகவுக்கொரு மரம்'' என்று ஒவ்வொரு குழந்தைக்கும் ஒன்றென நட முற்படுவோம்.




இயற்கையிலிருந்து நாம் படித்துக் கொள்ள வேண்டிய பாடங்கள் இன்னும் பல உள்ளன. உதாரணத்திற்கு குடும்பக் கட்டுப் பாட்டை எடுத்துக் கொள்வோம். கருநாடக மாநிலத்திலுள்ள பண்டிப்பூர் சரணாலயத்தில் செந்நாய்களின் வாழ்க்கையை ஆராய்ந்தபோது, அவை, கிடைக்கக்கூடிய உணவை விட அதிகமாக தங்கள் எண்ணிக்கை அதிகரிக்காமலிருக்கக் குடும்பக் கட்டுப்பாட்டை அனுசரிப்பது தெரிந்தது. அவை எப்போதும் 6, 8 அல்லது 10 என்று கூட்டமாகவே இரையைத் தேடும். அக்கூட்டத்தில் ஓர் ஆண்டில் ஒன்று அல்லது இரண்டுமட்டுமே தாயாகும் எனவும், மற்ற பெண்நாய்கள் அக்குட்டிகளைத் தாயுடன் தாயாக வளர்க்கின்றன என்றும் தெரிந்தது.

மதிப்பிடற்கரிய இந்த இயற்கையின் பரிசினை, நிலம், நீர், காற்று, தாவரம், விலங்கினம் சேர்ந்த இந்த இயற்கைச்சூழலை மிக தாமதமாகுமுன் பாதுகாத்தல் நம் தலையாய கடமையாகும்.



# அண்ணல் பிறந்த நாள் விழா!



கருணை மகான் காந்தியடிகளின் 112வது பிறந்த நாள்விழா, சென்னை - கிண்டியில் உள்ள காந்தி மண்டபத்தில் சீரோடும் சிறப்போடும் கொண்டாடப்பட்டது.

மேதகு தமிழக ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், இவ்விழாவை முன்னின்று நடத்தினார். விழா நாளான அக்டோபர் 2ஆம் நாளன்று அதிகாலை முதல் இரவு 10 மணிவரை விழாத் தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகளிலும் அவர் பங்கேற்றார்.

அரிசன நலநாளாக முதல் நாள் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதைத் தொடர்ந்து -ராட்டை, கிராமத் தொழில்கள் நாள், இளைஞர் உழைப்பு தான நாள், மகளிர் நலம் - தேசீய ஒருமைப்பாடுநாள், அகிம்சை நாள், புகைபிடித்தல் - போதைப் பொருள்கள் தவிர்த்தல் - மது விலக்கு நாள் என ஒரு வார விழாவாகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது காந்தியடிகளின் பிறந்த நாள் விழா.

## அரிசன நலநாள்

காந்தியார் பிறந்த அக்டோபர் 2-ஆம் நாளன்று காலை 7.30க்கு, மேதகு ஆளுநர் அவர்கள் காந்தியார் சிலைக்கு மாலையணிவித்தார். நூற்பு வேள்வியும், தொடர் பஜனையும் நடந்தது. இதையடுத்து சேத்துப்பட்டிலே இருக்கின்ற அரிசன சேவாசதன மகளிர் விடுதியில் காலையுணவு, அண்ணா மேம்பாலத்தினருகே உள்ள கிராமோத்யோக் சென்டரில் கதர் விற்பனையைத் துவக்கி வைத்தல், அண்ணாசாலை கிராமோத்யோக் பவனில் கதர் விற்பனையைத் துவக்கி வைத்தல், தியாகராய நகரில் உள்ள தாக்கர் பாபா வித்தியாலயாவில் மதிய உணவு சமபந்தி, அகரம் பேருந்து நிலையத்தில் காந்தியார் சிலை திறப்பு ஆகிய பல்வேறு நிகழ்ச்சிகளிலும் மேதகு ஆளுநர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

அன்று மாலை 3 மணிக்குமேல் கிண்டியில் உள்ள காந்தி மண்டபத்தில் நிகழ்ச்சிகள் தொடங்கின.

திருமதி இந்திரா குழுவினர், பி.எல். சுந்தரராஜன் குழுவினர், ஸ்ரீ சாரதாதேவி பஜன் மண்டலி, எஸ். பாண்டுரங்கம் குழுவினர், வி.தாமோதரன் குழுவினர், சரசுவதி நடராசன் குழுவினர், காந்திமதி சந்தானம் குழுவினர், ராஜேஸ்வரி தியாகராசன் குழுவினர், கலாச்சேத்திரா குழுவினர் ஆகியோர் பக்திப் பாடல்களைப் பாடினார்கள்.

5.30 மணியளவில், கலைமாமணி சீர்காழி கோவிந்தராசன் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

## கண்காட்சி

காந்தி மண்டபத்தின் இடது விலாப்புறத்தில், காந்தியார் பிறந்த நாள் விழாவை முன்னிட்டமைக்கப்பட்டிருந்த கண்காட்சியினை 6.30 மணியளவில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்புத்துறை, கதர் கிராமத் தொழில் வாரியம், தமிழ்நாடு மாநில பனைவெல்லக் கூட்டுறவு இணையம், மத்திய அரசு புத்தக வெளியீட்டுப்பிரிவு, அரிசன ஆதிவாசிகள் நலத்துறை, மத்திய அரசு செய்தித்துறை கண்காட்சிப் பிரிவு, காவல் துறை, ஊரக வளர்ச்சித் துறையினர் ஆகியோர் இக் கண்காட்சியில் அழகுற அரங்குகள் அமைத்திருந்தனர்.

7 மணிக்குத் தொடங்கிய பொதுக்கூட்ட நிகழ்ச்சியில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களும், மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் திரு எம். விஜயசாரதி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இக் கூட்டத்தில், கலப்பு மணம புரிந்து கொண்ட ஆறு தம்பதியர் மேதகு ஆளுநரிடம் ஆசி பெற்றனர்.

## ஆளுநர் உரை

மேதகு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

'சாதி மத பேதமற்ற சமுதாயம் காண அரும்பாடுபட்டவர் மகாத்மா காந்தியடிகள் ஆவார். அவருடைய குறிக்கோளைச் செயல்படுத்தும் வகையில் இங்கே இந்த மேடையில் சிலருக்குக கலப்புத் திருமணம் செய்து வைத்தமைக்கு நான் பெரிதும் மகிழ்கிறேன். சாதி மதப் பாகுபாடுகள் இந்த நாட்டை விட்டு அகல காந்தியாரின் வழியில் நாமெல்லாம் பெரிதும் பாடுபட வேண்டும்.

கிராமங்கள் இல்லாமல் நகரங்கள் இல்லை. இதை நன்கு உணர்ந்திருந்ததால்தான் காந்தியடிகள் கிராமப் புறங்களில் சிறு தொழில் வளர்ச்சி அவசியமென்று வலியுறுத்தினார்.

நாமெல்லாம் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள்; ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நமக்குள் எந்தப் பாகுபாடும் கிடையாது என்று கூறி அந்த நிலைகாண அவர் அகிம்சை வழியில் பாடுபட்டார். அவரது அந்த உயரிய குறிக்கோள்களையும், கொள்கைகளையும் நிறைவேற்ற இந்த நாளில் நாம் உறுதி பூணுவோம்!

## மாண்புமிகு நிதி அமைச்சர்

1970 முதல், புகுமுக வகுப்பில் முதல் மதிப்பெண் வாங்கிய அரிசன மாணவ - மாணவியருக்கு காந்தி நிதி உதவித்தொகையிலிருந்து பரிசுத் தொகைக்கான காசோலையும், ஏழை எளிய அரிசனத் தொழிலாளர்க்கு இலவசச் சவரக் கருவிகளும், சலவைப் பெட்டிகளும் வழங்கி மாண்புமிகு நிதியமைச்சர் திரு நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசியதாவது:

இந்தியா பின்னடையக் காரணம் தீண்டாமை—சாதி மதம்-பெண்ணடிமை ஆகியவைகளே என்று கண்டார் காந்தியார்.

எனவே, உயிரையும் துச்சமென மதித்து அவற்றை இந்த நாட்டிலிருந்து நீக்கப் பாடுபட்டார். அவர் மாண்டு இத்தனையாண்டுக் காலம் ஆகியும் அந்த நிலைமைகள் மாறாமலிருப்பதைக் காண்கிறோம். இந்து முஸ்லீம் கலவரம் மூள்வதைப் பார்க்கிறோம்.

அமெரிக்காவோடு, ரஷ்யாவோடு, ஜப்பானோடு இணையாக நிற்க நமக்குத் தகுதி இருக்கிறதே தவிர - அதற்கான திறமையை, வலிமையை, ஒழுங்கை, கட்டுப்பாட்டை நாம் வளர்த்துக் கொண்டிருக்கிறோமா என்றால் இல்லை. நாம் மனிதர்களாக வாழ்கிறோமே தவிர, மனிதப் பண்பை நாம் பெற்றோமா என்றால் அதுதான் இல்லை.

பண்பாட்டை வளர்க்காத கல்வியால் பயனில்லை என்றார் காந்தியார். ஆனால், இந்த நாட்டில் இப்போது என்ன நிலை இருக்கிறது?

மனிதனையே மனிதன் மதிக்காத நிலை இந்த நாட்டில் இருக்கிறவரை தமிழனைத் தமிழனே மதிக்காதவரை இந்தியனை இந்தியனே மதிக்காதவரை சாதி மதப் பாகுபாடுகள் அந்த அளவுக்கு வளர்ந்திருக்கிற வரை அயல் நாடுகளிடையே நாம் எப்படி மதிப்பைப் பெறமுடியும்?

எனக்குப் படிப்பு வேண்டாம், கல்லூரியை மூடு என்கிற நிலை இந்த நாட்டைத் தவிர வேறு எந்த நாட்டிலாவது இருக்கிறதா? மற்ற நாடுகளுக்கு ஈடாக இந்த நாட்டைக் கொண்டு வரும் ஆற்றல், மாணவ மணிகளே! உங்களுக்கு உண்டு. உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். படிக்கிற வாய்ப்பு எல்லோருக்கும் கிட்டுவதில்லை. எனவே அந்த நல் வாய்ப்பைத் தவிர்ப்பதில் ஆர்வம் காட்டாதீர்கள்.'

—இவ்வாறு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசினார்.

**மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர்:**

மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் திரு விஜயசாரதி அவர்கள், தீண்டாமை ஒழிப்புக் கொள்கை என்ற தலைப்பிலான கட்டுரைப் போட்டியிலும், பேச்சுப் போட்டியிலும் வெற்றி பெற்றோர்களுக்குப் பரிசுகள் வழங்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

அரிசனங்களைக் கடவுளின் குழந்தைகள் என்று குறிப்பிட்டார் காந்தியார்.

இன்றைய இந்தியப் பெருநாட்டில் தீண்டாமை தலைவிரித்தாடுவதை நாம் பார்க்கிறோம். கட்சிப் பாகுபாடுகளை மறந்து நாம் பிறப்பால் தமிழர் நாட்டால் இந்தியர் என்கிற ஒரே நினைவோடு தீண்டாமை அகலப் பாடுபட வேண்டும்.

அரிசன மக்களின் முன்னேற்றத்திற்காக - நல்வாழ்விற்காக இந்த அரசு 130 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. எனவே, இந்த அரிசன நல நாளில் தமிழக அரசுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி செலுத்திக் கொள்ள நாமெல்லாம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம்.




—இவ்வாறு மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

விழா முடிவில் அரிசன நலத்துறை இயக்குநர் திரு எம்.கே. கோமேதகவேலு, ஐ. ஏ. எஸ் அவர்கள் நன்றி கூறினார்.

அதனையடுத்து மத்திய அரசு செய்தி ஒலி பரப்புத்துறை ஒலி - ஒளிக் காட்சிப் பிரிவினரின் 'நந்தனார்' நடன நாடகம் சிறப்புற நடைபெற்றது.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**பி. எல். ராஜேந்திரன்**

## தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம்



**ஓய்வு பெறும் காவலர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கென நிறுவனம் ஒன்றினை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.**

அதற்காக 1956-ஆம் ஆண்டில் பொது நிறுவனங்கள் சட்டத்தின் அடிப்படையில் உடனடியாக வரையறுக்கப்பட்ட பொது நிறுவனம் ஒன்றினை நிறுவ அரசு ஆணையிட்டுள்ளது. சென்னையில் தலைமையிடத்தைக் கொண்டு இயங்கவிருக்கும் இந் நிறுவனம் "தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகம்" என அழைக்கப்படும்.

இக்கழகம் முறைப்படுத்தப்பட்டு இயங்கும் வரை இதற்காக, காவல்துறைத் தலைவர் (Inspector General of Police) பதவிக்குச் சமமான அந்தஸ்தில் ஒரு சிறப்பு அலுவலர் நியமிக்கப்பட அரசு ஆணையிட்டுள்ளது. இவர் கழகம் பணியினை தொடங்கும்போது கழகத்தின் நிர்வாக இயக்குநராக இருப்பார். கழகத்தின் பொறுப்பு மூலதனம் 1 கோடி (ரூபாய் ஒரு கோடி மட்டும்).

வளர்ச்சிப் பாதையில் தமிழ் நாடு

# குடிசைப்பகுதி மாற்று வாரியத் தலைவருடன்

## சிறப்புப் பேட்டி...



**டி.கே. கபாலி, எம்.எல்.ஏ.,**
**தலைவர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்**

சென்னை மாநகரைச் சுற்றிவரும் ஒருவரின் கண்களுக்கு விருந்தாக பல காட்சிகள் தென்படுகின்றன. அவை 10 ஆண்டுகளுக்கு முன்பு இல்லாதவை.

உதாரணமாக, நகரின் பல்வேறு பகுதிகளில் அடுக்கடுக்காக ஆகாயம் தொட்டு நிற்கும் குடியிருப்புகளின் அணிவகுப்பு அனைவரின் பார்வையிலிருந்து தப்பாது.

ஆம்!

சென்னை நகரம் சீர்பெற்று வருகிறது. மாநகரின் அலங்கோலச் சின்னங்களான குப்பங்கள், குடிசைப் பகுதிகள் மறைகின்றன.

ஆரோக்கியத்திற்கு ஊறுவிளைவிக்கும் சுகாதாரமற்ற சுற்றுப்புறங்களில் வசிக்கும் இந்நகரின் மக்கட்தொகையில் மூன்றிலொரு பகுதியினரான குடிசைவாழ் மக்கள் சிறந்த வசதிகளைப் படிப்படியாகப் பெற்று வருகின்றனர்.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்மூலம் குடிசை மக்களுக்கு நல்ல வசதியான குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன. இந்தச் சிறப்பான புதிய முன்னேற்றங்களுக்கான பெருமைகள் அனைத்தும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தையேச் சாரும்.

குடிசைமாற்று வாரியத்தின் தலைவர் திரு. டி.கே. கபாலி எம்.எல்.ஏ அவர்கள் 'தமிழரசு' இதழுக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் கூறியதாவது:

**கேள்வி: தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் நோக்கம் என்ன?**

பதில்: ஒரு குறிப்பிட்ட காலவரம்பிற்குள் சென்னை மாநகரில் உள்ள அனைத்துக் குடிசைப்பகுதிகளையும் அகற்றுவது என்றும், குடிசைகளை மாற்றி வீடுகளைக் கட்டி மேம்படுத்துவதும் அரசின் திட்டமாகும். புதிதாக உருவாகும் குடிசைகளை (ஆக்ரமிப்புகளை) தடுப்பது-தனியார் நிலத்தில் வசிக்கும் குடிசைவாழ் மக்களை நிலத்தின் சொந்தக்காரர் திடீரென்று வெளியேற்றுவதைத் தடுத்து அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிப்பது-அடிப்படை வசதிகளான குடிநீர், தெரு மின்விளக்கு - மழைநீர் - கால்வாய், பாதாளச் சாக்கடை முதலியன வசதிகளை எல்லாக் குடிசைப் பகுதிகளுக்கும் அமைத்துக்

**பேட்டி: ஆனந்தன்**

கொடுப்பது என்பதை அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளது, குடிசைப் பகுதிமாற்று வாரியம்.

**கேள்வி: துவக்ககாலம் முதல் இன்று வரை தமிழ்நாட்டில் எத்தனை அடுக்கு மாடி வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன?**

பதில்: இன்றுவரை குடிசைமாற்று வாரியத்தினால், 109 குடிசைப் பகுதிகளில் 29,443 அடுக்கு மாடி வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளன.

**கேள்வி : இத்திட்டத்தால் எத்தனை குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன?**

பதில்: இத்திட்டத்தால் 37,000 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. இவற்றில் 7,200 வீட்டு வசதி வாரியத்தால் முன்பே அமைக்கப்பட்டது.


**கேள்வி : தமிழ்நாட்டில் குறிப்பாக சென்னை நகரில் மட்டும் எத்தனைக் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன?**

பதில்: சென்னையில் ரூ. 366.20 இலட்சம் செலவில் 3,712 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.

குடியிருப்புப் பகுதிகளில் குடிநீர், சுகாதார வசதி, குளியல் அறை, கழிவுநீர் அறை போன்ற சுகாதார வசதிகளுடன் கட்டப்பட்டு வருகின்றன. குடியிருப்புப் பகுதிகளில் சாலைகளும், நடைபாதைகளும் போடப்பட்டு வருகின்றன. குடிநீர் பற்றாக்குறைக் காலத்தில வாரியத்தின் லாரிகள் மூலம குடிநீரும் வழங்கப்பட்டு வருகின்றது. மழைக் காலத்தில் தாழ்வான பகுதிகளில் தங்கும் நீரையும் வாரியம் நன்கு கவனித்து அவற்றை மோட்டார் மூலம் நீரை வெளியேற்றியும் வருகின்றது.

குடிசைப்பகுதிகளுக்கும் - குடியிருப்புப் பகுதிகளுக்கும் போதிய மருத்துவ வசதியும் செய்து வருகின்றது-குடிநீர் சரிவர வினியோகிக்க குடிநீர்வடிகால் வாரியத்திற்கும் -மாநகராட்சிக்கும், வாரியம் முன்பணம் செலுத்தியுள்ளது. இதுபோன்ற குறைபாடுகளை அறவே நீக்க, வாரியம் முழு அளவில் செயல்பட்டு வருகிறது.

**கேள்வி: குடிசைப் பகுதிகள் மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்தும், மீண்டும் மீண்டும் புதுப்புதுகுடிசைப்பகுதிகள் பெருகுகின்றனவே, அதனைக் கட்டுப்படுத்த இயலாதா?**



பதில்: சென்னை நகரில் குடிசை வாழ் மக்கள் பெருகப் பல காரணங்கள் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் நடத்தப்பட்ட சமுகப் பொருளாதார ஆய்வில் புலப்பட்டன. அவைகளாவன: பருவமழை, விளைச்சல் இல்லாமையால், வேலை தேடி நகரங்களை நோக்கி வரும் கிராம மக்கள் கைவண்டி, ரிக்ஷா இழுப்பவர்களாகவும், தச்சர்களாகவும், சிறுகடை வைத்தல் போன்ற தொழில் செய்கின்றனர். நகரத்தில் இவர்களின் வருமான வசதிக்கேற்ப வீடுகள் கிடைப்பது என்பது மிகவும் சிரமம். இதன் பலன், ஓட்டேரி கால்வாய், கூவம், அடையாறு ஆகிய கரையோரங்களிலும் பள்ளமான இடங்களிலும் இவர்கள் குடிசைகளை ஆக்கிரமித்துக் கொள்வதுதான். ஆக, நகரின் திறந்தவெளி இடங்கள் எங்கிலும் இத்தகைய குடிசைப்பகுதிகள் தோன்றி விடுகின்றன. இதைக் கட்டுப்படுத்தும் பணிகளை வாரியம் காவல்துறை உதவியுடன் செய்துவருகிறது.

**கேள்வி: எதிர்காலத் திட்டங்கள் எதேனும் உள்ளனவா?**

பதில்: முதல்வர் புரட்சித்தலைவர் திரு எம்.ஜி.ஆர். அவர்களின் சீரிய தலைமையில் புதிய அரசு பதவியேற்றதும், குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் நற்பணியில் புதிய வேகமும், புத்துணர்ச்சியும் ஏற்பட்டுள்ளன. குடிசை வாழ் மக்களின்பால் முதலவர் அவர்கள் கொண்டுள்ள அன்பும், அக்கறையும் எல்லாத் தரப்பு





மக்களையும் கவர்ந்துள்ளது. குடிசைவாழ் மக்களின் முன்னேற்றத்திற்கு முழுமூச்சுடன் உழைக்கும்படி மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். முதல்வர் அவர்களின் ஆணையினை நிறைவேற்றுவதைத் தன்னுடைய இலட்சிய நோக்காகக் கொண்டு பாடுபடுகிறது வாரியம். எதிர்காலத்திற்கு ரூ. 348.60 இலட்சம் செலவில் 4,188 குடியிருப்புகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வாரியத்தின் சாதனைச் சிறப்பே-அடுக்கு வீடுகள் கட்டுவதில் காட்டிய கவனமும் வேகமும்தான்.

**கேள்வி: குடிசை மாற்று வாரியத்தின் சமுதாய நலப் பணிகள் என்னென்ன?**

பதில்: மனித இனம் வாழும் சூழ்நிலை சிறப்பாக அமைய, சமூக நலப்பணிகளும் ஒரு முக்கிய அம்சம் என்பதை நன்குணர்ந்த குடிசைப்பகுதி மாற்று வாரியம் இக் குடியிருப்புக்களில் தம் பணிகளைச் செய்ய பல்வேறு சமூகநல நிறுவனங்களுக்கு ஊக்கமளித்துள்ளது.

மறுவாழ்வு பெற்றுள்ள குடிசை வாழ் மக்களின் வாழ்க்கை நன்கமைய பல சமூக சேவா சங்கங்கள் உதவுகின்றன. 1972ல் அமைக்கப்பட்ட ''புதுக்குடியிருப்பு நல்வாழ்வுப் பேரவை'' என்னும் நிறுவனம் பெருவாரியான குடிசைவாழ் மக்கள் பயன்பெறத் தக்க நற்பணி புரியும் முக்கிய சமூகநல நிறுவனங்களுள் ஒன்று.

புதிய குடியிருப்புப் பகுதிகளில், தகுதி பெற்ற சமூகநலவியல் அலுவலர்களின் மேற்பார்வையில் இந்த நற்பணிகள் நடைபெற்று வருகின்றன. குடும்ப நலப்பணி, தொற்று நோய்த் தடுப்புத் திட்டம், சிறப்பு ஊட்டச் சத்து உணவுத் திட்டம், சுகாதாரக் கல்வி சுற்றுப்புறச் சுகாதாரம் போன்ற இத்தகைய முக்கியப் பணிகள் அவர்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சமூகநலத் திட்டத்தின்கீழ் இளைஞர் மற்றும் மாதர் சங்கங்கள் ஒவ்வொரு குடியிருப்புப் பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு வாழும் மக்களைத் தமது பிரச்னைகளைத்தாமே தீர்த்துக் கொள்ளத் தயார் செய்வதும், நல்ல தலைமையை உருவாக்குவதும் இச்சங்கங்களின் முக்கிய இலட்சியங்களாகும்.

## திரு எஸ். என். ராஜேந்திரன் அவர்களுக்குப் பொதுப்பணித் துறை

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு எஸ். என். ராஜேந்திரன் அவர்களுக்குப் பொதுப்பணித்துறை மற்றும் அது சம்பந்தப்பட்ட பணி அமைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

பொதுப்பணித் துறையை மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் இதுவரை கவனித்து வந்தார்.

திரு எஸ். என். ராஜேந்திரன் அவர்களிடம் கைத்தறி, கதர் மற்றும் மதுவிலக்கு (பெர்மிட் வழங்குவது தவிர) பாண்டிபார்ட் ஆகிய துறைகள் ஏற்கெனவே உள்ளன.

## மேல்நிலைப் பள்ளிகளில் நாட்டு நலப் பணித் திட்டம்

கல்லூரியில் மாணவரிடையே கடந்த பத்து ஆண்டுகளாக நிலவிவரும் (என்.எஸ்.எஸ்.) நாட்டு நலப் பணித்திட்டம், இந்தக் கல்வியாண்டிலிருந்து மேல்நிலைப்பள்ளிகளுக்கும் நீட்டிக்கப்படுகிறது. இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழகத்தில்தான் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

இந்திய அரசும், தமிழக அரசும் இணைந்து இவ்வாண்டு மேல்நிலைப் பள்ளிகளில் மேற்கொள்ள இருக்கும் இத்திட்டத்திற்கு, இதுவரை ரூ. 7 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளனர்.

# வனவிலங்குகள் வார விழா!

புலவர். தமிழ்ப்பித்தன்



ஆண்டுதோறும் காந்தியடிகள் பிறந்த அக்டோபர் 2-ம் நாளி லிருந்து 8ம் நாள் முடிய நாடு முழுதும் வனவிலங்கு வார விழா கொண்டாடப் பெறுகிறது.

3-10-80 மாலை 6.15 மணி யளவில் சென்னை கலைவாணர் அரங்கில் மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தலைமையில் மேதகு ஆளுநர் அவர்கள் விழாவைத் துவக்கி வைத்தார்.

அரங்கின் வாசலில் இரு புறமும் யானைகள் கம்பீரமாக நின்றவாறு, துதிக்கையை உயர்த்தி அனைவரையும் அழைத்துக் கொண்டிருந்தன. அவற்றின் பிளிறல்கள் விலங்குகளுக்காக எடுக்கப்படும் விழாவுக்குவாழ்த்து முழக்கம்போல அமைந்திருந்தன.

விழாவுக்கு வந்திருந்தோரை, வனத்துறைத் தலைமைக் காவலர் திரு அஞ்சையா வரவேற்றார்.

தொடக்க உரையில மேதகு ஆளுநர் தெரிவித்ததாவது:

''உலகத்தில் உள்ள வன விலங்குகள் பல நூற்றாண்டுக் காலமாக மனிதர்களால் அச்சுறுத்தப்பட்டு வந்துள்ளன. மக்கள் தொகை குறைவாக இருந்தவரையில் விலங்கினங்கள் துன்புறுத்தப்படவில்லை. மக்கட்தொகை பெருகத் தொடங்கியதும் உணவுக்காக - உடைக்காக- தங்குமிட வசதிக்காக விலங்கினங்கள் அழிக்கப்பட்டன. மனிதர்களின் இந்தச் செயலால் அபூர்வ வகை விலங்கினங்கள் இன்று உலகிலிருந்தே அழிக்கப்பட்டுவிட்டன.

''விலங்கினங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று நாம் உறுதி எடுத்துக் கொண்டு அதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபடாவிட்டால் தற்போது காணப்படுகின்ற பல விலங்கினங்கள் என்றும் காணவே முடியாத நிலை ஏற்பட்டுவிடும்.

ஆளுநர் அவர்களின் உரைக்குப் பின்னர், முன்னாள் தலைமை வனத்துறைக் காவலர் திரு போஜா ஷெட்டி அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

''வன விலங்குகளின் அழிவுக்குப் பல காரணங்களைக் குறிப்பிடலாம். மனித இனப் பெருக்கம், சாலை அமைத்தல், வீடு கட்டுதல், நவீன காலத் தொழில் நு'ணுக்கங்கள் ஆகியவற்றின் காரணமாக வனங்களும் வன விலங்குகளும் அழிக்கப்படுகின்றன. அவற்றைப் பாதுகாக்கும் பணியில் நாம் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும்''

அடுத்து சென்னை மாநகரக் காவல் துறைத் தலைவர் திரு எஸ். ஸ்ரீபால் அவர்கள் வன விலங்குகளின் புகைப்படம் மற்றும் ஓவியக் கண்காட்சியைத் துவக்கி வைத்து உரையாற்றினார்; அவர் தெரிவித்தார் :

''ஒரு நாட்டில் 33 சதவிகிதப் பகுதி வனப்பரப்பாக இருக்க வேண்டும என்பது நியதி. ஆனால் நமது நாட்டில் 19 சதவிகிதப் பகுதி நிலப்பரப்புதான் கானகப் பகுதியாக இருக்கிறது. கானகம் அழிக்கப்படுவதால் வன விலங்குகளும் அழிக்கப்படுகின்றன.

''சட்டங்கள் போட்டு ஒரு சமுதாயத்தைக் காப்பாற்றுவது போல சட்டங்கள் தீட்டி-கானகப் பொருட்களையும் வன விலங்குகளையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

''19 சதவிகிதப் பகுதியாக உள்ள வனப் பகுதியைச் சிறிது சிறிதாக அதிகப்படுத்தி-வளப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் வனவிலங்குகளை நாம் எளிதில் பாதுகாக்க முடியும். வன விலங்குப் பாதுகாப்பைப் பொறுத்த வகையில் ஒவ்வொருவரும் சிறு பங்காவது ஆற்ற வேண்டும்.''

பின்னர் உரையாற்றிய மொழி பெயர்ப்புத்துறை இயக்குநர் டாக்டர் அவ்வை நடராசன் அவர்கள் தெரிவித்ததாவது :

''நாட்டைப் பாதுகாப்பதற்குக் காவலர்கள் தேவைப்படுவது போல, காட்டைப் பாதுகாப்பதற்கும் காவலர்கள் தேவைப்படுகிறார்கள்.

''தமிழகத்தில் உள்ள தென்னார்க்காடு—வட ஆர்க்காடு என்னும் மாவட்டங்களின் பெயர்களே காட்டின் பெருமையை வலியுறுத்துகின்றன. ஆலங்காடு, மறைக்காடு, திண்டிவனம் - இப்படி பல ஊர்கள் காடுகளின் சிறப்பை உணர்த்தும் வண்ணம் அமைந்திருக்கின்றன.

''காடுகளை அழிப்பதால்-நாடுகளைப் பெருக்குவதால் விலங்கினங்கள் குறைகின்றன. ஒரு காலத்தில் ஜமீன்தார்கள் என்று சொல்லப்பட்டவர்கள் வேட்டையாடி விலங்குகளைக் கொல்வது மதிப்பு மிக்க செயல் என்ற கருத்து நிலவி வந்தது. உவமைக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய மான்கள் உணவுக்காக அடித்துக் கொல்லப்பட்டன.

''தமிழ் மன்னர்கள் அக்காலத்தில் விலங்குகளைத் தமது கொடிகளில் - இலச்சினைகளில் பொறித்திருந்தார்கள் என்றால், அவர்கள் விலங்கினங்களிடம் கொண்டிருந்த பரிவை அச்செயல் நமக்குத் தெரிவிக்கிறது.

''விலங்கினங்களை நாகரிகமுற்ற மனித இனத்தின் கொடுமையிலிருந்து காப்பாற்றவேண்டியுள்ளது. நாட்டில் வாழ மக்களுக்கு உரிமை இருப்பதுபோலக் காட்டில் வாழ்வதற்கு விலங்குகளுக்கு உரிமை இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்வதுதான் இந்த வன விலங்கு வார விழாவின் நோக்கமாகும்.

அடுத்து, மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம வீரப்பன் அவர்கள் தமது தலைமை உரையை ஆற்றினார்: அப்போது அவர் கூறியதாவது :

''காடுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் அங்கு வாழும் வன விலங்குகள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதையும் இன்று உலகம் முழுவதும் உணர்ந்துள்ளது.

''உலகம் தோன்றியகாலத்தில் காடுகள் - மலைகள் - வனங்கள் முதலில் தோன்றின. பின்னர் தான் உயிர் இனங்கள் தோன்றின. பின்னர் பரிணாம வளர்ச்சியில் மனிதன் தோன்றினான்: ஆனால் பகுத்தறிவு உள்ள மனிதன்—

சிந்தனையுடைய மனிதன் விலங்கினங்களை வதைக்கத் தொடங்கினான். சில நாடுகளில் விலங்கினங்கள் சுடப்படுகின்றன.





''இன்று உலகப் பரப்பு அப்படியே உள்ளது. மனிதனின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே வருகிறது. நமது இந்திய நாட்டில் பர்மா உட்பட 30 கோடி மக்கள் வாழ்ந்தார்கள் என்று பாரதியார் கூறினார். இந்தத் தொகை 1947ல் பாகிஸ்தான் பிரிவினையின் போது 45 கோடியாக இருந்தது. பிரிவிற்குப் பின்னர் இன்று 65 கோடியளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளது.


''மனித எண்ணிக்கை அதிகமாக ஆக, வனச் செல்வங்கள் அழிக்கப்படுகின்றன. மனிதன் தனது வாழ்க்கைக்காக — வேட்டைத் தொழிலில் ஈடுபட்டு கானவிலங்குகளை அழித்துக் கொல்ல அதன் விளைவாக நூற்றுக்கணக்கான விலங்கினங்கள் மறைந்துவிட்டன. உலகின் பல நாடுகளும் இந்த உண்மையை இப்போது உணரத் தலைப்பட்டுள்ளன. இது குறித்து மிகப் பெரிய ஆராய்ச்சியை ஐக்கிய நாடுகள் குழு நடத்திக் கொண்டிருக்கிறது.

''விலங்கினங்களுக்குப் பேச வாய் இல்லை என்பதால்தான் நாம் அவற்றிற்குக் கொடுமைகள் செய்து கொண்டிருக்கிறோம்.

''காடுகளைப்பாதுகாக்கவேண்டும் என்பதில் எல்லா நாடுகளும் இன்று அக்கறை காட்டி வருகின்றன. காடுகள் அழிந்தால் நல்ல காற்று இல்லாது போய்விடும். கெட்ட காற்றே எங்கும்நிறைந்து விடும். அதனால் மனித இனத்தின் ஆயுள் குறைந்து விடும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

''காடுகளைஇன்று அழித்து வரும் நிலையைக் கணக்கிட்டால் இன்னும் 20 வருடங்களில் நாட்டில் மூன்றில் ஒரு பகுதி மறைந்து விடும் என்று கருத்துத் தெரிவிக்கிறார்கள். காடுகள் அழிந்தால் நமது வாழ்வு அழிக்கப்படும் என்றுதான் கூற வேண்டும்; காடுகளின் அழிவின் காரணமாக அங்கு வாழும் விலங்கினங்களும் அழிக்கப்படுகின்றன.

''திருநெல்வேலி மாவட்டத்தில் களக்காட்டில் உள்ள வன விலங்குப் புகலிடத்தில் சிங்க வால் குரங்கு என்று ஓர் இனம் உள்ளது. உலகத்திலேயே வேறு எங்கும் காணப்படாத அபூர்வமான இனத்தைச் சேர்ந்த இந்தக் குரங்கு ஒரு மரத்திலிருந்து வெகு தூரம் வரை மரத்துக்கு மரம் தாவிச் செல்லும் வல்லமை பெற்றது. அதன் காரணமாக அங்கு பல பர்லாங்கு தூரத்தில் உள்ள மரங்களை அழிக்கக் கூடாது என்று அரசு சட்டம் தீட்டியுள்ளது. ஒரு குரங்கினத்தின் காரணமாக மரங்களும் பாதுகாக்கப்படு





# நமது கடமை

## மாண்புமிகு முதல்வர்

விலங்குகள் வாழ்ந்து திரியும் இடங்கள், கண்ணைக் கவரும் காட்சி இல்லங்களாகவும், மக்கள் களித்து மகிழும் நிலையங்களாகவும் அமைகின்றன. விலங்கினங்களிடமிருந்து நாம் கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டிய நற்பண்புகளும் உள்ளன. அவற்றைக் கருதியும் விலங்குகளைக் காக்கும் கடமை நம்மிடம் உள்ளது. வனவளங்களைக் காண்பதற்காகவே, உல்லாசப் பயணிகள் சில நாடுகளிலிருந்து வருகின்றனர். எனவே, வனச் செல்வங்களாகிய வனவிலங்கினங்களைக் காக்க வேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டு தமிழக அரசு விலங்குக் காப்பகங்களை ஆங்காங்கே அமைத்து வருகிறது. இயற்கையான அகிம்சை உணர்வோடு, நாட்டுச் செல்வம் பெருகவும் வனவிலங்குகள் காக்கப்பட வேண்டும் என்று நாம் உறுதிகொள்ள வேண்டும். வாழ்வில் இப்பண்பைக் கடைப் பிடிக்கும் வகையில், வன உயிர்ப் பாதுகாப்பு விழா இன்று கொண்டாடப்படுகிறது. இயற்கைச் சூழலைக் காத்து வளர்ப்பதோடு, அருகிவரும் வன உயிர்களைக் காக்கவும் குறைந்துவரும் வனவளத்தைப் பெருக்கவும் நாம் அனைவரும் நற்பணிகளை மேற்கொள்வோம் !

[வனவிலங்கு வார விழாவை முன்னிட்டு மாண்புமிகு முதல்வர் விடுத்த வேண்டுகோளிலிருந்து....]



...கின்றன என்னும் உண்மையை நோக்கும்போது, விலங்கினத்தைக் கண்டாவது மனித இனத்துக்கும் புத்தி வரட்டுமே என்பது போல இச்செயல் தோன்றுகிறது.

''வன விலங்குகளைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறுவது ஜீவகாருண்யத்தின் அடிப்படையில் அல்ல! வனங்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவாவது வன விலங்குகளைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறுகிறோம். வன விலங்குகளை அழிக்கும் முயற்சி உலகம் முழுவதும் தோன்றும் அபாய அறிவிப்பு ஆகும்.

''ஜஹாங்கீரின் காலத்தில் அவரது பன்னிரண்டாவது வயது முதல் நாற்பத்தெட்டாவது வயது வரை ஏறக்குறைய 3203 வன விலங்குகள் வேட்டையாடப்பட்டன என்று வரலாறு தெரிவிக்கிறது.

''விலங்கினங்கள் வாழ்ந்தால் தான் மனித இனம் வாழ முடியும். எனவே வன விலங்குகளைப் பாதுகாப்பது நமது கடமை''.

தமது உரைக்குப் பின்னர் வன விலங்குப் புகைப்படம் மற்றும் ஓவியப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், பரிசுகளை வழங்கினார்.

வனப் பாதுகாவலர் திரு கே. துரைராஜ் அவர்கள் நன்றி கூறினார். அதன் பின்னர் நிருத்தியாஞ்சலி குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

வனவிலங்கு வார விழாவின் ஒரு பகுதியாக மரம் நடுதல்விழா நடைபெற்றது. கலைவாணர் அரங்கின் பின்பக்கத்தில் உள்ள திடலில் மேதகு ஆளுநர் அவர்களும் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்களும் மரக் கன்றுகளை நட்டனர்.

வனவிலங்கு வார விழா, வனங்களைக் காப்போம் - வன விலங்குகளைக் காப்போம் என்னும் குறிக்கோளை மனித இனத்திற்குப் போதிக்கும் விழாவாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

# இதோ ஒரு தெய்வத் தாய்!

**மாழலன்**

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் அந்த விரைவுப் பேருந்து வேலூரிலிருந்து திருப்பத்தூர் நோக்கி மிக வேகமாக சென்று கொண்டிருந்தது.

அந்த பஸ் கொஞ்சம் பெரியதாகவும் வசதியானதாகவும் அமைந்திருந்தது. நடுத்தர வயதான ஒருவர் குரலை உயர்த்திச் சொல்லிக் கொண்டுவந்தார்—

''பஸ் வழித்தடங்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகுதான் இப்படி வசதியான புதிய பஸ்கள் இந்தப் பகுதியில் ஓடுகின்றன...''

பக்கத்திலிருந்த ஆள் மூச்சு விட வேண்டுமே. அவன் ஓடும் பஸ்ஸுக்கு வெளியே ஓடிக் கொண்டிருக்கும் காட்சிகளைப் பார்த்துக் கொண்டும், யோசனையில் ஆழ்வது போல் கண்ணை மூடிக் கொண்டும் வந்தான். பக்கத்தில் நடுத்தர வயதானவர் பேசிக் கொண்டே வருகிறார் என்பதை அவன் கவனித்ததாகவே தெரியவில்லை. ஆனால் அவன் பதில் எதையும் தான் எதிர்பார்க்கவில்லை என்பது போல அவரே தானாகவே பேசிக் கொண்டிருந்தார்.

இவ்விருவருக்கும் பக்கத்தில் பெண்கள் சீட்டில் அமர்ந்திருந்த ஞானவடிவுக்கு இது வேடிக்கையாக இருந்தது. அவர்கள் இருவரையும் பார்த்துக் கொண்டே வந்தார் ஞானவடிவு. நடுத்தர வயதுக்காரருக்கும் அந்த இளைஞனுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பது அவர்கள் இருவரும் அணிந்திருந்த ஆடைமுறையில், உட்கார்ந்திருந்த தோற்றத்தில் தெரிந்தது.

ஞானவடிவுக்கு மட்டும் அந்த இளைஞன் மிகவும் அறிமுகமானவன் போலத் தெரிந்தான். ஒரு சில நிமிட யோசனைக்குப் பிறகு, ஞானவடிவு தமது பையைத் திறந்து ஒரு பழைய செய்தித் தாளை எடுத்துப் பார்த்தார். அவன்தான்.... செங்குட்டுவன்தான்.

சாலையைக் கடப்பதற்காக ஆடியசைந்து சென்ற எருமைகள் கூட்டத்தில், மோதாமலிருக்க டிரைவர் வண்டியின் வேகத்தைத் தடுக்க 'பிரேக்' போட்டார். குலுங்கலுடன் வண்டி நின்ற போதுதான் செங்குட்டுவன், ஞானவடிவைப் பார்த்தான்.

தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் அந்த அம்மாவை எங்கோ பார்த்த ஞாபகம். ஞானவடிவு புன்னகை பூக்க அவனுக்கு 'யார் அது?' என்பது தெளிவாகப் புரிந்து விட்டது. அதே சமயம் அவன் தன்னை யாரென்று புரிந்து கொள்கிறானா பார்ப்போம் என்று ஞானவடிவும் வேறு எதுவும் பேசாமலிருக்க... பஸ் பழைய வேகத்தோடுமேலும் வேகமாக ஓடியது. இருவர் உள்ளத்திலும் பழைய நினைவுகள் அதே வேகத்தில் ஓடின.

*

ஞானவடிவு டீச்சர், பள்ளிக் கூட ஆசிரியைகளுக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்கியவர். எல்லாக் குழந்தைகளிடமும் தாயைப்போல அன்பைச் செலுத்தியவர். அந்தக் கிராமத்தில் எந்தக் குழந்தை பள்ளிக்கு வரவில்லை என்பதைத் தெரிந்து தானே நேரில் சென்று பெற்றோர்களிடம் பேசி, குழந்தையைப் பள்ளிக்கு அழைத்து வந்து பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிடுவார்.

தாயை இழந்து வீட்டிலே சும்மா இருந்து கொண்டிருந்த செங்குட்டுவனைப் பள்ளிக்கு அழைத்து வந்து சேர்த்தது ஞானவடிவு டீச்சர்தான். ஞானவடிவு டீச்சர் ஆசிரியராக இருந்த அந்தப் பள்ளி ஒரு நடுத்தரப் பள்ளி. செங்குட்டுவன் ஆறாவது வகுப்பு படிக்கும்பொழுது ஞானவடிவு டீச்சர் ஊருக்குப் போனவர் போனவர்தான் அதற்குப் பிறகு, செங்குட்டுவன் அவரைப் பார்க்கவே இல்லை.



செங்குட்டுவன் வளர்ந்த பிறகு விசாரித்துத் தெரிந்து கொண்ட

85334

தில் அவனுக்குத் தெரிந்த தகவல் இதுதான்: 'ஞானவடிவு டீச்சரின் கணவர் ஒரு இராணுவ வீரர். எல்லைப்புறப் பகுதியில் ஏதோ விபத்துக்கு ஆளானவரை இராணுவ மருத்துவமனையில் சேர்த்திருக்கிறார்கள். அவரைப் பார்க்க ஞானவடிவு டீச்சர் போயிருக்கிறார். கணவரைக் கவனித்துக் கொள்ள கூடவே இருக்கிறார் என்றார்கள் முதலில். பிறகு ஞானவடிவு டீச்சரின் கணவர் இரண்டு ஆண்டுகள் மருத்துவமனையில் படுத்த படுக்கையாக இருந்தார். இறந்துவிட்டார் என்றும் பேசிக் கொண்டார்கள்.

ஞானவடிவு டீச்சர் ஊரை விட்டுப் போகும்பொழுது அவருக்கு ஐந்து வயதில் ஒரு பையன் இருந்தான். பேர்கூட.....செங்குட்டுவன். யோசித்துப் பார்த்தான். அவன் பெயர் செந்தில் நாதன்.... தன்னை டீச்சரிடம் அறிமுகப்படுத்திக் கொள்ள நினைத்தான். ஆனால், தான் போகும் வேலைக்கு இடையூறாக அமைந்துவிட்டால் என்ன செய்ய முடியும். யோசித்தவாறு இருந்தான். பஸ்ஸும் ஓடிக் கொண்டிருந்தது.

பஸ் திருப்பத்தூரில் நின்ற பொழுது, ஞானவடிவே அவனிடம் வந்து பேசினார். "செங்குட்டுவன், வயதான எனக்கு இருக்கும் ஞாபகசக்திகூட உனக்கு இல்லே...நான் ஞானவடிவு....."

முடிக்கும் முன்பே செங்குட்டுவன் சொன்னான். "டீச்சர்...... யோசனை செய்து கொண்டே வந்தேன்...நீங்க இங்கே இருக்கீங்களா ?"

ஞானவடிவு அவன் கேள்விக்குப் பதில் சொல்லாமல் அவனையே கேள்வி கேட்டாள்... "உனக்கு ஏதாவது இங்கே வேலையா?"

செங்குட்டுவன் முழுதாகப் பொய்யே சொன்னான்.

"வேலூர் மருத்துவமனையில் இருந்த உறவினர் ஒருவரைப் பார்க்க வந்தேன். அவர் டிஸ்சார்ஜ் ஆகி இங்கேயே வந்துவிட்டார். அவரைப் பார்க்கத்தான் இங்கே..."

அவனது தயக்கமான பேச்சிலிருந்து அவன் எதையோ மறைப்பது ஞானவடிவுக்குப் பரிந்தது "என்ன வேலை செய்றே.....?"

"மருந்து கம்பெனியில் பிரதிநிதியாக இருக்கேன்"

ஞானவடிவுக்கு அவன் பொய் சொல்லுகிறான் என்பது நன்கு புரிந்து விட்டது. இன்னும் அவனை விசாரிப்பது முறையல்ல என்று, அவனிடம் ஞானவடிவு விடைபெற்றுக்கொண்டபொழுது செங்குட்டுவன் கேட்டான்:

"டீச்சர் உங்கள் முகவரி...."

"நான் திருப்பத்தூரில்இல்லே. உன்னைப் போல ஒருவரைப் பார்க்க வந்தேன். பார்க்க வந்தவர் அட்ரஸ்கூட எனக்குத் தெரியாது. அவரைப் பார்க்கத்தான் போகிறேன். பிறகு சந்திப்போம்" செங்குட்டுவன் பதிலுக்குக்கூட எதிர்பார்க்காமல் ஞானவடிவு செல்ல, செங்குட்டுவனுக்கும் ஒன்றும் புரியவில்லை. அவனைப் போலவே ஞானவடிவும் பொய் சொல்லுகிறாரா ?

* * * * *

இரண்டு நாட்கள் ஓடிவிட்டன. அந்தப் பெரிய லாட்ஜில் இருந்து வெளியே வரும்பொழுது செங்குட்டுவன், ஞானவடிவைப் பார்த்தான். அவரும் அந்த லாட்ஜில் தங்கியிருப்பது அப்பொழுதுதான் அவனுக்குத் தெரியும்.

"டீச்சர் இங்கேதான் இருக்கிங்களா? நீங்கள் எப்ப வந்தீங்க இங்கே......?"

"நீ ஒரு தாளை வைத்துக் கொண்டு உரக்கப் படித்துக் கொண்டு வந்தியே.....அதுதான், கட்பட்லா, பக்ரதாத், ஐஜ் போக்கல், அனிபெக்கர், செரியா சாரிட்ரும், என்று. அப்பொழுது தான்!...அதெல்லாம் என்ன நீ வேலை பார்க்கும் மருந்துக் கம்பெனி தயாரிக்கும் மருந்துகளா?"

"இல்லை...... டீச்சர்... அதெல்லாம் சந்தன மரத்தின் பெயர்கள் என்று படித்திருக்கிறேன்...சந்தன மரத்திலே சுமார் 16 வகைகள் உண்டாம். இதிலே கட்பட்லா (Ghit Badla) பக்ரதாத் (Bagradad) இரண்டும் உயர்ந்த வகையாம்."

செங்குட்டுவனுக்குப் புரியாதது புரிந்ததில் மகிழ்ச்சி. அதே நேரத்தில் பேச்சை மாற்ற நினைத்துக் கேட்டான், "டீச்சர், உங்கள் பையன் எங்கே இருக்கான்.....?"

"செந்தில் நல்லா படிச்சான். படிக்கும் பொழுது அவன்கூட படித்த பெண்ணொருத்தியைக் காதலித்தான். காதலித்தவளைக் கைப்பிடிக்க வாய்ப்பில்லை. காரணம் செல்வச் செழிப்புக்கும் சராசரி சமுதாய மனிதனின் பொருளாதாரத்துக்கும் இருந்த வேறுபாடு! இப்ப அவன் விரக்தியின் உச்சக் கட்டமாகி........திசை மாறிவிட்டான்..."

"நீங்க சொல்றது..........."

"எப்படியும் பணக்காரனாகணும் என்கிற கும்பலில் ஒருவனாகி விட்டான்! அவனை நான் மறந்துவிட்டேன்......"

இந்தச் சமயத்தில் செங்குட்டுவனை ஒரு ஆள் வந்து 'சார் கூப்பிடுகிறார்' என்று அழைக்கவே "அப்புறம் பார்க்கிறேன் டீச்சர்" என்று கிளம்பினான்.

* * * *

அவசரமாக வெளியில் கிளம்பினான் செங்குட்டுவன். மேலதிகாரி போன் செய்திருந்தார். "உடனே புறப்பட்டு வா"-என்று வந்து காத்திருந்ததற்குச் சரியான பயன். கிளம்பியவன் கதவருகே கிடந்த அந்தக் கடிதத்தை எடுத்துப் பிரித்தான். அதில் :

'ஐயா, தங்களுக்குத் தெரியாததை நான் எழுதவில்லை. தமிழ்நாட்டு வனச் செல்வங்களில் முக்கியமானது சந்தன மரம். ஆண்டுதோறும் சுமார் ஐந்து கோடி ரூபாய்க்குச் சந்தன மரங்கள் ஏலம் விடப்படுகின்றன. சில சுயநல வெறிக்கூட்டம் சந்தன மரங்களைக் கடத்திச் செல்லுகிறது.

கடத்தல்காரர்களின் கையாட்கள் கட்டைகளைத் திருடி, காடுகளில், மலைப்பகுதிகளில், குளத்தில், ஆற்றங்கரைகளில் கிணற்றில், - சாலையோர வயல்களில் மறைத்து வைக்கின்றனர். அங்கிருந்து அவை பழக்கூடைகளாகவும், உதிரிப் பொருட்கள் வடிவிலும் பொய்யான அடையாளத்துடனும் வெளியே வருகின்றன. பிறகு, அவை கார்கள் மற்றும் ரயில்கள் மூலமாக திருச்சி சென்னை, திருச்சூர் கள்ளிக் கோட்டை, ஐதராபாத், கல்கத்தா முதலிய இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. சந்தனக் கட்டைகள் சிறுசிறு கட்டைகளாக வெட்டி, மூட்டைகளாகக் கட்டி சரக்கு வண்டிகள் மூலமாகத் திருச்சூர், மைசூர், பம்பாய், திரிபுரா போன்ற இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

உங்களிடம் எங்கோ சந்தனம் கடத்தல் நடக்கிறது என்று தகவல் சொல்லி விடுவார்கள். நீங்கள் அந்தத் திசைக்குச் சென்று பிடிக்கப் . போய் விடுவீர்கள். கடத்தல் பொருளும் கிடைத்து விடும். அதே சமயத்தில் வேறு திசையில் இருந்து ஏராளமாகக் கடத்திச் செல்வார்கள்.



## குமரிமாவட்டத்தில்.....

கிராமங்கள் அத்தியாவசியமான தேவைகளைப் பெற்றுத் தன்னிறைவு பெறுவதே தன்னிறைவுத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். மேலும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பின் தங்கிய மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் வேலை வாய்ப்புத் திட்டங்களை உருவாக்குவதும் இத்திட்டத்தின் குறிக்கோள்கள் ஆகும்.

பின் தங்கிய கடலோரப் பகுதிகளை உள்ளடக்கிய அகஸ்தீஸ்வரம், இராஜாக்கமங்கலம் குருந்தங்கோடு, கிள்ளியூர், முன்சிறை ஆகிய ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இந்த 5 ஊராட்சி ஒன்றியங்களிலும்மேற்கண்ட திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகக் கிழ்க்கண்ட பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| | ரூ. இலட்சம் |
|---|---|
| இணைப்புச் சாலைகள் | 36 |
| சிறிய பாலங்கள் கட்டுவதற்கு | 2.00 |
| அரிஜன மக்களுக்கான மயானங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைத்தல் | 0.30 |
| சிறு பாசன குளங்கள் மேம்பாடு செய்தல் | 3.29 |
| கிராம மருந்தகம் | 0.40 |
| மகப்பேறு நிலையங்கள் கட்டுதல் | 4.00 |
| மொத்தம் | 45.99 |

ஒவ்வொரு பள்ளிக் கட்டிடத்திற்கும் ரூ. 1 இலட்சம் வீதம் ரூ. 45 இலட்சம் இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யும்படி கேட்கப்பட்டுள்ளது.

மேற்சொன்ன ஐந்து ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள எல்லாக் குக் கிராமங்களுக்கும் இவ்வாண்டு இறுதிக்குள் குடிநீர் வசதிசெய்து தர ரூ.1.25 இலட்சத்திற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டுக் குடிநீர்த் வடிகால் வாரியத்தால் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

காதுகேட்காத ஏழை மாணவ, மாணவியருக்கு இலவசமாகக் காது கேட்கும் கருவிகள் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன. 1979-80ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 25 காது கேட்கும் கருவிகள் ஒதுக்கப்பட்டு விநியோகிக்கப்பட உள்ளன.

விதவைகள் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ், 1979-80ஆம் ஆண்டு 10 தம்பதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு தம்பதி ஒன்றுக்கு ரூ. 5000 வீதம் ரூ. 50,000-க்கு தேசிய சேமிப்புப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாண்டும் தகுதியுள்ள தம்பதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தேசிய சேமிப்புப் பத்திரங்கள் விநியோகிக்கப்படவுள்ளன. 1980-81க்கு 37 த்ம்பதிகளுக்கு ரூ. 5000- வீதம் தேசியப்பத்திரங்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நடக்க முடியாத ஊனமுற்றவர்களுக்கு இலவசமாக மூன்று சக்கர வண்டிகள் விநியோகம் செய்யும் திட்டம் நடைமுறையில் உள்ளது. கடந்த ஆண்டு 50 மூன்று சக்கர வண்டிகள் ஒதுக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு விநியோகிக்கப்பட உள்ளன.

நீங்கள் ஏமாறுவீர்கள். எல்லா பக்கமும் விழிப்பாக இருங்கள்'.

அதற்கு மேல் அந்தக் கடிதத்தில் சந்தன கட்டைக் கடத்துவோர் கூடுமிடம்-செல்லுமிடம் முதலியவை வரைபடமாகவும் வரையப்பட்டிருந்தது. - கடிதத்தில் கையெழுத்துப் போடவில்லை. கையெழுத்துப் போடவும் அந்தத் தாளில் இடமில்லை. செங்குட்டுவன் யோசித்தான். கடித்தத்தில் கண்டபடியே எல்லாப் பக்கங்களிலும் கவனம் செலுத்தினால் என்ன?

ஒரு முடிவுக்கு வந்தவனாக வேகமாகச் சென்றான்.

* * * *

செங்குட்டுவனுக்குப் பெரிய பாராட்டு! சந்தனத் திருட்டுக் கும்பலில் பெரும் ஆளாக இருந்த நாதன், செங்குட்டுவன் முயற்சியால் பிடிபட்டு விட்டான். பத்திரிகைகளில் பெரிய தலைப்புகளில் செய்தி, ஜீப்பில் சென்று கொண்டிருந்த செங்குட்டுவன் பஸ் ஸ்டாண்ட் பக்கம் ஞானவடிவு டீச்சர் போவதைப் பார்த்தான்.

இப்பொழுது டீச்சரிடம்போய் உண்மையைச் சொல்லவேண்டும். ஜீப்பிலிருந்து இறங்கி வேகமாகச் சென்றான். டீச்சர் அதற்குள் திருவண்ணாமலை செல்லும் வண்டியில் ஏறி உட்கார்ந்துவிட்டார்.

பஸ்சின் ஓரமாக அமர்ந்திருந்த ஞானவடிவு கீழே நிற்கும் செங்குட்டுவனைப் பார்த்தார், சிரித்தார். "பாராட்டுகள்" என்றார்.

"டீச்சர் நான் வந்து..."

"எனக்கு எல்லாம் தெரியும். அண்ணா பிறந்தநாளில் சிறப்பாகக் கறமையாற்றிய போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு முதலமைச்சர் விருது பெற்ற உனக்கு முதலமைச்சர் பதக்கம் வழங்கிய படம் பத்திரிகையில் வந்திருந்தது. அதைப் பார்த்துத் தெரிந்து கொண்டேன் நீ, போலீஸ் இன்ஸ்பெக்டர் என்று."

"நான் மறைத்ததற்குக் காரணம்...."

"உன் கடமைக்கு இடைஞ்சல் வரக்கூடாது என்றிருக்கலாம். நானும் மறைத்தேன்...சந்தனத் திருட்டுப் பற்றி உனக்கு கடிதம் எழுதியது நான்தான்..."

"அதனால் தான் எல்லா பக்கமும் கண்காணித்து அதுவும் நீங்க குறிப்பிட்ட இடத்தில் திருட்டுக் கும்பலைக் கண்டு பிடிக்க முடிந்தது. என் கடமையும் நிறைவேறியது.

"என் எண்ணமும் நிறைவேறியது. செங்குட்டுவன், 'ஈன்றாள் பசித்திருப்பாளாயினும் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை' என்று பாடம் சொல்லிக் கொடுத்தவள் நான்......ஆனால் ..உனக்கு இன்னும் தெரியாதா? அந்த நாதன்...நீ பிடித்த சந்தனக் கட்டைத் திருட்டுக் கும்பலின் தலைவன் நாதன் என் மகன் செந்தில்நாதன்தான்...!"

பஸ் புறப்பட்டு விட்டது. ஞானவடிவு டீச்சர் எதுவும் நடவாதது போல கையசைத்து விடைபெற்றுக் கொண்டுவிட்டார். ஓடும் பஸ்ஸையே பார்த்தவாறு நின்றுகொண்டிருந்த செங்குட்டுவன் நெஞ்சில்—

ஞானவடிவு நல்லாசிரியை மட்டுமல்ல, தகாத செயலில் ஈடுபட்டிருந்த தன் மகனையே நீதிக்கு முன் நிறுத்திய ஒரு தெய்வத்தாய் என்ற எண்ணம் பெருமிதத்தோடு அலைமோதியது!

## ஐக்கிய நாடுகள் தினம்-அக். 24

# யாதும் ஊரே யாவரும் கேளிர்!

ஐக்கிய நாடுகள் என்ற பெயர் அமெரிக்க அதிபர் ஃபிரான்க்லின் டி. ரூஸ்வெல்டினால் உருவாக்கப்பட்டது. 1942ஆம் ஆண்டு ஜனவரி முதல் நாள் செய்யப்பட்ட ஐக்கிய நாடுகள் பிரகடனத்தில், முதன்முதலாக இந்தப் பெயர் பயன்படுத்தப்பட்டது. அச்சாக விளங்கும் முக்கிய அரசுகளுக்கு எதிராய், தொடர்ந்து ஒன்று பட்டுப் போராடுவது என்று, அப்போது 26 நாடுகளின் பிரதிநிதிகள் தங்கள் அரசுகளின் உறுதியை வெளியிட்டார்கள்.

1945ஆம் ஆண்டு, ஏப்ரல் 25ஆம் தேதியிலிருந்து, ஜூன் மாதம் 26ந் தேதிவரை, சான் ஃபிரான்ஸிஸ்கோவில் கூடிய, சர்வதேச நிலையம் பற்றிய ஐக்கிய நாடுகள் மாநாட்டில், 50 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளால் ஐக்கிய நாடுகள் சாசனம் வரையப்பட்டது.

1944ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து அக்டோபர் மாதம் வரை, டம்பார்டன் ஓக்ஸில், சைனா, சோவியத் யூனியன், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளால் வரையப்பட்ட யோசனைகளின் அடிப்படையில், அவர்கள் ஆலோசனை நடத்தினார்கள்.

1945ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26ஆம் தேதியன்று, இந்தச் சாசனம் கையெழுத்தாயிற்று. மாநாட்டில் பிரதிநிதித்துவம் பெறாத போலந்து பிற்பாடு, இந்தச் சாசனத்தில் ஒப்பமிட்டது முதன் முதலாகச் சேர்ந்த 51 உறுப்பு நாடுகளில் ஒன்றாக அதுவும், பின்னர் விளங்கிற்று.

சைனா, பிரான்ஸ், சோவியத் யூனியன் மற்றும் கையொப்பமிட்டவர்களில் பெரும்பாலானவர்கள்-ஆகியோர், இந்தச் சாசனத்தை உறுதி செய்ததை அடுத்து, ஐக்கிய நாடுகள், 1945 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 24ந் தேதியன்று, அதிகாரப்பூர்வமாக உதயமாயிற்று.

அக்டோபர் மாதம் 24ந் தேதி தற்போது, ஐக்கிய நாடுகள் தினமாக, உலகெங்கிலுமே கொண்டாடப்படுகிறது.

**நோக்கங்களும் கொள்கைகளும்:**

ஐ.நா.வின் நோக்கங்கள் வருமாறு:

1. சர்வதேச அமைதியையும், பாதுகாப்பையும் பராமரிப்பது;
2. நாடுகளிடையே, நல்ல நட்புறவுகளை வளர்ப்பது. சர்வதேச பொருளாதார சமூக, கலாசார மற்றும் மனிதாபிமானப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதிலும், மனிதகுல உரிமைகளையும் அடிப்படை சுதந்திரங்களையும் பேணி வளர்ப்பதிலும், சர்வதேச ரீதியில் ஒத்துழைப்பது.

இந்தப் பொதுவான இலட்சியங்களை எட்டும் முயற்சியில், நாடுகளின் செயல்பாட்டு நடவடிக்கைகளை ஒன்றாகச் சேர்த்து, ஒன்றுபடுத்துவதில், ஒரு நிலையமாக விளங்குவது;

கீழ்க்கண்ட கொள்கைகளுக்கு இசைய ஐ.நா. இயங்குகிறது:

அது தனது உறுப்பு நாடுகள் அனைத்தின் ஆட்சி உரிமை சமத்துவத்தின் அடிப்படையில் ஆனது.

எல்லா உறுப்பினர்களும், தங்கள் சாசனக் கடமைப் பொறுப்புக்களை, நல்ல எண்ணத்தில் நிறைவேற்றி வைத்தல்;

அமைதி வழிகளில், அவர்கள், தத்தம் சர்வதேச தாவாக்களுக்குத் தீர்வு காண வேண்டும்; இந்தத் தீர்வு காணும் முயற்சியில் அமைதி, பாதுகாப்பு, நீதி ஆகியவற்றுக்கு ஊறு விளைவிக்கக் கூடாது.


இவை தத்தம, சர்வதேச உறவுகளில், வேறு நாடுகளுக்கு எதிராய், படைபல மிரட்டலையோ, உபயோகத்தையோ கடைப்பிடிப்பதினின்றும் விலகி இருக்க வேண்டும்

ஐ.நா. சாசனத்துக்கு இசைய, ஐ.நா. மேற்கொள்ளும் எந்த ஒரு நடவடிக்கைக்கும் இவை, எல்லா உதவியும் வழங்க வேண்டும். ஐ.நா. தடுப்பு நடவடிக்கையோ அல்லது அமலாக்க நடவடிக்கையோ, எந்த ஒரு நாட்டுக்கும் எதிராக மேற்கொண்டால், அந்த நாடு அல்லது நாடுகளுக்கு இவை உதவியளிக்கக் கூடாது.

சர்வதேச அமைதியையும், பாதுகாப்பையும் பராமரிப்பதற்காகத் தேவைப்படும் முயற்சியில், ஐ.நா.வில் உறுப்பு நாடுகளாக விளங்காத நாடுகள், இந்தக் கொள்கைகளுக்கு இசைய இயங்குகின்றனவா என்பதை, ஐக்கிய நாடுகள் உறுதிப்படுத்த வேண்டும்.

எந்த ஒரு நாட்டின், அதிகார வரம்புக்குள் உட்பட, உள்நாட்டு விஷயங்களில் ஐ.நா. தலையிடுவதற்கு, சாசனத்தில் உள்ள எதுவுமே 'அதிகாரம் அளிக்காது.





# இங்கே ஒரு விந்தை உலகம்!

காலை நேரம்!

அந்த வங்கி துரித கதியில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

பணம் போடுவோரும், எடுப்போரும் வருவதும் போவதுமாய் இருக்கின்றனர்.

ஆள் நடமாட்டமுள்ள அந்த நேரத்திலேயே, இருவர் சந்தேகப்படும்படியாக இப்படியும் அப்படியுமாக நடமாடிக்கொண்டிருக்கின்றனர்.

அவர்களில் ஒருவன் திடீரென்று மெயின் சுவிட்ச் இருக்கும் பக்கம் போய், மின்சாரத்தைத் துண்டிக்கிறான்... அவ்வளவுதான் 'ஓ' வென அலறுகிறது அலாரம்!

வங்கியில் கொள்ளையடிக்கத் திட்டமிட்டவன், வகையாக மாட்டிக் கொள்கிறான்!

அவ்வாறு அவனைப் பிடிக்க உதவியது எது? அது ஒரு விந்தைக் கருவி! அதன் பெயர் 'பர்க்லர் அலாரம்ஸ்'— Burglar Alarms

இந்த அற்புதக் கருவியைப் பார்க்கும் வாய்ப்பு அண்மையில் நமக்குக் கிட்டியது!

சென்னைத் தேனாம்பேட்டையிலுள்ள ஆபட்ஸ்பரியில், செப்டம்பர் 25ல் தொடங்கி மூன்று நாட்கள் நடந்தது பொறியியல் பொருட்காட்சி! (Engineering Exhibition) இதனை நடத்தியது, தி. இன்ஸ்டிட்யூஷன் ஆப் இன்ஜினியர்ஸ் (இந்தியா).

இந்த அரிய பொருகாட்சியைத் திறந்து வைத்து, மாண்புமிகு தொழிலமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

''தமிழ்நாட்டில் ' தொழில் வளர்ச்சியை மேலும் விரைவுபடுத்த உரிமம் வழங்கும் முறையை எளிதாக்கப் பல்வேறு திட்டங்கள் குறித்து அரசு யோசனை செய்து வருகிறது.

''அடுத்த ஆண்டு முதல், தொழில் துறையும், இதுபோன்ற கண்காட்சிகளை நடத்தும்.

''ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழிற்பேட்டைகளை அமைக்க நிலங்களை எடுக்க அரசு திட்டமிட்டுள்ளது. புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில் தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கான நிலம் எடுக்கப்பட்டு விட்டது. மற்ற மாவட்டங்களில் இந்தப் பணி அடுத்த ஆண்டு நடைபெறும்.''

பொருட்காட்சியைச் சுற்றிப் பார்க்கப் புறப்படுவோமா?

ஊதுவத்தி செய்வது முதல் உழவுக் கருவி செய்வது வரை பல்வேறு சிறுதொழில்களுக்கு உதவி செய்து, அதன் மூலம் தொழில் வளர்ச்சிக்கு வழிகோலும் ஒரு வங்கியின் அரங்கைப் பார்க்கின்றோம். அடேயப்பா! இவர்கள் உதவியால் உருவான சிறு தொழில்கள் - அதன் மூலம் தயாரான பொருள்கள்தான் எத்தனை! எத்தனை! அவ்வாறு உதவி செய்த வங்கிதான் 'பாங்க் ஆப் இந்தியா'.

இது கம்ப்யூட்டர் யுகம்!

கணக்குப் போடுவது முதல் கல்யாணம் செய்து வைப்பது வரை கம்ப்யூட்டர் கவனித்துக் கொள்கிறது. பலவகையான கம்ப்யூட்டர்களை இங்கே நாம் பார்க்கிறோம்.

அறிவை வளர்க்கும் புத்தகங்கள் அழகழகாய் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றனவே! ஆம். நியூ செஞ்சுரி புக் அவுசின் அரங்கத்திலேதான் எவ்வளவு புத்தகப் பிரியர்கள்!


கள்வர்களைக் கண்டுபிடிக்கும் கருவிதான் 'பர்க்லர் அலாரம்ஸ்' என்று பார்த்தோம். இந்த அதிசயக் கருவியை, 'சித்ரா கம்பைன்ஸ்' அரங்கிலே பார்க்கிறோம். அது மட்டுமா? இந்த விஞ்ஞான உலகத்திலே - அறிவியலின் பயனாய்க் கிடைக்கும் அரிய கண்டுபிடிப்புகள்தான் எத்தனை! இதே அரங்கத்தில் ஒரு கருவி - கையை உலர்த்துகிறது!

ஆம்! கைகளைக் கழுவிவிட்டு நாம் டவலைத் தேடவேண்டாம். அப்படி டவலில் கைகளைத் துடைத்துக் கொண்டாலும், அதிலுள்ள அழுக்குகள், தூசுகள் நம் கைகளில் படியும் வாய்ப்புண்டு. ஆனால், கைகளை வெப்பக் காற்றின் மூலம் மிகச் சுத்தமாக உலர வைக்கும் கருவியைப்

பி. வி. கிரி.

(Hand Driers) பார்க்கும்போது, நாமும் அதைப் போல ஒன்றை வாங்கி வீட்டில் வைத்துக் கொள்ளலாம் போல் தோன்றுகிறது!

பயிருக்கு எதிரி எலி என்று நமக்குத் தெரியும். வயல்களில் எலிகளைக் கொல்ல பலவித உபாயங்கள் கையாளப்படுகின்றன. அவைகளில் ஒன்று விஷ உணவிட்டுக் கொல்லல். அறிவியல் நாளுக்கு நாள் கோபுரம் போல் வளர்ந்து கொண்டிருக்கும் இந்நாளில், எலியைத் தாக்குவதற்கும் ஒரு கருவியைக் (Rat Attack) கண்டுபிடித்ததில் வியப்பில்லை அல்லவா? மின் சாரத்தால் இயங்கும் இந்தக் கருவி, சுவிட்சைப் போட்டதும் ஒருவித ஒலியை எழுப்புகிறது. இந்த ஒலி எலிகளுக்கு 'அலர்ஜி' யாம்!



மாண்புமிகு தொழிலமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் பொருட்காட்சியைச் சுற்றிப் பார்க்கிறார்.

மின்னணுக் கடியாரம், கார் கடியாரம் இதில் குறிப்பாக பெரிய அளவிலான சிவப்பு வண்ணத்தில் நேரத்தைக் காட்டும் கடியாரங்கள் (Large Time Display Clocks) இரயில்வே நிலையங்கள், பேருந்து நிலையங்கள், விமான நிலையங்கள் போன்ற இடங்களில் பொதுமக்களுக்குப் பெரிதும் பயன்படும். இவற்றையும் இங்கே கண்டு மகிழ்கிறோம். இதே போன்று வங்கிகளுக்குப் பயன்படும் 'டோக்கன் நெம்பர்' காட்டும் சாதனமும் (Electronic Digital Displays) குறிப்பிடத் தக்கது.

அடுத்து, இங்கேயே நாம் பார்ப்பது, அவசரத்துக்குப் பயன்படும் மின்விளக்குகள் (Emergency Lights) இதில் பலவகைகள் உள்ளன, 'ட்யூப் லைட்' போன்றவை.

வீட்டில் திடீரென மின்சாரம் தடைப்பட்டு விட்டது. ஒரே இருள்! நாம் அவஸ்தைப் படவேண்டியதில்லை. 'பவர்கட்' என்றாலும் உடனே விளக்கு எரியும், மின்விசிறியும் சுழலும்! எப்படி? 'மினி ஜெனரேட்டர்' அதற்கு உதவுகிறது. ஆபத்துக் காலத்தில் உதவும், நண்பனைப் போல! இந்தச் சாதனம் இருந்தால், வீட்டில் ஒரு மின் விசிறி, ஒரு டியூப் லைட் எரியும்.

இதே நிறுவனம் தயாரிக்கும் பல்வேறு வகையான பிரஷ்கள் பொறியியல் பணிகளுக்குப் பெரிதும் பயன்படுகின்றன.

பார்த்துக் கொண்டே போகிறோம்:

'பொதுப் பணித் துறை' அரங்கம் நம் கண்ணில் படுகிறது. அங்கே தமிழ்நாட்டுப் பாட நூல் சங்கக் கட்டடத்தின் 'மாடல்' ஒன்றைப் பார்க்கிறோம்.

'சென்னைக் குடிநீர் வழங்குத் திட்டம்' என்ற தலைப்பில் காவிரி-பொன்னியாறு நில நீர் ஆய்வின் மாதிரி ஒன்றும் இங்கே உள்ளது.

அதோ, அங்கே நாம் பார்ப்பது மாமல்லபுரத்தை!

ஆம். வருங்கால மாமல்லபுரம் எப்படியிருக்கும்?

பெரிய கண்ணாடிப் பேழைக்குள் மாமல்லபுர வளர்ச்சித் திட்டத்தைப் (Development Plan for Mahabalipuram) பார்க்கிறோம். கோயில் தெரிகிறது. சிற்பங்கள் தெரிகின்றன. ஊரைச் சுற்றி சாலை வசதிகள். ஆங்காங்கே வாகனங்கள் நிறுத்துமிடங்கள். எல்லாவற்றையும் பார்க்கிறோம். நகர் ஊரமைப்புத்துறை (Town and Country Planning) அமைத்திருக்கிற அரங்கம்தான் அது. அரங்கத்திலே இருப்பவர் விளக்குகிறார்:

''கலையழகு மிக்க சிற்பங்களைக் காண வருவோர் ஊர்திகளில், சிற்பங்கள் இருக்கும் பக்கத்திலேயே வந்து இறங்குகின்றனர். அதனால் மண் தூசுகள் கிளம்புகின்றன. அழகிய சிற்பங்களில் அப்படியே படிகின்றன. நாளடைவில் தூசுகள் எல்லாம் படிந்து படிந்து பழமையே மாறி விடும் அபாயம் இருக்கின்றன். ஆகவே, முதலில் நல்ல சாலை வசதிகளைச் செய்து, ஆங்காங்கே ஊர்திகள் நிறுத்துமிடங்கள் அமைக்கப்படும். சுற்றுலாப் பயணிகள் அங்கே ஊர்திகளை நிறுத்திவிட்டு, சிற்பங்கள் இருக்குமிடத்திற்கு, நடந்துதான் செல்ல வேண்டும். அப்போது பழம் பெருமை காக்கப்படும். தூசுகள் மூலம் சுகாதாரக் கேடும் தவிர்க்கப்படும்.''

'குடிநீர் வடிகால் வாரியம்' நமக்குச் சொல்வதென்ன?

நீரைச் சுத்தப்படுத்தும் முறையை விளக்கிடும் சாதனம் ஒன்றைக் கண்கொட்டாமல் பார்க்கிறோம்! இங்கே!

பொருட்காட்சிக்குள் கலங்கரை விளக்கம் எப்படி வந்தது?

சென்னை மெரினா கடற்கரையிலுள்ள கலங்கரை விளக்கின் மாதிரி இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு பக்கத்தில், ஒளியூட்டும் விளக்கின் பகுதிகள் காணப்படுகின்றன.

இந்த அரங்கில் இருந்த ஒருவர் கலங்கரை விளக்கம் பற்றிய ஒரு குட்டிக் கதையையே கூறினார்:

''மாமல்லபுரம், பழவேற்காடு, நாகப்பட்டினம் இங்கெல்லாம் 'பெட்ரோலியம் வேப்பர் லைட்டுகள்' உள்ளன. சென்னையில் உள்ள கலங்கரை விளக்கத்தில் உள்ளது 'எலக்ட்ரானிக் லைட்' இது 3,000 வோல்ட் பல்ப் கொண்டது. மின்சாரம் தடைப்பட்டால்கூட, தானே 'காஸ்' சப்ளை செய்துகொண்டு தடங்கல் இல்லாமல் இது எரியும்.

''தீவுகள், மற்றும் ஆள் போய்ச் சேர முடியாத இடங்களில் 'சுழல் விளக்குகள்' பொருத்தப்பட்டுள்ளன. இதில் 12 பல்புகள் இருக்கும். ஒரு செட் பல்புகள் எரியாமல் போனால், மற்றவை தானே எரியும். இந்த விளக்குகள் தானே இயங்கக் கூடியவை. அதாவது பொழுது போனால் எரியும்; பொழுது விடிந்தால் அணைந்து விடும்! இம்மாதிரியான விளக்கு கீழக்கரையில் உள்ளது.

''இன்னொரு விளக்கு இருக்கிறது. அதன் பெயர் : 'காஸ் லைட்' சிவப்பு நிறமானது. இதை மிதக்கும் விளக்கு என்று கூடச் சொல்லலாம். நடுக்கடலில், மிதவையில் இது பொருத்தப்பட்டிருக்கும்: கடலில் பாறை போன்றவை இருந்தால், கப்பல்கள் அந்தப் பக்கம் போகாமல் காப்பாற்றி எச்சரிக்கைச் செய்கிறது இந்த விளக்கு......''

இந்த விளக்குகளெல்லாம் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

அடுத்து, பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் (M M D A) அரங்கினுள் நுழைகிறோம். ஏழை எளியவர்களுக்கான வீடுகள் அரும்பாக்கத்தில் கட்டப்பட்டுள்ளன என்றும், மணலி, மறைமலையடிகள் நகரில் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன என்றும், வில்லிவாக்கம் சிங்காரம் பிள்ளை பள்ளிக்குப் பக்கத்தில் வீடுகள் கட்டும் பணி துவக்கப்பட உள்ளது என்றும் அறிகிறோம்.

சென்னை கடற்கரையிலிருந்து லஸ் வரை துரித,இரயில் பாதை 'மாடல்' ஒன்றைப் பார்த்து, பிரமிக்கிறோம் - தென்னக ரயில்வே (Southern Railway) அரங்கில், விண்வெளியில் செலுத்தப்பட்ட S L V-3, ரோகிணி மாடல் ஒன்றைப் பார்த்து மகிழ்கிறோம்:

மலிவு விலையில் வீடு-மாடலும் ஒரு பக்கம் உள்ளது. ஏழை எளியோர், நடுத்தர வர்க்கத்தினருக்குப் பயன்படும் வகையில் இது அமைந்துள்ளது.

உள்ளே இருந்து வெளியே மைதானத்துக்கு வருகிறோம். அசோக் லேலண்டு தயாரித்த புதிய ரக லாரி ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. 'தாரஸ் லாரி' என்று இதற்குப் பெயர். அதிக பளுவை - அதாவது 14.5 டன் பளுவை இது எடுத்துச் செல்லக்கூடியது. 'பிரேக்' பிடிக்காமல் போனால், தானே இயங்கும் சாதனம் இதில் பொருத்தப்பட்டுள்ளது.

அதோ! அங்கே ஒரு கார் நிறுத்தப்பட்டிருக்கிறதே!

அந்தக் கார் எதனால் ஓடுகிறது ?

'எத்தனாலில்' ஓடுகிறது!

''கரும்புக் கழிவிலிருந்து தயாரிக்கப்படுவது 'எத்தனால்.' தமிழ்நாட்டில் 700 மில்லியன் லிட்டர் எத்தனால் தயாரிக்கும் வாய்ப்பு உள்ளது. இந்த எத்தனால் ஒரு கறுப்புத் தங்கம்போன்றது. அதன் அருமை தெரியாமல் அதை நாம் வீணாக்குகிறோம். இதனை எத்தனை நாளுக்கு வேண்டுமானாலும் சேமித்து வைத்துக் கொள்ளலாம்...'' என்று சொல்லிக் கொண்டே வந்தார் ஒருவர்.

''இந்தக் கார் எத்தனாலில் ஓடுகிறது. அதற்கேற்ப, கார் என்ஜினில் சில மாற்றங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. எத்தனாலில் ஓடுவதற்கு ஏற்ப காரை மாற்றம் செய்வதற்கு ரூ. 1,500 செலவாகும். புதிதாகவே ஒரு என்ஜினை உருவாக்கும் திட்டமும் யோசனையில் இருந்து வருகிறது. ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ. 4.95 என்றால், ஒரு லிட்டர் எத்தனால் ரூ. 2.13 தான் ஆகிறது. ஆனால், பெட்ரோலில் 10 கி.மீ. ஓடும் காரானது, எத்தனாலில் 6 கி. மீ. வரைதான் ஓடும்....'' என்றும் அவர் விளக்கினார்.

எத்தனால் மற்றும் டீசல் ஆகிய இரு எரிபொருட்களையும் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள ஒரு பேருந்தைப் பற்றிய செய்தி ஒன்றை நாம் படித்திருக்கிறோம். பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பக் கழக, வெப்ப ஆற்றல் பொறியியல் துறையின் ஆராய்ச்சிக் குழு இதனை உருவாக்கியது. இந்தப் பேருந்து, பலர் முன்னிலையில் ஓட்டியும் காண்பிக்கப் பட்டது. சாலைப் போக்குவரத்தில் பெட்ரோலிய எண்ணெய் சிக்கனத்திற்கு, இம்மாதிரியான புதிய கண்டுபிடிப்புகள் பெரிதும் துணை செய்யும்.

இந்தப் பொருட்காட்சியில் கடைசியாக தமிழ்நாடு மின்சார வாரியம் - அதன் பணிகள் பற்றித் தெரிந்து கொள்கிறோம். திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றைப்பார்த்து அதன் உள்ளே சென்று - அங்குள்ள இருக்கை வசதிகளை— அழகைப் பார்த்து மகிழ்கிறோம்.

எண்பதுக்கும மேற்பட்ட காட்சி, அரங்குகளைக் கொண்டு, விளங்கிய இந்த அரிய பொருட்காட்சி அறிவினை வளர்த்திடும் தூண்டுகோலாய் அமைந்திருக்கதது.

இவ்வளவு விந்தைகளை- சிந்தைக்கு விருந்தூட்டும் செய்திகளைத் தன்னகத்தே கொண்ட இந்தப் பொறியியல் பொருட்காட்சியைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் உங்களை உந்தித் தள்ளுகிறதல்லவா? அதற்கு அடுத்த ஆண்டு வரை பொறுத்திருக்க வேண்டும்!



கையை உலர்த்தும் கருவி



# நூல் நயம்

**புதுக்கோட்டை சமஸ்தான வரலாறு**

**[ஆசிரியர்: சிரஞ்சீவி. இணை ஆசிரியர்: க. இலக்குமி நாராயணன், எம்.ஏ. வெளியீட்டோர்: அபிராமி பப்ளிகேஷன்ஸ், 307, லிங்கி செட்டித் தெரு, சென்னை-1. விலை 7-50.]**

இந்தியா விடுதலை பெற்ற பின்னும், பல சமஸ்தானங்கள் இங்கே தனி இராச்சியங்கள் போல் நடந்து கொண்டிருந்தன சிலகாலம். அப்படி நடந்த சமஸ்தானங்களில் புதுக்கோட்டை சமஸ்தானம், தொண்டைமான்கள் ஆட்சிக் காலத்தில் எவ்வளவு சீரும் சிறப்புமாக விளங்கியது என்பதை வரலாறு பூர்வமாக விளக்குவதே இந்த நூல்.

புதுக்கோட்டை சமஸ்தானம் பற்றிய ஆவணக் குறிப்புகளும், சரித்திரச் சான்றுகளும் ஆங்காங்கே தொடப்பட்டிருந்தாலும்கூட, *1685* முதல் *1951* வரையில் சீராக நடந்த அந்த ஆட்சியை யாவரும் எளிதில் புரிந்து கொள்ளத்தக்கதாக உருவாக்கியிருக்கிறார் நூலாசிரியர்.

பாராட்டத்தக்க வரலாற்று நூலாகும் இது!

**நீரிழிவு நோயாளிக்கு வாழ்க்கை முறைகள்**

**[ஆசிரியர்: டாக்டர் இ. எஸ். எஸ். இராமன். வெளியீட்டோர்: விசாலாட்சி பதிப்பகம், 7, இராமசாமி நாயுடு கார்டன் தெரு, புதுப்பாக்கம், சென்னை-14. விலை ரூ. 12-00.]**

நீரிழிவு நோயாளிகளுக்கென்றே தனிக் கவனத்தோடு எழுதப்பட்ட முதலாவது தமிழ் நூலாகும் இது.

நீரிழிவு நோயாளியைப் பற்றி, அவர்களுடைய பிரச்சினைகள் பற்றி, அந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பற்றி, அந்தத் தீர்வுகளுக்கான சாத்தியக்கூறுகள் பற்றிப் பல ஆராய்ச்சிகள் பண்ணப்பட்டு எழுதப்பட்டிருக்கிறது இந்தப் புத்தகத்தில்.

*322* பக்கங்கள் உள்ள இந்த நூலில் நோயாளிகள் கண்டுணரும் விதத்தில் *52* படங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இது மட்டுமல்ல—

நீரிழிவு நோயாளிக்கான குறிப்புப் புத்தகம், நீரிழிவு நோயாளியின் அடையாள அட்டை ஆகியவைகளும் கூட இப்புத்தகத்தில் இணைக்கப்பட்டிருப்பது ஒரு சிறப்பு.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய புத்தகங்களின் வரிசையில் இந்நூலை இணைக்கலாம்.

—பி.எல்.ஆர்.

**வடக்கே ஒரு சந்திப்பு**

(ஆசிரியர்: லக்ஷ்மி. வெளியீடு: பூங்கொடி பதிப்பகம், 22, வி. எஸ். வி. கோயில் தெரு, சென்னை-4, விலை-ரூ. 5)

சமுதாயத்தில் புரையோடிப் போய்க்கொண்டிருக்கிற பால்ய விவாகம், குழந்தையிலேயே விதவையாகி அவர்களது அழகைச் சிதைக்கும் அவலநிலை போன்ற கொடுமைகள் தடுக்கப்படவேண்டும். இந்த நாவலில் நாவலாசிரியை திருமதி லக்ஷ்மி இதனைச் சித்திரிக்கும் பாங்கே அலாதியானது.

சீதா குழந்தையிலேயே விதவையாகி, நீலுவின் உதவியால் அந்தக் கொடுமையிலிருந்து காப்பாற்றப்படுகிறாள். இடையில் பல சிக்கல்கள். இறுதியில் வடக்கே சீரடி யாத்திரைக்குத் தன் நண்பர்களுடன் செல்லும் போது நீலுவைச் சந்திக்கிறாள் சீதா. அவனைத் தன்னுடன் அழைத்து வருகிறாள்; பேணிப் பாதுகாக்கிறாள்.

யாத்திரைக்குத் தலைமை தாங்கி வரும் டாக்டர் ரேவதியின் கடமையுணர்ச்சி நன்கு சித்திரிக்கப்பட்டிருக்கிறது. நாமும் அவர்களுடன் பயணம் செய்கிறோம். சீதா, நீலு-இன்னும் நம் கண் முன்னால் நிற்கிறார்கள். சீதா, பூவும் பொட்டும் மாய்க் காட்சியளிக்க வேண்டும் என்பதில் நீலுவுக்குத்தான் எத்தனை ஆசை, அக்கறை, அன்பு! சமுதாயத்தில் நீலுவைப்போல இலட்சிய மனிதர்கள் தோன்ற வேண்டும்.

**வேமன்னாவின் வேதவாக்கு**

(ஆசிரியர்: இலக்கியச் சித்தர் தங்கவயல் லோகிதாசன், வெளியீடு: 3-37, சத்திய மூர்த்தி நகர், நந்தனம், சென்னை-35. விலை-ரூ. 6)

ஆந்திரம் வழங்கிய அரிய கவிஞர்தான் வேமன்னா. அவரது பாடல்கள் பாமர மக்களையும் தட்டி எழுப்பக்கூடியவை. மூட நம்பிக்கைகளை வேரோடு களைந்திடவும், வாழ்வாங்கு வாழ்வதற்கான வழிமுறைகளைக் கூறிடவும் வேமன்னா பாடினார்.

''தென்னகக் கதிரவனாகிய வள்ளுவ அறிவொளிப் பா[illegible]த் தெறிக்கும் தென்னகச் சுடர் மணிகளாகத் தமிழில் சிவ வாக்கியரும், மலையாளா நத்தில் குஞ்சன் நம்பியாரும், கன்னடத்தில் சர்வஞ்ஞரும், தெலுங்கில் வேமனயோகியும் விளங்குகின்றனர்'' என்று குறிப்பிட்டு பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்கள் இந்நூலுக்கு முன்னுரை வழங்கியிருக்கிறார்.


நூலாசிரியரின் எளிய இனிய உரை விளக்கம் நம்மைக் கவர்கிறது.

—பி.வி.ஜி.


தமிழரசு
சந்தா விவரம்
ஓர் ஆண்டு ரூ.12
அரை ஆண்டு ரூ.6




# எதனாலே?



சிந்தனை சிறப்பது எதனாலே?
சிறந்த புத்தகப் படிப்பாலே!

காந்தி சிறந்தது எதனாலே?
கடமை அஹிம்சை அன்பாலே!

சாந்தி நிலவுதல் எதனாலே?
சத்திய நெறிமுறை வழியாலே!


நாடு சிறப்பது எதனாலே?
நமதெனும் உணர்வு நலத்தாலே!

வீடு விளங்குதல் எதனாலே?
விவேகம் மிகுந்த பொறுப்பாலே!

வெற்றி கிடைப்பது எதனாலே?
வற்றா ஊக்கம் உழைப்பாலே!

பெற்றுச் சிறப்பது எதனாலே?
பெரியோர் போற்றும் பண்பாலே!

—கலைப்பொழிலன்



## மாணவர் பக்கம்

## மாணவி இந்திரா!

## முதல் மதிப்பெண் பெற்ற



**ஆ**றாம் வகுப்பிலிருந்து, பத்தாம் வகுப்பு வரை படிப்பில் முதல் மாணவியாகவே திகழ்ந்தவர் செல்வி வி. இந்திரா.

சென்னை நுங்கம்பாக்கம் மாநகராட்சிப் பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் பத்தாவது வகுப்பில் படிக்கும் மாணவி இந்திரா, 500க்கு 453 மதிப்பெண்கள் பெற்று, தமிழ்நாட்டிலேயே தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியருள், முதலிடம் பெற்றுள்ளார்.

இவரது தந்தை திரு வேலாயுதம், சென்னை அக்கௌண்ட் டண்ட் ஜெனரல் அலுவலகத்தில் பணிபுரிகிறார். இவரது தாய் மாநகராட்சிப் பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றுகிறார்.

மாணவி இந்திரா, பள்ளி பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டிகளிலும் பரிசுகள் பெற்றுள்ளார். பள்ளி நாடகங்களிலும் இவர் நடித்துப் பாராட்டுகள் பெற்றுள்ளார். 'மாணவர் மன்றம்' நடத்திய போட்டியிலும் இவருக்குப் பரிசு கிடைத்திருக்கிறது.

''எதுவரை படிக்க உங்களுக்கு விருப்பம்?''


''நான் டாக்டருக்குப் படிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அல்லது ஐ.ஏ.எஸ். படிக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். என் தந்தையின் விருப்பமும் அது தான்.'' என்கிறார் மாணவி இந்திரா.

கடந்த ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலைப் பள்ளித் தேர்வுகளில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்ற மாநகராட்சிப் பள்ளி மாணவ — மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கும் விழா 2.9.80 அன்று சென்னை நேரு விளையாட்டரங்கில் நடந்தது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் தலைமையில், மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

மாணவி இந்திராவுக்கு ரூ.250 பரிசு வழங்கப்பட்டது. 'சிங்வி' அறக்கட்டளை சார்பில் ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டது. இவரது தந்தைக்கும் கைத்தறி ஆடை, திருக்குறள் நூலை அமைச்சர் அவர்கள் வழங்கினார். இதே போல இரண்டாவது, மூன்றாவதாக வந்தவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

—பி.வி. கிரி.



## மாநகராட்சியின் மகத்தான கல்விப் பணி

சென்னை மாநகராட்சி, தனது ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளில் பயின்று வெளிவரும் மாணவ மாணவியர் உயர்கல்வி பெற சென்னை மாநகரில் 25 உயர் நிலைப் பள்ளிகளையும் 9 மேல் நிலைப் பள்ளிகளையும் நடத்தி வருகின்றது. இப்பள்ளிகளில் ஏறக்குறைய 30,000 மாணவ மாணவியர் பயில்கின்றனர்.

பெரும்பாலும் சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மாணவர்களே மாநகராட்சிப் பள்ளிகளில் அனுமதிக்கப்படுகின்றனர். இவர்கள் கல்வித் தரத்தில் பின் தங்கியுள்ளனர். வசதிமிக்க குடும்பத்து மாணவர்கள் தனியார் பள்ளிகளிலே சேருகின்றனர். எனினும் மாநகராட்சிப் பள்ளி மாணவர்கள் அரசு பொதுத் தேர்வுகளில் அதிக அளவில் தேர்ச்சி பெற; சென்னை மாநகராட்சியே இலவசமாக பொதுக் கேள்வித் தாள்களை அச்சிட்டு, காலாண்டு, அரையாண்டு மற்றும் மீள்பார்வைத் தேர்வுகளை நடத்துகின்றது.

அதிக தேர்ச்சி விழுக்காடுகள் பெறுவதில் ஊக்கமூட்டும் வகையில் பல்வேறு பரிசுகள் வழங்கப் படுகின்றன. எல்லாப் பாடங்களிலும் பயிற்சிப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

34 உயர் பள்ளிகளிலிருந்து 3,740 மாணவ மாணவியர் 1980 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் நடந்த எஸ். எஸ். எல். சி. பொதுத் தேர்வுக்கு அனுப்பப் பட்டு, 1,045 மாணவர்கள் தேர்ச்சி பெற்று 28 விழுக்காடு தேர்ச்சி காட்டியுள்ளனர்.

தாழ்த்தப்பட்ட சமுதாய மாணவ, மாணவியருள் அதிக மதிப்பெண் பெற்ற மாணவருக்கும், பிற சமுதாய மாணவருள் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவருக்கும் பரிசுகள் வழங்குவதோடு இல்லாமல், தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல், வரலாறு, புவியியல் பாடங்களில் தனித் தனியே, 34 பள்ளிகளிலும் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. 100 விழுக்காடுகள் மதிப்பெண்கள் பெற்ற மாணவருக்கு ரூ. 100 பரிசளிக்கப்படுகிறது.

இவ்வாண்டு 12-ஆம் வகுப்பு அரசுத் தேர்வுக்கு முதலாவதாக 9 மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து, அனுப்பப்பட்ட 1,622 மாணவர்களுள் 701 மாணவர்கள் தேர்ச்சி பெற்று 43 விழுக்காடு தேர்ச்சியினைக் காட்டியுள்ளனர். நுங்கம்பாக்கம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலிருந்து அனுப்பப்பட்ட 270 மாணவிகளுள் 199 மாணவிகள் 74 விழுக்காடு தேர்ச்சியுற்றனர். பொதுவாக எல்லா மாநகராட்சி மேல்நிலைப்பள்ளிகளிலும் தேர்ச்சி விழுக்காடு திருப்திகரமாக உள்ளன. லாயிட்சாலை மேல்நிலைப் பள்ளியின் தொழிற்கல்வி பிரிவில் 19 மாணவர்களுள் 18 மாணவர்கள் 95 விழுக்காடு தேர்ச்சி பெற்றுள்ளனர். எஸ். எஸ். எல். சி தேர்வுக்குரிய பரிசுகள்போலவே மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன.



### கேள்வி இங்கே.....

1. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புறநானூற்றுப் பாடலைப் பாடியவர் யார்?
2. கிரகங்களில் பெரியது எது?
3. மாஸ்கோ ஒலிம்பிக்கில் வெற்றி தேடித்தந்த இந்திய ஹாக்கி அணியின் தலைவர் யார்?
4. முதல் உலகத் தமிழ் மாநாடு எங்கே நடைபெற்றது?
5. உலகப் புகழ்பெற்ற "மூலதனம்" என்ற நூலை எழுதியவர் யார்?
6. இந்தியாவின் மேற்கு வாயில் எது?
7. சமீபத்தில் விடுதலை பெற்ற ஜிம்பாப்வே என்ற நாட்டின் பிரதமர் யார்?
8. பிரெஞ்சுப் புரட்சியில் எழுப்பப்பட்ட முக்கிய முழக்கங்கள் எவை?
9. தமிழகத்தில் எத்தனைப் பல்கலைக் கழகங்கள் உள்ளன? அவை யாவை?

விடை அடுத்த பக்கம்

## நானே நானா?



இந்தச் சிறுமியின் கையில் இருக்கும் சிறுமி யார்? அவரே தான் இவர்! நளினாவின் கையில் நளினா!

ஆம். மலேசியா நாட்டின் பல பகுதிகளில் சிறுவர் சிறுமிகளை மகிழ்விக்கும் வகையில் விநோதமான முறையில் புகைப்படங்களை எடுத்துத் தருகிறார்கள்.

### பதில் இங்கே....!


1. கணியன் பூங்குன்றனார்
2. ஜூபிடர்
3. பாஸ்கரன்
4. மலேயாவில் உள்ள கோலாலம்பூர்
5. காரல் மார்க்ஸ்
6. பம்பாய்
7. இராபர்ட் முகபு
8. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்.
9. ஐந்து பல்கலைக் கழகங்கள் உள்ளன. அவை :
   - அ) சென்னைப் பல்கலைக் கழகம்.
   - ஆ) மதுரை காமராஜர் பல்கலைக் கழகம், மதுரை.
   - இ) அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்.
   - ஈ) கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகம்.
   - உ) பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பக் கழகம், சென்னை.

தொகுப்பு : இரா. இரகுபதி, செங்கற்பட்டு

## அறிவுச்சுடர்

1. முதல் அணுக்குண்டிற்குக்காரணமான விஞ்ஞானி — ராபர்ட் ஒபன்ஹைமர்.
2. டிரான்ஸிஸ்டரை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் — ஜான் பார்டீன் மற்றும் வில்லியம் ஷாக்லி.
3. அரேபிய எண்களுக்கு மூலகாரணமான நாடு — இந்தியா
4. டெரிலினைக் கண்டு பிடித்தவர் — J. வின்பெல்டு மற்றும் J. டிக்சன்.
5. ரேயானைக் கண்டு பிடித்த நாடு — அமெரிக்கா.
6. குளிர் பதன முறையைக் கண்டு பிடித்தவர் — கார்லர் (Carler).

## வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
## உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
## அத்தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
## **டான்சி**யின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்!
உயர்ந்த தரம்! நியாயமான விலை!
இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—
தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம் டான்சி!
டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ 16 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**
**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014
தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI




# பரிதிமாற்கலைஞர்



இல. பழனியப்பன்

அன்னிய ஆதிக்கத்தின் விளைவால் தமிழர்கள் தலைகுனிந்து நின்ற காலத்தில் அவர்களைத் தட்டி எழுப்பி தம் பெருமை தனை உணர வைத்த ஒரு சிலரில் வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் என்ற பரிதிமாற் கலைஞர் தலையானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

*1870*-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 6-ஆம் நாள் மதுரையை அடுத்த விளாச் சேரியில் பிறந்தவர் பரிதிமாற்கலைஞர். இவர் தந்தையார் கோவிந்த சிவனார். இளமைக் காலந்தொட்டே இவரின் அறிவாற்றலை முறைப்படுத்தி தமிழுலகம் அறியச் செய்ததே பரிதிமாற் கலைஞரின் தமிழ்த் தொண்டிற்கு அடிப்படை எனலாம்.

இளமைக் கல்வியைப் பசுமலையிலும் மதுரையிலும் பயின்ற பரிதிமாற்கலைஞர், டாக்டர் மில்லரின் பெருமுயற்சியால் உருவாகி இன்று சென்னைப் பகுதியில் சிறந்து விளங்கும் கல்லூரிகளில் ஒன்றான கிறித்துவக் கல்லூரியில் பட்டப்படிப்பைத் தொடர்ந்து *1892*-ல் பி. ஏ. பட்டம் பெற்றார். முதல் வகுப்பில் தமிழ்நாட்டில் முதல் மாணவராகத் தேறி, பாஸ்கர சேதுபதி அவர்களின் பொற்பதக்கம் பெற்ற பெருமை பரிதிமாற் கலைஞரையே சாரும். தமிழிலும் தத்துவத்திலும் அவர் பெற்ற அறிவு அன்னாரது பிற்காலத் தமிழ்த் தொண்டிற்கு வித்திட்டன எனில் மிகையாகாது.

பரிதிமாற் கலைஞா அவர்களின் அறிவாற்றலையும், கடின உழைப்பையும் கண்ட டாக்டர் மில்லர் *1893*-ஆம் ஆண்டில் கிறித்துவக் கல்லூரியில் உதவித் தமிழ் ஆசிரியராக நியமித்தார். இளமைக் காலத்தில் மகாவித்வான் ச. சபாபதி முதலியாரவர்களிடம் இவர் பயின்ற தமிழ், மதுரை பாலகிருஷ்ண நாயுடு அவர்களிடம் கற்ற விளையாட்டுத்திறன், கிறித்துவக் கல்லூரித் தமிழாசிரியர் சின்னச்சாமிப் பிள்ளையின் அரவணைப்பு, ஆகியவை ஆசிரியர் பணியில் அவருக்குத் துணை நின்று பெருமை சேர்த்தன. கல்லூரிப் பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கெனத் தனிச் செல்வாக்கு இருந்த அந்தக் காலத்தில் தமிழின் மேல் இருந்த தனியாக் காதலால் தன்னைத் தமிழ்ப் பணிக்காக ஒப்படைத்துக் கொண்டு தன் பணியைச் செய்த பரிதிமாற் கலைஞரைப் போன்ற ஒருவரை இன்றளவும் காண்பது அரிது.

எந்தப் பலனையும் எதிர்பாராமல் தமிழ் இலக்கியப் பணிக்கே தன்னை அர்ப்பணித்த பரிதிமாற் கலைஞரைத் தலைமைத் தமிழ் ஆசிரியர் பதவி மிகக் குறுகிய காலத்தில் தேடி வந்து அடைந்ததில் வியப்பில்லை.

பரிதிமாற் கலைஞரின் நடை உயரிய செந்தமிழ் நடை. படிப்போரைக் கவர்ந்து இழுக்கும் தன்மை வாய்ந்தது. ஒவ்வோர் எழுத்திலும், பேச்சிலும், ஒரு புதிய அணுகு முறை தோன்றும். பரிதிமாற் கலைஞரின் ஆங்கில அறிவு அவரது தமிழ்ப் பணிக்குப் பெரிதும் உதவியது. தமிழ் இலக்கண, இலக்கிய நுட்பங்களுக்கு மெருகு ஊட்ட உலக மொழியாம் ஆங்கில அறிவு கைகொடுத்துப் புதிய சிந்தனைக்கு வழி வகுத்தது.

ஞானபோதினி என்னும் பத்திரிகையின் வாயிலாகத் தொடர் கதையாக வெளியிடப்பட்டு பின்னர் புத்தகமாக வெளி வந்த 'மதிவாணன்' என்னும் கதையே பரிதிமாற் கலைஞர் அவர்களின் முதற் படைப்பிலக்கியமாகும். 'விளையும் பயிர் முளையிலே' என்னும் மொழிக்கேற்ப-பரிதிமாற் கலைஞரின் தொண்டுக்கு இதுவே சிறந்த முதற்படியாக அமைந்தது எனலாம்.

தனது பத்தொன்பதாவது வயதிலேயே திருமணம் செய்து கொண்டு இல்லற வாழ்வுப் பணியைத் தொடங்கிய பரிதிமாற் கலைஞர் அதை நல்லறமாகவே கடைசி வரை நடத்திக் காட்டினார். இவர், பாடம் சொல்லும் முறையே மாணவர் தம் உளவியலை இவர் கரைத்துக் குடித்தவர் என்பதற்குச் சான்று. மாணவர் ஆசிரியர். உறவு முறையில் முதன் முதலில் புதிய அணுகு முறையைப் பின்பற்றிய பெருமையும் இவரையே சாரும்.

பரிதிமாற் கலைஞர் என்றால் உடனே இன்றளவும் நினைவுக்கு வருவது அவரது நாடகத் தொண்டல்லவா? அவர் வாழ்ந்த காலத்தில் நாடகத் தமிழ்வளர்ச்சி கொஞ்சம் தொய்வு பெற்றிருந்தது. முத்தமிழில் ஒன்றான நாடகத் தமிழுக்கு தன் பங்கினை 'ரூபாவதி' அல்லது 'காணாமற்போன மகள்' என்றும் நாடகத்தின் வாயிலாகச் செலுத்தினார். இந்நாடகம் நாடகத்தமிழ் இலக்கணத்திற்கே தலை சிறந்த இலக்கியமாகத் திகழ்ந்தது எனலாம். *1895*-ஆம் ஆண்டு அரங்கேறிய இந்நாடகத்தில் பரிதிமாற் கலைஞர் அவர்களே பங்கேற்று நடித்தது, இத்துறையில் அவருக்கு உள்ள ஈடுபாட்டினைக் காட்டுகிறது. இதைத்தொடர்ந்து இவர் எழுதிய 'கலாவதி' என்னும் நாடகம் முழுக்க முழுக்க இவர் 'எழுதிய நாடகவியல்' என்னும் நாடக இலக்கணத்திற்கு இலக்கியமாக அமைந்தது. தனது உடல் நலம் பாதிப்பதைக்கூடக் கருதாமல் இரவு, பகல் இரு வேளைகளிலும் நாடகம் ஆக்குவதும், படிப்பதும் பார்ப்பதும் பரிதிமாற் கலைஞர் அவர்களுக்கு அன்றாடப் பணி ஆகிவிட்டது. மாண

வர்களுக்கு உதவியாகத் தண்டியலங்காரம், சொல்லணியியல் தொடர்பாக 'சித்திர கவி விளக்கம்' என்றும் சிறு நூல் ஒன்றைப் பல்வேறு பணிகளுக்கிடையே ஆக்கியதும் ஈண்டு குறிப்பிடத் தக்கதாகும். இவரது நன்றியுணர்விற்குச் சான்றாக இவரது 'மணிய சிவனார் கலி வெண்டா'வும் 'பாவலர் விருந்தும்' திகழ்கின்றன. அந்தக் காலத்தில் இலக்கிய இதழாகக் கொடி கட்டிப் பறந்த 'ஞான போதினி' யில் இவர் கூட்டாசிரியராகப் பணியாற்றியது, ஒன்றே இவரது பத்திரிகைத் துறை அறிவிற்குச் சிறந்த சான்றாகும்.

பரிதிமாற் கலைஞரின் தனிப் பாசுரத் தொகை என்னும் நூல் இலக்கிய உலகிலேயே புதிய மரபை உருவாக்கியது எனலாம். இந்நூல் ஆங்கிலத்தில் ஜி. யூ. போப் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதே இதன் சிறப்பைச் சொல்லுகிறது. தமிழின் மறுமலர்ச்சி இலக்கியமாகக் கருதப்படும் மனோன்மணியத்தோடு ஒப்பிடும் தகுதி பெற்ற ஒன்றாக இந்நூல் அக்காலத்தில் விளங்கியது எனலாம்.

'செந்தமிழ் உரைச்சங்கம்' என்னும் ஓர் அமைப்பினை நிறுவிக் கடினமான பாட நூல்களுக்கு உரை எழுதி மாணவர்களுக்கு உதவிய பெருமையும் அக்காலத்தில் பரிதிமாற் கலைஞரையே சாரும்.

மதுரையில் தமிழ் வளர்ச்சிக்காக நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவப் பாடுபட்ட தமிழ்க்காவலர்கள் பாண்டித்துரைத் தேவர்-பாஸ்கர சேதுபதி ஆகியோரின் முயற்சிக்கு எல்லா வகையிலும் உறுதுணையாகத் துணிந்துநின்று செயலாற்றிய செம்மையும் பரிதிமாற் கலைஞரையே சாரும்.

'செந்தமிழ்'ப் பத்திரிகையில் இவர் யாத்த 'உயர்தனிச் செம்மொழி' எனும் கட்டுரை தமிழ் உள்ளளவும் நிலைத்து நிற்கும். கல்வித் துறையில் தமிழை ஒதுக்க ஒரு சிலர் சதி செய்த காலத்தில் அதை அஞ்சாது எதிர்த்து தமிழுக்கு ஆக்கமும் ஊக்கமும் சேர்த்தார் பரிதிமாற் கலைஞர்.

நாடகத் தமிழின் பெருமையை நானிலமெங்கும் பறை சாற்றும் 'நாடகவியல்' இவருக்குப் பெருமை சேர்த்தது. ஆனால் உடல் நலத்தின் பாதிப்பு இந்நூல் வெளியான சமயத்திலேயே தொடங்கி விட்டது எனலாம். இத்தருணத்தில் 'மானவிஜயம்' என்னும் அவலச் சுவை நாடகம் இவரால் வெளியாயிற்று.

தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சா., மகாவித்வான் ரா. இராகவய்யங்கார், மகாவித்துவான் சண்முகம்பிள்ளை, சி. வை. தாமோதரப் பிள்ளை, மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை போன்ற பல அறிஞர்கள் பரிதிமாற் கலைஞர் அவர்களின் நண்பர்கள் என்பதே அவரது பெருமைக்குச் சான்று.

சைவமும் தமிழும் தழைத்தோங்கப் பாடுபட்டவர் பரிதிமாற் கலைஞர் என்பதற்கு அவர் எழுதிய 'மணிய சிவனார் சரித்திரம்' என்னும் நூலும், தன் இறுதிக் காலத்தில் எழுதிய 'தமிழ் மொழியின் வரலாறு' எனும் ஒப்புயர்வற்ற நூலும் சான்றுகளாக இன்றளவும் திகழ்கின்றன.

இவையன்றி பல நூல்களை இவர் மேலும் வெளியிட முயன்றார் என்னும் செய்தி இவரது தளராத தமிழார்வத்திற்கும் தொண்டிற்கும் சான்றாக விளங்குகிறது.

கலிங்கத்துப்பரணி, நளவெண்பா, மழவை மகாலிங்க அய்யர் இலக்கணம், தாண்டவராய முதலியாரின் பஞ்ச தந்திரம், மதுரை சபாபதி முதலியார் இயற்றிய திருக்குளர்தை வடிவேலன் பிள்ளைத் தமிழ், மதுரை மாலை ஆகியவை இவரைச் சிறந்த பதிப்பாசிரியராக நமக்குக் காட்டுகின்றன.

இவ்வாறு இரவு பகல் பாராது இறுதி வரை தமிழே தன் மூச்சாக வாழ்ந்த பரிதிமாற் கலைஞரின் வாழ்வு 1903-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் இரண்டாம் நாள் முடிந்தது. முப்பத்து மூன்றாவது வயது தொடக்கத்திலேயே தமிழ் கூறும் நல்லுலகத்தைப் பிரிந்து சென்ற பரிதிமாற் கலைஞர் அவர்கள் இறவாத புகழோடு தமிழர்கள் இல்லந்தோறும் உள்ளந்தோறும் வாழ்கிறார்.

## பார்த்தோம்! படித்தோம்!

தன்னிறைவுத் திட்டத்தினை விளக்கிடும் 16—9—1980 இதழ் அருமை.. .. .. அருமை.. .. ..

—தம்பி அசோகன்,
குடியாத்தம்.

கலைவாணரை நினைவு கூர்ந்த ஒரே பத்திரிகை 'தமிழரசு' என்று நினைக்கிறேன். பாராட்டுக்கள்.

—பு. இளங்கோ,
திருவையாறு.

இயல், இசை, நாடக மன்றத்தில் வைக்கப்பட்டிருந்த மறைந்த கலைஞர்களின் நடுப் பக்க 'ஆல்பம்' கிடைத்தற்கரிய கருவூலம் !

—அண்ணா. அன்பழகன்,
அந்தணப்பேட்டை.
ஜி. ஆர். முரளி,
மதுரை-5.
பி. அண்ணாதுரை,
சுந்தரபாண்டியபுரம்.

பாமரர்களும் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் பி. வி. கிரி எழுதிய 'திருக்கழுக்குன்றத்தில் ஒரு மகாமகம்' கட்டுரை அருமையாக இருக்கிறது.

எஸ். எஸ். மணியன்,
திருக்கழுக்குன்றம்.
என். குமாரசாமி,
கொளத்தூர்.

எஸ். எஸ். சுந்தரம் எழுதிய செய்குத் தம்பி பாவலர் கட்டுரை சிறப்பாக இருந்தது.

சொ. முத்தமிழ்வாணன்,
தஞ்சாவூர்.

தமிழரசு இதழ் முதல் ஏட்டிலிருந்து கடைசி ஏடு வரை செய்திகள் மிக அருமையாக அமைந்துள்ளன.

ரெ. சண்முகம்பிள்ளை,
(ஓய்வு பெற்ற மாவட்ட பதிவாளர்) தஞ்சாவூர்.

எலும்பு முறிவுக்குச் சிகிச்சை முறை போன்ற மருத்துவக் கட்டுரைகள் சிறப்பாக உள்ளன.

—ஏ. ஜெயசங்கரி,
சங்கரன்கோவில்.

வேளாண்மை சம்பந்தமான கேள்வி—பதில் மீண்டும் இடம் பெற்றால் எங்களுக்கு உதவியாக இருக்கும்.

ஆர். கண்ணன்,
ஆர். நாராயணன்,
சிவகங்கை.

சிறுவை நச்சினார்க்கினியன் எழுதிய சி. வை. தாமோத்ரம் பிள்ளை பற்றிய கட்டுரை மிக நன்று.

—டாக்டர் ப. சிற்சபை,
காஞ்சிபுரம்.



## அரசு அலுவலர் அனுபவம்

## தவறுக்கும் தவறான தவறு!

நான் பட்டுக்கோட்டை அஞ்சல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிகிறேன். எங்கள் வட்டத்தில் உள்ள சில அஞ்சலகங்களில் நடந்த சில சுவையான தகவல்களை உங்களுடன் பரிமாறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒருமுறை 'Sow. Kamala Matured' என்று வாங்க வேண்டிய மெசேஜை மோர்சில் வாங்கிய ஒருவர், அவசரத்தில் 'How. Kamala Matured' என்றுவாங்கி விட்டாராம்! ஒரு எழுத்துமாறப் போய் அர்த்தமே அனர்த்தமாகிவிட்டது!

அரசு ஊழியர்கள் - தங்கள் அனுபவத்தில் விளைந்த சுவையான நிகழ்ச்சிகளை எழுதுமாறு கேட்டிருந்தோம். இங்கே அரசு ஊழியர் இருவர் தமது அனுபவத்தை - வரலாற்று உண்மையாக்கியிருக்கிறார்கள்.

(ஆர்.)

ஒருவர் 'Sent Rs. 100' என்று தந்தி கொடுத்தாராம். தந்தி கொடுத்துவிட்டு இரண்டு மூன்று நாட்கள் தொடர்ந்து அஞ்சல் நிலையத்திற்கு அலைந்திருக்கிறார். கடைசியில்தான் அதற்கான காரணம் புரிந்திருக்கிறது! 'Send Rs. 100' என்று கொடுக்க வேண்டிய மெசேஜை அவரே தவறாக எழுதிக்கொடுத்திருக்கிறார். நூறு ரூபாய் பணம் அனுப்பியதாகத் தந்தி கொடுத்து விட்டு பணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தால் எங்கிருந்து பணம் வரும்?

இன்னொரு திருவிளையாடல் டைப்பிஸ்ட்' செய்தது! ஒரு முக்கியமான 'ஸ்டேட்மெண்ட்' எல்லாக் கிளை அலுவலகங்களிலிருந்தும் வரவேண்டி இருந்தது. அதற்காக ஒரு சர்க்குலரை ஸ்டென்சில் செய்து எல்லா அலுவலகங்களுக்கும் அனுப்பினோம். இரண்டு மூன்று நாட்களாகியும் எங்கிருந்தும் ஸ்டேட்மெண்ட் வந்தபாடில்லை. பின்னரே அதற்கான காரணம் புரிந்தது. 'The statement need now be submitted' என்பதை டைப்பிஸ்ட் 'The statement need not be submitted' என்று டைப் செய்துவிட்டிருந்தார். விஷயம் இப்படி இருக்க எங்கிருந்து ஸ்டேட்மெண்ட் வரும்?

பி. எல். ராஜகோபாலன்
பட்டுக்கோட்டை.

## பாண்டியன் தொண்டு....

முகவை மாவட்டம் பரமக்குடி வட்டத்திலிருப்பது தடுத்தலாங்கோட்டை என்ற கிராமம். மிக மிக ஒதுக்குப் புறமான ஊர். கண்மாயில் தூர் அகற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. இங்கே ஊர் நல அலுவலராகப் பணியாற்றிக் கொண்டிருந்த நான், கண்மாய்க் கரை வழியே சைக்கிளைத் தள்ளியவாறு சென்று கொண்டிருந்தேன்.

கண்மாய் வெட்டு மராமத்துப் பணியைப் பார்வை இடும் பொறுப்பு ஏதும் என்னைச் சேர்ந்ததல்ல எனினும், ஆர்வ அடிப்படையில், சைக்கிளை நிறுத்திவிட்டு, வேலை நடைபெறும் இடத்திற்குச் சென்றேன். சில திருத்தங்களைச் சொல்லிக் கொண்டு நின்றேன். சிறிது நேரமாயிற்று.

மண்வெட்டிக் கொண்டிருந்த தொழிலாளர்களிடையே திடீரென ஓர் பரபரப்பு! திடுக்கிடு! மிகக் கவனமாக மண்ணை அகற்றத் தொடங்கினர்! அங்கே நான்கு செங்கற் சுவர்கள் தெரிந்தன! பக்கத்திலே வேலை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் எல்லோரும் ஓடிவந்து குழுமிவிட்டனர்.

ஊர்ப் பெயரில் கோட்டை இருப்பதால், இங்கே ஏதோ ஓர் கோட்டையின் மதிற்சுவர் கிடைத்துவிட்டது என்றும், இதனைக் கண்டறிந்து அரசுக்குத் தெரிவிப்பதன் மூலம், ஒரு மாபெரும் ஆராய்ச்சிக்கு அடிகோலும் பெரும்பேற்றை நான் அடையப்போவதாகவும் எண்ணி என் இதயத்துக்குள் ஓர் இன்ப வெள்ளம் பெருக்கெடுக்கத் தொடங்கியது!

சுவர்களின் நீள அகலங்கள் மிகவும் சிறிதாக இருந்தன. நான்கு பக்கமும் மண் அகற்றப்பட்டு, சுவர்களுக்கு நடுவிலுள்ள மண்ணையும் சிறிது அகற்றிப் பார்த்தால், அது ஒரு கிணறு என்பது தெரிந்தது! ஊர் மக்களும் வந்து சேர்ந்தனர். எல்லோரும் சேர்ந்து, கிணற்றுக்குள்ளிருந்த மண் முழுவதையும் அள்ளி எடுத்துவிட்டனர். எத்தகைய பெருவியப்பு! அனல்கக்கும் கோடைப் பருவம்! மழை பொய்த்த வறண்ட காலம்! அந்த நிலையில், கிணற்றின் உள்ளேயிருந்து, அருமையான தண்ணீர் ஊற்றெடுத்துப் பெருகியது! குடித்துப்பார்த்தோம். அந்த உச்சி நேரத்து வெயிலிலும் தண்ணீரின் குளுமை, எங்கள் உடம்பையே குளிரவைத்தது!

ஊர்ப் பெரியவர் ஒருவர் விளக்கினார். ''இங்கே பாண்டியன் கிணறு ஒன்று இருந்ததாகச் சின்ன வயசிலே சொல்லக் கேட்டிருக்கேன். நான் பார்த்ததில்லே! அது, இதுவாகத்தான் இருக்கும் போல!''

எந்தவிதமான போக்குவரத்து வசதியும் இல்லாமல் எங்கோ கிடக்கும் இந்தச் சிற்றூர் மக்களுக்குப் பாண்டிய மன்னன் செய்திருக்கும் சீரிய தொண்டு, எங்களைத் திகைக்கச் செய்தது.

இந்தக் கிராமத்தைப் போன்று, இன்னும் எத்தனை இடங்களில், பாண்டியனின் இத்தகைய சேவை இயற்கையால் மறைக்கப்பட்டுக் கிடக்கின்றனவோ!

இந்தக் கிணற்றுத் தண்ணீர் மட்டும் இவ்வளவு குளிர்ச்சியாயிருக்க என்ன காரணம்? கிணற்றின் அமைப்பு மேலே குவிந்தும், அடிப்பாகம் பானைபோல் விரிந்தும் அமைக்கப்பட்டிருப்பதுதான் காரணமாம்!

பாண்டிய மன்னர்களின் அறிவாற்றல்களையும், மக்களுக்கு அவர்கள் ஆற்றியுள்ள பெருந்தொண்டுகளையும் எண்ணி வியப்படையும் அதேநேரத்தில், மிகவும் அவசியமான ஒரு தேவை, மிக எளிதாகத் தற்போது அந்தக்கிராமத்து மக்களுக்கு நிறைவு செய்யப்பட்டு விட்டதை நினைத்துப் பெரிதும் மகிழ்ந்தோம்.

சா. உடையார்
ஊர்நல அலுவலர்,
தட்டானேந்தல்.

# சீரகம்

—எஸ். சையது,
உதவிப் பேராசிரியர்,
தோட்டக் கலைத்துறை,
தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம், கோவை.

மணமூட்டும் பொருள்களுள் சீரகமும் ஒன்றாகும். சீரகம் தினமும் உணவுடன் சேர்த்துக் கொள்ளப்படும் பொருளாகும். அது மட்டுமின்றி, சீரகம் மருந்தாகவும் பயன்படுகிறது. இது வயிற்றோற்றம், மற்றும் வாய்வு நோய் போன்றவைகளைக் குணப்படுத்தவும் பயன்படுகிறது. மனிதர்களுக்கு மட்டுமின்றி, மிருகங்களுக்கும் சீரகம் மருந்தாகப் பயன்படுகிறது.

இதிலிருந்து எடுக்கப்படும் ஒருவித எண்ணெய், வாசனைப் பொருட்களுடனும், மதுவகைகளுடனும், மணம் அளிப்பதற்காகச் சேர்க்கப்படுகின்றது.

சீரகம் ஒரு சிறிய செடியாகும். இது 75-90 நாட்கள் வயதுடையது. இச்செடி 15-30 செ.மீ. உயரம் வளரக்கூடியது. இது இந்தியாவில் எல்லா இடங்களிலும் பயிராகிறது. முக்கியமாக உத்திரப்பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான், குஜராத் ஆகிய மாநிலங்களில் அதிகமாகவும், ஏனைய மாநிலங்களில், சற்றுக் குறைவாகவும் பயிரிடப்படுகிறது.

சீரகம் நன்றாக வளர, ஆழமான, மிருதுவான நல்ல வடிகால் வசதியுள்ள, இருபண்பாடுள்ள நிலம் ஏற்றது. இது மிதமான தட்பவெப்ப நிலையிலுள்ள இடங்களில் நன்றாக வளரும்.

வகைகள்:

சீரகத்தில் நான்கு வகைகள் உள்ளன.

1. உயரம் 2. குட்டை 3. ஊதாப்பூவகை 4. வெள்ளைப் பூ வகை.

இந்த நான்கு வகைகளில் ஊதா பூவகை அதிக மகசூல் தரவல்லது.

சீரகம் மிகவும் எளிதில் சேதமடையக்கூடிய ஒரு பயிர். எனவே நிலம் தயாரிப்பதில் சற்று கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியம். நிலத்தை நன்றாக உழவேண்டும். அதாவது நான்கு முதல் ஐந்து தடவை நன்றாக உழவேண்டும். மற்றைய செடிகளின் வேர்கள், குச்சிகள் இல்லாதவாறு பொறுக்கி எடுக்க வேண்டும். கட்டிகள் இல்லாதவாறு நன்றாக உடைத்து, நிலத்தைச் சமப்படுத்துதல் மிகவும் அவசியம். நிலத்தை 4-5 மீட்டர் நீளம், 1.5 மீட்டர் அகலத்திற்கு பாத்திகள் அமைத்தல் வேண்டும் இடையில் வாய்க்காலும் அமைத்தல் வேண்டும்.

கடைசி உழவின்போது அடியுரமாக, 30-40 டன் நன்றாக மக்கிய தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இடவேண்டும். பிறகு விதைத்த 20-25 வது நாளில் எக்டருக்கு 50 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 20 கிலோ யூரியாவை, மேல் உரமாக இட வேண்டும்.

மழைக் காலங்களில் விதைப்பதைத் தவிர்க்க வேண்டும். ஏனென்றால் சீரகம் அதிக மழையைத் தாங்கவல்லது. எனவே, தென்மேற்குப் பருவகாலம் ஆரம்பிப்பதற்கு முன்போ, அல்லது வடகிழக்குப் பருவகாலம் முடியும் நிலையிலோ விதைப்பது நல்லது. சாதாரணமாக மார்ச்சு ஏப்ரல் மாதங்களிலும் மற்றும் அக்டோபர் மாதக் கடைசியிலும் நவம்பர் மாதம் முதலிலும் விதைக்கலாம். விதை அளவு ஒரு எக்டருக்கு 20 கிலோ போதுமானது. விதையை நிலத்தில் ஒரே சீராக தூவி விதைக்கலாம். விதைத்த பின்பு இலேசாக மண்ணைக் கிளறிவிட வேண்டும்.

விதைத்தவுடன் தண்ணீர் பாய்ச்சுதல் வேண்டும். தண்ணீரை இலேசாக விட வேண்டும். பிறகு மூன்றாம் நாள் நீர்பாய்ச்ச வேண்டும். செடிகள் பூக்கும் வரை 4-5 நாட்களுக்கு ஒருமுறையும், செடிகள் பூத்தபிறகு 7-15 நாட்களுக்கு ஒரு முறையும், வெட்ப தட்ப சூழ்நிலைக்கேற்பவும், நீர் பாய்ச்ச வேண்டும்.

களை எடுத்தல் மிகவும் அவசியம். அதாவது விதைத்த 20-25 நாட்களுக்குப் பிறகு ஒரு முறையும், பிறகு தேவைப்படும் பொழுது ஓரிரு முறையும் களை எடுத்தல் அவசியம்.

சீரகத்திற்குப் பயிர்ப்பாதுகாப்பு மிகவும் அவசியம். பூச்சிகளைப் பொறுத்த வரையில் இலையைத் தின்னும் புழு மிகவும் முக்கியமானது. இதனைக் கட்டுப்படுத்த மீதைல் பாரத்தியான், மெட்டாசிஸ்டாக்ஸ், டைமெக்ரான், ஜோலோன் அல்லது நுவக்ரான் அவற்றில் ஏதாவது ஒன்றைத் தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

நோயைப் பொறுத்த வரையில் சாம்பல் நோய் மிகவும் முக்கியமானது. இதனைக் கட்டுப்படுத்த, எக்டருக்கு 20 கிலோ தூவும் கந்தகத் தூளைத் தூவலாம். மறுபடியும் இதனை 10-15 நாட்கள் கழித்து தூவ வேண்டும். அல்லது நனையும் கந்தகம் (0.5 சதம்) அல்லது கோசான் (0.1 சதம்) அல்லது காரத்தேன் -0.05 சதம்) இவற்றில் ஏதாவது ஒன்றைத் தெளித்து சாம்பல் நோயைக் கட்டுப்படுத்தலாம்.

பொதுவாக சாம்பல் நோய், பூவிட ஆரம்பித்தவுடன் தோன்ற ஆரம்பிக்கும். ஆகவே, பூக்க ஆரம்பித்தவுடன் ஒரு தடவையும், 10-15 நாட்கள் கழித்து மறுபடியும் ஒருமுறை தெளித்தல் மிக அவசியம. இதனைக் கட்படுத்தாவிட்டால் பூக்கள் கருகி விதை பிடிக்காமல் போவதுடன் ஒரு சமயம் செடியே செத்து விடும்.

அறுவடை :

செடிகள் 35-45 நாட்களில் பூக்க ஆரம்பிக்கும். விதைகள் அறுவடைக்கு 75-90 நாட்களில் தயாராகிவிடும். செடிகளை வேருடன் பிடுங்கி, ஓரிரு நாட்கள் குவித்து வைத்தல் வேண்டும் பிறகு செடிகளை பரப்பிவிட்டு, குச்சிகளால் அடித்து விதைகளை எடுத்து, அவற்றை நன்றாக காற்றில் தூற்றி சுத்தம் செய்து, சேமித்து வைத்தல் வேண்டும். சராசரியாக, ஒரு எக்டரிலிருந்து 500-1200 கிலோ சீரகம் கிடைக்கும் சீரகத்தில் 2-5 சதம் எண்ணெய் உள்ளது.

இந்தியாவில் விளையும் சீரகத்தில், அதிக அளவு, நம் நாட்டிலேயே உபயோகப்படுத்தப்படுகிறது. இந்தியாவில், சுமார் 80000 எக்டர் நிலப் பரப்பில் பயிரிடப்பட்டு 45,000 டன் சீரகம் உற்பத்தியாகிறது.

சிலோன், மலேசியா, அமெரிக்கா, கிழக்கு ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கு, சிறிதளவு அதாவது 3000 டன் சீரகம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனால் நம் நாட்டிற்கு அந்நியச் செலாவணியும் சிறிதளவு கிடைக்கிறது. எனவே, அதிகளவு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய, அதிகளவு நிலப்பரப்பில் பயிரிட்டு, மகசூலை அதிகரிக்க நல்ல வாய்ப்புள்ளது.





# நித்த நித்தம் வளரும் நமது சுற்றுலாத் துறை

—மாமலன்

தமிழகத்தின் சுற்றுலாத்துறை நாளொரு மேனியாக வளர்ந்து வருவதை நாம் காண்கிறோம். வரலாற்றுத் தொன்மை, கலை, பண்பாட்டு மேன்மை, இலக்கியப் பெருமை மிகுந்த தமிழகம் சுற்றுலாத் துறையில் ஓங்கி வளர்வதில் வியப்பில்லை.

முற்றிலும் மறந்தோம் சுற்றுலாத் துறையை' என்பது பழம் கதையாகிவிட்டது.

இப்பொழுது தமிழ்நாடு தன்னேரில்லா வகையில் வளர்ந்து வருகிறது. இப்பணியில் தமிழ்நாடு அரசு முழுமையாக ஈடுபட்டுள்ளதை சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 10வது ஆண்டு தொடக்க விழாவில், மாண்புமிகு செய்தி சுற்றுலாத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தமிழகத்தில் சுற்றுலாத்துறை கடந்த மூன்று ஆண்டுகளில் சீரிய முறையில் வளர்ந்திருப்பதை விளக்கினார்கள்.

"இந்தியாவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தமிழகத்திற்கு வரும் அளவுக்கு விமானப்போக்குவரத்து வசதிகள் பெருகிட வேண்டும். சுற்றுலா வளர்ச்சிக்குத் தமிழ்நாடு அரசு எடுத்து வரும் முயற்சிக்கு எல்லாம் மத்தியஅரசு உதவிட வேண்டும்" -என்று குறிப்பிட்டார்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு துரை. கோவிந்தராசன் அவர்கள் 'சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்காகத் தமிழகத்தின் தலைநகரில் ஒரு கட்டடம் கட்டப்பட வேண்டும். சுற்றுலா வரும் சாமானிய மக்கள் தங்கும் வகையில் தலைநகரில் நகரில் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும்' என்று வலியுறுத்தினார்.

மேலும் தமிழகத்தின் சுற்றுலாத்துறை நாளுக்கு நாள் தழைத்து வளர்ந்து வருவதை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களும், சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் அவர்களும் எடுத்து விளக்கினார்கள்.

அவ்வுண்மையைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

## தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வளர்ச்சி

1971ஆம் ஆண்டு தொடங்கியதிலிருந்து சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வரலாற்றில் 1977-80க்கு இடைப்பட்ட மூன்றாண்டுகள் முக்கியத்துவம் வாய்ந்த, திருப்பு முனைகளும், சாதனைகளும் நிறைந்த ஆண்டுகளாக விளங்குகின்றன. தமிழக சுற்றுலா வளர்ச்சியின் முன்னோடித் திட்டங்களும், வளர்ச்சிக்கான அடிப்படை வசதி அமைப்புகளும், கடந்த மூன்று ஆண்டுகளாக அமல்படுத்தப்பட்டன. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும், இந்தியச் சுற்றுலாப் பயணிகளும் விரும்பிப் பாராட்டும் வகையில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சுற்றுலா மாளிகை வசதிகளும், போக்குவரத்துத் துறையின் பயணத் திட்டங்களும் அமைந்துள்ளன. இந்த வளர்ச்சியானது சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வருவாய் 1கோடி ரூபாயினைத் தாண்ட உதவியதோடு, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஒரு வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக 1.7.80 லிருந்து மாறவும் வழி வகுத்தது.

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் விடுதிகளும், பெருவழி விடுதிகளும் இந்நாள்வரை 'சுற்றுலா மாளிகைகள்'' என அழைக்கப்பட்டு வந்தன. இப்பொழுது சுற்றுலா மாளிகைகளுடன் பெயர் குழப்பம் ஏற்படுவதைத் தவிர்க்க இச்சுற்றுலா மாளிகைகள் அனைத்தும் இப்பொழுது "ஹோட்டல் இராஜராஜன்" என்றும் பெயரால் அழைக்கப்படுகின்றன.

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வருவாய் 1971-72ல் ரூபாய் 4 இலட்சமாக இருந்த நிலை மாறி, இவ்வாண்டு 120 இலட்சத்தை அடைந்துள்ளது. சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் செயல்பாடுகளின் வளர்ச்சியாலும், விரிவாக்கத்தாலுமே இத்தகைய வளர்ச்சியடைந்த கூடுதல் வருவாயை அடைய முடிந்தது. 'சுற்றுலா மாளிகைகளில் தங்கும் இடவசதிகள் கூடுதல் ஆக்கப்பட்டதோடு, போக்கு

வரத்துப் பயணத் திட்டங்களும் பயணிகளின் விருப்பத்திற்கேற்ப மாற்றியமைக்கப்பட்டதும் இவ் வளர்ச்சியின் தலையாய காரணங்களாகும்.

வருவாய் கூடுதலானதன் பொருட்டே முதல் முறையாக 1977-78ஆம் ஆண்டு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இலாபத்தில் இயங்கத் தொடங்கியது.

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் செயல் திறனில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் காரணமாக, அரசிடமிருந்து பெற்ற கடன்களுக்கும் வட்டித் தொகை 1978-79-ஆம் ஆண்டிலிருந்து தரப்படுகிறது.

1975-76ஆம் ஆண்டுவரை சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் 752 படுக்கை வசதிகளுடன் கூடிய 10 சுற்றுலா மாளிகைகள் மட்டுமே இருந்தன. தற்போது 985 படுக்கை வசதிகள் கொண்ட 14 சுற்றுலா மாளிகைகள் இருக்கின்றன. புதிதாக, சிதம்பரம் சுற்றுலா மாளிகையும், மற்றும் இராணிப்பேட்டை, உளுந்தூர் பேட்டை பெருவழி விடுதிகளும் சேர்ந்துள்ளதோடு, மதுரை, உதகை, கோடைக்கானல், கன்னியாகுமரி, திருச்சி, திருசெந்தூர் இராமேஸ்வரம், மாமல்லபுரம், ஏர்க்காடு, ஒகனேக்கல் மாளிகைகளில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

### உலகத் தமிழ் மாநாட்டுக்கு

மதுரையிலும், கோவையிலும் கட்டப்பட்டுவரும் ஓட்டல்கள் முடிவடையும் தறுவாயில் உள்ளன. 110 படுக்கைகள் வசதிகளோடு மதுரையில் கட்டப்பட்டு வரும் மூன்று நட்சத்திர ஓட்டல் நடைபெறவிருக்கும் 5வது உலகத் தமிழ்மாநாட்டுக்கு வருகைதரும் விருந்தினர்களுக்குத் தங்கும் வசதிக்கென தயாராகும் நிலையிலுள்ளது. ரூ. 55 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வரும் இவ்வோட்டலில் நீச்சல்குளம் சிறு மாநாட்டுக் கூடம், இசை வசதி, தொலைபேசி, மாடித் தோட்டம், விளையாட்டு வசதிகள் போன்ற நவீன வசதிகள் செய்யப்படவுள்ளன.

ரூ. 25 இலட்சம் செலவில் கோவையில் கட்டப்பட்டு வரும் சுற்றுலா மாளிகை இவ்வாண்டு இறுதிக்குள் முடிவடையும். மாமல்லபுரம் கடற்கரை வளாகம் ரூ. 38 இலட்சம் செலவில் 30 குடில்களுடனும், நீச்சல்குளம் சிறு மாநாட்டுக்கூடம் போன்ற நவீன வசதிகளுடன் விரிவாக்கம் செய்யப்படுகின்றது. இதுவும் முடிவடையும் நிலையிலுள்ளது.



இவைகளோடு சுற்றுலா மாளிகைகளின் படுக்கை எண்ணிக்கை 985 லிருந்து 1220 ஆக உயரும். இவைகளோடு பதுக்கோட்டை, முதுமலை ஆகிய இடங்களில் சுற்றுலா மாளிகைகளும் புதிய பெருவழி விடுதிகளும் கட்டும் திட்டமும் ஆய்வில் உள்ளது.

### இளைஞர் விடுதிகள்

இளைஞர்களிடையே சுற்றுலா உணர்வை வளர்க்கும் பொருட்டு குறுகிய செலவுத் திட்டத்தோடு சுற்றுலா செல்லும் இளைஞர்களுக்கென, முக்கியச் சுற்றுலாத் தலங்களில் இளைஞர் விடுதிகள் கட்டப்படவுள்ளன. இவ்விடுதிகளில் குறைந்த செலவில் தங்கும் வசதியளிக்கப்படும். தற்போதைய செயல் திட்டத்தின்படி, ஏர்க்காடு, மண்டபம், பிச்சாவரம், ஒகனேக்கல், கொடைக்கானல், இராமேசுவரம், உதகமண்டலம், மாமல்லபுரம், குற்றாலம் ஆகிய இடங்களில் கட்டப்பட உள்ளது.

ஏர்க்காடு, மண்டபம், ஒகனேக்கல் ஆகிய இடங்களில் கட்டப்படும் இளைஞர் விடுதிகள் முடிவடையும் தறுவாயிலுள்ளது. இளைஞர் விடுதிக்கு அருகில் மாமல்லபுரத்தில் ரூ. 3.5 இலட்சம் செலவில் முகாமிடம் கட்டப்பட்டு வருகின்றது.

1976-77ல் ஆறு சொகுசுப் பேருந்துகள் மட்டிலுமே பெற்றிருந்த போக்குவரத்துத் துறை தற்போது (1979-80) 10 பேருந்துகளைக் கொண்டுள்ளது. அவற்றிலொன்று குளிர்சாதனம் பொருத்தப்பட்டதாகும்.


சுற்றுலாப் பணிகளின் கருத்து அறிந்து பயணத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து வருகை தருகின்ற இந்தியக் குடியேற்றச் சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பயணத் திட்டத்தை பெரிதும் விரும்பி வரவேற்கின்றார்கள். நமது பயணத் திட்டங்களில் அந்நாடுகளில் பெறுகின்ற வரவேற்பினைக் கருதி, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில், நமது பயணத் திட்ட சீட்டுகளை விற்பனை செய்ய, விற்பனை முகவர்களை மத்திய அரசின் ஒப்புதலோடும், ரிசர்வ் வங்கியின் அனுமதியுடனும் நியமிக்கப்பட இருக்கிறார்கள். சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி, சென்னை மாநகரின் முக்கிய ஓட்டல்களும், பயணமுகவர்களும் பயணத்திட்டச் சீட்டுகளை விற்பனை செய்யும் விற்பனை முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். மற்ற மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகங்களும் விற்பனை முகவர்களாக இயங்குவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

விரைவில் புதிதாக இரண்டு குளிர்சாதனப் பேருந்துகளும், மூன்று சொகுசுப் பேருந்துகளும் இரண்டு சிறிய பேருந்துகளும் வாங்கப்படவுள்ளது. இத்துடன் பேருந்துகளின் எண்ணிக்கை 17 ஆக உயரும். வளர்ந்து வரும் சுற்றுலாப்பயணிகளின்தேவைக்கு இது உதவியாய் அமையும். பேருந்துகளின் உயரிய பராமரிப்பிற்கெனப் புதிய பணிமனைகளையும் தொடங்கப்பட்டுள்ளது.

### சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சி

ஆண்டுதோறும் பொருட்காட்சி நடைபெறும் போர் நினைவுச் சின்னத்திற்கு எதிரில் 6.5 ஏக்கர் நிலத்தை, தமிழ்நாடு அரசு, மத்திய அரசிடமிருந்து பெற்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு அளித்துள்ளது. இதனை ஒரு நிரந்தரமான பொழுதுபோக்கு இடமாக விரிவுபடுத்தும் திட்டம் கழகத்திடம் உள்ளது. ஆண்டுதோறும்





நடைபெறும் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சி பொது மக்களின் ஒருமித்த பாராட்டினைப் பெற்றுள்ளதோடு அகில இந்திய அளவில் நடைபெறும் பொருட்காட்சியாகவும் விளங்குகின்றது. வர்த்தகப் பொருட்காட்சியின் வருவாய் 1976-77ல் ரூ. 16.82 லட்சத்திலிருந்து, 1979-80ல் ரூ. 32.11 இலட்சமாக உயர்ந்துள்ளது. மேற்கண்ட ஆண்டுகளில் கிடைத்த நிகர இலாபம் ரூ.5.17 இலட்சத்திலிருந்து ரூ. 12.19 இலட்சமாக வளர்ந்துள்ளது.

கடந்த மூன்றாண்டுகளில், தமிழ்நாடு அரசின் சுற்றுலாத் துறையின் வளர்ச்சிப் பணிகள் விரிவடைந்து உள்ளது. 1975-76ல் ரூ. 22.70 இலட்சமாக இருந்த சுற்றுலாத் துறையின் நிதி ஒதுக்கீடு, 1979-80ல் ரூ. 95 இலட்சமாக உயர்ந்துள்ளது குறிப்பிடத் தகுந்ததாகும். இது முக்கியச் சுற்றுலாத் துறைகளை மேம்படுத்த உதவுவதாக அமைந்துள்ளது. சுற்றுலாத்துறையின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வரும் சில முக்கிய சுற்றுலாத் தலங்கள் வருமாறு:

### இராமேசுவரம்

இராமேசுவரம், தமிழ் நாட்டில் உள்ள முக்கியமான யாத்திரிகத் தலங்களில் ஒன்றாகும். இலங்கையிலிருந்து படகு மூலம் வரும் பயணிகள் வந்திறங்கும் இடமாக இராமேசுவரம் உள்ளது. இராமேசுவரம் தீவினைச் சுற்றியமைந்துள்ள பல்வேறு தீவுகளில் அரிய உயிரியல் இன வகைகள் வாழ்வது குறிப்பிடத்தக்கது.

இராமேசுவரத்திற்கு இந்தியாவின் பல்வேறு பகுதியிலிருந்தும் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் வருகை தருகின்றார்கள். இராமேசுவரத்தின் சுற்றுலா முக்கியத்துவத்தை முன்னிட்டுத் தமிழ்நாடு அரசு ரூ. 28 கோடி செலவில் ஒரு பெருந்திட்டத்தை வரைந்துள்ளது. இத்திட்டம் 5 ஆண்டிலிருந்து 7 ஆண்டுகள் செயல்படுத்தப்படும். இப்பெருந் திட்டத்தின் கீழ் சுற்றுலாவின் அடிப்படை அமைப்புத் தேவைகள் இராமேசுவரத்தில் அமைக்கப் பெறுவதோடு, அண்டை மாவட்டமான இராமநாதபுரமும் மேம்படுத்தப் படுகின்றன. பாம்பன், கீழக்கரை இரண்டு இடங்களும் இத்திட்டத்தின் கீழ் கடற்கரை வளாகங்களாக மேம்படுத்தப்படவுள்ளது. தங்குமிட வசதி விரிவு படுத்தப்படுவதோடு, துறைமுக அபிவிருத்தி, மற்றும் புதிய சாலை அபிவிருத்தியும் செய்யப்படுகின்றன.

### மாமல்லபுரம்

மாமல்லபுரம் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றும் வரையப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மாமல்லபுரத்தினை ஒரு சர்வதேசக் கடற்கரை வளாகமாக மேம்படுத்தும் செயல்முறை உள்ளது. இதற்கென, மத்திய அரசின் உதவியோடு ரூ. 6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### கன்னியாகுமரி

குமரிமுனைக்கு நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை பெருகி வருகிறது. எனவே, கன்னியாகுமரியின் வளர்ச்சிக்கெனப் பெரும் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது.

### மாவட்டச் சுற்றுலா மையங்கள்

மாவட்டங்களிலிருக்கும் சில குறிப்பிட்ட சுற்றுலா இடங்களை சுற்றுலா மையங்களாக வளர்ச்சி பெறச் செய்ய அரசு திட்டமொன்றினை வரைந்துள்ளது. இத் திட்டத்தினை மாநில அரசு போக்குவரத்துக் கழகங்களின் உபரி நிதியிலிருந்து அமல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் மாவட்டச் சுற்றுலா மையங்களில் சுற்றுலா பேருந்துகள் நிறுத்துமிடமும், குடிதண்ணீர், கழிவறை வசதிகள், ஓய்வு விடுதிகள் போன்றவை செய்து தரப்படும். முதற் கட்டமாக ஒவ்வொரு பேருந்து கழகமும் ரூ. 3 இலட்சம் இதற்கென ஒதுக்கும். மாநிலத்திலுள்ள 15 மாவட்டங்களில் 30 சுற்றுலா மையங்களை 8 அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதி உதவியுடன் மேம்பாடடையச் செய்யும்.

இப்படி அரிய திட்டங்களால்; தமிழகத்தில் சுற்றுலாத் துறை நாளுக்கு நாள் வளர்ந்து வருவது பெருமைக்குரிய செய்தியாகும்!



# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

**6—9—80**

தஞ்சை அருகே 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வரும் தவிட்டு எண்ணெய் ஆலை அடுத்த ஆண்டுத் துவக்கத்தில் செயல்படத் துவங்கும் என அக்ரோ இன்டஸ்டிரீஸ் கார்ப்பொரேஷன் தலைவர் திரு லியாகத் அலிகான் அவர்கள் கூறினார்.

**7—9—80**

சென்னை நகருடன் இணைக்கப்பட்ட 12 ஊராட்சிகளுக்கும் குடிநீர் வழங்குவதற்காக 206 இலட்சம் ரூபாய் செலவிடப்படும் என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

**8—9—80**

விவசாயிகள் சிரமமின்றி அரசின் சலுகைகளைப்பெறவும், நில உரிமைகளை உரிய வகையில் பெறவும், பினாமி நிலங்களை மீட்கவும், 50 ஆண்டுகளுக்கு முன்னர் செய்யப்பட்ட நில உரிமைப் பதிவு தற்போது மீண்டும் செய்யப்படுவதாக மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

**9—9—80**

தமிழ்நாடு விசேஷ ஆயுதப்படை காவலர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. புதிதாகத் தற்போது இக்காவல்பிரிவுக்கு 2 ஆயிரம் பேர்களைச் சேர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**10—9—80**

*குடிசை மாற்று வாரியம் அமைக்கப்பட்ட 10 ஆண்டுகளில் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற 77-ஆம் ஆண்டு முதல் 80ஆம் ஆண்டுவரை 8,504 குடியிருப்புகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன என்று குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைவர் திரு. டி. கே. கபாலி அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

**11—9—80**

அக்டோபர் 2-ஆம் தேதி முதல் மலிவு விலையில் காவல்துறையினருக்கு அரிசி மற்றும் உணவுப் பண்டங்கள் வழங்கப் படும். இதற்காகக் கூடுதலாக அரசுக்கு ஆண்டுக்கு 5 கோடி ரூபாய் செலவாகும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் தெரிவித்தார்.

**14—9—80**

கடலூர் வட்டத்தைச் சேர்ந்த குறிஞ்சிப்பாடி, குள்ளஞ்சாவடி, கடலூர் ஆகிய பகுதிகளில் உள்ள ஏழை, எளிய முதியவர்கட்கும், ஆதரவற்ற விதவைகட்கும், உடல் ஊனமுற்றவர்கட்கும் வேட்டி சேலைகள் 784 பேர்களுக்கு அரசால் வழங்கப்பட்டது.



**15—9—80**

1—7—80 முதல் வேலையற்ற பட்டதாரிகளுக்கு மாதம் ரூ. 50 வீதம் உதவித் தொகை வழங்கப்படும் என்று மாண்புமிகு அரிசனநலத்துறை அமைச்சர் திரு விஜயசாரதி அவர்கள் அறிவித்தார்.

**16—9—80**

விவசாயத் தொழிலாளர்களின் தினக் கூலி மேலும் 60 காசாக உயர்த்தப்பட்டுள்ளது என்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் அறிவித்துள்ளார்.

**19—9—80**

நக்சல்பாரிகளின் வன்முறையை ஒழிக்க-தர்மபுரி மாவட்டத்திலுள்ள போச்சம்பள்ளி, வட ஆர்க்காட்டில் உள்ள குரிசில்பட்டு, ஏலகிரி ஆகிய இடங்களில் புதிய காவல் நிலையங்கள் திறக்கப்பட்டன.

**20—9—80**

இராமேசுவரம், மகாபலிபுரம் ஆகிய இடங்களைச் சுற்றுலாத் தலங்களாக்கப் பெருந் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கு ரூ. 34 கோடி செலவிடப்படும் என்று மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்.

**21—9—80**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் பேருந்து வசதி செய்து கொடுப்பதற்கான சாத்தியக்கூறுகளை, கிராம மக்களின் தேவை அடிப்படையில் அறிந்து முடிவு செய்வதற்காக மாவட்ட அளவில் அதிகாரிகள் கொண்ட ஒரு குழு அமைக்கப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் அறிவித்தார்.

இந்த ஆண்டில் அரிசன மக்களின் மேம்பாட்டிற்கென ரூ. 131 கோடி செலவிடப்படுமென மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் திரு விஜயசாரதி அவர்கள் தெரிவித்தார்.

—தொகுப்பு: மருது



# எட்டும் அறிவினில் ஆணுக்குப் பெண் இங்கே இளைப்பில்லை காண்!

"எட்டும் அறிவினில் ஆணுக்குப் பெண் இங்கே இளைப்பில்லை காண் என்று கும்மியடி!''

தேசியகவி பாரதி கண்ட புதுமைப் பெண் பாடுகிறாள் இப்படி. பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் மட்டுமல்ல-ஆண்கள் எந்தெந்தத் துறைகளிலெல்லாம் அனுபவம் பெறவும் ஆ... செலுத்தவும் துடிக்கிறார்களோ அங்கெல்லாம் இடம் பெற்று இணையற்றுத் திகழஎங்களாலும் முடியும் என்கிறாளாம் புதுமைப் பெண்.

பாரதி காட்டிய அந்தப்பெண்களுக்கான உதாரணங்களாகத் திகழ்கிறார்கள் சென்னை அடையாறில் உள்ள அரசினர் மகளிர் பல்தொழில் பயிலகப் (Govt. Polytechnic for Women) பெண்கள்.

கூந்தல் அலங்காரத்திலிருந்து கம்ப்யூட்டர் விஞ்ஞானம் வரை இங்கே மகளிர்க்குக் கற்பிக்கப் படுகிறது.

1962-ல் — தமிழகத்திலேயே முதன் முதலாகத் துவக்கப்பட்டது தான் மகளிருக்கான இந்த பல்தொழில் பயிலகம். அதன் பின் கோவையிலும், மதுரையிலும் இவ்வாறான மகளிர் பயிலகங்கள் துவக்கப்பட்டன. திருச்சியிலுள்ள பயிலகத்தில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கின்றனர்.

எல்லாவற்றையும் விட பெரியது சென்னையிலுள்ள பயிலகமே யாகும். 1962ல் சென்னை பிராட்வேயில் ஆரம்பிக்கப்பட்ட இது, 1963ல் அடையாறில் அமைக்கப்பட்ட தனிக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டது.

இப்போது ஐநூறுக்கு மேலான மாணவிகள் இதில் இணையற்ற கலைகள் எட்டினைப் பயின்று வருகிறார்கள்.

அதாவது-'எட்டும் அறிவினில் ஆணுக்குப் பெண் இங்கே இளைப் பில்லை காண்' என்று பாரதி பாடியதற்கிணங்க — இங்குள்ள பெண்கள் எட்டு அறிவினில் ஆணுக்குப் பெண் இங்கே இளைப் பில்லை என்ற வகையில் பயிலும் விவரம் வருமாறு

கட்டடக் கலை (Civil Engineering), கட்டடக் கலைத் தொழில் உதவியாளர் (Architectural Assistantship) மின்னணுப் பொறியியல் (Electro Engineering) தையற் கலை (Costume Design and Dress makings) வணிகக் கலைப் பயிற்சி (Commercial practice), கருவியியல் கலைத் துறை (Instrument technology) ஒப்பனைக் கலை (Cosmetology) கம்ப்யூட்டர்-அடிப்படை விஞ்ஞானக் கல்வி (Data Processing Course) ஆகியவைகளே இங்கே மகளிர் பயிலும் பல் தொழில்களாகும்.

நில அளவை ஆய்வுக் கூடம், பௌதிகம் - வேதியியல் ஆய்வுக் கூடங்களும் இங்கே உண்டு. வங்கியியல் ( Banking ) இங்கு சிறப்புப் பாடம்.

பார்வையர்க்கென அமைக்கப் பட்டுள்ள இந்தப் பல்தொழில் பயிலகத்தில் அருமையான நூலகம் ஒன்றும் உள்ளது. பல்வேறு துறைகளையும் பற்றிய ஆயிரக் கணக்கான நூல்கள் இதில் இடம் பெற்றுள்ளன. பயிலகத்தினோடு மாணவியர் தங்கும் விடுதியும் சிறப்புற அமைக்கப்பட்டிருக்கிறது.

குழந்தைகளைப் பெற்றுக் காப்பதிலே மட்டுமல்ல; குவலயத்தைக் காப்பதிலேயும் எங்களுக்குப் பங்கு உண்டு என்பது போலவே ஒளி படைத்த கண்ணினர்களாகத் திகழ்கிறார்கள் இங்குபயிலுகின்ற காரிகையர்

இவ்வளவு சிறப்புடைய அரசினர் மகளிர் பல்தொழில் பயிலகத்தில் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கம் ஒன்று நம் கருத்தைக் கவர்வதாக அமைந்தது.

நிர்வாகத் துறை நுணுக்கங்கள் பற்றிய (Accounting in and for management) அக்கருத்தரங்கு ஒன்று சென்னையிலுள்ள அரசினர் மகளிர் பல்தொழில் பயிலகத்தில் 30.9.80.நடைபெற்றது

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் இந்தக் கருத்தரங்கைத் தொடங்கிவைத்தார்.

விழாவுக்கு வருகை தந்திருந்தோரை கல்லூரியின் முதல்வர்

திருமதி ஏ. பார்வதிவரவேற்று உரையாற்றினார்.

தொழிற் கல்வித் துறை (பொறுப்பு) இயக்குநர் வி. சீனிவாசன், கல்வித்துறை ஆணையாளரும் செயலாளருமான திரு சி. இராமதாஸ் ஐ.ஏ.எஸ்.மனித இயல் சமூக விஞ்ஞானவியல் துறை தலைமைப் பொறுப்பிலுள்ள பேராசிரியர் ஆர்.கே. குப்தா, பேராசிரியர் திரு வி. இராமன் ஆகியோர், வளர்ந்து வரும் விஞ்ஞான யுகம் பற்றித் தமது கருத்துரைகளை நிகழ்த்தினார்கள்.

இக் கருத்தரங்கில் பங்கேற்று அரசினர் மகளிர் பல்தொழில் பயிலகத்தில் வணிகவியல் இறுதி யாண்டு மாணவிகளான செல்வி எஸ். விஜயகுமாரி, செல்வி விஜயலட்சுமி, செல்வி எஸ். ராஜேஸ்வரி ஆகியோர் தமது ஆய்வறிக்கையை முன் வைத்து உரையாற்றினார்கள்.

இக் கருத்தரங்கில் -மீனாட்சி மகளிர் கல்லூரி, எத்திராஜ் மகளிர் கல்லூரி, மதுரை மகளிர் தொழில் நுட்பக் கல்லூரி முதலான பல கல்லூரிகளைச் சேர்ந்தோரும்-தொழிற் கல்வித்துறை இணை இயக்குநர் திரு, மே.அன்சாரி பெய்க் மற்றும் பல்வேறு மத்திய - மாநில தனியார் நிறுவனங்களையும் அலுவலகங்களையும் சேர்ந்த பிரதிநிதிகளும் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

அரசினர் மகளிர் பல்தொழில் பயிலகம் நடத்திய இக்கருத்தரங்கில் சென்னை மாநில வர்த்தக சபையும், தேசிய உற்பத்தித் திறன் ஆய்வுக்குழுவும் பெரும் பங்கேற்றன. இக் கருத்தரங்கையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சியில் பல்வேறு கல்லூரிகளையும் நிறுவனங்களையும் சார்ந்தோர் செய்திருந்த விஞ்ஞான வளர்ச்சி குறித்த ஆதாரப் பொருட்கள் பல அணி செய்தன.

நிர்வாகத்துறை நுணுக்கங்கள் குறித்த கருத்தரங்கைத் துவக்கி வைத்து மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு, ஆர்.எம். வீரப்பன் அவர்கள் பேசியதாவது:

அரசு மகளிர் தொழில் நுணுக்கக் கல்லூரியில் முதன் முதலாக இந்த ஒரு பொருள் குறித்த கருத்தரங்கு நடைபெறுவது வருங்காலப் பெண்கள் சமுதாயம் லட்சியத்தோடு தங்கள் பாதையை அமைத்துக்கொள்ள உதவுவதாக இருக்கும்.

குறிப்பிட்ட வயதுக்கு மேலே பெண்களை இவ்வாறான கல்லூரிகளுக்குப் படிக்க அனுப்புகிறோம். ஆனால், எதற்காக அவர்களைப் படிக்க அனுப்புகிறோம் என்கிற உறுதிப்பாடு இந்தப் பெற்றோர்களுக்கும் இல்லை; என் படிக்க வருகிறோம் ஏன்கின்ற உறுதிப்பாடு பெரும் பாலான இந்தக் காலத்துப் பெண்களுக்கும் இல்லை என்பதைச் சொல்லிக் கொள்வதில் நான் சிறிது வருத்தப்படவே செய்கிறேன்.

வீட்டிலே இருந்து வீணே காலம் கழிக்கப் பிடிக்காமல், அல்லது வீட்டு வேலைகளைச் செய்வதில் விருப்பம் இல்லாமல் பெரும்பாலான பெண்கள் படிக்க வருகிறார்கள். என்னுடைய மகள் பி.ஏ., படித்திருக்கிறாள் எம்.ஏ., படித்திருக்கிறாள் என்று பெருமை பேசிக்கொள்வதற்காக அல்லது அதற்கேற்ற மாப்பிள்ளையைத் தேடுவதற்காகவே இந்தக் காலத்தில் பெரும்பாலான பெற்றோர் தங்கள் பெண்களைப் படிக்க அனுப்புகிறார்கள்.

இந்த நிலை மாறவேண்டும். அது மாறாத வரை பெண்கல்வி முன்னேற்றம் என்பது எப்படி வாய்க்கும்?

மாநில வருவாயில் 25 சதவீதத் தொகையைக் கல்விக்காகவே செலவிட்டு வருகிறது இந்த அரசு. அப்படி யெல்லாம் செலவிட்டு, நாம் கற்றுத் தருகிற இந்தத் தொழிற்கல்வியோ மற்றவையோ சமுதாயத்திற்குப் பயன்படுகிறதா என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.



பெண்களை மிக உயர்ந்த இடத்திலே வைத்திருப்பதும் இந்த நாடுதான். அவர்களைக் காலில் போட்டு மிதிப்பதும் இந்த நாடுதான்.

ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே என்கிறோம். சக்தி இல்லாவிட்டால் சிவனே என்ற கூட, என்று சிவனைத் தாழ்த்தி சக்தியை உயர்த்திப் பேசுகிறோம். கல்விக்கானாலும் செல்வத்திற்கானாலும் லட்சுமி சரஸ்வதி என இரண்டு பெண்களையே கடவுளாகக் குறிப்பிடுகிறோம். இவ்வளவு முக்கியத்துவம் பெற்ற மகளிர் சமுதாயம் முன்னேற வேண்டாமா?

ஆண்டொன்றுக்கு ஐயாயிரம் ரூபாய்க்கும் குறைந்த வருமானமுள்ள குடும்பத்தைச் சேர்ந்த பெண்களே இந்தக் கல்லூரியில் ஆர்வத்தோடு படித்து வரும் மாணவிகள் என்று குறிப்பிட்டார்கள். இதற்காக நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இங்குள்ள மாணவிகள் தங்கள் குடும்பத்தின் நிலை உணர்ந்து அந்த நிலை மாறப் படிக்கவேண்டும். உயரவேண்டும்.

சமுதாயத்திலே சரிபாதியாக இருக்கின்ற பெண்கள் படித்து உயர்ந்தால்தான் எந்த நாடும் உயரமுடியும். அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகளிலெல்லாம் படிப்பிலாகட்டும் தொழிலில் ஆகட்டும்; ஆணுக்குப் பெண் சமம் என்ற நிலை இருப்பதைக் காண்கிறோம். பல்வேறு அலுவலகங்களிலும் ஆணும் பெண்ணும் சம அளவில் பணியாற்றுவதை அங்கே பார்க்கமுடிகிறது. அந்த நாடுகளின் வளர்ச்சியை நாம் அறிகிறோம்.

அவ்வாறான வளர்ச்சி நம் நாட்டுக்கும் வரும்படிச் செய்திட வேண்டும் என்கிற உறுதி உங்கள் ஒவ்வொருவருக்கும் வந்தாக வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் பெறுகின்ற கல்வி-தொழிற் கல்வி இந்த நாட்டிற்குப் பயன்பட வேண்டும். இந்தச் சமுதாயத்திற்குப் பயன்படவேண்டும். இதை உணர்ந்தால்தான் நாம் ஏறவேண்டிய உயரம் இன்னும் எவ்வளவு இருக்கிறது என்பதை நீங்களெல்லாம் புரிந்து கொள்ள முடியும்.

—இவ்வாறு மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு, ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் உரையாற்றி, கருத்தரங்கைத் துவக்கிவைத்தார்.

விழா முடிவில் - கல்லூரி செயலாளர் செல்வி சரசுவதி நன்றி கூறினார்.

—பி.எல்.ஆர்.



# காவலர்களுக்குக் களிப்பூட்டும் சலுகை



காவலர்கட்கு, அரிசி, பருப்பு சர்க்கரை போன்ற அத்தியாவசியமான உணவுப் பண்டங்கள் மலிவு விலையில் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த சட்டமன்றத் தொடரில் காவல்துறை மானிய விவாதத்தின்பொழுது அறிவித்தார்கள். அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, இன்று தமிழகமெங்கும் உள்ள காவலர்களுக்கு மலிவு விலையில் உணவுப் பண்டங்களை அரசு வழங்குகிறது!

தமிழகம் முழுவதிலும் உள்ள இன்ஸ்பெக்டர்களிலிருந்து கான்ஸ்டபிள்கள் வரை காவலர் அனைவருக்கும் கடந்த 1.10.80 முதல் மலிவு விலையில் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழக அரசின் இந்த முடிவால், 47 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காவலர் குடும்பத்தினர் பயனடைவார்கள்.

மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களான ,அரிசி, கோதுமை, மைதா, ரவை, சர்க்கரை, துவரம்பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாலின் எண்ணெய் ஆகிய பொருட்கள் தற்போது மலிவுவிலையில் காவலர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் திருச்சியில் 3.10.80ல் இத்திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.

தமிழக அரசின் இந்த நடவடிக்கையின் விளைவாக, 4 பேர் கொண்ட ஒரு காவலரின் குடும்பத்திற்கு மாதத்திற்கு 75 ரூபாய்க்கு மேல் மிச்சமாகும்.

காவலர்களுக்கு இந்த முறையில் ரேஷனில் வழங்கப்படும் பொருட்கள், வெளி மார்க்கெட் விலையுடன் ஒப்பிட்டால், மிக மிக மலிவு ஆகும். அதை விளக்கும் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

விலை வித்தியாசப் பட்டியல்

| பொருள் | அளவு (கிலோ) | காவலர்க்கு அளிக்கப்படும் மலிவு விலை | வெளிமார்க்கெட்டின் விலை |
|---|---|---|---|
| | | (ரூ) | (ரூ) |
| அரிசி | 1 | 1 | 2.20 |
| கோதுமை | 1 | 70 காசு | 1.90 |
| மைதா | 1 | 1 | 2.00 |
| ரவை | 1 | 1 | 2.00 |
| சர்க்கரை | 1 | 1.45 | 2.85 |
| துவரம்பருப்பு | 1 | 2.50 | 5.20 |
| உளுத்தம்பருப்பு | 1 | 2.00 | 4.20 |
| பாமாலின்எண்ணெய் | 1 | 4.15 | 11.00 |

காவலர்களுக்கென விசேஷ (நீலநிறம்) குடும்பக் கார்டு கொடுக்கப்பட்டுள்ளது. நயமான, உயர்தரமான அரிசி மட்டுமல்லாமல், மற்றப் பொருட்களும் தரமுள்ளதாகவே அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

கணவன் மனைவியுடன், ஒரு குழந்தை இருந்தால் 3 யூனிட் ரேஷன் கார்டு, இரண்டு குழந்தைகள் இருப்பின் 4 யூனிட் ரேஷன் கார்டும் வழங்கப்படுகிறது.

திருமணம் ஆகாத போலீஸ்காரர்களுக்கும், ஒரு யூனிட் கொண்ட ரேஷன் கார்டு வழங்கப்படும்.

நீலநிறத்தில் வழங்கப்படும் இந்த ரேஷன் கார்டுகளுக்குப் பல இடங்களில், நுகர்பொருள் வாணிபக் கழகம் காவலர் குடியிருப்புகளிலேயே உணவுப் பொருட்களை வழங்க ஏற்பாடுகளைத் தீவிரமாகச் செய்துள்ளது.

தமிழக அரசு அளித்துள்ள இந்த மகத்தான சலுகைக்காக என்றும் நன்றிக்கடன் பட்டுள்ளோம் என காவலர்களும், அவர்கள் குடும்பத்தினரும் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், தமிழக அரசையும் நெஞ்சார வாழ்த்துகின்றனர்!

—ஜி. ஆனந்தன்.

## புதிதாக கல்வியறிவு பெறுபவர்களுக்கான புத்தகங்கள்
## இருபத்திரண்டாவது தேசிய பரிசுப் போட்டி

அஸ்ஸாம், வங்காளி, குஜராத்தி, ஹிந்தி, கன்னடம், காஷ்மீரி, மலையாளம், மராட்டி, ஒரியா, பஞ்சாபி, ஸிந்தி, தமிழ், தெலுங்கு, உருது ஆகிய இந்திய மொழிகளில், மேற்குறிப்பிட்ட போட்டிக்கு கையெழுத்துப் பிரதிகள் வரவேற்கப்படுகின்றன. படிக்கும் ஆற்றல் குறைவாக உள்ளவர்களுக்குப் புத்தகமெழுத (தக்க படங்களுடன்) எழுத்தாளர்களை ஊக்குவிப்பதே இந்த தேசீய பரிசுப் போட்டியின் நோக்கம். கையெழுத்துப் பிரதிகள், ஃபூல்ஸ்கேப் காகிதத்தில் டபிள் ஸ்பேஸில் டைப் செய்யப்பட்டு/தெளிவாக எழுதப்பட்டு 50 பக்கங்களுக்கு மேற்படாமலிருக்க வேண்டும்.

**பரிசுகள்:** குறிப்பிட்ட மொழியில், சிறந்ததென்று முடிவு செய்யப்படும் அறுபத்தைந்து புத்தகங்களுக்கு, ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,000 பரிசளிக்கப்படும்.

**தகுதி:** இதற்கு முன்னர் மத்திய/மாநில அரசு ஏற்பாடு செய்த போட்டி எதற்கும் அனுப்பப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் அங்கீகரிக்கப்படா. நுழைவுத்தாள்களுக்கும் விதிகளுக்கும், கீழ்க் காணும் முகவரிக்கு எழுதுங்கள். அத்துடன், சுய விலாசமிட்ட உறை (24 செ. மீ. X 10 செ. மீ.) ஒன்றையும் வைத்து அனுப்புங்கள். நுழைவுத்தாளுக்கான விண்ணப்பமனுப்பும் உறையின் மேல், ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் "ட்வெண்டி செகன்ட் நேஷனல் பிரைஸ் காம்பெட்டிஷன் ஃபார் லிட்டரேச்சர் ஃபார் நியோலிட்டரேட்ஸ்" என்று குறிப்பிட்டிருக்க வேண்டும்.

கையெழுத்துப் பிரதி கிடைக்க வேண்டிய கடைசி தேதி (நேரில் அல்லது பதிவு அஞ்சல் மூலம்) 30, நவம்பர் 1980. ஒவ்வொரு பிரதியுடனும், 'தி டைரக்டர், டைரக்டொரேட் ஆஃப் அடல்ட் எஜுகேஷன்' என்று குறிப்பிடப்பட்ட, புது தில்லி அஞ்சலகத்தில் பணமாக்கிக் கொள்ளக் கூடிய ரூ. 5க்கான கிராஸ் செய்யப்பட்ட போஸ்டல் ஆர்டர் அனுப்பப்பட வேண்டும்.

**டைரக்டொரேட் ஆஃப் அடல்ட் எஜுகேஷன்,**
**வெஸ்ட் பிளாக் ந. VIII, விங் ந. 7,**
**ஆர். கே. புரம்,**
**நியூ டில்லி-110022.**

85324

davp/80/21

Verified
B

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



தமிழரசு Licence No. TN/MS(C)/PP-23 பதிவு எண். M. 8676

